S.8.
DIGITIZED
Q6
N11
19962.

588

# எசுகிறிஸ்து என்பார்
# ஒழுகிக்காட்டிய
# ஒழுக்க முறைநூல்

588
II-1911

ஸ்ரீ வாணீ விலாஸினீ தொடர்

நெ. 7

# ஏசுகிறிஸ்து என்பார்
## —ஒழுகிக்காட்டிய—
# ஒழுக்க முறை நூல்

[The Imitation of Christ by
Thomas a Kempis]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
6-JUN 1911
MADRAS.

தமிழ் மொழிபெயர்ப்பு

ப. நாராயண அய்யர், B.A., B.L., F.T.S.
[மதுரை பிரஹ்மஞான மந்திரம்]

ஸ்ரீரங்கம்:
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1911.

*Copyright Registered.*

340/230

புகுந்து நின்றான் எங்கள் புண்ணிய மூர்த்தி,
புகுந்து நின்றான் எங்கள் போதறிவாளன்,
புகுந்து நின்றான் அடியார் தங்கள் நெஞ்சம்,
புகுந்து நின்றானையே போற்றுகின்றேனே.

—திருமூலநாயனார்
திருமந்திரம்.

1199 ...

OFFICE OF REGISTRAR ... 1913 MADRAS.
340/230

# பொருள் அடக்கம்.

## முதல் புத்தகம்.

### ஞானவழிக்குச் சாதகமான எச்சரிக்கைகள்.


| | | பக்கம். |
|---|---|---|
| நான்முகம். | | 1 |
| 1-வது அதிகாரம் | —கிறிஸ்துவின் வழிநிற்றலும் மாயா உலகத்தை இகழ்தலும் ... ... | 4 |
| 2-வது ,, | —அகந்தை அடக்கல் ... ... | 5 |
| 3-வது ,, | —மெய்யுணர்தல் ... ... | 7 |
| 4-வது ,, | —நம் காரியத்தில் கண்ணோட்டம் ... | 10 |
| 5-வது ,, | —உண்மை பற்றிய சாஸ்திரத்தைப் படித்தல் | 11 |
| 6-வது ,, | —வரம்பு கடந்த விஷயப்பிரவிர்த்தி (அளவு கடந்த ஆசை) ... | 12 |
| 7-வது ,, | —வீண் எண்ணங்களை விட்டு ஒழிதலும் தற்புகழ்ச்சியைத் தவிர்த்தலும் ... | 13 |
| 8-வது ,, | —அடக்கமுடைமை ... ... | 14 |
| 9-வது ,, | —பணிவும் வணக்கமும் ... ... | 15 |
| 10-வது ,, | —அதிகப் பேச்சைத் தவிர்த்தல் ... | 16 |
| 11-வது ,, | —நம்மார்க்கத்தில் சாந்தியும் சித்தையும் அடைவதெப்படி? ... ... | 17 |
| 12-வது ,, | —ஆபத்தால் விளையும் நன்மை ... | 19 |
| 13-வது ,, | —"வருவன எல்லாம் வருக" என்றிருத்தல் அதாவது சோதனையைச்சகித்தல் ... | 20 |
| 14-வது ,, | —ஆராயாது பிறர் குற்றங்கடிதலைத் தவிர்த்தல் ... ... | 23 |
| 15-வது ,, | —அன்போடு செய்யும் கருமம் ... | 24 |
| 16-வது ,, | —பிறர் குற்றத்தில் பொறையுடைமை ... | 25 |
| 17-வது ,, | —துறவு ... ... | 27 |
| 18-வது ,, | —பூர்விக மஹான்களின் ஒழுக்கமுறை ... | 28 |

பக்கம்.

19-வது ,, —துறவோர் சங்கத்தில் ஒருவன் இருக்கு முறை ... 30
20-வது ,, —ஏகாந்தமும் மௌனமும் ... ... 33
21-வது ,, —மனமிரங்கல் மனத்தின் அநுதாபம் ... 37
22-வது ,, —மனுஷ ஜன்மம் துக்கம் ... ... 39
23-வது ,, —மரண சிந்தனை ... ... 43
24-வது ,, —தீர்ப்பும் பாவத்திற்கு தண்டனையும் ... 47
25-வது ,, —நம்முடைய வாழ்நாள் முழுமையும் நல்ல வழியில் நடத்த தீவிரமான அவாவேண்டுவது ... ... 51

## இரண்டாம் புத்தகம்.

(அந்தர்முகப்படுகிற முறையில் எச்சரிக்கை.)

1-வது அதிகாரம்—அந்தர் முகப்படுகிற முறையில் எச்சரிக்கை சிந்தையி[illegible]னைத்தேடுதல் 56
2-வது ,, —தாழ்மையான அடக்கமுடைமை ... 60
3-வது ,, —சாந்த[illegible] பெற்றவன் நிலைமை ... 61
4-வது ,, —சுத்தமனமும் ஒருமைப்பட்ட சிந்தையும் 62
5-வது ,, —தன்னுடைய நோக்கம் ... 63
6-வது ,, —சுத்தமனத்தின் ஸந்துஷ்டி ... ... 65
7-வது ,, —எல்லாப் பற்றையும் விட்டுக் கடவுளைப் பற்றுதல் ... ... 67
8-வது ,, —கடவுள் நம்முடைய பழகியசினேகிதர்.. 68
9-வது ,, —ஆறுதலின்மை ... ... 70
10-வது ,, —ஈசன் அருளுக்கு நன்றிபாராட்டுதல் 73
11-வது ,, —கடவுளின பக்தர்களில் அவர் பட்ட துன்பத்தை விரும்புகிறவர் துர்லபராம் 76
12-வது ,, —துன்பத்தைப் பொறுத்தல் ஞானத்திற்கு ராஜவழி ... 77



## மூன்றும் புத்தகம்.

(அன்புடையவர் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.)

பக்கம்.

1-வது அதிகாரம்—சிரத்தை பக்தியுடன் கிறிஸ்துவை மனத்தில் வைக்கவேண்டும் என்பது (சீஷன் மனம் உருகி உள்ளத்தில் சிந்தித்தல்) ... 83
2-வது ,, —கிறிஸ்துவின் தியாக ஸம்ஸ்காரத்தினால் கடவுளின் மஹிமையும், அவர் கருணையும் விளங்குகின்றது என்பதைப்பற்றி .. 89
3-வது ,, —ஞான ஸம்ஸ்காரத்தை அடிக்கடி உட்கொள்ளுதல் நலம் என்றது ... 92
4-வது ,, அன்போடு மனம் ஒருமைப்பட்டு [illegible]க்குப் பலநன்மைகள் சித்திக்குமென்றது 95
5-வது ,, —குரு இயல்பும் ஞானசம்ஸ்காரத்தின் உயர்வும்... ... ... 97
6-வது ,, —ஒரு வினா: இரண்டறக்[illegible] ஐக்கிய பாவம் பெறவேண்டின் என்ன பயிற்சி [illegible]வேண்டுவது ? ... ... 99
7-வது ,, —சீர்திருத்த முறை[illegible] தன்னெஞ்சைச் சோதித்தல் ... ... 100
8-வது ,, —கிறிஸ்துவைச் சிலுவையின்கண் பலிகொடுத்தல் ... ... 102
9-வது ,, —நம்மையும் நம்முடைமையையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்தலும் எல்லாருடைய க்ஷேமத்தையும் கோரவேண்டலும் 103
10-வது ,, —மஹத்தான ஐக்கிய நிலை இலகுவாய்ப்பொறுக்கற்பாலதன்று ... ... 105
11-வது ,, —அன்புள்ளாருக்குக் கிறிஸ்துவின் சரீரமும் பரிசுத்தமான விவிலியநூலும் எல்லாவற்றிலும் இன்றியமையாதவை என்பது ... ... ... 109
12-வது ,, —ஐக்கிய நிலைபெற விரும்புவான் நனிகவலையுடன், கிறிஸ்துவின் வரவுக்காகத் தன்னை

பக்கம்.

ஆயத்தம் பண்ணவேண்டுதல் ... 113

13-வது ,, —அன்புள்ள ஆன்மா [illegible] சம்ஸ்கார முறையில் கிறிஸ்துவுடன் ஒருமைப்பட்டு இருக்க முழுமனத்துடனே அவா உள்ளதாக இருத்தல் வேண்டுமென்பது ... 115

14-வது ,, —அன்பர்களில் சிலர், கிறிஸ்துவின் சரீரத்தியாகப் பிரதீகத்தையே சிந்திக்க விரும்புதல் ... ... ... 117

15-வது ,, பணிவினாலும், பணிவினாலும், தியாகத்தினாலும் இறைவனைப்போற்றும் பாக்கியம் கிடைக்கத்தகாதது என்பதாம் ... 119

16-வது ,, —கிறிஸ்துவிற்கு நம்முடைய வேண்டுதலை வெளியிட்டு அவர் அருள்வரவைக் கோரல் ... ... 121

17-வது ,, —கிறிஸ்துவைப்பற்றி ஒழுகத் தீவிர அன்பும் தீவிர அவாவும் வேண்டுமென்பது 123

18-வது ,, —ஒருவன் ஞானஸம்ஸ்கார முறையெப் [illegible] விட்டுப் பணி[illegible] கிறிஸ்துவின் வழிபட்டு தன் சிந்தனைகள் யாவையும் அவர் நெறிமுறையில் செலுத்த வேண்டியது ... 125


---

## நான்காம் புத்தகம்.

(மாசற்றமனத்துடன் ஆன்ம சம்பாஷணை).


1-வது அதிகாரம்—நேர்மையான மனமுடன் ஆன்மா சம்பாஷணை இடல் (தன்னுள்ளே ஆறுதலும் தேறுதலும்) ... ... ... 129

2-வது ,, —உள்ளத்தில் உண்மையே பேசுகின்றது என்பதும், வெறும் வார்த்தைகளின் ஆரவாரம் அன்று என்பதும் ... ... 130

3-வது ,, —உள்ளத்தில் இறைவன் போசுங் காலத்தில்





பக்கம்.

[illegible]தப் பத்தியுடனும் பணிவுடனும் கவ[illegible] வேண்டும் என்பதும், ஆனால் பெரும்பான்மையோர் அதைத்தீர்க்கமாகச் சிரவணம் செய்து தியானிக்கின்றாரிலர் என்பதும் ... ... ... 132

4-வது ,, —இறைவன் கண்முன்னர் உண்மையும் பணிவும் பற்றி ஒழுகும் முறை ... 135

5-வது ,, —ஈசன் அன்பினால் விளையும் ஆச்சரிய காரியம் ... ... ... 137

6-வது ,, —மெய்யன்புடையான் இலக்கணம் ... 140

7-வது ,, —விழிப்புள்ள பணிவில் பக்தியின் வலிமை அடங்கற்பாலது... .. ... 143

8-வது ,, —இறைவன் கண்முன் நாம் ஒன்றுமில்லையெனத்தெளிதல் ... ... 146

9-வது ,, —எல்லாம் ஈசன் செயல் என்று இருத்தல் ... ... ... 147

10-வது ,, —உல[illegible] இறைவனுக்கு அடிமையாக இருத்தல் இ[illegible]மையானது .. 149

11-வது ,, —மனத்தின் ஆசைகளை பரிசீலனை செய்து வரம்புக்குட்படுத்தல் .. ... ... 149

12-வது ,, —துராசையுடன் போராட்டமும், பொறுமையும் ... ... ... 153

13-வது ,, —ஏசுநாதரின் ஒழுக்கமுறையை அனுசரித்து பக்தன் பண்பும் பணிவும் உடையவனாயிருத்தல் ... ... ... 155

14-வது ,, —நலன்கார் வேலைசெய்தோமென இறுமாப்பு உண்டாகா வண்ணம் கடவுளின் குப்தமான தீர்மானங்களைப் பற்றிய சிந்தனை... ... ... ... 156

15-வது ,, —யாதேனும் ஒன்றுவேண்டின் அதை எந்நிலையினின்று எவ்விதம் கேட்கின்றது ... 157

16-வது ,, —இறைவனிடம் தான் உண்மையான ஆறு

பக்கம்.

தல் தேடற்பாற்று ... ... 159

17-வது ,, —நம்முடைய கவலையெல்லாம் இறைவன் பொறுப்பு என்று அடைக்கலம் புகுதல் ... ... ... ... 161

18-வது ,, —ஏசுநாதர் ஒழுகிக் காட்டியபடி லௌகிக துன்பங்களைப் பொறுத்தற் பாலது... 162

19-வது ,, துன்பங்களைச் சகித்தல் உண்மையான பொறுமையுடையவன் அதன் லக்ஷணம் ... 164

20-வது ,, —நம்முடைய தளர்ச்சியை அறிவித்தலும்—உலக வாழ்வின் சங்கடங்களும் ... 166

21-வது ,, —எல்லா நன்மைகளையும் எல்லா கொடைகளையும் கடந்து, இறைவனே அடைக்கலம் என்று இருத்தல் ... ... 168

22-வது ,, —இறைவனுடைய பல அருட்பிரசாதங்களைச் சிந்தித்தல் ... ... 172

23-வது ,, —சாந்தம்பெற 4 உபாயம் ... ... 174

24-வது ,, —பிறரைப்பற்றிய வீண் விசாரணையை விலக்குதல் ... ... ... 176

25-வது ,, —மனச்சாந்தமும் ஞானமார்க்கத்தின் ஒழுக்கமும் எதனால் கிட்டக்கற் பாலது என்பதைப்பற்றி ... ... ... 177

26-வது ,, —அதிகப்படிப்பினாலின்றி, தாழ்ந்த மனத்துடன் செய்யும் தபசினால், அடையும் உயர்நலம் ... ... ... 179

27-வது ,, —மமதையும், தன்னயம் பாராட்டுதலும், மனிதனை உயர்நலம் அடையாமல் தடுக்கும் ... ... ... ... 181

28-வது ,, —புறந்தூற்றுவார்களின் நாவுக்கு, பயப்படாமை ... ... ... 183

29-வது ,, —இடுக்கண் நேரிடுங்காலத்தில் இறைவனைப் பிரார்த்தித்து போற்றி செய்யற்பாலது ... ... 184



பக்கம்.

30-வது ,, —ஈசன் அருள் உதவி விரும்புதலும் திரும்பவும் ஈசன் அருள் கிடைக்குமென்ற நம்பிக்கை இருத்தலும் ... .. 185

31-வது ,, —சிருஷ்டிப்பொருளை மறந்தால் சிருஷ்டிகர்த்தரை அடையலாமெனல் ... 187

32-வது ,, —தன்னை மறத்தலும், ஆசாபாசங்களை விடுதலும் ... ... 190

33-வது ,, —மனச்சஞ்சலமும், அதன் விருத்தியைக் கடவுளை நோக்கச்செய்தலும் ... 191

34-வது ,, —ஈசனை நேசிக்கின்றவன் எல்லாவற்றுக்கு மேலாக அவரையே சிந்தனைகொள்ளுவான்—எல்லாவற்றிலும் அவரையே காண்பான்—என்றது .. 192

35-வது ,, —உளநாள்வரை ஆசாபாசம் ஓயாது ... 194

36-வது ,, —மனிதர்கள் அபிப்பிராயங்கள் வீண் என மதித்தல் வேண்டும் ... ... 195

37-வது ,, —மனச்சமாதானம் பெறுவதற்கு உள்ளபடி உண்மையாக முற்றும் நம்மைத் துறத்தல் வேண்டும் ... 197

38-வது ,, —லௌகிக விஷயங்கள் நம்மைமேற் கொள்ளாது அடக்கி ஆளுதலும், ஆபத்துக்காலங்களில் இறைவனை நாடுதலும் .. 198

39-வது ,, —ஒருவன் தன் விஷயங்களில் அதிகக் கவலைகொள்ளாமை நலம் ... 200

40-வது ,, —ஒருவன் தன்னிடம் ஒரு நலமும் இல்லை எனவும், தான் கருவங்கொள்ளத் தன்னிடம் யாதொன்றும் இல்லையெனவும், உணர்ந்து இருக்கற்பாலது .. 201

41-வது ,, —உலக மகிமையை வெறுத்தல் ... 203

42-வது ,, —நம்முடைய சாந்தநிலை, மனிதன் கைக்குட்பட்டதன்று எனல் ... 204

43-வது ,, —உலக விஷயங்களைப் பற்றிய ஞானம்

பக்கம்.

வீண் எனல் ... ... 205

44-வது ,, —வெளி வஸ்துக்களைப் பற்றிப் போகும் சிந்தனையைத் தடுத்தல் ... ... 207

45-வது ,, எல்லாமனிதரையும் நம்ப ஒண்ணாது மனிதர் வார்த்தைகளில் பிறழுவார் ... 208

46-வது ,, —நாவின் கொடிய வார்த்தைகள் நம்மேல் தாக்குங்காலத்தில், ஈசனிடம் நம்பிக்கை வைத்தல் ... ... ... 210

47-வது ,, —இனிக்கிடைக்கும் நித்தியமான பதவியைக் குறித்து எல்லா இடுக்கண்களும் பொறுக்கற்பாலது ... ... 213

48-வது ,, —நித்தியாநந்த நிலையின் சுகமும் இவ்வுலக வாழ்க்கையின் கொடுமையும், ஜீவனின் ஆநந்தக் களிப்பும் ... 214

49-வது ,, —நித்தியானந்தத்தை நாடு—அதுவே உலக விஷயங்களுடன் போராடுவோர் அடையும் பேறே ... ... 218

50-வது ,, —அநாதிக்கு அத்தனே துணை என்றிருத்தல், திக்கற்றவனுக்கு தெய்வமே துணை என்று இருத்தல் ... ... 221

51-வது ,, —பெரிய கைங்கரியம் முடியாவிடில், சிறிய கைங்கரியத்தை நாடி முடித்தல் நலம் என்பது ... ... ... 225

52-வது ,, —மனிதன், துன்பத்திற்கு பாத்திரவானே அன்றி, பரமசுகத்துக்கு பாத்திரவான் அன்று—என்று இருத்தல்... ... 226

53-வது ,, —உலகப் பற்றுள்ள மனத்துக்கும் ஈசன் கருணைக்கும் வெகு தூரம் ... ... 228

54-வது ,, —இறைவன் அருட்பிரசாதம் பெற்றவன் சாமான்னியமானவன் - இவ்விருவர்களின் ஒழுக்கமுறைகளின் வேற்றுமை ... 230

55-வது ,, —இயற்கையான பாபகதியும்—ஈசவான்





பக்கம்.

அருள் கதியும்... ... ... 235

56-வது ,, —நம்மை முற்றும் வெறுத்தலும்—தியாகத்தின் அறிகுறியான, சிலுவையை நினைந்து—ஏசுகிறிஸ்து என்பாரைப் போன்று ஒழுகலும்... ... ... ... 238

57-வது ,, —ஒருவன் தவறிக்குற்றம் குறை செய்தால் அதனால் மனந்தளர்ந்து அதைரியப்பட்டு வியசனிக்கக் கூடாது ... ... 241

58-வது ,, —மேலான விஷயங்களையும் தேவரகசியமான தீர்மானங்களையும் தெய்வ கதியையும் பரிசோதனை செய்தல்—கூடாதென்பது ... ... 243

59-வது ,, —எல்லா நம்பிக்கையும் எல்லா அன்பும் இறைவனிடம் வைக்கற்பாலது ... 248

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
8 JUN 1911
MADRAS.

# ஏசுகிறிஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல்.

## நூன்முகம்.

இந்நூல் லத்தீன்பாஷையில் உள்ளது. இத்தாலியாதேசத்தில் கெம்பிஸ் என்ற கிராமவாசியாகிய தோமஸ் என்ற ஞானியார் இயற்றியது. இற்றைக்கு 510 வருஷங்களுக்குமுன்னர் இவர் இருந்தார். இந்நூலின்கண் உள்ள உண்மைப்பொருள்கள் பெரும்பான்மையாய் ஒரு மதத்திற்கும் விரோதமல்ல. எல்லாச்சமயிகளும் கைக்கொண்டு அனுஷ்டிக்கத்தக்கவை. இந்நூல் மேல்நாட்டில் உள்ள எல்லாப்பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளது. ஆங்கிலத்தில்மாத்திரம் மூன்று நான்கு வித்வான்கள் மொழிபெயர்த்துள்ளார். இத்தேசத்தின்பாஷையில் இது காறும் மொழிபெயர்க்கப்பட்டதாகத் தோன்றவில்லை. இவ்வரிய பெரிய நூலை நம் தேசத்தார் எச்சமயரேனும் படிப்பாராகில், மதத்துவேஷம் குன்றிச் சமாதானமும், ஒப்புநோக்கும், சுபாவமும் பெறுவர். இப்புத்தகத்தை உள்ளபடி கிறிஸ்தவர் உணர்வாராகில், பிற

மதத்தினின்று சிறுவர்களையும் சிறுமிகளையும் பெயர்த்து, கிறிஸ்து மதத்தில் சேர்க்க நாடார்—

"ஆனசமயம் அது இது நன்று எனும்
மாயமனிதர் மயக்கம் அது ஒழிக
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது ஆமே."

"முத்திக்கு வித்து முதல்வன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச்சிவ பரந்தான் ஆதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே."

என்ற திருமூலர் அருளிய திருமந்திரவாக்குக்கு அநுசரணையாக இந்நூல்முறை செல்லுகின்றது. இத்தமிழ் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தினின்று செய்துள்ளது. முதல்நூல் கிரந்தகருத்தாவின் கருத்தைக் கூடியவரை தெரிந்து எழுத முயன்றேன். ஞான நூலாகையால் பூர்ணமாக அறிந்தேன் என்று சொல்லவல்லேன் அல்லேன்.

இதை வாசிக்கின்றவர் கிறிஸ்து, யேசு என்ற மொழிகளுக்குப் பதிலாக அவர் அவர் சமயத்தில் உயர்வுபெற்ற ஞானியின் பெயரை வைத்து வாசிப்பரேயாகில், மதச்செருக்கும் பகைமையும் கொள்ளார்.

கிறிஸ்து என்றால் பூர்ணம்பெற்ற நிலைமை. பூர்ணம்பெற்றவர்—"மயர்வற மதிநலம்" பெற்றவர் என்பது கருத்து—"மனனகம் மலம்அற, மலர்மிசை எழுதரும் மனன் உணர்வில்" எரிகின்ற விளக்கினின்று புகையுள்ள திரியில் சுடர் இறங்குமாறு பெருஞ்சுடராகிய இறைவனிடமிருந்து பக்தன் ஹ்ருதயத்தில் ஜோதி தோன்றும். இதைப்பற்றி மாணிக்கவாசகர், தம்மனுபவத்தைச் சொல்லியிருக்கின்றார். அது இங்கு கவனிக்கத்தக்கது.

"இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறதிமற்று இன்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்
திருப்பெருந் துறை உறை சிவனே!



ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்றில்லை
யார் உன்னை அறியகிற்பாரே."

"எல்லாரும் ஞானத்தெளிஞர்" என்றார் அருணகிரிநாதர்.
நாமெல்லோரும் ஈசுவர புத்ரர்கள் என்பது கீதாசாஸ்திர முடிபு.
"நாம் எல்லாரும் கடவுள் புத்திரர்கள்" என்பது ஏசு என்பார் உப
தேசம். "நம்மெல்லாரிடமும் கிறிஸ்து என்ற ஆத்தும தத்துவம்
மொட்டாகவிருக்கிறது" என்பது பால்ஞானியார் வசனம். இனிச்
சரியான ஸம்ஸ்காரத்தினால், யத்தின் வேலையால், அந்த ஆத்மா
மலரவேண்டும். விகசிக்கவேண்டும். அப்படி விகாசம் பெற்றால்,
நாமும் பூரணர் ஆவோம். நாம் ஒவ்வொருவரும் "கிறிஸ்து" நிலை
பெறுவோம். 'கிறிஸ்து" ஆவோம். அந்த "உயர்வறஉயர்நலம்" உள்ள
நிலைமை பெறுதற்கு, ஆரியசாஸ்திரங்களில் மார்க்கங்கள் கர்மயோ
கம், பக்தியோகம், ஞானயோகம் என மூப்பான்மையாம்; மனிதன்
சுபாவம் கிரியை, இச்சை, ஞானம் என மூப்பான்மையது. அந்த
அந்த சுபாவத்திற்கு உரியபடி 3 வித மார்க்கங்கள் ஏற்பட்டுள்ளன.
ஏதாவது ஒரு நெறிபற்றி அதனில் ஊக்கமாக ஒருவன் நடை
பெறுவனாகில், மெய்யுணர்வு பெறுவான். ஈசுவர சாக்ஷாத்காரம்
அடைவான். இம்மூன்று மார்க்கங்களைப்பற்றி நடைபெற்று பூரண
ரானவர்கள் இத்தேசத்தில் அநேகர். அவர்களைப்பற்றிச்சொல்லின்
விரியும். இம்மூன்று மார்க்கங்களில், பக்திமார்க்கமாத்திரம் இந்
நூலில் உபதேசித்துள்ளது. இதனுள்ள ஏசுகிறிஸ்துஎன்பார் தாமே
ஒழுகிக்காட்டிய முறையை விஸ்தரித்திருக்கின்றது. இந்நூலில்
உள்ள உயர்வான விஷயங்களை ஸவிஸ்தாரமாகத் தமிழ்நூல்களில்
பிரியமுள்ளவர்கள் கண்டுகொள்ளலாம். தேவாரம், திருவாசகம்,
திருமந்திரம், நாலாயிரப்பிரபந்தம், தாயுமானவர், குறள் முதலான
வைகள் மேற்றிசையாருக்கு உபயோகமாகவேண்டி இந்நூல் எழுதி
யது; இத்தேசத்தில் மேற்றிசையார்மதமான கிறிஸ்துமதத்தை
அனுஷ்டிக்கின்றவர்கள் இருக்கின்றமையால் அவர்களுக்கு பயன்படு
மாறு இந்நூல் தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
இம்மொழிபெயர்ப்பில் சிலசில இடங்களில் தமிழ்நூல்களினின்று
ஸமானவாக்கியங்கள் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. அவ்வாக்கி
யங்கள் உள்ள அந்தந்த நூல்களை முழுமையும் அறிஞர் பாரபக்ஷமின்
றிப்படிப்பாராகில், சமயநோக்கில் பொறுமையும் சாந்தமும்பெறுவர்.

## 1-வது அதிகாரம்.

### கிறிஸ்துவின் வழிநிற்றலும் மாயா உலகத்தை இகழ்தலும்.

1. "என் வழிப்படுமின்; அதனால், இருள் நின்று நீங்குமின்" இவ்விதம் கிறிஸ்து உபதேசிக்கிறார். இவை அவரது வாய்மொழி. மனக்கண் திறந்து, மெய்யுணர்வு பெற்று, வீடுபெறவேண்டின், அவர் ஒழுகிக்காட்டின வழிபற்றி நடக்கற்பாலது. ஆகவே, யேசுநாதர் உலகில் எவ்வண்ணம் ஒழுகுவார் ஆயினர் என்றதையே நன்கு சிந்தனைசெய்வாம்.

அவர் உபதேசம் ஏனைய ஞானியரதுபோன்றதன்று. அது உயர்வாம். கிறிஸ்து என்ற தத்வத்தை அறிந்து, அதனைத் தனக்குள்ளே உணருகிறவன், இவ்வுபதேசத்தில் மறைந்துள்ள சுகிருதத்தை அனுபவிப்பான். ஆனால், அவருடைய திவ்விய ஆதேசத்தைப் பலமுறை கேட்டும் அநேகர் மனமுருகவில்லையே என்றாலோ, அவர் நெறி அவர்களுக்கன்றாம். கிறிஸ்துவின் உபதேசத்தைப் பூர்ணமாக ஒருவன் அறிந்து அவர் அனுபவம் பெறவேண்டுமாகில், அவர் ஒழுக்கமுறையின்நேர்மையையும் அழகையும் தான் அமையப்பெற்றுத் தன்னுடைய வாழ்நாட்களை அவ்வண்ணம் நடத்த இடையறாது முயலவேண்டும்.

2. உள்ளம் ஒடுங்கி திருமூர்த்தியை வணங்கி அவர் அருள் பெறாமல், அவருடைய தீவிர தத்துவவிசார ஆரவாரம் என் பயன்? உயர்வான வார்த்தைகள் ஒருவனை உயர்த்தாவாம்; தூயனாக்காவாம். நல்லொழுக்கமுள்ளோரே இறைவனுக்கு உற்றார். பாவியான் என்று நொந்தாற் பலனுண்டு. அதன் வ்யாக்கியானத்தில் பயனில்லை,பயனில்லை. ஈசனிடம் அன்புபாராட்டி அவன் அருள் பரிசம் பெறாமல் விவிலியநூல் முற்றும் உருவேற்றி என்? ஞானிகளின் வசனமுழுதும் மனசில் சுமந்து என்? இறைவனுக்குப் பக்தி புரிவதும் அவர் கைங்கரியம் செய்வதும் நீங்க,மற்று எல்லாம் பொய், பொய்யே.

அடியிற் கண்டவைகள் இங்கு கவனிக்கத்தக்கவை:—

"வேதம் ஓதில் என், சாத்திரங் கேட்கில் என்?
நீதி நூல்பல நித்தல் பயிற்றில் என்?



ஓதி அங்கமோர் ஆறுமுணரில் என்?
ஈசனை உள்குவார்க் கன்றி இல்லையே" (தேவாரம்).
"ஓதயைப் புந்தியாற் சிந்தியா தோதி யுருவெண்ணும்,
சந்தியால் ஆம்பய னங்கென்" (பொய்கையாழ்வார்).

3. உலகவாழ்க்கையில் வெறுப்பும் வீடுபெற ஊக்கமும்தான் எல்லா ஞானசாஸ்திரங்களின் முடிபு. அநித்திய பதார்த்தங்களின் அவாவும், அவைகளைப்பற்றிய மனோராஜ்யமும், வீண் பயித்தியமே. அரசனிடம் உத்தியோகமுயற்சியும் வீணே. தன்னை உயர்த்திக்கொள்ளவேண்டுமென்ற இச்சையும் வீணே. ஊனை ஓம்புதலும் வீணே. பின் துக்கத்திற்குக் காரணமானவைகளின்மேல் காதல்கொண்டு நோதலும் வீணே. வாழ்நாள் நன்மைபற்றி நடைபெறவேண்டுமென்று விரும்பாமல் நீடித்த வாழ்நாள் விரும்புதலும்வீணே. மறுமையைக் கருதாமல் நிகழ்கின்ற இம்மையையே யெண்ணுதலும் வீணே. அழிவற்ற ஆனந்தநிலையை நோக்காமல் நிலையற்று ஓடும் உலகப்பிரவாகத்தைப் பற்றுதலும் வீணே. எத்தனைதரம் பார்த்தாலும் கண்ணுக்குத் திருப்தியுண்டா? எத்தனைதரம் கேட்டாலும் செவிக்குத் திருப்தி உண்டா? இல்லை இல்லை. இந்த உண்மையைத் திரும்பத்திரும்பச் சிந்தனை செய். பார்க்கிற வஸ்துவை நாடிச்செல்லும் மனதைத் தடுத்துப் புலனுக்கு விஷயமாகாத மேலான வஸ்துவைப்பற்றிநோக்க மனதை அந்தர்முகப்படுத்து. இந்திரியங்கள் வழிச்செல்ல புத்தி கெடும். அது கெடவே, ஈசன் அருள் பலிக்காது.

## 2-வது அதிகாரம்.

### அகந்தை அடக்கல்.

1. எல்லாருக்கும் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆசை உண்டு. ஆனால், கடவுளைப்பற்றிய பயபக்தி இன்றி அவ்வறிவு பயனில்லை.* நக்ஷத்திரங்களின் கதிகளை உன்னி உன்னிக் காலம்கழித்துத் தனக்கு ஆன்மார்த்தமாகிய வஸ்துவை அலக்ஷியஞ்செய்து மனோராஜ்யம் செய்கிற செருக்கானவனைவிட, ஈசுவரபயபக்தியுள்ள தாழ்ந்த குடியானவன் சிரேஷ்டனே. தன்னை உள்ளபடி அறிந்தவனுக்குத்

*"கற்றதனால் ஆயபயன் என்கொல்வா லறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" (குறள்).

தன்னுடைய அற்ப நிலைமை தெரியவரும். பிறர் ஸ்துதி தனக்கு ருசிக்காது. அன்பு இலனேல் உலகெலாம் தெரிந்து என்பயன்? ஈசன் சந்நிதியில் அந்த அறிவினால் என்ன பலன் உண்டு? அவரோ அவனவன் கருமத்தைக் கண்டு பலன் அளிப்பவர். அதிகக் கல்வி கற்கவேண்டுமென்ற ஆசையை விடு. அதில் மனக்கிலேசமும், கபட நாட்டமும்தான் இருக்கிறது. மெத்தப்படித்தவர்கள் ஞானிகளாகத் தோன்ற விரும்புவார்கள். அதிகக் கல்விமான்கள் எனப் பிறர் சொல்லுவதை அபேக்ஷிப்பார்கள். ஆத்மஞானத்திற்கு அநேகத்தின் அறிவு பயன்படாது. வீடுபெற வேண்டுபவன் ஆத்மஞானத்திற்குப் புறம்பானதில் மனதைச்செலுத்துவது அறிவின்மையேயாம். பயனில்சொல்பாராட்டுதல், மனதுக்குத் திருப்தியன்று. நன்மைபற்றிய ஒழுக்கமே மனச்சஞ்சலத்தை அடக்கும். மனக்கண் மாசிலனாதல் நலம்தரும்; அது நம்மை இறைவனிடம் சேர்ப்பிக்கும். இது திண்ணம். உன் படிப்பு ஏற ஏறவும் அதனால் அறிவு உயர உயரவும் அவற்றிற்குத்தக்கவாறு உயர்வான ஞானம் உன்னிடம் இருத்தல் வேண்டும். அன்றேல் அதிக நிந்தனைக்குள்ளாவாய். ஆகையால் அதிகமாகத் தெரிந்தோமென்றும் இறுமாப்பு வேண்டாம். கல்வி அதிகப்பட அதிகப்பட, நம் அறிவின்மை* எவ்வளவு என்று உன்னி அகம் தணிக. பயம் உண்டாகுக.

2. ஆழ அகலத் தெரிந்திருக்கிறோம் என்று எண்ணாதே. நீ அறியாதது, நீ அறிந்ததைவிட அதிகமென்று எண்ணு. அதனால் கல்விச்செருக்கைத் தவிர். உன் சிறுமையை (அறிவீனத்தை) சிந்தித்துப்பார். நீ மற்றவனைவிட மேல் என்று ஏன் எண்ணங்கொள்ளுகிறாய்? உன்னைவிட எத்தனையோபெயர் அதிக நுண்ணறிவு பெற்றவராக இருக்கின்றார்கள். நீ அறிகிலையா? உன்னைவிட அதிகமாய்ச் சாஸ்திரப்பயிற்சி உள்ளவர் எத்தனையோபெயர்கள் இருக்கின்றார்கள். நீ தெரிந்துகொள்ளவில்லையா? பயன்படுமாறு கல்விகற்க வேண்டுமானால் பெயர் (கீர்த்தி) வேண்டாமை நாடு. உன்னை அற்பன் எனப் பிறர் கருத விரும்பு.‡

*"அறிதோறு அறியாமை கண்டற்று" (குறள்).

‡"கல்வி கரையில கற்பவர் நாட்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே
பாலுண் குருகிற் றெரிந்து."



ஒருவன் தெரிந்துகொள்ளவேண்டிய பரமசாதகமான முக்கிய கற்பனை இதுவாம். மெய்யுணர்வும், தன் அகந்தை அடக்குதலுமாம். தன்னை இகழ்தலும் (துரும்பாய் எண்ணுதலும்) பிறரை அன்புடன் ஆதரித்து உயர்வாய் நினைத்தலும் நலமாம். இது தனக்குமேம்பாட்டைப்பயக்கும். ஒருவன் அதிகக் கொடிய பாவத்தை வெளிப்படையாகவே செய்கிறானே, அதிக விபரீதமான குற்றம் செய்கிறானே இது என்ன பரிதாபம்? அவனைவிட நாம் எவ்வளவு உயர்வாயிருக்கிறோமென்று எண்ணாதே. எவ்வளவுகாலம் நீ நேர்மையான நெறியின்கண் இருக்கக்கூடுமென்று எண்ணுகிறாய்? சொல்லமுடியாது. நாமெல்லோரும் மெலிவான மனதையுடையோம். திடமான மனது நமக்கு இல்லை. தீரர்கள் அன்று. அதனால் பிறர் குற்றம் கண்டு, நாம் இவரைவிட எவ்வளவுகீழானவரென்றும் நொய்மையானவராம் என்றும் சிந்திப்பாயாக. நம்மைவிடக் கடையோர் உண்டோ என்று எண்ணுக.

## 3-வது அதிகாரம்.

### மெய்யுணர்தல்.

1. நாமரூப விபரீதங்களாலன்றி உண்மையே மூர்த்திகரித்து உபதேசிக்க அதன்முகமாய் உள்ளபடி உண்மையை உணர்கின்றவன் பாக்கியமே பாக்கியம். நம்மெண்ணங்களும் நம்புலன்களும் நம்மை மயக்கத்திற்கு உள்ளாக்குகின்றன. அவைகள் ஒருதலைப்பக்கப் பார்வையுடையன.

2. மறைந்து புதைபொருளாய் இருக்கின்றதைப்பற்றிப்பெரிய வாதத்தில் என்பயன்? அதை அறியாமை, தெய்வத்தீர்ப்புநாளில் குற்றமாக ஏற்படாது. லாபமுள்ளவும், ஆவசியகமானவைகளை அலட்சியம் செய்து பயனற்றவும் துன்பத்திற்கு ஹேதுவுமானவைகளைப்பற்றி நம்முடைய மனதை உற்றுச் செலவிடுதல் அறிவின்மையேயாம். கண்ணிருந்தும் பார்க்கின்றோமில்லை. தர்க்கவிசாரணையில் என்ன பயன்? என்றுமுள்ள அந்த ஒருமொழியே உபதேசம் பெற்றவன் பலதர்சனங்களுடைய கட்டுரைகளின் மயக்கத்தினின்று விடுபடுவான். அந்த ஒருமொழியினின்றே யாவும் உண்டாகின்றன.

எல்லாம் அவ்வொருமொழி*யையே குறிக்கின்றன. அம்மொழியே ஆதி. அம்மொழியே நம்மெதிர் எங்குமிருக்கின்றது. பேசுகின்றது. அம்மொழியின்றி நினைப்பு இல்லை; விஞ்ஞானமில்லை. எவன், யாவும் அம்மொழியின் பரிணாமம் என்று அறிகிறானோ, எல்லா வினைகளும் அம்மொழியை நோக்கிச்செல்ல அதனால் விடை பெறுகின்றனவெனத் தெரிகின்றானோ அவனே, சலிக்காத உறுதிப்பாடுள்ள மனதுடையவனாவான்; ஸ்திதப்பிரஞ்ஞனாவன். கடவுளின் மெய்யுணர்வு பெற்று அவர் சந்நிதி அடைவான். கடவுளே! ஓ! சத்தியமூர்த்தி! அன்பினால் என்றும் நான் உன்னுடன் இரண்டறக்கலந்து இருக்க அருள்வாய். பலகால் படித்தும் பலகால் கேட்டும் இளைத்தேன், அலுத்தேன். இப்போது உன்னில் அமர்ந்திருக்க வேண்டுகின்றேன். எம்பிரானே! இனிக் கற்றலை யான் வேண்டேன். உன்னைக் கண்ணுற உலகவேற்றுமை எல்லாம் ஒடுங்கும். நீயே ஏகனாய் நின்று என்னுடன் பேச அருள்வாய்.

3. உன் உள்ளத்துள் அடங்கு. உன் உள்ளத்தின் நாட்டம் கபடமின்றி இருக்கட்டும். அதினால் பரமாகசியங்கள் உன் உட்கண்ணுக்கு வெளியாகும். மெய்யுணர்வு பெறுவாய். இது இலகுவாய் உனக்கு சித்திக்கும். இறைவன் ‡அருள் ஒளியே மெய்ஞ்ஞானவடிவாய் உன் மனதில் இறங்கித் தோன்றுவதாகும். மாசற்ற மனசும் நிலையுள்ள புத்தியும் உடையனாய் பல விஷயங்களைப்பற்றி நாடாமல் இறைவனைப் போற்றிசெய்துகொண்டே இருக்க. சுயாய விருப்பங்களின் வழியைத் தவிர்த்து உள்முகம் பெற்று ஒளிவு அடைய முயல்க. உன்னை துன்பப்படுத்துகிறவன் யாவன்? உன்னை மேற்போகாமல் தடுக்கிறவன் யாவன்? வேறு ஒருவனுமில்லை. உன்

---

*ஒவ்வொரு சமயத்திலும் ஒருமொழி என்ற பிரஸ்தாபம் இருந்துகொண்டே இருக்கிறது. உதாரணமாக வேதாந்ததர்சனத்தில் பிரணவமும், சைவசமயத்தில் நமச்சிவாயமும், வைஷ்ணவசமயத்தில் நாராயணாய என்ற நாமமும், இஸ்லாமதத்தில் அல்லா என்ற மொழியும் இவைபோன்ற பிறவும் ஒரே பொருளை யுணர்த்துகின்றன என்பது இங்கு உணரற்பாலது.

‡"ஓம் என்று ஓதி, எம்முன் ஒளியாய் நிற்கும்" (திருமந்திரம்).
"இன்றெனக் கருளி இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற
ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை" (மாணிக்கவாசகர்).



னிடமிருக்கின்ற ஓய்வில்லாத பெருகிய அவாவேயாம். நல்ல பக்திமான் இவ்வுலகத்தில் தன்னுடைய தொழில் இன்னவென்று முதலில் வகுப்பான். மனதின் பொய்யான விருப்பங்களின் நெறியில் போகான். அவைகளையெல்லாம் தன்னுள் சாக்ஷியாயிருக்கும் ஆன்மாவின் மெய்ஞ்ஞானவழியில் திருப்புவான். தன்னை வெல்ல முயல்பவனே வீரனாவான். ஆகையால் உன்னுள்ளத்திலிருக்கும் பகைவனைத் துலைக்க முயலவேண்டும். தினந்தோறும் அவனைச் சிறுகச்சிறுக வசப்படுத்தி அவ்வண்ணம் மேலானவழியில் நடைபெறநாடு.

4. இகத்தில் நிறைவுபெற்றது என்று நாம் நினைக்கும் ஒவ்வொன்றிற்கும் அதனதனுடன் ஒவ்வொரு குறைவு இருந்துகொண்டிருக்கிறது. எத்தனை ஆழ்ந்த எண்ணங்களிருப்பினும், அவ்வவற்றுள்ளே ஒவ்வொரு மயறவு இருந்துகொண்டேயிருக்கிறது. தன்னைத் தான் உள்ளபடி அறிதலே கடவுளை அடைய உற்றவழி. இது உலகு பற்றிய நூற் பயிர்ச்சியைவிட, நன்குபயன் தரும். அதனால் நூற் பயிற்சி இகழற்பாலதன்று. இகத்தில், நன்மைபயக்கும் ஈச்வர சம்மதமான ஒன்றை அறிதல் நலனே. ஆனால் மாசற்ற நெஞ்சமும், அன்பு அமைந்த ஒழுக்கமும், அதனில் நலனே. பலர் கற்க முயலுகின்றார். கற்றபடி நல்வழியில் நிற்க முயல்கின்றார் இலர். அதனால் அவர் மோசம் போகின்றார். பலன் ஒன்றும் அவர் பெறார். சாஸ்திரவிசாரணையில் கழிக்கும் காலத்தில் தம் குற்றம் களைந்து, நன்மை என்ற வித்து விதைப்பாரேயாகில், உலகத்தில் இவ்வளவு தீமை தீய ஒழுக்கம் மடாதிபதிகளின் ஒழுக்கச்சோர்வு இவை இரா.

5. மரணத்திற்குப்பிறகு, தெய்வத்தீர்ப்புநாளில் நாம் இன்னது செய்தோமென்ற வினா ஏற்படுமே அல்லாது இன்னது படித்தோமென்ற வினா வாராது. நம்மொழுக்கம் எத்தன்மையதாக விருந்ததென்பதுதான் வெளிக்கு வரும். நாம் எத்தன்மை அழகான மொழி வசனித்தோமென்றது வாராது. எத்தனையோ வித்வான்கள் எத்தனையோ பெயர் படிப்பில் மேம்பாட்டை அடைந்தவர்கள் உலகத்தில் உயர்வான உத்தியோகங்களை வகித்துக் கவுரவமாக நடைபெற்றதை நீ அறிவாய். அவர்கள் பதவியை இப்போது மற்றவர்கள் வகித்துவருகின்றார்கள். இவர்கள் அவர்களைப்பற்றி ஒரு கணப்பொழுதேனும் நினைக்கிறதாவது உண்டா? அவர்கள் உலகத்

இல் இருக்கையில், தகுந்த பதவியில் இருந்தவர்களேயாம். ஆயி
னும் அவர்கள் இறந்துபோனபின் இப்போது அவர்களைப்பற்றிப்
பேசுகிறவர் ஒருவருமில்லை. உலகவாழ்க்கை, அதன் உயர்வு எவ்வ
ளவு வேகமாய்ச் செல்லுகின்றது. அவர்கள் கல்விக்குத்தக்க நடை
இருக்கக்கூடாதா? உண்டேல் அவர்கள் படிப்பும் அவர்கள் படித்த
புஸ்தகங்களும் பயன் உள்ளனவாம். இன்றேல் வீணும். எத்தனை
பெயர் கல்விச்செருக்குடையராக இருந்து இறக்கிறார்கள். ஈசுவர
கைங்கரியம் புரிவதில் கவனம் வைக்காமல் மனோராஜ்யம் செய்து
கடைசியில் இருந்தவிடம் தெரியாமல் போகின்றார்கள். இத்தன்
மையர் தம்முயர்வையே நாடி மனோபசாந்தியைக் கவனியாமல்
நடைபெறுவாராயிருந்தனர்.

உண்மையில் அன்புடையார் உயர்வாரவர். தம்மைத் தாழ்த்
தினவரே உயர்வோராவர். உலகமேம்பாட்டைத் துச்சமாக எண்
ணுகிறவரே மேலோர். உண்மையில் கிறிஸ்து என்ற தத்வத்தைத்
தம்முன்னே அடையக்கருதினவராய் உலக விஷயங்களை அற்பமாக
நினைக்கின்றவர் ஞானியாவர். தம் மனப்போக்கை விட்டு, இறைவ
ன் தொழிலை செய்கின்றவரே அறிஞராவர்.

தவஞ் செய்வார் தங்கருமம் செய்வார் மற்றல்லார்
அவஞ் செய்வார் ஆசையுட்பட்டு.—குறள்.

## 4-வது அதிகாரம்.

### நம்காரியத்தில் கண்ணோட்டம்.

1. கேட்கும் ஒவ்வொருவார்த்தையையும் உதயமாகும் ஒவ்வொ
ரு எண்ணத்தையும் நாம் அங்கீகரிக்கக்கூடாது. அது ஈசுவர சமத
மாவென்று பொறுமையுடன் உற்றுக்கவனிக்க வேண்டும். அந்தோ!
பிறரைப்பற்றி, எவ்வளவு இலகுவாய் அவதூறு பேசுகின்றோம். தூர்
எண்ணம் எண்ணுகின்றோம். நம்முடைய சுபாவம் கொடிது கொ
டிது. அம்மா! பிறர் நிந்தையும் புறங்கூற்றமும் மனிதனுக்கு இய
ற்கை என்று அறிந்தே, நல்லோர் புறங்கூறுவான் வாய்ப்பிறப்பைமதி
யார். எளிதில் நம்பார்.

2. உன்தொழிலில் முன்யோசனை யின்மையும், உன் அபிப்பி
ராயத்தில் பிடிவாதத் தன்மையும் விலகுதல் அறிவிற்கு அழகாம்.
பிறர் வாய்ப்பிறக்கும் ஒவ்வொரு வசனத்தையும் நம்பாதிருத்தலும்



அழகாம். நீ கேட்கும் ஒவ்வொன்றையும் நீ நம்பினதொவ்வொன்றை
யும் பிறர் காதிற் புகவிடல் நலனன்று. அறிஞர் யோசனையை நா
டு. மனச்சாட்சி பற்றி நல்லோர் வழிச்செல்லு. உன்னில்
மேலானோர் புத்திமதிதேடு. நல்லொழுக்கம் ஒருவனை நல்லவன்
ஆக்கும். கடவுளுக்குப் பிரியன் ஆவான். பல விஷயங்களில் அறி
வு பெறுவான். எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவன் தன்னைத்தாழ்மை
ப்படுத்திக்கொள்கிறானோ அவ்வளவுக்கு அவ்வளவு அவன் கடவுளுக்
குப் பிரியன் ஆவான். அதற்குத் தக்கபடி, ஞானியாவான் சாந்
தத்தில் அமர்ந்திருப்பான்.

"தாழச்செய்தார் முடிதன்னடிக் கீழ் வைத்தவரை விண்ணோர்
சூழச் செய்தான்"—மாணிக்கவாசகர், திருக்கோவையார்.

## 5-வது அதிகாரம்.

### உண்மைபற்றிய சாஸ்திரத்தைப் படித்தல்.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"—குறள்.

1. உண்மைபற்றிய சாஸ்திரத்தில் மெய்யுணர்வை நாடு. அலங்காரமொழியை அதன்கண் கவனியாதே. அந்த அந்த சாஸ்திரம் எக்கருத்தினை நோக்கி அமைக்கப் பெற்றுளதோ, அக்கருத்தின் வழி அமர்ந்து அதைக்கற்கக்கடவாய். அதின் பயன் என்ன எனப் பார். வார்த்தையழகைப் பாராதே.

2. அன்புவாய்ந்த சிறு நூல்களும், ஆழ்ந்த பெருநூல்போலப் பிரியமாய்ப் படிக்கற்பாலது. அதன் கர்த்தாபெரியரென்றாவது சிறியரென்றாவது புகழ் பெற்றவர் என்றாவது, அல்லரென்றாவது நீ கருதாதே. அப்புஸ்தகத்தின் கண்ணுள்ள உண்மைப் பொருளை உன்னிப்பார். அதுவே உன்மனத்தைக்கவரட்டும். சொல் இன்னாருடையது என்று பாராதே. அதின் உண்மையைப் பார். எழுதினவர் இறந்திடுவார். அவர் சொல்லோ மெய்யுணர்வுபற்றிய தானால் என்றும் உயிருள்ளதாக இருக்கும். எழுதினவர் உடல் பற்றியின்றும், அவர் எழுத்தின் வழியாக கடவுள் உபதேசம் செய்வார்.

3. மெய்யுணர்வுபற்றிய நூலைப்படிப்பதில் பல குதர்க்க பாவங்கள் பலகால் நம்மனதில் குறுக்கிடும். அவைகளைவிட்டு மேற்

போகாமல் வீணில் அவைகளில் காலம் கழித்து அவைகளை உட்புகுந்து அறிய விரும்புவோம். பயன்படுமாறு ஞானசாஸ்திரம் தம்முட்பெறவேண்டுமானால் கல்விச்செருக்குவிட்டு பக்தி பாராட்டு. பணிவுடையனாகவிரு. நம்பிக்கைகொள்ளு. ஞானி எனப்பெயர்பெற விரும்பாதே. சந்தேகங்களைக் கூச்சமின்றி வினவு. சான்றோர் வார்த்தையைக் கேள். விடையின்றேல் மறைவாகவும் உருவகமாகவும், மூத்தோர் செய்திருக்கும் உபதேசத்தில் சிலேசப்படாதே. உண்மையின்றி அவர் உரையார். காரியமின்றி அவர் சொல்லார்.

## 6-வது அதிகாரம்.

### வரம்புகடந்த விஷயப்பிரவிர்த்தி.

(அளவுகடந்த ஆசை).

"ஆசை அறுமின்கள். ஆசை அறுமின்கள்.
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்.
ஆசைபடப்பட வாய்வருந்துன்பங்கள்
ஆசைவிடவிட ஆநந்தமாமே."—திருமந்திரம்.

1. மிதமிஞ்சி ஒன்றை விரும்பின், மிக்க மனச் சலனம் உடனே நமக்குண்டாகும். அகங்காரிக்கும் பேராசை கொண்டவனுக்கும் ஓய்வில்லை. தாழ்மை யுடையரும் ஏழையரும் நீங்காச் சுகம் அமைந்த வாழ்நாள் கழிப்பர்.

2. தனக்குள்ளே ஒழிவு பெறாதவன் சோதனைக்குள்ளாவான். அற்பவிஷயங்களால் அவன் சஞ்சலிப்பான். கோழை மனமுடையானுக்கும், ஊனை ஓம்புகிறவனுக்கும் புலன்களின் வழியில் இருப்பவனுக்கும், உலகப்பற்றை விடுதல் முடியாதாம். விடுவனேல் விசனமடைவான். உலகப்பற்று வேண்டாமென்று பிறர் தடுத்தால் கோபங்கொள்வான். எண்ணிய கருமம் சாதித்தால், இதனால் என் பயன் என்று தன்னையே நோவான். விஷயங்களின் வழிச்சென்றேன், சுகம் நாடினேன். நாடின சுகம் கிட்டவில்லையே என்று துயரமடைவான்.

3. ஆசைக்குட்படாமல் அதனை வென்றால் மனச் சமாதானம் அமையும். உலக விஷயங்களில் அழுந்தி ஆசைகொண்ட மனத்தைச்



சுகம் அணுகாது. தபசில் பற்றிய தாகமுள்ளோர்க்கு அந்தச்சாந்தி உண்டாகும்.

## 7-வது அதிகாரம்.

### வீண் எண்ணங்களை விட்டு ஒழிதலும், தற்புகழ்ச்சியைத் தவிர்த்தலும்.

"பிறந்தோர் உறுவது பெருகியதுன்பம்
பிறவார் உறுவது பெரும்பேரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக"—மணிமேகலை.

1. மனிதனையும் உலகத்தையும் நம்புதல் வீணே. ஈசன்மேல் அன்புபற்றி உன் அயலானுக்கு உதவிபுரியக்கூடாதோ. காலவரம்புக்குள்ளான இந்த உலகத்தில் குறைவுள்ளவனாக இருக்கக் கூசாதே. உன்னால் ஆவது ஒன்றில்லை. எல்லாவற்றுக்கும் இறைவனை நம்பு. உன்னால் ஆனது நீ செய். உன்உள்ளம் நல்லதாகில் கடவுள் உதவி செய்வார். உன் அறிவிலாவது மாற்றான் அறிவிலாவது (சாமர்த்தியத்திலாவது) நம்புதல் வேண்டாம். ஈசன் அருள் வேண்டு. அவர் அருள் பிரசாதத்தால் கீழானவன் மேலானவனாவன். தன்னைக் கொண்டாடும் பேறுகை கீழே தள்ளப்படுவான்.

2. செல்வத்தில் மகிழாதே. செல்வாக்குள்ளார் சிநேகர்கள் என்று மயங்காதே. இறைவனைப் போற்றிவாழ். அவரே உனக்கு எல்லாம் கொடுத்தார். இனிக்கொடுக்க எங்கே என்று எதிர்பார்க்கிறார்; தன்னையேதியாகம் செய்ய சித்தமாகவிருக்கிறார்.

இவ்வுடலை உயர்வென்றும், அழகென்றும் ஓம்பி மகிழாதே. வியாதிப்பட அதுகெடும். அதன் அழகு குறையும்.

"குடம்பை தனித்தொழிய புட்பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு"—குறள்.

உன் புத்தி சாதுர்யத்தையும் அறிவின் மிகுதியையும் கொண்டு மெச்சாதே. அது கடவுள் சம்மதமன்று. அவரால் கிடைத்த பாக்கியம் அது.

"வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றிபயவா வினை"—குறள்.

மற்றவரைவிட மேலோன் என்று எண்ணாதே. கடவுளின் பார்வையில் நீ அற்பனாக இருக்கக்கூடும். உன் உள்ளம் அவர் அறிவார். உன் கருமங்களைப் பற்றிச் செருக்குக்கொள்ளாதே. அவைகளைப் பற்றி ஈசுவர சம்மதம் வேறாக இருக்கும். மனிதர் முகமலர்ந்து மகிழ, ஈசன் பலமுறை முகம் குறுகிநோவார். உன்னிடம் ஒரு நன்மையிருப்பின், மற்றவரிடம் அதிகம் இருக்குமென்று எண்ணு. இதுதான் உள்ளம் தாழ்ந்திருப்பதற்குச் சாதனம். பிறருக்குப் பின்னாக உன்னை வைக்கிறதினால், உனக்குக்கேடு இல்லை. ஒருவனுக்கேனும் முன்னே இருக்க முயன்றால், அது உனக்குத் துன்பத்தைத் தருவதாகவே முடியும். அகம் ஒடுங்கினவனிடம் சாந்தி இருக்கும். அகமுடையானிடம் பொறாமை, தீராக்ரோதம் எப்போதும் குடிகொண்டிருக்கும்.

## 8-வது அதிகாரம்.

### அடக்கமுடைமை.

1. உன் உள்ளத்தைக் கண்டவர்க்கெல்லாம் காட்டாதே. இறைவனிடம் பயபக்தி பாராட்டுவோரிடம் உன்குறையைச் சொல்லு. வாலிபர்களுடனும் உலகத்தாருடனும் அதிக நெருக்கம் வேண்டாம். அவர் பழக்கம் ஏகதேசமாக இருக்கட்டும். செல்வரிடம் நெருங்கில், அவரைப்புகழ வேண்டாம். பெரியோர்முன் நிற்க ஆதுரம்வேண்டாம். தாழ்மையுள்ளார் கல்லார் அன்புடையார் பயந்தவர் இவர்கள் சிநேகத்தை நாடு. உன் உள்ளம் விகாசமாகும் படியான விஷயங்களைப்பற்றிப்பேசு. பெண்டிர் உறவுதவிர்; ஆனால், நற்பெண்டிர் க்ஷேமத்தைக் கடவுளிடம் வேண்டு.

2. ஈசன் சந்நிதியையும், தேவர்கள் சிநேகத்தையும் விரும்பு. மனுஷ்யர் பார்வையைத்தவிர். எல்லாரிடமும் அன்பு உள்ளவனாக இரு.

"அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு".—குறள்.

ஆனால் அவர் நட்பு ஆகாது. ஒருவன் ரூபம் பிறர் அறியாமலே உலகில் அவன் கீர்த்தி எங்கும் பரவிப் பிரகாசிக்கும். அவனை நேரில் கண்டாரே யாகில், அவன் புகழ் மங்கிவிடும். அவனை அவர் மதியார்



நம்முடைய இருப்பு (சங்கம்) பிறருக்குப் பிரீதியாக இருக்குமென்று எண்ணுகிறோம். நம்மிடம் குற்றம் நாடி நம்முடைய குணம்கொள்ளாது அவர் நம்மை வெறுப்பாராவர்.

## 9-வது அதிகாரம்.

### பணிவும் வணக்கமும்

1. நம்மில் மேலாயினோருக்கு அடங்கி இருத்தலும், அடங்கி நடைபெறுதலும் உண்மையில் நலமாம். நாம் கொண்ட கொள்கையே சரியென்ற பிடிவாதம் விடு. மடாதிபதி ஸ்தானத்தைவிடத் தாழ்மையான பதவி சாவதானமுடையதாம். *அநேகர் நிர்ப்பந்தத்தினால் பிறருக்கு அடங்கிநடக்கின்றாராவர், அன்புபற்றி அன்று. அதனால் அவர் கஷ்டம் அனுபவிப்பார். அவர் மனத் துயரப்படுவோர். மனமுழுதும் பணிந்து ஈசன்மேல் அன்புவைத்தாலன்றி, மனச்சமாதானம் என்றும் அவருக்கு இன்றாம். அங்கும் இங்கும் அலைந்தால் அது வராது. மனம் அடங்கிப் பணிந்தாலன்றி சாந்தி உண்டாகாது. அதிகாரம், உயர்நிலை, உத்தியோகம் இவைகளைப்பற்றிய சிந்தனைகள் அநேகரை மோசமான மயக்க வழியில் கொண்டு விடுகின்றன.

2. தம்மனம் போன போக்கில் நடப்பது யாவருக்கும் இயல்பே. தங்கருத்தைச் சரியென்று ஒத்து நினைப்பவருடன், இணங்குவதும் இயல்பே. கடவுள் நம்முடைய அந்தக்கரணத்தில் தோன்றவேண்டுமாகில், நம்முடைய மனப்போக்கைத் தவிர்த்துச் சாந்தமனத்தினராய் அமையவேண்டும். பிரபஞ்சமுழுமையும் தன் அறிவினால் அறியவல்லர் யாவர்? இலர். ஆகவே, பிறர் அபிப்பிராயத்தையும் கேள். உன்னுடைய எண்ணத்திலேயே பூர்ண நம்பிக்கை கொள்ளாதே. உன் மனோபாவம் நன்றாயிருப்பினும், பிறர்காட்டிய வழியை, கடவுளின் கட்டளையாக மதித்துப்பின் பற்றி ஒழுகுவாயாகில் உன்னுடையதைவிட அதனால் அதிக நலம் பெறுவாய். நாம் போதிக்கிறதைவிட, பிறர்போதனை கேட்கிறது நலம். என்றும் அதுவே சாவதானம் என்று நாம் பலரால் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

---

*"அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம் அவா
உண்டேல் உண்டாம் சிறிது"—குறள்.

ஒவ்வொருவருடைய மனோபாவமும் நலமாகவே இருக்கலாம். நேரிடும் சந்தர்ப்பத்தினாலும் அறிவின் ஆராய்ச்சியினாலும் பிறர்சொல் அவசியமென்று தோன்றியும் அதை அலட்சியம் செய்தலானது மனமுரணும் அகங்காரமுமேயாம்.

## 10-வது அதிகாரம்.

### அதிகப் பேச்சைத் தவிர்த்தல்.

"கள்ளும் களவும் காமமும் பொய்யும்—ஆனால்
வெள்ளைக் கோட்டியை விரைவினில் ஒழிமின்".

—சிலப்பதிகாரம்.

1. கூடியவரை விருதாவாய்ப் பேசும் கூட்டத்தை ஒழிமின். இவ்வுலகவிஷயத்துக்கும் உன்மார்க்கத்துக்கும் வெகுதூரம். உலக சம்பர்க்கமாய் உன் மனத்தின் கண் உதயமாகும் எண்ணம் சிறிதாயிருப்பினும் அது பெருங்கேட்டுக்கு இடமாகும். நாம் மமதை என்ற அழுக்கினால் பூசப்பட்டிருக்கிறோம். விரைவில் அதன் வசமாவோம். அந்தோ! ஜனக்கூட்டத்தை ஒழிக்கமாட்டேனா? நான் உண்டு என்பாடு உண்டு எனச் சும்மாயிருக்கேனா?

2. வீண்பேச்சில் ஏன் அவ்வளவு சந்தோஷம் இருக்கவேண்டும்? மனச்சாட்சி நோகாமல், சலிக்காமல், சாந்த நிலையில் ஒரு கணமேனும் இருவென்றால் ஏலாதாம். ஒருவன் மற்றொருவனுடன் பேசி ஆறுதல் அடைகின்றான். பல எண்ணங்களாற்சோர்ந்த மனத்தைப்பேச்சினால் தேறுதல் செய்துகொள்ள விரும்புகின்றோம். நமக்குப் பிரியமான வஸ்துக்கள், நாம்விரும்பும் விஷயங்கள் இவைகளைப்பற்றி பேசுதல் நமக்கு இலகுவாயிருக்கிறது. ஆனால் நம் பேச்செல்லாம் பயனில்லாதவையாம். வேற்றுமை உடையனவாம். வெளியில் சமாதானம் தேடுதல் அந்தர்யாமியாகிய ஆத்மாவினால் அடையும் சாந்திக்கு முற்றும் வைரியாகுவதாம். உட்சுகத்திற்கு வெளிச்சுகம் முற்றும் விரோதம்.

3. ஆகையினால் வாழ்நாள் வீண் நாளாகக் கழியாமல் நாம் கவனமாக இருக்கக்கடவோம். ஈசுவர வழிபாடு செய்யக்கடவோம். பேசினால் நலம் உண்டென்று உங்களுக்குத் தென்படுமாகில் பேசுமின்; தீய ஒழுக்கத்தினாலும், அஜாக்கிரதையாலும், நாம் வாய் பேசா



மல் சும்மா இரோம். ஈசுவர சம்பந்தமான விஷயங்களைப் பற்றி நினைத்தல், ஆத்மமார்க்கத்தில் வெகுதூரம் கொண்டுபோய் விடும், நம்போல் ஈசுவர பக்தியில் முக்கியமாய் ஆழ்ந்தவரான ஒத்தமனமுடையரைக்காண ஹேதுவாக இருக்கும்.

## 11-வது அதிகாரம்.

### நம்மார்க்கத்தில் சாந்தியும் சிரத்தையும் அடைவது எப்படி?

1. பிறர் வார்த்தைகளை மனத்தில் வாங்காமலும், பிறர் விஷயங்களை மனத்தில் வைக்காமலும் நமக்குச்சம்பந்த மில்லாதவற்றில் மனம் செல்லாமலும் இருத்தலே சாந்திக்கு அனுகூலமாகும்.

பிறர்கவலைகளில் தலையிடுகிறவனும், தன் வழியை விட்டுப்புறம்பான விஷயங்களை நாடுகிறவனும், சிறுபான்மை தன்னுள்ளே நோகுகிறவனும் நீடித்த சாந்தம் பெறான்.

அதிகப் பிரவிருத்தி யில்லாமலிருக்கிறவர்களே பாக்கியசாலிகள். அவர்கள் மனோபசாந்தி ஏராளமாய் உள்ளாராவர்.

சிலஞானிகள் நல்லொழுக்கமுடையாராயும், ஆழ்ந்த அறிவுடையாராயும் இருப்பதற்கு காரணம் என்ன? உலகப்பற்றுக்கள் எல்லாம் தம்மை அணுகாது ஒழித்தார்கள். மனப்பூர்வமாய் இறைவனை இடைவிடாமல் போற்றினார்கள். அதனால் ஆத்ம அனுபவங்களுக்குக் காலம் ஏற்பட்டது.

2. நா[illegible] உலக சங்கடங்களைப் பற்றி அதிக சுறு சுறுப்புள்ளவர்களாக இருக்கிறோம். நிலையற்ற இவ்வுலகத்தைப் பற்றி தீராக் கவலைப் படுகிறோம். ஒரு பாவத்தையேனும் முற்றும் தொலைக்க முயலுகிறோமில்லை. இவ்வுலக வாழ்க்கை சீக்கிரம் செல்லட்டும் என்ற ஆதுரம் நமக்கு இல்லை. ஆகையால், இதிலேயே தங்குகிறோம். ஸன்மார்க்கத்தில் அலக்ஷியமும் உபேக்ஷையும் உள்ளவராக இருக்கின்றோம்.

நம்மைப் பேணுதலை நாம் மறந்து நம்முடைய மனக்கசடுகளை நீக்கினால் ஈசுவர விஷயங்களில் ருசி உண்டாகும். மேலான கதியின் ஏகதேச தர்சனம் கிடைக்க ஹேதுவாகும்.

இதற்குப் பலமான தடையுண்டு. அவை காமமும் க்ரோதமும். அவற்றை விலக்கினோமில்லை. அறிஞர்வழி அணுகினோமில்லை. நம் அற்ப சங்கடம் நேர்ந்தால், ஆழ்ந்த துயரத்திற்கு உள்ளாகிறோம். நம் போலியரிடம் அதன் நிவிர்த்தியைத் தேடுகிறோம்.

"கொலையஞ்சார் பொய்நாணார் மானமு மோம்பார்
கரவொன்றே வேனையவுஞ் செய்வார்—பழியொடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்வார்
காமங் கதுவப் பட்டார்" (நீதிநெறிவிளக்கம்)

"வெகுளியே உயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணம்தவம் விரதம் மாய்க்குமால்
வெகுளியே அறவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால்"
(காஞ்சிபுராணம்)

3. வருவன எல்லாம் வருக என்று தைரியமாக அணிவகுத்த யுத்தவீரர்கள்மாதிரியாக இருக்கப்பெறின், ஈசன் அருள்பற்றிய[illegible] தானாக வருதலைப்பார்ப்போம். அவரையே சரணமாக அடைந்து அவரையே நம்பி உலககஷ்டங்களுடன் போர்புரிகிறவர்களுக்கு அவர் உதவி எப்போதும் எதிரே நிற்பதாகும். போர்புரிதலுக்குச் சந்தர்ப்பங்களை அவரே உண்டுபண்ணுகிறார். அவைகளை நாம் ஜயித்து வெற்றிபெறவேண்டியேதான் அவர் அப்படிச் செய்விக்கின்றார்.

வெளிவிதிகளைமாத்திரம் பற்றி ஒழுகுவோமாகில், நம்முடைய அன்பின் எல்லையைக் காணலாம். நம்முடைய அன்பு சீக்கிரம் முடிவுபெறும். (குறைந்துவிடும் என்றபடி.) நம்முடைய மனத்தின் மலம் முற்றும் தொலைக்க முயற்சிக்கக்கடவோம். அதனால், மன உபசாந்தி என்ற புதையலை அடைவோம். வருஷம் ஒன்றாகப் பாவம் ஒன்றாகத் தொலைந்திடின் பூர்ண ஞானியாவோம். ஆனால் இதற்கு முற்றும் மாறாக நடைபெறுகின்றோம். இறைவனை நோக்க ஆரம்பித்தகாலத்தில், எவ்வளவு பரிசுத்தராயும் நல்லவராகவும் இருந்தோம். நாட்செல்லச்செல்ல நம்முடைய நேர்மை எவ்வளவு குறைந்துகொண்டே வருகிறது!

நம்முடைய காலடி நன்மார்க்கத்தில் செல்லச்செல்ல, நம்முடைய அன்பு மேன்மேலும் அதிகமாக பிரகாசிக்கவேண்டுமல்லவா? அதற்கு மாறாக, முன்னிருந்த அன்பின் ஒரு பொறி அளவேனும் இருப்பின், அதுவே ஒரு பெரிய காரியமாக ஆகிவிட்டதுகாண்! இஃது என்ன கொடுமை! முதலில் நம் பாவத்தைப்பற்றி நாம் கடி



ந்து நொந்துகொள்ளுவோமாகில் நாளடைவில் பாவங்களையெல்லாம் சிறுகச்சிறுக லகுவாய்த் தொலைப்போம். வழக்கம் என்ற விலங்கைத் தவிர்க்கிறது கஷ்டமே. நம்மனோரதத்தை மீறின செயல் அதினும் கஷ்டமே.

சிறு குற்றங்களைத் தொலைக்கமாட்டீரேல், பெரும்பாவங்களை எப்போது தொலைப்பீர்கள்? தீய ஒழுக்கத்தை மறந்திடுமின்! இயற்கைப்போக்கைத் தடுமின்! இன்றேல் தீய பழக்கம் வரவர பலப்படும். பின்பு தொலைக்கமுடியாது. ஸன்மார்க்கத்தில் நோக்கமுள்ளவராக இருப்பீராக. தம்மைத் தாமே அடக்கப்பெறின், அதனால் நீர் அடையும் உபசாந்தி யென்ன? பிறருக்கு நீர் விளைவிக்கும் சந்தோஷம் என்ன என்று சொல்லுவேன்.

## 12-வது அதிகாரம்.

### ஆபத்தால் விளையும் நன்மை.

சிலவேளை துன்பமும், துயரமும், கவலையும் மனிதனுக்கு நேர்தல் நலமாம். அது மனத்தை உள்நோக்கச்செய்கிறது. அதனால் உலகப்பற்று விட ஹேதுவாகிறது. உலகவாழ்வின் நம்பிக்கையைத்தொலைக்கக் காரணமாகும்.

நமக்கு எதிர்க்கக்ஷி உண்டாதல் நலனே. எவ்வளவு நல்லவை செய்யினும் எவ்வளவு நல்லவை நினைப்பினும் பிறர் நம்மை நிந்தித்தலும், நம்மை முற்றிலும் அலக்ஷியம் செய்தலும் நமக்கு நலன் பயப்பதாகும். நம்மகந்தை அடங்க இவைகள் வழிகளாம். பிறர் நம்மை அலக்ஷியமாகப்பேசுதலும், பிறர் நம்மிடம் நன்மை ஒன்றேனும் காணாமல் இருத்தலும் நமக்கு நலமே. அதனால் நாம் உள்ளத்தில் இறைவனை நோக்கித் தெளிவாய்க் காண்கின்றோம். அவர் நம் கருமங்களையும் நம் கருத்துக்களையும், உள்ளவாறு காண நாம் ஆனந்திக்கிறோம். கடவுளே அடைக்கலம் என, நாம் அவர்பால் மனத்தை இடையறாது வைக்கவேண்டும். இப்படி இருக்கப்பெறின் அன்னியமனிதர்களின் ஆறுதலான வசனம் வேண்டுவதின்றாம்.

நல்லான் ஒருவன் துன்பத்திற்கு உட்பட்டுக் கவலையால் வருந்தும்காலத்தில் கடவுளின் அடைக்கலமே தனக்கு உற்றது என்று தெளிவாய் அறிவான். 'அவனன்றி அணுவும் அசையாது' என்ற

நன்னம்பிக்கையில் உறுதிப்பாடு பெறுவான். அதனால் தான் வியசனிப்பான், அழுவான், ஈசனை இறைஞ்சுவான், போற்றுவான். இனி உலகவாழ்க்கையை வெறுப்பான். மனத்தைக் களிப்புற வேண்டுவான். கிறிஸ்துவுடன் (ஆன்மாவுடன்) ஒன்றுபடவிரும்புவான். மாறிமாறிக்கொண்டிருக்கும் இவ்வுலகத்தின்கண் நீடியசாந்தமும் சாவதானமும் இல்லையென உணர்வான்.

அடியில்வரும் பாட்டு இங்கு உணரத்தக்கது.

"உற்றாரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன், கற்பனவும் இனி அமையும்.
குற்றாலத்து அமர்ந்து உறையும், கூத்தா! உன் குரைகழற்கே,
கற்றாவின் மனம்போல் கசிந்துருக வேண்டுவனே."

(மாணிக்கவாசகர்.)

## 13-வது அதிகாரம்.

### "வருவன எல்லாம் வருக" என்றிருத்தல்.

அதாவது

### சோதனையைச் சகித்தல்.

1. இவ்வுலகவாழ்வில் சோதனையும் துயரமும் இயல்பாம். ஆகவே, ஜோப் என்பவரின் சரிதத்தினால் "உலகவாழ்க்கை என்றால் சோதனைக்கு இருப்பிடம்" என அறிகிறோம். அதனால், ஒவ்வொருவரும் சோதனைகளைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தம்முடைய தியானத்தில், விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். சோர்வும் மனத்தளர்ச்சியும் தன்னைப்பற்றாது இருக்கட்டும். தம்மைத் தாழ்த்தித் தம்மை வசப்படுத்த (Satan)மாயை எங்கேயென்று இரவு பகல் காத்துக்கொண்டிருக்கின்றது. முற்றும் தூயவர் ஒருவருமிலர். முற்றும் நல்லவர் ஒருவருமிலர். சோதனை யாரையும் விடாது. எப்போதாயினும் வந்துதீரும். அதைவிட்டு விலகமுடியாது.

2. கொடுமையான சங்கடங்கள் சம்பவிக்கின்றனவே என்றாலோ, அவைகள் மனிதனுக்கு அனுகூலமானவை. அவைகளைத் தைரியமாகப் பொறுத்தால், நம் அகந்தை ஒடுங்கும்; தூயராவோம்; நம்மறிவு விரியும்; ஞானிகள் என்ற அனைவோரும் பலசங்கடங்களை



அனுபவித்தவர்கள்; பல கவலைக்குள்ளாகியிருந்தவர்கள்; அவைகளைத்தைரியமாகப்பொறுத்துப் பலன் அடைந்தார்கள். அத்துன்பங்களைத் தைரியமாகப்பொறுக்காமல் இருந்தோர், ஈசன் வழிவிட்டு நழுவிக் கெட்டுப்போனார்கள்.

3. எந்த ஆச்ரமியாக இருப்பில் என்ன? எவ்விடத்தில் இருப்பில் என்ன? சோதனைகளும் துன்பங்களும் அணுகாமல் இரா. மனிதன் உள்ளவரை அவைகளைவிட்டு விலகமுடியாது. ஏனெனில் சோதனைக்குமூலம் தன்னுள்ளமே. காமத்தில் பிறந்தோம். ஒரு சோதனை. ஒரு துன்பம் வந்து தணிய, மற்றொன்று அதன் ஸ்தானத்திற்குவருகிறது. ஆக ஏதாவது துன்பம்ஒன்று அல்லது மற்றது மனிதனுக்கு இருந்துகொண்டே யிருக்கும். அவனுடைய பூர்வ ஆனந்தநிலைமையைவிட்டு விலகினதுமுதற்கொண்டு இந்தக் கதிதான் அவனுக்குள்ளது.

4. அநேகர் சோதனைகளைவிட்டு விலகிக்கொள்ள முயலுகிறார்கள். அவ்வளவுக்குத்தக்க பாதாளத்தில் விழுகிறார்கள். அவைகளைவிட்டு ஓடினால் அவைகள் விடா. அவைகள் வரட்டுமென்று பொறுத்துத் தணிந்துகொடுத்தால் நமக்குத் தைரியம் உண்டாகும். அவைகளைக்கண்டு ஒதுங்குகிறவன் அவ்வளவு சாதகம் பெறான். திரும்பவும் அதிக ஊக்கத்துடன் அவைகள் அவனைத் தாக்கும். சிறுகச்சிறுகப் பொறுமையாலும் மனச்சமாதானத்தாலும் ஈசன் அருளால் அவைகளை மேற்கொள்ளலாகும். முரட்டுத்தனத்தினாலும், மனச்சஞ்சலத்தினாலும் பரபரப்பான நடத்தையாலும் அவைகளை வெல்லமுடியாது. சோதனையால் மெய்யுணர்வு பெறுவாய். அதனால், துன்பத்துக்குள்ளாயினாரைச் சாந்தமாய் நடத்துக; அவர்மேல் அன்புடையனாய் ஒழுகுக; அவருக்கு ஆறுதல் சொல்லுக; பிறருக்கு நினைக்கக்கேடு தனக்கு என்ற பழமொழியை உன்னுக; சஞ்சலசிந்தையும், ஈசனிடம் பற்று வையா மனமும் இவ்விரண்டும் துன்பத்திற்கு வித்தாம். வேறு வித்து இடல்வேண்டுமோ? சுக்கான் இல்லாத மரக்கலம் அலையால் அங்கும் இங்கும் தத்தளிக்குமாறு மனத்தைச் செய்வித்து வாழ்நாளை நேர்மைப்படுத்தாமலிருக்கின்ற புத்தியீனன் தவிப்பான்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" (குறள்)

5. நெருப்பினால் இரும்பு சுத்தமாகும்; துன்பத்தினால் நல்லார் விளங்குவாராவர். பெரும்பாலும், நம்முடைய சக்தி நமக்கே தெரியாமல் இருக்கும். துன்பமும் துயரமும் நம்முடைய சக்தியை வெளிப்படுத்தும்.

ஆயினும், துன்பம் அணுகுகையில் எச்சரிக்கையாயிரு. அப்போது அதை இலகுவாய் ஜயிக்கலாம். அது அணுகுகையில் நம் மனம் சலிக்காமலிருப்பின் * அது மனத்துக்குள் பிரவேசிக்குமுன் அதை வெல்லலாம். "கருவாயிலேயே வியாதியைத் தொலைத்துவிடு. பின்னீடு செய்வோம் என வேண்டாம்." இது ஒரு ஞானியின் துணிபு. அன்றேல் ஒரு தீய சிந்தை மனத்திற்படும்; பின்பு அது விஸ்தரிக்கும்; பின்பு மனம் அதை நினைத்து நினைத்துத் தீய பாவத்தைச் சித்திரிக்கும்; பின்பு அதில் ருசி தட்டும்; பின்பு அதில் வசமாகும். இவ்வண்ணம் மெல்லமெல்ல அது பலப்பட்டு நம்மை அடிமைப்படுத்தும். அத்தீய பாவம் வரும்போழ்தே கண்ணுறாமல் சோர்வு உற்று இருப்பினும், வந்தபிறகு பார்ப்போம் என்று நினைப்பினும் அத்தீயபாவம் மேன்மேலும் விருத்தியாக விருத்தியாக நம்முடைய தைரியம் வரவரத் தீர்வதாகும்.

6. சிலர் நிவிர்த்திமார்க்கத்தின் ஆரம்பத்திலேயே, அதிக சோதனைகளுக்கு உள்ளாகிறார்கள். சிலர் அதன் இடைமுறையில் துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள். பின்னும்சிலர் வாழ்நாள் முழுமையும் துன்பப்படுகிறார்கள். சிலர் சொற்பத்துன்பத்துக்கு உள்ளாகுகிறார்கள். இவையெல்லாம் ஈசன் செயல். அவனவனுக்குத் தக்கவாறு அது நிகழும். அவனவன்யோக்கியதையை அவர் அறிவார். அதற்கு ஏற்றபடி துன்பத்தை வருத்திடுவார். அவரை நம்பினவரின் க்ஷேமத்தின்பொருட்டுத் தொன்றுதொட்டு இந்தத் தர்ம விதியே நடைபெறுமாறு ஏற்படுத்தியிருக்கிறார்.

அதனால் சோதனையாகத் துன்பம் நேரிடில், மனம் சோர்வடையாது இருமின்; அகலாது இறைவனைப் போற்றுமின்; இப்படிச் செய்வீரேல், நம் துன்பத்தில் அவர் இரங்கி அருள்புரிவர். "ஒவ்வொரு துன்பத்துடனும் அதை விட்டு விலகிக்கொள்ளும் உபாயத்

* "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு" இக்குறள் இங்கு கவனிக்கத்தக்கது.



தையும், அதைப்பொறுத்துக்கொள்ளும் முறையையும் ஈசன் அமைத்திடுவர்." எனப் பால்ஞானியார் சொல்லியிருக்கிறார்.

7. ஒவ்வொரு சோதனையிலும் ஒவ்வொரு துன்பத்திலும் ஈசன் அருள் இருக்கிறதென்று உன்னி, மனத்தைத் தாழ்மைப்படுத்திக்கொள். பணிந்த மனமுடையவரை கடவுள் கைதூக்கிவிடுவர். ரக்ஷிப்பர். சோதனைகளாலும் துன்பங்களாலும் ஒவ்வொருவனுடைய மனத்தின் விகாசத்தின் நிலைமை விளங்கும். அப்போது தான் அவனுடைய மனவொழுக்கமும் மனோதர்மமும் அதிகமாகத் துலங்கும். நாம் மனத்தின்கண் மாசிலராக இருப்பினும், அன்பினால் மனம் உருகினும் என்ன துன்பம்வந்தாலும் அவை நம்முடைய மனத்தைச் சலிப்பிக்காவாம். எத்துன்பம் வரினும் அதைப் பொறுத்தால் நிவர்த்திமார்க்கத்தில் மேம்பாடு அடைவானென்பதற்கு நம்பிக்கை உண்டு.

பெரிய சோதனைகளில் சிலர் சாவதானமாய் நீந்தித் தப்புகிறார்கள். அவர்கள் அற்பத்துன்பங்கள் நேரிடில் அடிக்கடி அமிழ்ந்து போகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், கொடிய துன்பம் வருங்கால் தம்மை நம்பாமல் இறைவனை நம்பிக் கரையேறுகிறார்கள். சிறிய துன்பங்கள்வரில் அவரைநினையாமல் தம்மை நம்பித் தடுமாறுகிறார்கள்.

## 14-வது அதிகாரம்.

### ஆராயாது பிறர் குற்றங்கடிதலைத் தவிர்தல்.

1. உன் யோக்கியதையை நீ உன்னிப்பார். பிறர் குற்றங்களைக்கடியுமுன் யோசித்துப்பார். பிறர்மேல் அவதூறு சொல்லும் முயற்சி வேண்டாம். பலகால் நாம் குற்றங்களைச் செய்கின்றோம்; இலகுவாய் பாவத்தைப்பண்ணுகிறோம்; நம்மை நாமேசோதித்துப் பார்த்தோமேயானால் அது நமக்கு நன்மை பயக்கும். நம்முடைய மனோரதத்துக்குத் தக்கபடி பிறர் குற்றங்களையும் குணங்களையும் கிரகிக்கிறோம். ஒன்றன்மீது நமக்குப் பற்றுண்டானால் அதைச் சீர்தூக்கும் யோக்கியதை குன்றுகிறது. சத்தியமே நம்முடைய நோக்கமாயிருப்பின், நம்முடைய மனத்துக்கு விரோதமாய் ஒன்று இருப்பினும் அதனால் தர்மமுறையினின்று மனம் நழுவாது; இன்றேல், ஏதேனும் ஒன்று அகத்தின்கண்ணாவது புறத்தின்கண்ணாவது நேரிட்டு மனநேர்மையைக் கெடுத்து அதன்வழியே இழுக்கும்.

2. அநேகர் தாம் செய்பவைகளிலெல்லாம் குப்தாமக சுயநயம் நாடியே செய்வர். அதை அவர் தாமே அறியார். தம்முடைய பிரியத்துக்கும், மனோபாவத்துக்கும் நேர்மையாக எல்லாம் ஒத்து நடைபெறின், அவரும் உபசாந்தம் உள்ளார்போல் நடிப்பர்; ஆனால் தம்மனநேர்மைக்கு வேறாக ஒன்று நேரிடின், உடனே மனச்சஞ்சலமடைந்து துன்பமடைவார்.

3. மனோபாவங்களும் அபிப்பிராயங்களும் பலவாறாக வேறுபடுகின்றன. அதனால் சிநேகிதர்க்குள்ளும், ஒரு ஊரார்களுக்குள்ளும், மத அபிமானிகளுக்குள்ளும், கலகங்கள் சம்பவிக்கின்றன. பலநாட்பழக்கம் இலகுவில் விடமுடியாது. ஒவ்வொருவரும் தம் புத்திக்கு எட்டினமட்டில்தான் பிறரை நம்பி, நடிப்பவராவர். அதற்கப்பால் கால் எடுத்து வையார். இயேசுநாதரின் அருள் சக்தியில் பக்திபாராட்டாமல் உன் அறிவே உனக்கு அடைக்கலம். உன் கர்மமே உனக்கு ஆதாரம், என நினைப்பின் இலகுவாகவும் சீக்கிரமாகவும் மெய்யுணர்வு உனக்கு லபிக்காது. அதனால் கடவுளே நமக்கு அடைக்கலமென நினைந்தும், நம்மறிவின் செருக்கை முற்றும்விட்டு அவர்மீது உள்ளங்கனிந்து அன்புபாராட்டியும் இருக்கக்கடவோம். இதுவே ஈசன் கட்டளை.

## 15-வது அதிகாரம்.

### அன்போடு செய்யும்கருமம்.

"அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்." (குறள்.)

ஒருவனுக்காவது அல்லது சொந்த லாபத்தை நோக்கியாவது தீயகருமம் செய்யாது ஒழிக. ஆனால் சிலசமயங்களில் ஏழைகளின் க்ஷேமத்தை உத்தேசித்து சத்கருமத்தைச் செய்யாமல் நிறுத்தலும் கூடும். அல்லது அக்கருமத்தை விட்டு அதைவிட மேன்மை பயக்கும் மற்றொன்று செய்யற்பாலது.*

இவ்விதம் நடத்துவதினால் உன் சத்கருமத்துக்கு குறைவில்லை. அன்பின்றேல் வெளிக்கருமம் பயனில்லையாம். அஃதுண்டேல் கர்மம்

* "பொய்மையும் வாய்மையும் இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கப் பெறின். (குறள்)



JUL 1911

எவ்வளவு அர்பமேனும் அது பலனுளதாம். செய்பவன் மனோபாவம் எத்தன்மையதோ அது பற்றியே ஈசன் அருள் சிறப்பதாகும். செய்யும் கருமத்தின் அளவுபற்றி அன்றாம்.

"புறத்துறுப்பெல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு" (குறள்).

அன்புடன் செய்யும்காரியம் சிறிதேனும் பெரிதாம்; உண்மையுடன் செய்யும் கருமம் உயர்வாம். சுய நயம் பாராட்டாது பொது நயம் பாராட்டுவோன் கருமம் நன்றாம்.

நாம் செய்யும் சத்கருமங்களெல்லாம் சத்கருமங்களல்ல. அவை எல்லாம் சுயநயத்தை நாடிச் செய்தனவாகவே முடியும். அவைகள் சில மனத்தின் பிரியத்தினாலும், சில நாம் செய்தோமென்ற அகங்காரத்தாலும், சில மறுமையில் பலனைக் கருதியும், சில நம் சுகத்தை நாடியும் இருக்கின்றனவாம். உண்மையில் சத்கருமத்தைச் செய்கிறவன் அதனால் சுயநயம் தேடான். அதன் பலனை ஈசுரார்ப்பணம் செய்வான். அவன் ஒருவரையும் கண்டு பொறாமைப் படான்.

"உண்டா லம்ம இவ்வுலகம்....
... ... ... ...
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மையானே" (புறம்—182)

தனக்கென்று சந்தோஷம் அவன் நாடான்; தானே சுகிக்க வேண்டுமென்று கருதான்; இறைவனிடம் உபசாந்தம் பெறுதலே பெரும் பாக்கியமென எண்ணுவான். மனிதனால் ஆவது ஒன்றில்லை என எண்ணி எல்லாம் ஈசன் செயலென்று அவன் உணருவான். எல்லாம் ஊற்றுக்கண்போல அவரிடமிருந்து வருகின்றன என்று அறிவான். ஞானிகள் எல்லாம் கடவுளிடம் உபசாந்தி பெறுதலையே தம் லட்சியமாக வைப்பார்கள். யதார்த்தமான அன்பு ஒருவனிடம் பொறியளவே இருப்பின் அவனுக்கு உலக வாழ்வு வீண் பைத்தியமாகத் தோன்றும்.

## 16-வது அதிகாரம்.

### 1. பிறர் குற்றத்தில் பொறையுடைமை.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம்
பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்" (குறள்)

உன்னைச் சீர்ப்படுத்திக்கொள்ள முடியா விடினும், பிறனைச் சீர்ப்படுத்த முடியாவிடினும் அதைக் கடவுளே சீர்திருத்துவாரென்று நம்பி நீ பொறுமையாக இரு. இதுவே உனக்கு நலமாம். உன் பொறுமையின் அளவைச் சோதிக்கவும் உன் யோக்கியதையை விளக்கவும் இவ்விதம் சம்பவிக்கிறதென்று அறி. இவ்விதசோதனை இல்லாவிடில் ஒருவன் யோக்கியதை பிரகாசிக்காது. இவ்வித இடையூறு நேருங்கால், அதைச் சகிக்கச் சக்தியும், மனச்சமாதானமும் அருள வேண்டுமென இறைவனைப் போற்று. ஒருவன் ஒருமுறை இருமுறை புத்தி சொல்லியும கேளாவிடில் அவனோடு போராடாதே. கடவுளிடம் அவனை ஒப்புவித்து விடு. அவர் ஆக்ஞைப்படி நடக்கட்டுமென்று நினை. தீமையை நன்மையாக மாற்றும் சக்தி அவருக்குண்டு.

### 2. பிறர் குற்றத்தையும் குறைவையும் சகிப்பாயாக.

"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று" (குறள்).

அலை யெத்தன்மைய வாயினும் பொறுப்பாயாக. உன் குற்றங்களையும் குறைகளையும் பிறர் சகிக்கவேண்டுமென விரும்புகிறாயல்லவா? நீ விரும்பியபடி உன்னை ஆக்கிக்கொள்ள உனக்கு முடியாமற்போனால் பிறரை உன் மனப்படி ஆக்க முயலுவதில் என்ன பயன்? நம்மைத் தவிர பிறர் எல்லாம் குற்றமும் குறையும் அற்ற ஞானிகளாக இருக்க விரும்புவோம். நம் குற்றங்களைக் களைய நாடோம். பிறர் குற்றங்களைக் கண்டிப்போம். நம்மைக் கண்டிக்க இணங்கோம். பிறர் சுதந்திரம் பாராட்ட நாம் சகியோம். நம்முடைய விருப்பத்தில் தடை நேரிட்டால் அதைப் பொறோம். பிறருக்கு விதிப்போம். நம்மையும் பிறரையும் ஒரே தராசில் நிறுக்கச் சகியோம். எல்லாருமே ஞானிகளேயாகில் பிறர் குற்றம் சகிக்கச் சமயம் எங்கே? ஈசனுக்குத் திருப்தியாய் வழிபடும் முறை எங்கே? அதனால் பிறர் சுமையை நாம் தாங்குகிறதே ஈசுவர சங்கல்பமென உலகமுறை காட்டுகின்றது. குற்றமிலார் ஒருவருமிலர். தன் கவலையைத் தாமே தாங்கும் சக்தியுள்ளார் ஒருவரும் இலர்; ஒருவர் சுமையை மற்றவர் முறைமாறித் தாங்குகின்றார். ஒருவர் மற்றவருக்கு ஆறுதல் செய்கிறார்; உதவி புரிகிறார்; புத்தி கற்பிக்கிறார்; அறிவு ஊட்டுகிறார்; அவரவருக்குச் சோதனையான தன்பங்கள் நே



ருங்கால் அவர் அவர் சுபாவம் விளங்கும். கெட்ட காலங்கள் மனிதனைக் கெடுக்காவாம். ஆனால் அவனவன் சுபாவத்தைக் காட்டுமாம்.

## 17-வது அதிகாரம்.

### துறவு.

"யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்". (குறள்).

பிறருடன் நேர்மையாக இருக்க விரும்பின் தானே அடங்கல்வேண்டும் துறவிகளுடனும் ஒரு கூட்டத்தாருடனும் வாழ்நாள் முடியும்வரை குற்றத்திற்குள்ளாகாமல் காலங்கழித்தவன் பாக்கியமே பாக்கியம்! நிற்கவேண்டியபடி நிற்கவும், நடக்கவேண்டியபடி நடக்கவும். பிரியப்படுவாயாகில் உன்னை வழிப்போக்கனாகவும் உலகத்தை வழிப்போக்கர் தங்குமிடமாகவும் எண்ணக்கடவாய். நிவிர்த்திமார்க்கத்தில் நடைபெற்ற ஞானிகள் வழிப்படின், உலகம் உன்னைப் பித்தன் எனச் சொல்லும் காஷாயத்திலும் தலை மொட்டையிலும் பயனில்லையாம்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்" (குறள்.)

ஒழுக்கம் மிகவேண்டும்; மனத்தூய்மை பெறவேண்டும்; சித்தவிருத்தி அடங்கவேண்டும்; இதுதான் சந்நியாசம். இறைவனது சேவையும் ஆத்மஞானம் பெறவும் முயலாமல் உலகவழி பற்றி ஒழுகினால் துக்கமும் துயரமுமாம். தன்னை அற்பனாகவும் எல்லாருக்கும் அடிமையாகவும் எண்ணாதான் உபசாந்தம் நீடித்து நிற்காதாம்.

"வேட நெறி நில்லார் வேடம்
பூண் டென் பயன்" (திருமந்திரம்)

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு" (குறள்).

பிறருக்குக் கைங்கர்யம் செய்யவே உலகத்தில் ஜனித்தாய்; அரசு ஆள அன்றாம். உழைக்கவும் வருந்தவும் உனக்குச் சரீரம் அமைந்ததே யன்றி, சோம்பித் திரியவும் பயனில்சொல் சொல்லவும் அன்றாம். தங்கம் உலையில் போல் மனிதர் உலகில் தபிக்கப்பெறுகிறார். இறைவனிடம் பூர்ண அன்பு பற்றி ஒருவன் நடைபெறுனாகில் அவன் கதி நிர்க்கதியே.

# 18-வது அதிகாரம்.

## பூர்விக மஹான்களின் ஒழுக்கமுறை.

ஞானிகளால் நடத்திக்காட்டிய தபசையும் சீலத்தையும் கவனித்துப் பார். அது எவ்வளவு கம்பீரமாய்ப் பிரகாசிக்கிறது! அது ஜோதிக் கொடிபோல் விளங்குகிறது! அது எங்கே! நம்முடைய ஒழுக்கமெங்கே! நம்முடைய வாழ்நாள் முறைக்கும் அவர்களுடைய ஒழுக்க முறைக்கும் எவ்வளவோ தூரம்.

சிரேயஸ் மார்க்கத்தில் நடைபெறுகின்ற ஞானிகள் பசியால் வருந்தியும், தாகத்தால் தவித்தும், குளிரால் வருந்தியும், உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி, இறைவன் வழிப்பட்டு நடந்திருக்கிறார்கள். கண்கொட்டா விழிப்பில் கழிப்பது எவ்வளவு நேரமோ! உபவாசமாய் எத்தனை நாளோ! அவர் தியானம் என்ன என்பேன்! அவர் மனோபாவங்களின் அழகை என்னவென்று சொலவேன்! பிறரால் நிந்தனை எத்தனையோ! பலரால் துன்பம் எவ்வளவோ! இவையெல்லாம் உன்னிப்பார். எவ்வளவு துன்பம் அவர்கள் அனுபவித்தார்கள்! அந்தோ! என்ன கொடுமை! எத்தனை கொடுமைக்கு அவர்கள் உள்ளாயினார்கள்! ஞானி வழிப்பட்டு நடக்க முயன்ற உபதேசிகள் (Apostles) என்ன: அதற்காகத் தம்முயிரையே கொடுத்தவர்கள் (Martyrs) என்ன: துறவித்தன்மை புரிந்த சந்நியாசிகள் என்ன: தம் குற்றங்களை விண்டதப் பாவிகள் (Confessors) என உருகினவர்கள் என்ன: இத்தன்மையோர் எத்தனை பெயர்கள் என யான் சொல்லுவேன்! இவ்வுலகில் இருக்கும் வரையில், தம்மை முற்றும் வெறுத்து இறைவனிடம் தம்மை அடைக்கலமாக்கிச் செய்தவர்கள் இவர்களென அறிகிறோம்.

இத்தகைய ஞானிகள் நோன்பு பூண்டு, தங்களை முற்றும் மறந்து, வனாந்தரங்களில் எவ்விதம் காலம் கழித்தனர் எனத் தெரிந்துகொள். சோதனைக்குள்ளாகிக் கழித்த நாள் எத்தனையோ! விரதம் பூண்டு இருந்த நாள் எத்தனையோ! பகைஞரால் துன்பம் அடைந்த நாள் எத்தனையோ! அன்புற்று அகம் குழைந்து அருட்கடலைப் போற்றி யகற்றிய நாள் எத்தனையோ! அவர்கள் கொண்ட தீவிர நோன்பின் கொடுமை என்ன! அவர் அனுஷ்டித்த மார்க்கத்தில் அவர் அன்பு என்ன! ஊக்கம் என்ன! தம்மை அடக்கித்



தாம் உபசாந்தம் பெறுமாறு தம்மனதுடனே அவர் செய்த போராட்டம் என்ன! கடவுள் வழிப்பட்டு அவர் அடைந்த மனத்தூய்மை என்ன! மன நேர்மை என்ன!

பகலில் உழைப்பு: இரவில் சிறுபொழுதுவரை விழிப்பு: உழைப்பிலும் இறைவனை மனசில் உபாசனை செய்தல் விடார்; இவ்வண்ணம் அவர்கள் வீண்நாள் படாமை நன்று ஆற்றினார்கள். ஈசன் தியானத்தில் சென்ற காலம் விரைவாய்ச் சென்றது; தியானபரர்களாய் பசியை மறந்தார்கள்; செல்வம், கௌரவம், பெயர், சிநேகர், உற்றோர் வேண்டினாரில்லை. அவர்களுக்கு வேண்டுவன இவ்வுலகத்தில் ஒன்றுமில்லை. சரீர யாத்திரைக்கு வேண்டுவன உண்ண வேணுமே என நோவார்கள். உலகசம்பத்தில் அவர்கள் ஏழை; தெய்வ சம்பத்தில் அவர்கள் வலியர்கள். அன்பும் அருளும் உற்றவர்கள். மனச சந்துஷ்டியும் இறைவன் அருளும் பெற்றவர்கள். உலகத்திற்கு அந்நியர்; கடவுளுக்கு அண்ணியர். அவருக்கு நெருங்கிய தோழர்; தம்மை அற்பராய் நினைந்தவர்; உலகால் நிந்தனை உற்றோர்: இறைவனால் மதித்தலைப்பெற்றோர்; அவர் பண்பும் பணிவும் அமைந்தாராய் ஒழுகிவந்தார்; பொறுமையைப் பூண்டனர்; அனைவரிடமும் அன்புபற்றி அகங்குழைந்தனர்; தினந்தோறும் மேம்பாட்டை விருத்திசெய்து வந்தனர்; மெய்யுணர்வு அடைந்தனர்; ஈசன் அருள் அதிகரிக்க பெற்றனர்; நிவிர்த்தி வழியின் உதாரணமாக அவர் திகழ்ந்தனர்; ஆகவே அசுரபாவங்கள் நுழைமை அணுகாமல் ஞானிகள் வழிபற்றி நடைபெறுவோமாக.

ஆதியில் ஏற்பட்ட காலத்தில் இருந்த இச்சந்நியாசமார்க்கத்தை பாருங்கள். அதன் தீவிர வைராக்கியத்தின் நிலைமை என்ன! அச்சந்நியாசிகளின் கம்பீரமான பிரார்த்தனைகள் என்ன! ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டாற்போல அவர்களின் தூய ஒழுக்கம் இருந்தது; அவர்கள் விரதம் எவ்வளவு கண்டிப்பாயும் பயிர்போல் மேன்மேலும் விருத்தியடைந்தும் வந்தது! உலகத்தில் அவர்களுக்கு எங்கேபோனாலும் எவ்வளவு கௌரவமும், மரியாதையும் நடந்து வந்தன. பூர்வீகர்களால் ஏற்படுத்திய ஒழுக்க முறைகளைப் பற்றி அவர்கள் நடந்து வந்தார்கள். நில்லா உலகத்தை விட்டு எவ்வளவு தீரத்தன்மையாக, அவர்கள் போராடிக்கொண்டு வந்தார்கள் என நாம் அறிகிறோம்.

இக்காலத்திலோ சந்நியாசத்தின் வெளிமுறை பற்றி வழுவாமல் எடுத்த ஆச்சிரம தர்மத்தை வெளி விதிப்படியாவது நடந்துவருவாராகில் அவரே பெரியவராக விளங்குகிறார். அந்தோ! அந்த ஆசிரமத்தின் உயர்வு எவ்வளவு தாழ்ந்துவிட்டது! அது நம்முடைய சிரத்தைக் குறைவால் உண்டாயிருக்கிறது. ஆதி யுயர்வினின்று எவ்வளவு தூரம் நழுவி யிருக்கின்றோம்! சோம்பலினாலும், களைப்பினாலும், உலக வாழ்வைத் துறக்கப் பார்க்கின்றோம்; எத்தனையோ மஹான்களின் சரிதத்தைக் கேட்டு இருக்கின்ற நீங்கள் இந்த உயர்வான ஆச்சிரமத்தின் மஹிமையை மறவாமல் மேன்மேலும் அது அபிவிருத்தி ஆகும் வண்ணம் நடை பெறுவீராக.

## 19-வது அதிகாரம்.

### துறவோர்சங்கத்தில் ஒருவன் இருக்குமுறை.

1. துறவிகள் ஆச்சிரமத்தில் உள்ள ஒரு நல்ல மனிதனிடம் எல்லா நற்குணங்களும் அதிகமாக விளங்கவேண்டும். வெளி வேஷத்திற்கும் மனோபாவத்திற்கும் நேர்மை இருக்கவேண்டும். அன்றியும் வெளி வேஷத்தால் நாம் எதிர் பார்க்கிறதைவிட மனோபாவமானது அதி உயர்வாக இருத்தல் வேண்டும். நம்முள்ளத்தைப் பார்க்கின்றவர் கடவுள். அவர் நம்மால் வணங்கப்பெற்றவர். தேவர்கள்போன்று நாமும் அவர் சந்நிதானத்தில் பரிசுத்தர்களாக ஒழுக வேண்டும்.

ஒவ்வொருநாளும் நம்முடைய எண்ணம் களிம்பு பற்றாமல் புதிதாயிருக்கும்படி கண்ணோக்காய் இருத்தல் வேண்டும். அது பெறுமாறு ஊக்கமுடையராக இருத்தல் வேண்டும். இன்றுதான் ஞானமுறை. நாம் கைக்கொண்ட ரீதியாக அகமுருகி "ஜகதீசா! இந்த எண்ணம் நிறைவேறுமாறு அருள் புரிவாய். நான் பூண்ட விரதம் சரியாய் நடைபெறுமாறு அருள்வாய். யான் இதுவரை செய்தது ஒன்றுமில்லை" எனக் கடவுளை அன்புடன் வணங்கு. நம்முடைய கருத்து எவ்விதமோ அவ்விதமே நம்முடைய அபிவிருத்தியும் நடைபெறுகிறது. அக்கருத்து நிறைவேற வேண்டின், கருமத்தில் கவனமாய் இரு.

துணிவான முறையைத் தமக்கு உற்றது எனத் தீர்மானிக்கிற தீரனே, தவறுவானாகில் மனச்சோர்வுள்ள சாமானியன் தவறுவ



தில் என்ன ஆச்சரியமிருக்கிறது? நாம் ஏற்படுத்தும் தீர்மானங்களுக்கு இடையூறுகள் பலவாம். நாம் கொண்டதில் ஒன்றுவிட்டால் அதனால் நஷ்டம் சம்பவித்தே தீரும். நல்லார் தங்கருத்துக்களைக் கடவுள் அருளால் நிறைவேற்றுகிறார்கள். தம்மால் அன்று என அவர்கள் அறிவார்கள். அவர்கள் கருமங்களை எல்லாம் கடவுள் மேல் பாரத்தையும் நன்னம்பிக்கையையும் வைத்து அவர்கள் தொடங்குவார்கள்.

2. நாம் ஒன்று எண்ண தெய்வம் வேறாக மாற்றிவிடும். ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட வேறொன்றாகும். இரக்கத்தினாலாவது பிறருக்கு உபகரிக்கவேண்டுமென்றாவது நம்முடைய விரதங்களில் ஒன்றையேனும் செய்யாமல் விட்டால் வேறு ஒரு சமயத்தில் அக்குற்றத்தை நேர்மை செய்துகொள்ளல் கூடும். சோம்பலினாலாவது அசிரத்தையினாலாவது நம்முடைய விரதம் ஒன்றைச் செய்யாமல் விட்டோமாகில், அது குற்றமாம். அதன் தீய பயனை அநுபவித்துத் தீரவேண்டும். அதைத் தவிர்க்க ஒண்ணாது. நம்முயற்சி எவ்வாறாக இருப்பினும் நம்முடைய விரதங்களில் அநேகத்தை நடத்தாமல் தவறிப்போகவுங் கூடும். ஆகையால் இன்னபடி செய்வோம் என்று உறுதியான தீர்மானம் செய்துகொள்ளல் வேண்டும். முக்கியமாக நம்மைத் தவறுக்கு உள்ளாக்கும் இடையூறுகள் நம்மை மேற்கொள்ளாதபடி உறுதியான தீர்மானம் செய்யக்கடவோம்.

நம்முடைய ஒழுக்கமும் மனோபாவமும் நேர்மையாக இருக்கிறதாவெனக் கவனித்துப் பார்க்கவேண்டும். அவ்வண்ணம் நிகழுமாறு செய்யவேண்டும். நாம் எடுத்திருக்கும் நிவிர்த்தித் துறைக்கு அது முக்கியமாம்.

இவ்விஷயத்தில் எப்போதும் கவனம் செலுத்த இயலாவிடினும் ஓரோர் சமயத்திலாவது அவ்விதம் செய்ய முடியும். ஒரு நாளில் ஒருமுறை காலையிலாவது மாலையிலாவது அவ்விதம் செய்யவேண்டும். ஒவ்வொருநாளும் சாயங்காலத்தில் அன்று முழுதும் நீ செய்த காரியங்களைப் பரிசீலனை செய்து பார். நீ எது வசனித்தாயென நினைத்துப்பார். அயலானுக்கு விரோதமாகவும், ஈசுவர சம்மதமில்லாமலும் ஒரு முறைக்கு மேற்பட்டே பாவம்செய்திருப்பாய். உலக மாயையின் வலைக்குட்படாமல் எச்சரிக்கையாய் இரு. முதலில் பெருந்தீனியைத் தவிர்; இது அடங்க, மற்றைய ஆசாபாசங்க

ளும் ஒடுங்கும்; அவைகளை இலகுவாய் வசப்படுத்தல் கூடும். முற்றும் சோம்பலாக இராதே. வாசி, எழுது, தவஞ்செய், அல்லது ஒன்றை நினைத்துப் பார்; அல்லது பிறருக்குப் பயன்படும் யாதேனும் ஒரு கருமம் செய்; சரீரத்தை வசப்படுத்தும் தபசு முறையில் கவனத்துடன் முயலு.

3. எல்லாருக்கும் பொதுவாய் ஏற்படாத தபசு முறையை பகிரங்கமாக செய்யப்படாது. அது உனக்குமாத்திரம் ஏற்பட்டமுறை; அதை உன்னுடைய தபசு அறையில் செய்யவேண்டும்; அது குப்தமாகச் செய்யத்தக்கது; பொதுப்படச் செய்யவேண்டிய தபசு காரியங்களை மற்றையரோடு செய்யாமல் நீ ஒதுங்காதே; தன்பாடு உண்டு என்று விலகாதே; மற்றையரோடு நீ செய்ய வேண்டிய தபோக்ருத்தியங்களைப்பூர்ணமாயும் பயபக்தியோடும் செய்து முடி; அதன்மேல் உனக்குச் சாவகாசம் இருப்பின், ஏகாந்தத்தை நாடு; உன் மனசை அந்தர்முகப்படுத்து; உனக்கென்று உரிய தவமுறை பற்றி நோக்கு.

எல்லாரும் ஒரே மாதிரியான தவமுறை அனுஷ்டிக்க இயலார்; ஒன்று ஒருவருக்குக்கூடும், மற்றொன்று வேறு ஒருவருக்குக் கூடும். மேலும் காலங்களுக்குத் தக்கபடி தபசு முறைகளும்வேறுபடும். நோன்புத் தினங்களில், சில தபசுமுறைசெய்ய ரம்மியமாக இருக்கும்; சாதாரண தினங்களில் சில தபோமுறைசெய்யப் பிரியமாக இருக்கும். சில, சோதனையான கஷ்ட காலங்களில் செய்ய நலமாம்; பின்னும்சில, சாந்தமாகவும் க்ஷேமமாகவும் இருக்கும் காலங்களில் செய்தல் ருசியாம். மனசு இருண்டு மயங்கி இருக்கும்போது சில விஷயங்களை நினைக்க நாம் பிரியப்படுகிறோம்; நாம் ஈசுவரனிடம் மனசுபற்றிச் சந்தோஷியாய் இருக்கும்போது சிலவிஷயங்களை நினைக்க உத்ஸாகம் உண்டாகிறது.

ஆனால் முக்கிய திருநாட்களில் நன்மையான ஒவ்வொரு விரதத்தையும் திரும்ப அனுஷ்டிக்கவேண்டும்; அதிக ஊக்கத்துடனே மஹான்களுடைய அனுக்கிரகத்தை அடையப் பிரார்த்திக்கவேண்டும்; ஒவ்வொரு விரத தினமும் அந்த விரதந்தான் முக்கியமென்று நினைத்தும், அதுதான் நாம் கடைசியில் உலகத்தில் செய்யப்போகிற விரதம் என்றும், அடுத்ததினம் இரோமெனப் பாவித்தும், அவ்விரதத்தைச் சிரத்தையுடன் செய்யத் துணிக; அடுத்த க்ஷணத்



தில் இறைவன்சன்னிதியில் நிற்போமென நம்பி நீ செய்யும் ஆராதனைக்காலங்களில் அதிக சிரத்தா பக்தியுடனே நன்மையான மார்க்கத்தை அனுஷ்டிக்கத் தீர்மானம் கொண்டு, செய்யும் ஒவ்வொரு காரியமும் நேர்வழி பிறழாவண்ணம் கவனமாய் இருக்க முயலக் கடவாய். நீ எண்ணியபடி அடுத்த க்ஷணத்திலேயே ஈசுவர சன்னிதானம் கிட்டாமல் நாளடைவில்தான் சித்திக்குமென்று இருப்பினும், அதைப்பற்றிச்சோர்வு அடையாமல் அந்த உயர்ந்த பதவிக்கு நீ இன்னும் ஆயத்தமாகவில்லை என நினைந்து, உற்றகாலத்தில் மனதின்கண்ணுள்ள அஞ்ஞான இருள் நீங்கிவிடுமென்றும் நிச்சயம் கொள். அத்தருணத்தை நீ அடையும்படியாக ஆயத்தம் செய்து கொள்ளுக. ஒரு ஞானியார் சொல்லுகிறதாவது, “கடைமுறையில் மரணகாலத்தில் கடவுள் பார்க்கும் சமயத்தில் ஜாக்கிரதையாயுள்ள பக்தனே அதிர்ஷ்டசாலி. ஈசன் அருளுக்குப் பாத்திரவானவன் அவருடைய அதிகார புருஷர்களில் ஒருவனாக ஏற்படுவான்.

## 20-வது அதிகாரம்.

### ஏகாந்தமும் மௌனமும்.

1. ஏகாந்தமாக இருக்க சாவகாசத்தைத் தேடு. கடவுளின் காருண்யத்தைப்பற்றி நினை. வீண் விசாரணைகளைத் தவிர். மனசுக்கு வேலை கொடுக்கும் விஷயங்களை விலக்கு. மனசை உருக்கி இளகச்செய்யும் விஷயங்களில் அதனைச் செலுத்து. உன் பாவங்களைப்பற்றிப் பரிதாபப்படும்படி செய்யும் படிப்பினைகளை நாடு.

வீண் பேச்சையும் சோம்பலாகத் திரிதலையும் பயனில் சொற் கேட்பதையும் விரைவில் தவிர். அதனால் நன்மை பயக்கும் விஷயத்தில் மனசுநாடச் சாவகாசம் ஏற்படும். ஆழ்ந்த ஞானிகள் கூடியவரை மனித ஸகவாஸத்தினால் ஏற்படும் ஆறுதலை ஒழித்து ஏகாந்தத்தில் தம்முள்ளே ஈசனை நாட முயன்றார்கள்.

அடியில் வருமாறு ஸேனிகா என்ற ஞானியார் சொல்லுகிறார். “ஜனப்பழக்கம் அதிகப்பட அதிகப்பட, மனுஷத்தன்மையில் குறைவுற்றேன் குறைவுற்றேன்.” இந்த அனுபவம் வீண்பேச்சில் காலங் கழிக்கிறதினால் பெறுவோம். அதிகமாகப் பேசுவதலினும் வாய் அடக்கி மௌனம் சாதித்தல் நன்று. வெளியேறி யடக்க முயல்வ

தினும் அகமிருந்து சும்மா யிருத்தலே நலமாம். உள்ளடங்கி ஞான வழியில் நடைபெறக் கருதுகிறவன் ஏசு என்பார் செய்தவண்ணம் விருதாகக் கூட்டத்தினின்று பெயர்வான்.

2. உள்ளடங்கி, வாழ்நாள் பிறர் அறியாமல் கழிக்க விரும்புபவன் அன்றோ பயமின்றி வெளியேறிப்போக வல்லன் ஆவன்! நாவு அடக்கி மௌனம் சாதிக்கப் பிரியமுள்ளவன் அன்றோ பயமின்றிப் பேச வல்லனாவன்! கீழான பதவி தமக்குப் போதுமென்று விரும்புபவன் அன்றோ அதிகாரம் வகிக்க வல்லன் ஆவன்! பண்பும் பணிவும் உடையான் அன்றோ இடையூறின்றிச் செல்வாக்கு அமைந்த பதவிகள் பெற வல்லன் ஆவான்! தன் கண் மனச்சாக்ஷி நேர்மை பற்றியவனன்றோ செல்வம் எய்தி செழுமையிலிருக்கும் நாளில் நேர்மை குன்றாமல் நிற்க வல்லன் ஆவன்! இதற்குக் காரணம் என்னவென்று அறி. ஞானிகளின் இவ்வல்லமைக்கு அவர்கள் ஈசுவரனிடம் பாராட்டி வந்த பயபக்தியே ஆதாரமாம். தாங்கள் ஒழுக்கத்திலும் குணத்திலும் மனோபாவத்திலும் மாஹாத்மியம் பெற்றிருக்கிறோமென்று இறுமாப்புக்கொள்ளாமல் எப்போதும் கவலையுள்ளவர்களாகவும் எச்சரிப்புள்ளவர்களாகவும் வணக்கமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். ஆகையினால் அவர்கள் பயமின்றி இருப்பார்கள். தீயவர்களோவென்றால் செருக்குற்றவர்களாய் தாம் என்ற மமதை யேற்பட்டு ஏமாந்திருந்து பயமில்லையென நினைத்துக் கடைமுறையில் மயங்கிக் கெடுவார்கள்.

3. என் நண்பனே! கவனமாய்க் கேள். எத்தனைய பக்தியுடையரேனும், எத்தகைய துறவியரேனும், இப்பிரபஞ்ச வாழ்க்கையில் பயமில்லையென இறுமாப்புக் கொள்ளவொண்ணாது. ஏனெனில் பிறரால் நன்கு மதிக்கப்பெற்ற அறிஞரே தமக்குப் பயமில்லையென்று அதிக நம்பிக்கை கொண்ட காரணத்தினால் ஏனையர்களை விட அதிக அபாயத்திற்கு ஆளாகுகின்றார்கள். ஆகவே, துன்பமும் துயரமும்பற்றிய சோதனைகள் இல்லாமல் சாதாரண ஜனங்களுக்கு வாழ்நாள் செல்லுதல் நலமன்றாம்.

"வாளா லறுத்துச் சுடினு மருத்துவன்பால்
மாளாத காத னோயாளன்போல் மாயத்தால்
மீளாத துயர்தரினும் விற்றுவக்கோட்டம்மா நீ
யாளா யுனதருளே பார்ப்ப னடியேனே" (குலசேகரர்)



அடிக்கடி சோதனையான துன்பங்கள் சம்பவித்தல் நலமாம். அதனால் மனிதர்கள் பயமற்ற நிலையிலிருக்கிறோமென்று நினையார். அதனால் மனச்செருக்குற்றிரார். அதனால் மனச்சாக்ஷியின் ஹித மொழிகளை அலக்ஷியம் செய்யார்.

4. நிமிஷம் நிமிஷம் தோன்றி மறையும் உலகவாழ்வின் சந்தோஷங்களை நாடாமலும் உலக விஷயங்களில் தலை கொடுக்காமலும் ஒருவன் இருப்பானாகில் அவன் உள்ளம் எவ்வளவு நேர்மையாயிருக்கும்! உலகசம்பந்தமான விருதாக்கவலைகளை முற்றும் களைந்து விலக்கியும் மனசைக் கடவுள்வழி செலுத்தியும் வீடுபெற வேண்டுமென்று ஓரே நோக்காய் உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனிடம் ஒப்புவித்து, அவரே யடைக்கலமென்று மெய்யுணர்ச்சியுள்ளவனுடைய சாந்த நிலையே நிலை. அதன் உயர்வு இத்தன்மையது என்று சொல்ல முடியாது.

5. தன் பாபத்துக்கு நொந்து அனவரதமும் அநுதாபப்படான் ஒருவன் ஈசன் அருளுக்கு அருகனல்லன். உள்ளம் நெகிழ்ந்து நெஞ்சம் புண்ணாகி அன்பினால் உருகவேண்டுமேயானால் உலக ஆரவாரத்தினின்று பிழைத்துப் பெயர்மின். ஏகாந்தத்தை நாடுமின். "தலையணையில் (துயிலுமுன்) பாபத்துக்கு அநுதாபப்படு" என்றது மூத்தோர் சொல். அவ்வார்த்தை யமிர்தமென்று அறி.

உன்னுடைய ஏகாந்த அறையில் நீ வெளியில் இழந்ததெல்லாம் கைப்பற்றுவாய். ஏகாந்த அறையை நாட நாட அது ருசி தட்டும். அதை ஏகதேசம் நாடில் வெறுப்பாயிருக்கும். ஈசனை நாடிச்செல்ல நீ ஆரம்பிக்குங்கால் ஏகாந்த அறையில் உட்புகுந்து அதிலேயே இருக்கப் பழகுவாயாகில் சீக்கிரம் அது பிரியமுள்ள நண்பனாகும். அது உன் மனசுக்கு ஹிதமான ஒழிவு ஸ்தானமாகும். ஏகாந்தமான சாந்த நிலையில்தான் ஞானவழியின் ரஹஸியங்கள் புலப்பட்டு அன்போடு உருகி அகங்குழைந்து அநுதாபக் கண்ணீர்கள் இரவு இரவாய் ஆறாகப் பெருகி அதனால் மனத்தூய்மை பெற்று இறைவனடியணுக வழியதாகும். பிரபஞ்சப் பரபரப்பினின்று எவ்வளவுக்கெவ்வளவு மனசு விலகி உள்ளடங்குமோ அவ்வளவுக்கவ்வளவு ஈசனடி அணுகுவதாகும். உற்றாரையும் உறவினரையும் விலக விலகத் தேவனும் அவர் கணங்களும் உன்னை விரைந்து அடைவதாகும்.

6. பிறர் அறியாமல் உள்ளடங்கி வாழ்நாள் கழித்தல் நலமாம். அதனால்தான் உள்நோக்கி மெய்யுணர்வு பெறுகிறதற்கு இடமுண்டு. சித்திகள் செய்கிறது நலமன்றாம். அதனால், தான் மெய்யுணர்வு பெறத் தடையுண்டாம். ஏகதேசம் வெளி வருதலும், ஜனஸங்கத்தைக் கண்டால் விலகிவிடுதலும், மனுஷ்ய முகத்தைப் பாராமல் இருக்க விரும்புதலும் துறவி விரதம் பூண்டவனிடத்தில் மெச்சற்பாலது.

ஒருவன் தனக்கு வேண்டாததை ஏன் பார்க்கவேண்டும்? உலகம் சென்றுகொண்டிருக்கிறது. அதன் ஆசாபாசங்களும் அதனுடனே நடைபெறுகின்றன. விஷயாதிகளில் நமக்கிருக்கும் பற்றுகள் உலகத்திற்குள் இழுக்கின்றன. அவ்வண்ணம் கொஞ்சக்காலம் கழித்துத் திரும்புகையில் மன நேர்மை குன்றி உள்ளம் தளர்ந்து நெஞ்சம் தடுமாறி இருக்கின்ற நிலைதான் பிராப்தம் ஆகிறது.

உத்ஸாகத்துடன் வெளியேறுகிறோம்; வியசனத்துடன் திரும்புகிறோம். இரவில் அகாலம் வரை மகிழ்ச்சியான விழிப்பின் பயன் காலையில் இருண்ட மனதே.

"துயரமே தரும் துன்பவின்ப வினைகள்" (சடகோபர்)

இதன்கண் இன்பவினைகளும் துன்பமே தருமென்றது காண்க.

ஆகவே ஒவ்வொரு விஷய சுகமும் முதலில் முகமலர்ச்சியோடே கிட்டும்; கடைமுறையில் மனசைப்புண்படுத்தி நோகச் செய்யும்.

7. உன் ஏகாந்த அறைக்குள் நீ காணாதது புறம்பாய் என்ன இருக்கிறது? அங்கே பூலோகத்தையும் சுவர்க்க லோகத்தையும் பார்க்கலாம். உன் வாழ்நாளுக்கு ஆஸ்பதமாயுள்ள யாவையும் உன்னுள்ளே பார்க்கலாம். விண்ணுலகமும் மண்ணுலகமும் காரணமாக எல்லாமுண்டாயிருக்கின்றன.

நீ பார்க்கிறவை யாதேனும் நீடித்து நிலைநிற்கத்தக்கதா? உலகத்தில் எந்த வஸ்துவினாலேயாவது உனக்கு திருப்தியுண்டாகுமென்று நினைக்கிறாயா? அது வராது, அது பெருகிய மயக்கம். உலக வஸ்துக்களை உள்ளபடி உணர்வாயாகில் அவையெல்லாம் ஆதாரமில்லாத பாழான தோற்றமாய்முடியும். அதனால் உன்மனக்கண்ணைக் கடவுளிடம் செலுத்து. செய்த பாவங்களுக்கும் விட்ட நற்கருமங்களுக்கும் அநுதாபப்பட்டுக் கடவுளைச் சரணமடை. உலக விஷய



ங்களை உலகத்தார்களிடம் விடு. இறைவனிடம் சேர உற்ற உபதேசங்களை மநநம் பண்ணு. ஏகாந்தமாயிரு. இந்திரிய வாயில்களை அடக்கு. உனக்குப் பிரியமான மூர்த்தியின்மேல் மனதைவைத்து "குருநாதனே என் உடலிடம் கொள்ளாய்" என வருந்தி அழை.

## 21-வது அதிகாரம்.

### மனமிரங்கல் மனதின் அநுதாபம்.

1. நீ நன்மை பெற விரும்பின் இறைவனிடம் பயபக்தி பாராட்டு. ஸ்வேச்சையாகத் திரிய விரும்பாதே. இந்திரியங்களை அவைகளின் போக்கில் விடாமல் வசப்படுத்து. மதிகெட்ட உல்லாசமொழியைத் தவிர். உள்ளம் நொந்து அநுதாபப்படு. அதில் தபஸுக்கு இடமுண்டு.

"எறும்பிடை நாங்கூழ் எனப்புலனால் அரிப்புண்டலந்த
வெறுந்தமியேனை" (மாணிக்கவாசகர்)

அநுதாபத்தினால் மனம் ஒன்றுபட்டு இரங்கல் அருட்கதவைத் திறக்க இயலுவதாகும். ஐயம் திரிபு உற்று அதனால் பிளந்த நெஞ்சம் அவ்வருட்பிராப்தியை அழிப்பதாகும்.

உன்னுடைய உற்ற ஸ்தானம் என்ன? உறைவிடம் நின்று தூரத்தப்பட்டு இங்கே இருக்கின்ற நிலை என்ன? இங்கே நீ படும் துன்பமும் துயரமும் என்ன? இவையெல்லாம் ஆராய்ந்து பார். இவ்வுலகில் உன் வாழ் நாளில் பூர்ண சுகமுண்டு என்று எண்ணுகிறாயா? குறைவிலா ஆநந்தம் அநுபவிக்கலாமென்று மதிக்கிறாயா? அந்த நினைப்பு வீணே; அதை விடு. மன நொய்மையால் [illegible]றத்தையும் குறைவையும் நாம் நினைக்கிறோமில்லை. நாம்படு[illegible]பங்களை உணருகிறோமில்லை. நம்முடைய நிலைமையை நினைக்க அழுகைக்கு ஆஸ்பதமாக இருக்கிறது. ஆயினும் அர்த்தமில்லாமல் வெறுமையாய் நகைக்கின்றோம். ஈசனிடம் அன்பும் பயமும் பற்றி ஒழுகு. நேர்மையான வழியில் நட. அவ்வண்ணம் நடைபெறுகிறோமென்று உணர்வு பெற விரும்பு. இன்றேல் இவ்வுலகில் உள்ளபடி சுதந்தரமில்லை. உள்ளபடி சந்தோஷமில்லை. இவை தோற்றமே.

2. சித்த விருத்திகளை நிரோதம் செய்து மனத்தை ஒருமைப்படுத்தித் தன் பாபங்களைப்பற்றி நொந்துகொள்ளுகிறவனே பாக்கி

யசாலி. தன்னை அழுத்தும் கவலைகள் தன் சுத்த மனத்தைப் பீடிக்காமல் விலகிக்கொள்ளுகிறவனே சுகி!.

தைரியத்துடன் போராடு. தீய வழக்கங்களை வெல்லலாம். உன் பாடு உண்டு நீ உண்டு என்று இருந்தால் உலகத்தார் உன் காரியத்தில் பிரவேசியார். பிறர் கவலைகளை மேற்போட்டுக்கொள்ளாதே. பெரிய மனுஷர்கள் காரியங்களில் தலை இட்டுக்கொள்ளாதே.

3. உன் கருமத்திலேயே கண்ணாய் இரு. உன் புத்திகளை உன்னுடைய நண்பருக்குச் சொல்லவேண்டுவதில்லை. அவைகளை உனக்கே உபயோகித்துக்கொள்.

மனிதர்கள் உன்னை நன்கு மதிக்கிறார்களில்லை என விசனப்படாதே. ஈச்வர ஸேவகனாய் ஈச்வர கைங்கர்யங்களை நன்றாய்ச் செய்யவில்லையே என விசனப்படு. அதுதான் உண்மையில் உனக்கு உரிய துக்கமாக இருத்தல் வேண்டும். ஜனங்கள் இவ்வுலக சுகங்கள்—முக்கியமாகச் சரீரசம்பந்தமான சுகங்கள்—அதிகமாக இல்லாமையே நலமென்று எண்ணுகிறார்கள். நாம் ஈச்வர அருள்பிரஸாதம் அடிக்கடி பெறவில்லையே; ஒவ்வொரு சமயத்தில் அநுபவிக்கிறோமென்றாலோ; அதற்கு நாம்தாம் குற்றவாளி. மனதில் அன்பு உருகி நம் குற்றத்தில் வருந்தினோமில்லை. வீணான எண்ணங்களையும் போலிப் பரிகாரங்களையும் விலக்கினோமில்லை. நாம் ஈசன் அருளுக்கு அருகர் இல்லை. அவர் கோபத்திற்கும் அதனால் விளையும் கஷ்டத்திற்கும் மாத்திரம் அருகராக இருக்கின்றோம்.

ஒருவன் பூர்ணமாகத் தன் பாவத்தைப்பற்றி அநுதாபப்படுவானாகில் அவனுக்கு இவ்வுலக வாழ்வு ஒரு பெரிய சுமையாக இருக்கும்; கசப்புக் கஷாயமாக ருசிக்கும்.

4. தம் வாழ்வைப்பற்றி நினைந்தாலும், பிறர் வாழ்வைப்பற்றி நினைந்தாலும், நல்லோர் இவ்வுலக வாழ்க்கை விசனத்திற்கு இருப்பிடம் என்றும் கண்ணீர் விட்டு அழுகைக்கு ஆஸ்பதமென்றும் மதிப்பார். கொடிய துன்பம் பற்றிக் கவலையில்லான் ஒருவனும் இவ்வுலகில் இல்லை என அவர் அறிவார்.

தம் கதியை ஆராயுந்தோறும் அது அதிக வியசனத்திற்கு உள்ளாயிருக்கிறதென உணர்வார். கடவுளைப்பற்றிய விஷயங்களைக்



கொஞ்சமேனும் நினைக்க இடமில்லாமல் அவ்வளவு கொடுமையாய்ப் பாவங்கள் நம்மை வசப்படுத்தி இருக்கின்றன; இவைகளே நாம் மனம் நொந்து அநுதாபப்படப் போதுமானவைகளாம்.

நீடித்தகாலம இருப்போம் என நினையாமல், மரணம் இன்று வருமோ நாளைக்கேதான் வருமோ மற்று என்றுவருமோ என நினை.

"இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பர்
என்றெண்ணவோ இடமில்லையே." (தாயுமானவர்)

அதனால், நீ அதிக தீவிரமாகத் தூயனாவாய். மரணத்திற்குப்பின்பு மறுமைவாதனைகளை நீ நினைத்துப் பார். அதனால் இவ்வுலகத்தில் எந்தச் சங்கடமும் கருமமும் உனக்கு வருத்தமாகத் தோன்றாது; எத்தன்மையான கொடுந்தபசும் உனக்குப் பாரமாக இராது; எத்தகைய அருந்தவமும் புரியத் துணிவாய்.

இவ்வித எண்ணங்கள் நம்மனத்துள் செல்லாததினாலும், உலக மயக்கங்களும் கர்மங்களும் நம்மனத்தைக் கவர்கின்றமையாலும், நாம் தவவழி நாடாமல் மாயையில் மருண்டு அவ்வழியில் அழுந்திக் கிடக்கின்றோம்.

நாம் வைராக்கியத்திலும் பக்தியிலும் குறைவுள்ளோம். அதனால் இந்தப் பாழான உடம்பு நம்மை அடிக்கடி லகுவாய் வருத்துகின்றது. உன் பாவத்திற்கு அநுதாபப்படும்படியான மனத்தை இறைவனைப் பணிந்து வேண்டுமெனப் போற்றுவாய்! "ஈச்வரா! என் மனம் பாவத்திற்கு வருந்தி உருகுமாறு அருள்வாய். என் தாபம் தீர ஏராளமான கண்ணீர்ப்பிரவாகம் எனக்கு உண்டாகட்டும்" என முன்காலத்திய தீர்க்கதரிசிகள் போன்று கடவுளைப் பிரார்த்தனை செய்யக்கடவாய்.

"யானே பொய், என்னெஞ்சும் பொய், என் அன்பும் பொய்,
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே."
(திருவாசகம்)

## 22-வது அதிகாரம்.

### மநுஷ ஜந்மம் துக்கம்.

"நீரிற் குமிழி யிளமை நிறை செல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று" (நீதிநெறி விளக்கம்)

1. நீ எங்கேயிருந்தாலும் சரி, எங்கே போனாலும் சரி, கடவுள் நோக்கமாக இருக்கும் காலம் நீங்கலாக மற்றும் எப்போதும் நீ துக்கத்திற்கு உள்ளானவன்.

உன் எண்ணப்படி காரியங்கள் கைகூடவில்லையென நீ யேன் துன்பப்படுகிறாய்? யாருக்குத்தான் தம் மனப்படி நடக்கிறது? எனக்கும் இல்லை. உனக்கும் இல்லை. உயிருடன்உள்ள எவனுக்குமே இல்லை. துக்கமில்லானும் குறையில்லானும் இந்நிலையற்ற உலகத்தில் ஜீவிக்கிறானில்லை. அவன் ராஜாவாக இருந்தாலும் சரி. மடாதிபதியாக இருந்தாலும் சரி, எல்லாரும் துக்கத்திற்குள்ளாயினார். ஈச்வரார்ப்பணமாக எவன் கஷ்டப்பட்டாவது ஒருகருமத்தை செய்கிறானோ அவனுக்கு நற்கதி உண்டு.

"நில்லாதவற்றை நிலையினவென் றுணரும்
புல்லறி வாண்மை கடை" (குறள்)

* கோழையான அறிவில் ஏழைகளான ஜனங்கள் இவன் அதிருஷ்டவான், இவன் உயர்வுள்ளான், இவன் செல்வாக்குள்ளான். எனப் பலவாறாக வியந்து பேசுவார்கள். ஈச்வர சம்பத்தை நினைந்து பார்த்தால், உலக சம்பத்துக்கள் நசுவரமெனத் தெரியவரும். அவைகள் நிலைக்காவாம். அவைகள் துன்பத்திற்கு வித்தாம். கால அளவைக்குட்பட்ட வஸ்துக்களின் கதிஎல்லாம் இத்தன்மையவாம்.

ஏனென்றால், அவைகளை ஆர்ஜிக்கிறதிலும் அவைகளைப் போஷிக்கிறதிலும் என்ன தொல்லை, என்ன சங்கடம் புரிகிறோம்.

"ஈட்டலும் துன்பம் மற்று ஈட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்" (நாலடியார்)

உலகவஸ்துக்களை ஏராளமாய்ச் சேகரிப்பதில் மனுஷனுக்குச்சந்தோஷம் உண்டென்று நினையற்க. அவைகளிற் சொற்பம் அவனுடைய காலக்ஷேபத்திற்குப் போதுமானது. யோஜிக்கும் அளவில் மனுஷ வாழ்வு துக்கமே.

2. உத்தமமார்க்கமான துறவைத் தேடத்தேட உலக வாழ்வு கசப்பாகவே காணும். ஏனென்றால் உலகத்தின் உண்மை நன்றா

* பட்டணத்தடிகள், சடகோபர், தாயுமானவர், மாணிக்கவாசகர் இவர்களது உருக்கமான பாசுரங்கள் இங்குப்படிக்கத்தக்கவைகள்.



ய்த் தெரியவரும். ஜனங்களின் கொடுமையும், தீமையும்தெளிவாய்த் தோன்றும்.

நாம் உண்கிறோம், குடிக்கிறோம், உறங்குகிறோம், விழித்திருக்கிறோம், இளைப்பாறுகிறோம், வேலை செய்கிறோம், இன்னும் ஜீவஸ்பாவத்திற்கு உற்ற கடன்களைச் செய்து முடிக்கிறோம். உள்ளம் அடங்கி வீடுபெற வேண்டுமென அவாவுள்ள ஞானிக்கு இவையெல்லாம் துன்பமாம்.

சரீரப்பிரியங்களை உள்ளேநோக்கின் சாந்த மனத்தை யுடைய ஞானிக்கு விபரீதங்களாம். அப்படி யிருக்கின்றதினால் அல்லவா தீர்க்கதரிசிகள் "துன்பத்திற்கு ஹேதுவான இந்த ஆசாபாசங்களினின்று என்னை விடுவி" எனப் பலகாலும் முறையிடுகிறார்கள்?

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்" (மணிமேகலை)

"நாளென ஒன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்" (குறள்)

3. ஜநநம் துக்கம் என உணரார் கதி, அந்தோ என் என்பேன்? துன்பத்திற்கு இருப்பிடமானதும் அழியக்கூடியதுமான இவ்வுலக வாழ்வைத் துயரமென நினையாமல் சுகம் என்று எண்ணும் துர்ப்புத்தியை அந்தோ! என்ன என்று சொல்லுவேன்! இரந்தும் உழைத்தும் வயிறு நிறைய உணவு கிட்டாதாரேனும் உலகத்திலிருக்க விரும்புவார்; சாக இயலார்; கடவுளை நாடவேண்டுமென்ற எண்ணமே எண்ணார்.

அறிவிலிகாள்! நெஞ்சத்தில் கொஞ்சமேனும் ஈரமிலாப் பாவிகாள்! நீங்கள் உலகக் கும்பிகளில் மூழ்குகின்றீர்கள்! கடைமுறையில், அந்தோ! நீங்கள் துயரம் பொறுக்காமல் தவிப்பீர்கள்! உலகின் கண் நாடிய சுகங்களும், அனுபவித்த விஷயங்களும் அற்பமென அறிவீர்கள்!

ஞானிகளும், ஈசனிடம் அன்பு வைத்த நண்பர்களும் ஊனை ஓம்பார்; அதன் சுகத்தை நாடார். அநித்திய சம்பத்தைத் தேடார். அவர்கள் நம்பிக்கை எல்லாம், அவர்கள் மனம் எல்லாம் என்றும் உள்ள சுகத்தையே நாடின. அவர்கள் அவாவெல்லாம், கண்ணுக்குப் புலப்படாத மேலான பதவியை நாடியே சென்றன. உலகப் பற்றுகள் நரகத்தில் தள்ளும் என அவர்கள் பயந்தார்கள்.

4. ஆத்மரக்ஷக வழியின்மேல் செல்வதில் தைரியம் விடாதே. இன்னும் காலமிருக்கிறது. அதிகம் இல்லாவிடினும் ஒரு மணி நேரமாவது இருக்கின்றது. "என் தாமதம்! சுகிருதமான விஷயத்தைப்பற்றிய தீர்மானத்தை அனுஷ்டானத்திற்கு உடனே கொண்டுவர இது நல்ல சமயம். நாம் வேலை செய்ய இது உற்ற காலம். அசுத்த மனத்துடனே போர்புரிய இதுவே நல்லநேரம். நாம் நல்ல கதியடையவும், நல்லவராகவும் இதுவே சரியான தருணம்." என நினை. துன்பத்திற்குள்ளாகி மனம் நோகுங்காலமே ஞானமகுடம் தரிக்க முயற்சிக்கு உற்ற சமயம் என அறி.

"நிழலருமை வெயிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்."

என்றபடி மழையிலும் வெய்யிலிலும் வருந்தினூற்றுன், கடையில் சுகமான ஸ்தானம் பெறலாம். உன்னைக் கிலேசப்படுத்தித்தான், உன் பாவத்தை தொலைக்க வல்லாய்.

தர்பலமான மரண தர்மம்பற்றிய இந்தச் [illegible] இருக்கும் அளவும் பாவம் நீங்கித் தூயவராக இருக்க ஒண்ணாது. மனச்சஞ்சலமும் மன நோவும் நம்மை விடாது.

5. பாவத்தினால் பரிசுத்த நிலையை இழந்ததோடு ஆநந்தபதவியையும் இழந்தோம். ஆகவே நம்முடைய பாவம் நீங்கித் தூய்மையான நிலைமை பெற்று, மரண தர்மம் அற்றுப்போய் அழிவிலா வாழ்வு வாய்க்கும் வரை இறைவன் அருள் என்று வருமோ, என எதிர்பார்த்துக்கொண்டு பொறுமையுடன் இருப்போமாக.

"எம்மானே! உன் அருள் பெறுநாள்
என்றென்றே வருந்துவனே." (திருவாசகம்)

அந்தோ! மனிதன் நிலைமை என்ன தர்பலமானதென்று சொல்வேன்? எப்போதும் பாவத்திற்குள்ளானது! இன்று பாவம் செய்தேனே என வருந்தி அனுதாபப்படுவான்! நாளையே அந்தப் பாவத்தை திரும்பவும் செய்திடுவான். இனிப் பாவம் செய்யாமல் கவனமாக இருப்பேன் என இந்த நிமிஷம் எண்ணுவான். அடுத்த நிமிஷமே இந்த எண்ணத்தை முற்றும் மறந்து, இவ்வெண்ணம் எண்ணாதவன் போல, உடனே பாவம் செய்யத் துணிவான். அதனால் நம்மைத் தாழ்மைப்படுத்துதலே நெறியாம். நம்மை உயர்வு



படுத்தி மதித்துக்கொள்ளல் நெறியன்றாம். நாம் அற்பர்கள்; நிலையற்ற மனம் உடையோம்; நம்மைப் பெருமையாக நினைந்து, அதனால் அஜாக்கிரதை நேர்ந்து, சிரமத்துடன் ஈசன் அருளால் கிடைத்ததாக எண்ணியிருக்கின்றதை இழந்து மோசம் போவோம். அதிசீக்கிரம் சோர்வை அடைகின்ற நாம் கடைமுறையில் என்ன கதிக்கு உள்ளாவோம்!

நம்முடைய ஒழுக்கத்தில் சிறிதேனும் நேர்மை இன்றி இருக்கச் சாந்தமும் சாவதானமும் அடைந்துவிட்டோமெனச் சுகத்தைநாடிச் சும்மா இருக்க நினைத்தால், அதைப்போலக் கேடு வேறு ஒன்றும் இல்லை.

புதிதாய்ப் பழகும் தபஸ்விபோன்று, நல்லொழுக்கங்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கக் கடவோம். அதனால் நல்லகதி எப்போதாவது பின்னர் சம்பவிக்க ஏதுவாகும். மோக்ஷவழியில் சௌகரியமாகச் செல்ல அனுகூலமாகும்.

## 23-வது அதிகாரம்.

### மரண சிந்தனை.

1. கணப்பொழுதில் நீ இறந்துவிடுவாய். இமைப்பொழுதில் நீங்கிடுவாய். மறுமையில் உன் கதி என்னவாகுமென நினைத்துப் பார். இன்று இருப்பான் மனிதன், நாளை இறப்பான். நம் கண்ணின்று மறைவான். நம்மை விட்டும் நீங்குவான்.

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்து இவ்வுலகு." (குறள்)

மனிதன் மதிமயக்கத்தை என்ன என்று சொல்வேன்? எதிரில் இப்போது இருக்கிற வஸ்துக்களைப்பற்றி நினைக்கிறான். நாளை வரும் விஷயங்களைப்பற்றி நினைக்கிறான் இல்லை. இது என்ன அறிவீனம்? நீ செய்கிற ஒவ்வொரு காரியத்தையும், நீ நினைக்கிற ஒவ்வொரு நினைப்பையும், இன்றே உன் மரணம் உன் முன் நிற்கிறதெனக் கருதினவனாகச் செய்யக்கடவாய். உன் மனச்சாக்ஷி நேர்மையாக இருக்குமாகில், மரண பயம் வேண்டாம்.

"பிணி எலாம் வரினும் அஞ்சேன்,
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்." (திருவாசகம்)

என்றபடி இப்பயம் இல்லாமலிருக்க வேண்டுமானால், நீ பாவங்களுக்கு உள்ளாகாமல் எச்சரிக்கையாக இரு. மரணத்திற்கு இன்று ஆயத்தமாக இல்லையாயின் நாளைக்குத்தான் ஆயத்தமாக இருப்பாயா? "நாளை" என்கிறதை நம்பாதே. நாளை நீ இருப்பாய் என்ற நம்பிக்கை உண்டா?

2. அதிக நாள் வாழ்வதில் என்ன பயன்? அதற்குத் தக்கபடி அபிவிருத்தி இல்லாவிடின், நெடுநாள் வாழ்தல் நம்மை எப்போதும் நல்லவராக ஆக்காவாம். அதனால் நம் குற்றம் அதிகமாகவே வளரும். அந்தோ! இவ்வுலகத்தில் ஒரு நாளாவது இறைவனுக்கு பிரியமானபடி ஸத்காலம் கழித்தோமா! "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவனைப் பற்றிப்புகழ்ந்து பாடிய பாசுரங்கள் இங்கு உணரத்தக்கன. முதலில் இறைவனை நாடிச்சென்ற நாள்முதல் சிலர் கணக்கிடுவர். கணக்கில் ஏற்படும் நாட்களில் பெரும்பான்மை யாருக்குப் பிரயோஜனமான நாள்? ஒன்றும் அறியப்படாது. மரணம் மிகக் கடூரமானது எனக் கருதில், மேன்மேலும் ஜீவித்திருத்தல் அதிக அபாயத்துக்குத் தக்க ஹேதுவாம்.

மரணம் எப்போதும் தன் எதிரே இருக்கிறதாக நினைக்கின்றவன், சந்தோஷமுடையவனாவான். ஒவ்வொரு தினமும், அதை முன்னிட்டுத் தன்னை ஆயத்தமாகச் செய்துகொள்வான் அல்லவா? மரணமடைவோரைப் பார்க்கும் பொழுதெல்லாம் நமக்கும் அக்கதி உண்டு எனச் சிந்தனை செய். மாலையில் நாம் இரோமெனக் காலையில் நினை. நாளை இருப்போமென, மாலையில் எண்ண மனந்துணியவில்லையே என நினை. மரணத்திற்கு எப்போதும் ஆயத்தமாயிரு. அதற்குத் தக்கபடியாய் உன் வாழ்நாளை நல்ல வழியில் செலுத்து. அநேகர் எதிர்பாராமல் திடீரென்று இறக்கிறார்கள். ஞானநூலிற் சொல்லியபடி நீ நினையாமல் இருக்கும்போது, மரணம் நேரிடும். அந்தக் கடைமுறை காலம் கிட்டுங்காலத்தில், சென்ற நாட்களைப் பற்றி வேறுவிதமாய் எண்ணுவாய். "காலமெல்லாம் பாழுக்கிறைத்தோமே! வீண்காலம் கழித்தோமே! இறைவன் வழியில் அடிவைத்தோமில்லை." என மனமுருகி நோவாய்.

3. மரணகாலத்தில் எத்தன்மையாக இருக்க விரும்புவாயோ அத்தன்மையாக இருக்கும்படியாக வாழ்நாளை வீழ்நாள் படாமல்



ஒருவன் நன்று ஆற்றின், அதனால் அவன் எவ்வளவோ சந்தோஷமும் சௌகரியமும் உள்ளவனாக இருப்பான்.

உலக விஷயங்களைப்பற்றிய வெறுப்பும், நல்ல வழியில் ஒழுக வேண்டுமென்ற தீவிர விருப்பும், தான் அடங்கி நடத்தலின் பிரியமும், அனுதாபத்துடன் வேலையில் ஊக்கமும், கேள்வியில் முயற்சியும், தியாகமும், ஈசன் மேல் உள்ள அன்பினால் என்ன சங்கடம் நேர்ந்தாலும் அதைப் பொறுத்தலும், இவை எல்லாம் மரண காலத்தில் சந்தோஷத்துக்கும் மன சாந்திக்கும் அனுகூலமாகும்.

நீ க்ஷேமமாக இருக்கும் காலத்தில், அநேக நன்மைகளைச் செய்தல் கூடும். அசௌக்கியமான காலத்தில் நீ செய்யக்கூடியது அற்பந்தான். வியாதியால் ஒருவனுக்கு முன்னிருந்ததைவிட, நல்ல சுபாவம் வருதல் அருமை. க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போகிறதினால், முன்னிருந்ததைவிட அதிக உயர்வான சுபாவமும் ஒழுக்கமும் ஏற்படுகிறது துர்லபம்.

4. உன் சிநேகிதர், உன் பக்கத்தவர் இவர்களிடம் நம்பிக்கை வைத்து மோசம் போகாதே. "அன்று அறிவாம் என்னாது" இப்பொழுதே உன் ஆத்ம ரக்ஷகத்திற்காக அறம் செய்க. நீ நினைக்கிறதைவிட, அதிக சீக்கிரத்தில் உலகத்தார் உன்னை மறந்து விடுவர். உற்ற காலத்திலேயே தேடிக்கொள். இனிப் போகும் வழிக்குப் புண்ணியம் என்ற உற்ற துணை தேடு. இன்று நீ உன் விஷயத்தில் ஜாக்கிரதையாக இல்லாவிடில், வருங்காலத்தில், உன்னைப்பற்றி எந்த அயலார் கவலை கொள்ளுவர்?

இது நல்ல காலம். உன் ஆன்மாவின் க்ஷேமத்தை முன்னோக்கி உற்ற தருமம் செய். இது அனுகூலமான நேரம். என்றுமிருக்கும் மோக்ஷத்தைக் கருதி, அது லபிக்கும் வண்ணம் உன் வாழ்நாளைச் செவ்வையாகக் கழி, அன்றேல் துயரத்துக்குள்ளாவாய்.

ஒரு பகலாவது ஒரு நாழிகையாவது நம்மை நேர்மைப்படுத்தக் கிடைக்கமாட்டாதாவென்று நினைக்கும்படியாக ஒரு தருணம் இனி உனக்கு சம்பவிக்கும். ஆனால் நீ நினைத்தபடி பலன் அடைய மாட்டாய்.

அதனால் என் பிரியனே! நீ எவ்வளவு பயத்திற்கு உள்ளாக இருந்தாலும் சரி. நீ எவ்வளவு பாவத்திற்கு உள்ளாயிருந்தாலும்

சரி. பாவத்தைப்பற்றி அனுதாபமுள்ளவனாய் மரணவேளையை எப்போதும் எதிர் பார்த்தவனாய் இருப்பாயாக. அதனால் நீ எல்லா அபாயத்தினின்றும் விடுவித்துக்கொள்ளக்கூடும். ஆகையால் மரணம் வருங்காலத்தில் உன் வாழ்நாளை நேர்மையாய்க் கழிப்பாயாக.

உலகப்பற்று அற்று இருமின்! பற்றது பற்றில் இறைவனைப்பற்றுமின்! உலக வாழ்க்கையை வெறுமின்! ஞானவழி நடமின்! தவத்தால் காய க்லேசஞ் செய்மின்! அதனால் வீடு பெறுவோமென நம்புமின்!

5. தமக்குரிய நாள் ஒருநாள் எனச்சொல்ல இயலாமலிருக்கும் அறிவிலாமாந்தர்காள்! நெடுநாளிருக்கவேண்டுமென்ற எண்ணம் என்? நெடுநாளிருப்போமென, நினைந்து நினைந்து, திடீரென்று இறந்து மோசம்போயினர் பலர். அவர் கத்தியால் கொலையுண்டனர்; இவர் ஜலத்தில் மூழ்கி மாண்டார்; மற்றொருவர் மேலிருந்து கீழ் விழுந்து உயிர் நீத்தார்; வேறொருவர் உண்ணும்போது ஸ்தம்பித்து ஆவி விட்டார்; பின் ஒருவர் விளையாட்டிலும், ஒருவர் நெருப்பிலும், ஒருவர் கத்தி முனையிலும், ஒருவர் தொத்து வியாதியினும், ஒருவர் திருடர் கையினாலும் இறந்தார். இவ்வண்ணம் உலக வாழ்வு நிகழ்கின்றதென்று நீ அடிக்கடி கேட்டிலையா? இது எல்லாருக்கும் நேருகிறது. இது உலகத்தின் தர்மம். மனுஷ்யன் வாழ்வு விரைவிற் செல்லும் நிழல் போலாம். இறந்த தன்மேல் உன்னை மதிப்பவர் யாவர்? உன் நன்மையைக் கருதுகின்றவர் யாவர்? ஒருவரும் இலரே.

என் அன்பனே! மரணம் இப்போது வருமென்றும், அதன் பின்னர் உன் கதி எவ்விதமாமென்றும் சொல்லமுடியாது. அதனால் உன்னால் இயன்ற அறமெல்லாம் இப்போழ்தே செய்க.

"அன்றறிவா மென்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை"

"ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்." (குறள்)

என்றபடி காலமிருக்கையில் உன்மரணத்திற்குப்பின் உனக்கு உதவும் அழியா ஆஸ்தியைத் தேடுக. ஈசனைத் தவிர மற்றொன்றையும் நாடற்க. உன் ஆத்மார்த்தமாயிருக்கிறதைத் தவிர மற்றொன்றையும்



நினையற்க. ஈசுவர பக்தர்களை ஆராதி. அதனால் அவர்கள் சிநேகம் பாராட்டு. அவர்கள் வழி நீ நடக்கக் கடவாய். ஒருகால் அம்முயற்சியில் நீ தவறுவாயாகில் அவர்களே மாணுந்த காலத்தில் வந்து சாந்தமான மோட்ச நிலைக்கு உன்னைக் கரையேற்றுவார்.

உலக வாழ்நாளை, வழிப்போக்களைப் போல் நடத்துவாயாக. உலகப்பற்றைவிடு. மனத்தை ஈசனை நோக்கிச்செலுத்து. உலகத்தில் சாசுவதமானது ஒன்றுமில்லை. விண்ணுலகம் நோக்கித் தினந்தோறும் உன் பிரார்த்தனைகள் செல்லட்டும். அது நோக்கி உன் மனம் உருகட்டும். கண்ணீர் ததும்பட்டும். அதனால் மரணத்துக்குப்பின்பு சந்தோஷமாய் நீ இறைவன் தாள் சேர்வாய்.

## 24-வது அதிகாரம்.

### தீர்ப்பும், பாவத்திற்குத் தண்டனையும்.

1. எக்கருமம் செய்தாலும் அதனால் உன் அந்தியகாலத்துக்கு என்ன சாதகம் வருமென்று உன்னிப்பார். நடுநிலைமை தவறாத நியாயாதிபதி முன்னர் நீ நிற்கும் காலத்தில் அக்கருமம் என்ன பயன் தருவதாகுமென நினை. அவர் எல்லாம் அறிவார். உன் லஞ்சத்துக்குள்ளாகி மகிழார். உன் சாக்குப் போக்குகள் அவரிடம் பலியா. சமனாகச் சீர்தூக்கி உன்னை நியாயமாக மதிப்பார்.

ஓ பாவி! அறிவிலி! தூக்கி! முகம் கடுப்பவர் முன் நடுநடுங்கினவனே! உன் குற்றங்களை எல்லாம் அறிந்திருக்கிற அந்த நியாயாதிபதி முன்னர் தீர்ப்புநாளில், நீ யென்ன சமாதானம் சொல்லப்போகின்றாய்? அக்காலத்தில் பிறர் வார்த்தையும் பிறர் சிபார்சும் பலிக்கா. அவரவர் பாவத்திற்கு அவரவரே உத்தரவாதம் செய்யக்கடவர். ஆகையினால், அக்காலத்திற்கு உற்றதுணை இன்றே தேடிக்கொள்க.

இப்போது உன் முயற்சி பலிக்கும். கண்ணீர் விட்டு மனமுருகி இறைவனைப் போற்றினால் உனக்கு லாபமுண்டு. உன் அழுகை இறைவன் காதுக்கெட்டும். அதனால் உன் பாவம் நீங்கி நீ தூயனாவாய். அவருக்குப் பிரியனாவாய்.

பிறர் தீயவை செய்திடினும், அதைக்கடிந்து தான் நோகாது அவர் பாவம்பற்றி இரங்கி மனம் வருந்துகிறவனும், தனக்குக்கெடுதி செய்கின்றவரின் க்ஷேமத்தைக் கோருகிறவனும், பிறரை நயந்து

நடை பெறுகிறவனும், கோபம் கொள்ளாது அன்புபற்றி நடப்பவனும், தன்னை நொந்து, தன்னை அடக்கி, தன் விருத்திகளை நிரோதம் செய்பவனும் இவர்கள் எல்லாம் ஆன்மாவை ரக்ஷிக்கும் தவறாத மருந்துடையராவர்.

நாம் குற்றங்களை இப்பொழுதே களைந்து அவைகளின் வேரறுத்துவிடல் நலமாம். பின்னிட்டுச்செய்வோமென இருத்தல் தவறாம். நாம் ஊனை ஓம்பிச் சுகம் பாராட்டிப் பின்னர் உண்மையாய் மோசம் போவோம்.

உன் பாவங்களே, உலக ஆசை என்ற அக்கினிக்குச் சரியான விறகாம். உன் சரீரத்தை அதிகமாகப்பேணப்பேண, உன் சங்கடம் பெருகுவதாகும். உன் சரீரப்போக்கில், நீ நடை பெறுவாயாகில்உன் கடைமுறை காலம் உனக்குப் பெருகிய துன்பம் தருவதாகும். அவ்வக்கினியை உண்பித்துப் போற்றுவிக்கும் பாவம் அதிகரிப்பதாகும்.

எவனெவன், என்னென்ன பாவங்களைச் செய்கின்றானோ, அந்தந்தப்பாவங்களின் கொடுமையான பலன்களை [illegible]ளிட்டு (மரணத்திற்குப்பிறகு) அனுபவிப்பான். சோம்பித்[illegible]ர்ந்தவன் அப்போது, எரிகின்ற தார்க்கம்புகளால் குத்தப்பெறுவான். வம்பனும் உல்லாசமாகக் காலம் கழித்தவனும் எரிதழலில் மூழ்கப்பெற்றும், கொடுமையாய் தஹிக்கின்ற சுண்ணாம்பில் வெந்தும் நீறுவான். பித்தநாய்கள் போன்று பொறாமைக்காரன் துன்பத்தால் பேத்துவான், புலம்புவான். மரணத்திற்குப்பிறகு அதற்கு உற்ற துன்பமில்லாப் பாவம் கிடையாது. அப்போது, செருக்குள்ளவன் வருத்தத்தால் முகம் கடுப்பான். லோபியானவன் வறுமையால் வருந்துவான். அங்கே, நாழிகைத் துன்பம் பூமியில் 100 வருஷம் கொடியகாயக்கிலேசத்துடன் செய்யும் கடுமையான தபசினால் உண்டாகும் சிரமத்தைவிட அதிகமாம்.

2. பூமியிலே ஒரு வேலையினின்று இளைப்பாறும் ஸாவகாசமுண்டு. அங்கேயோ, பாவிக்கு ஓய்வு கிடையாது. பாவிக்கு சுகமே கிடையாது.

அதனால் இப்போதே கவலையாக இரு. இப்போதே பாவத்திற்கு அனுதாபம் உண்டாகட்டும். இவ்விதம் உலகத்தில் உள்ள நாளில் ஒழுகுவாயாகில், மரணாந்த நாளில் உனக்குப்பயமில்லை.



சாவ்தானம் உண்டு. அருள் பெற்ற மஹான்களின் தொழும்பில் சிறந்த பாத்திரனாவாய். அப்போது யதார்த்தவான்களுக்கு நற்காலம். உலகத்தில் அவர்களை வருத்தின தீயர்களின் முன்னர் அவர்கள் தைரியமாக நிற்பாராவர்; உலகத்தில் மனிதர்களிடம் துன்ப தண்டனை பெற்றுள்ளார், இப்போது நியாயாதிபதிகளாக இருப்பாராவர்; உலகில் ஏழையரும் மெலியராக இருந்துள்ளாரும், இப்போது பயம் நீங்கி நம்பிக்கைக்கொண்டவராக இருப்பர்; உலகில் செருக்கும் இறுமாப்பும் கொண்டவர், இப்போது எங்கே திரும்பினும், பயத்துக்குள்ளாகித் திகிலடைவர்; உலகில், மூடர்போல் திரிந்து, உலகத்தாரால் நிந்தனை பெற்றுள்ளார், ஞானமுறைபற்றி நடைபெற்றதினால், இப்போது, தாம் உலகத்தில் கழித்த வாழ்நாள் வீழ்நாள் அல்ல என்றும், நேர்மைபற்றியவையென்றும் திருப்தியுடையாராவர்; உலகில் தம்மனதைப் புண்ணாக்கின கவலைகள், இப்போது மரணத்தின்மீது நினைக்க, அவைகளின் ஞாபகம் சந்தோஷகரமாக விருப்பதாகும்; பி[illegible]கள் வாய் அடங்கும்; அன்புடையார் எல்லீரும் ஆநந்தகீதம் பாடுவார்; விஷயப்பற்றுள்ளார எல்லாரும் துக்கத்தினால் அழுவார்; உலகில் பாரம் சுமந்து வருந்தியவர் சுகவாழ்வு கழித்ததைவிட அதிகமாக இப்போது எண்ணுவார்; எளியவன் கந்தை இப்போது பீதாம்பரமாக விளங்கும்; வலியவன் பீதாம்பரம், பழங்கந்தையாகி இருட்டைப்போல் மங்குவதாகும்; அன்பிற் பெரியவனாய் பொருளில் எளியவனாய் இருந்தவன் இப்போது சுவர்ணத்தால் அமையப்பெற்றுள்ள அரண்மனைவாசிபோன்று மிக்க பூஜை பெறுவான்; உலகில் பொறையுடையான் இப்போது, உலகில் அதிகாரமும் செல்வாக்கும் உடையானை விட அதிக மேன்மையுடையனாகவிருப்பான்.

3. சூதையும் வாதையும் விட்ட பண்பும் பணிவும் மேலான ஸ்தானத்தை அடைவிக்கும். சாஸ்திரங்களின் ஆழ்ந்த ஞானத்தைப் பார்க்கிலும் நேர்மையுள்ள சுத்த மனமானது பரத்தில் அதிக ஆனந்தத்தை ஜனிப்பிக்கும்; உலக திரவிய சம்பத்துக்களைப்பற்றிப் பரலோகத்தில் அருவருப்பு உண்டாகும். நல்ல உணவினால் உலகத்திலுண்டாகும் சந்தோஷத்தைவிட ஈசுவர ஆராதனை செய்ததினால் பரலோகத்தில் அதிக சுகமும் சந்தோஷமும் கிடைப்பதாகும்; அதிகப் பேச்சினால் பிரயோசனமில்லையென்றும் மௌனம் சர்வஸாதகமென்றும் பரத்தில் தெரியவரும்; வார்த்தைகள் பிரயோசனை

மல்லவென்றும் கர்மங்கள் முக்கியமென்றும் பரத்தில் அநுபவிக்கத
மாகும்; உலக விஷயாதி சுகங்களைவிடத் தீவிரமான தபசும் நேர்
மையான ஒழுக்கமும் பரலோகத்தில் ஆனந்தத்துக்குக் காரணமென்
றறியப்பெறுவதாகும்.

அதனால் சிறு விஷயங்களில் வரும் துன்பத்தைச் சகித்துக்கொ
ள்ளப் பழகு. அப்படிச் செய்வாயாகில் வருங்காலத்தில் அதிக
துன்பத்திலிருந்து விடுபடுவாய்; இனிப் பரலோகத்தில் நீ அனுப
விக்கும் துக்கத்தை முதல் முதலில் இவ்வுலகத்திலேயே அனுபவிக்க
பயில்.

இவ்வுலகத்தில் சொற்ப சங்கடத்தைப் பொறுக்க உனக்கு
எலாமற் போனால் நெடுநாள் நிற்கும் பெரும் சங்கடத்தை எப்படிப்
பரலோகத்தில் சகிப்பாய்? அற்ப கஷ்டத்தை அனுபவிப்பதில் உன
க்குப் பொறுமையில்லாவிடில் மரணகாலத்திற்குப் பிறகு நரகவாத
னையை எவ்விதம் சகிப்பாய்? இகத்தில் சுகமாகக் காலங்கழிக்கிற
தென்ன, பரத்தில் பூர்ணம் பெற்ற ஞானியுடன் அரசாளுகிறது
என்ன, இவ்விரண்டும் ஒருவனுக்குச் சேர்ந்து சம்பவிக்க முடியா.
இது சத்தியம். இன்றுவரையில் உலக வாழ்வில் சம்பன்னனாயும்
செல்வாக்கு உள்ளவனாயும், இருக்கிறாயென்று வைத்துக்கொள்
வோம். அடுத்த நிமிஷத்தில் உனக்கு மரணம் நிகழுமாகில் உன்
கதி யென்னவாகுமென்று நினைக்கிறாய்? உலக சம்பத்தும் வைபவ
மும் என்ன பலனைக் கொடுப்பதாகுமென அறிகிறாய்?

ஆகவே ஈசனிடம் அன்புபற்றி அவர் கைங்கரியம் செய்யாதார்
வாழ்வு வீண். நெஞ்சார ஈசுவரனை வழிபடுகிறவன் மரணத்துக்கு
அஞ்சான்: யமலோகத்துக்கும் பயப்படான்: தீர்ப்புநாளைப்பற்றி
மனம் நோகான்; நரகத்தைக் கண்டு நடுங்கான்; ஏனென்றால் இறை
வனிடம் மெய்யன்பு உள்ளவனாய் இருக்கின்றமையால், சுகமாயும்
சாவதானமாயும் இறைவனிடம் சேர்வான் ; ஆனால் பரத்தில் பற்
றுள்ளவன் மரணத்துக்குப் பயப்படுவதிலும், தீர்ப்புநாளுக்கு அஞ்சுவ
திலும், ஆச்சரியம் என்ன?

நீ ஈசுவரனிடம் அன்பு பாராட்டி அதனால் தீய வழியினின்று
அகலாமல் போயிடினும் நரக பயமாவது தீய வழியில் நடவாமல்
தடுப்பதாகும். ஈசுவரனிடத்தில் பயபக்தி இருத்தல் அமுக்கியம்



என்று கருதுகிறவன், நன்மைபுரிதலில் நெடுநாள் இரான். விரைவில்
தீயவழியான மாய வலையில் சிக்கிடுவான்.

## 25-வது அதிகாரம்.

### நம்முடைய வாழ்நாள் முழுமையும் நல்ல வழியில் நடத்த தீவிரமான அவா வேண்டுவது.

1. ஈசுவர கைங்கரியத்தில் விழிப்புள்ளவனாயும் சுறு சுறுப்பு
உள்ளவனாயும் இரு. உன் ஜனனத்தின் கருத்து, என்னவென்று
உன்னிப்பார். பரலோகத்தை விட்டு இகத்தில் என்ன காரணம்
பற்றிப் பிறந்திருக்கிறாயென்று நினை. இறைவன் வழிபட்டுச் சடை
முறையில் ஞானி ஆகவேண்டுமென்றல்லவா? ஆகையினால் மேன்
மேலும் ஞான அபிவிர்த்தியடைய முயல். சீக்கிரம் அதன் பயனை
அடைவாய். பயமும் வியசனமும் உன் எல்லைக்குள் வரா. சொற்ப
கைங்கரியம் செய்தால் பெரிய லாபம் கிடைக்கும். நீடித்த வாழ்வும்
நித்திய சுகமும் பெறுவாய். ஈசுவர கைங்கரியத்தை உண்மையா
யும் சிரத்தையுடனும் நடத்துவாயாகில், ஈசன் உனக்கு அருள் புரி
வார். அவர் அனுக்கிரகங்கள் உனக்கு ஏராளமாக லபிக்கும். இது
நிச்சயமென்று அறி. ஒருகாலத்தில் நீ உயர்வான ஸ்தானம் பெறு
வாய் என நம்பு. ஆனால் சாவதானம பெற்றேன் என நினைக்காதே.
அப்படி எண்ணுவாயாகில் கர்வங்கொண்டு சோம்பித் திரிவாய்.

கவலை கொண்ட ஒரு மனிதன், நம்பிக்கைக்கும் ஏக்கத்திற்
கும் மத்தியில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்தான். ஒரு நாள் கோவி
லுக்குள் நுழைந்து ஒரு சந்நிதி முன்பாக ஸ்தோத்திரம் செய்துகொ
ண்டு நமஸ்காரம் செய்தான். "கடைசிவரை முயற்சி வேண்டுமெ
ன்று நான் அறிவேனாகில்," என எண்ணம், அப்போது அவன்
மனதில் தோன்றிட, தக்ஷணமே, அசரீரி வாக்கு ஒன்று கேட்
டது, அதாவது, "அப்படி அறிந்திடுவாயாகில், நீ என்ன செய்யப்
போகிறாய்? அறிந்ததின்மேல் செய்யப்போகிற காரியத்தை இப்
பொழுதே செய்திடு, நீ சாவதானம் பெறுவாய்," என, விழித்தவன்
போல் திடீரென்று எழுந்து, ஆறுதல் பெற்றவனாய், மனம் திடப்
பட்டு அன்றுமுதல் இறைவனுக்குப் பிரியமான காரியத்தையே
செய்யத் தலைப்பட்டான். அவன் மனச்சஞ்சலம் நீங்கியது. இன்று
என்ன வருமோ, நாளை என்ன வருமோ, என்ற பயம் அவனை

விட்டது. இனி, கடவுளுக்கு எது பிரியம், எது நேர்மையானது என்றதை நாடினுன். நாடியும் அறிந்தும் நற்காரியத்தைச் செய்து வந்தான்.

2. "ஈசனை நம்பி, நன்மை செய்யக்கடவாய். அவ்விதம் உலகில் நடைபெறுவாயாக. உனக்கு உண்மையான சம்பத்துக்கிடைக்கும்." என ஒரு தீர்க்கதரிசி உபதேசிக்கிறார்.

நிவிர்த்தி மார்க்கத்தின் கஷ்டத்தையும், அதைக்கொண்டு செலுத்தும் கிரமத்தையும், கருதினவராய் அம்மார்க்கத்தை அனுசரிக்க அநேகர் பயப்படுகிறார்கள்; துணிகிறார்களில்லே.

என்ன சங்கடம் வந்தாலும் என்ன கொடுமை நேரிட்டாலும் அதை ஜயிக்க வல்ல தீரரே, இந்த ஞான மார்க்கத்தில் சீக்கிரம் மேம்பாட்டை யடைவார். இந்திரிய நிக்கிரகம் செய்து, தம்மைத் தாம் அடக்குவாராகில், இறைவன் அருள் பெறுவார். எல்லோரும் ஒரேவிதமான பாவம் செய்துள்ளார் அல்லர். ஆயினும் பெரிய பாவங்கள் செய்தவர் பயந்து எச்சரிக்கை யுள்ளவராய்த் தபசு செய்கிறனுல், தாம் கொண்ட முறையில் உறுதிப்பாட்டைப் பெறுவார். மற்றையர், அஃதாவது தம் வாழ்நாளை நல்வழியிலேயே நேர்மையாகக் கழித்து இருக்கின்றவர்கள், அவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டுவதில்லை என்றபடி.

நம்மைச் சீர்திருத்தலுக்கு முக்கியமாக இரண்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டும். ஒன்று—நம்மைக் கீழான கதியில் கொண்டு விடும் இயற்கையான சுபாவத்தினின்று பலவந்தமாக நம்மை விலக்கிக்கொள்ளவேண்டும். மற்றொன்று—நன்மை கடைப்பிடியாக நல்வழியில் இடையறாது நடக்கவேண்டும்.

மேலும் தீய வழியைத் தவிர். பிறரிடமிருந்தால் எது குற்றமாக உனக்குத் தோன்றுவதாகுமோ அதை முற்றும் விலக்கு.

எங்கே போனுலும் எச்சமயத்திலும் சன்மார்க்கத்தை நாடு. அதற்கு அனுகூலமானதைத் தேடு. ஒரு நல்ல முறை, ஒரு நல்ல அனுஷ்டானம் உன் எதிர்ப்பட்டால் உடனே அதை அனுசரித்து நடக்கத் தீவிர முயற்சி யுள்ளவனுகக் கடவாய். ஒரு தீய ஒழுக்கமு ஒரு தீய காரியம் பிறரிடம் கண்டால், அஃது உன்னிடம் இசழாமலிருக்கும்படி கவனிக்கக்கடவாய். அஃது உன்னிடம் ஏதேனும்



ஒரு சமயம் இருந்திருப்பினும் அதை இனிச் செய்யாமல் நீக்கு. உன் கண் பலரைப் பார்க்கின்றமைபோல், பலர் கண் உன்மேல் இருக்கும். கவனமாக இரு.

8. ஒரு கோஷ்டியார் பண்பும் பக்தியும் உள்ளவராக அவரவர் கொண்ட அனுஷ்டானங்களை விடாமல் சரியாய் நடைபெறுகின்றதைப்பார்க்க எவ்வளவு திருப்திகரமாகவும் பிரியமாகவும் இருக்கின்றது! அதற்கு நேர் எதிராக ஒரு சபையைச் சார்ந்தார் அச்சபையின் கொள்கை ஒழுக்கங்களினின்று வழுவி அச்சபையின் முறை தப்பி நடை பெறுதல் எவ்வளவு துக்கமாக இருக்கிறது! நாம் கொண்ட கருமத்தின் வழியை அலக்ஷியம் செய்தல், எவ்வளவு தீமைக்கும், கெடுதிக்கும் இடமாகவிருக்கிறது! தமக்குரிய கருமத்தைச் செய்யாது பிறர் கருமம் செய்கின்றவர் என்ன என்ன கெடுதியை விளைவிக்கின்றார்கள்! காண்.

நீ கைக்கொண்ட நோன்பை மனதில் உன்னிப்பார். ஞானிகளின் ஒழுக்கத்தை மனதில் ஞாபகப்படுத்திக்கொள். நீ ஈசன் வழியின் நிற்பினும் ஏசுகிறிஸ்துபோன்று, உன் வாழ்நாளை நேர்மைப்படுத்தாது அவர் செய்து காட்டின வழிப்படி நடவாது, அவ்வண்ணம் முயற்சியுங் கூட எடுக்காது, நீ காலம் கழித்திருக்கிறதை நினைத்து நினைத்து மனங் குன்றி அகம்நொந்து வெட்கப்படக்கடவாய். சமயநெறியில் நிற்பான் ஒருவன் உள்ளபடி மனமுருகி, அன்பு பாராட்டி ஞானிகள் ஒழுக்கமுறைமையையும் அவர்கள் பட்ட துன்பத்தையும் சிந்தித்து வருந்துவானுகில், அதிலேயே தனக்கு வேண்டியுள்ள உபதேசங்களெல்லாம் பெறுவான்.

அர்ச்சை! ஏசு என்பார் நடத்திக்காட்டிய வழியை நம் மனதுக்குள் கொண்டுவருவோமாகில், அவ்வழி நம் நெஞ்சில் பதியுமாகில், எவ்வளவு எவ்வளவு சீக்கிரத்தில் நாம் அறிவுள்ளார் ஆவோம்! உண்மையான பக்தியை விரைவில் மெய்யுணர்வு பெறுவோம்! பொறுப்புடைய துறவி அவனுக்கிட்ட கருமத்தையும் கடமையையும் சிரத்தையல்லாதமையுடனே செய்வான். நன்றாய் நடத்துவான். துறவி ஒருவனே, சோம்பற்குள்ளாய் சங்கடத்திற்கும் துயரத்துக்கும் உள்ளாவான். மேன்மேலும் கஷ்டத்தின்மேல் கஷ்டம் சம்பவிக்கும். திரும்பின பக்கமெல்லாம் துன்பமுண்டு. எனென்றால்,

தன்னுள்ளத்தில் சுகமில்லை. மனச்சமாதானமில்லை. வெளியேறி உலகத்தில் சுகந்தேடவென்றாலோ முடியாத காரியமாம். அதற்கு அவனுக்கு இடமில்லை. சந்தர்ப்பம் நேரவில்லை.

4. துறவி, தன் தபசின் முறையில் நில்லாவிடின் நாசத்துக்கு உள்ளாவான். துறவறம் பூண்டும், தபசுவழியில் நில்லாமல், உல்லாசமாய்க் காலங்கழிக்க விரும்புவான். எப்போதும் துன்பத்தையே யனுபவிப்பான். எதாவதொன்று, தனக்குத் துயரத்தை உண்டு பண்ணிக்கொண்டேயிருக்கும்.

எத்தனையோ துறவிகள் துறவறத்தை நன்றாய் நடத்துகின்றார்கள். காண். ஏனென்றால், தம் தம் தபசறையை விட்டு வெகுவாய் அகலாது இருப்பார்; தாம் உள்ளடங்கி இருப்பார்: அவர் அதிகம் உண்ணார்; அவர் அதிக ஆடை உடுக்கார்; அவர் அனுஷ்டானங்கள் அதிகம் செய்வார்; அவர் அதிகம் பேசார்; நெடுநாழிகை விழிப்பார், அதிகம் தூஞ்சார்; வைகறைத் துயில் எழுவார்; தியானத்தில்தான் அதிக காலம் கழிப்பார்; அவர் இடைவிடாது படிப்பார்: இவ்வண்ணம் பலவித கருமம் வகிப்பார்; கார்த்தூஷியர் (Carthusiars) என்ன, சிஸ்டர்சியர் (Cisterciours) என்ன, இத்தகைய சந்நியாசிகள், சந்நியாசினிகள் இவர்கள்போன்ற மற்றவர்களைப் பார். அவர்கள் எவ்வளவு பக்தியுடனே நிசி ராத்திரியில் துயில் எழுந்து, ஈசுவர ஸ்தோத்திரம், ஈசுவர கீதங்கள் செய்துவந்தார்கள் என்பதைக் கவனி. இறைவனை நோக்கி, இத்தனைபேர்கள் உற்சாகத்துடனே அன்புள்ளவராகிக் கீதங்கள் பாடி, ஸ்தோத்திரங்கள் செய்கின்ற பொழுது, நீ உன் மார்க்கத்திற்கு உரிய கைங்கரியம் செய்யாமல், சோம்பலாக இருத்தல் எவ்வளவு இழிவானதென்றும், வெட்கித் தலை குனியத்தக்கதென்றும் நினைத்துப்பார்.

மனங்குளிர, வாய்நிறைய, ஈசுவர ஸ்தோத்திரம் செய்வதைத் தவிர, அந்தோ! வேறு கர்மம் இல்லாமலிருக்கும்படி செய்யவொண்ணாதா? பசி, தாகம், தூக்கம் இவை மறந்து காலமெல்லாம் கடவுள் ஸ்துதியிலேயே கழிக்கமாட்டாயா? உன் வாழ்நாளை ஆத்மரக்ஷணைக்காகப் பூர்த்தியாகக் கழிக்காயா? அவ்விதம் செய்வாயாகில், இப்போது சரீரத்தைப்பற்றிய வேண்டுதலின்கண் அழுந்தி அடிமையாக இருக்கின்ற நீ அதிக ஆனந்தமாக இருப்பாய். சர்வசம்பந்தமான



இச்சைகள் இல்லாமலிருக்கப்படாதா? ஆத்மாவின் உணவு (ஞானம்) மட்டும் இருக்கப்படாதா? ஆத்மாவை ரக்ஷிக்கவேண்டிய உணவை ஏகதேசந்தான் தேடுகின்றோம். ஈசுவர சிருஷ்டிக்குட்பட்டவைகளைப்பற்றியும் அவைகளால் உண்டாகும் சுகத்தைப்பற்றியும் உள்ள அவா நீங்குமேயாகில், அப்போதுதான் ஈசனை நோக்கி மனம் செல்ல ஆரம்பிக்கும். அப்போது, வந்தது போதுமெனத் திருப்தியடைவான். அதிகம் என்று சந்தோஷமும், குறைவு என்று துக்கமும் இரா; கடவுளே அடைக்கலம் என்று அவரையே நம்பினவனாயிருப்பான். அவரே அவனுக்கு எல்லாமாயிருப்பார். அவருக்கு ஒரு வஸ்து அழிவில்லை; ஒரு வஸ்து வாடுதலில்லை; எல்லாம் அவரே நோக்காய் நடை பெறுகின்றன; அவர் ஆஞ்ஞையைக் கோரி எதிர்பார்க்கின்றன.

5. உன் மரணாந்த காலத்தை ஞாபகத்தில் வை. சென்ற காலம் திரும்பாது. இது சத்தியம். சிரத்தையும் ஜாக்கிரதையுமின்றி நற்குணம் உண்டாகாது. சொற்பம் சோர்வு உண்டானால் விழுந்திடுவாய். தீவிர நோன்பு பூண்டால் சாந்தம் அடைவாய். நீ தொடங்குங் காரியமெல்லாம் இலகுவாகவிருக்கும். ஏனென்றால், நன்மையை நாடி இறைவன் அருள் பெற்றவனாக இருக்கிறாய். தீவிர விரதம் கொண்டவனுக்கு ஒன்றும் லக்ஷியம் இல்லை. வேர்வை கொட்ட வேலை செய்வதைப்பார்க்கிலும் தம் குற்றங்களைக் களைந்து தம்மை அடக்கி ஆளுதல் அதிக வருத்தமாம். சிறு குற்றங்களைக் களையாவிடின் பெரிய பாவங்களில் அழுந்துவாய். பகலை நன்றாய்க் கழிப்பாயாகில் மாலைப்பொழுது சுகமாக இருப்பதாகும். விழிப்பாய் இரு. ஜாக்கிரதை! ஜாக்கிரதை! வருவன வருக. நீ கவலை பூண்டிரு. எச்சரிக்கையாக இரு. எவ்வளவுக்கெவ்வளவு உன்னைக் கிலேசப்படுத்திக்கொள்ளுகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு பலனுண்டு.

ஞானவழிக்குச் சாதகமான எச்சரிக்கைகள் முற்றுப்பெற்றன.

# புத்தகம் II.

## 1-வது அதிகாரம்.

### அந்தர்முகப்படுகிற முறையிலேச்சரிக்கை.

### சிந்தையினுள்ளே ஈசனைத் தேடுதல்.

"சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்"
(மாணிக்கவாசகர்.)

"சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையி லீசனை
நீக்க மலத்தை விடு." (ஔவை.)

"கடவுள் உன்னிடம் உள்ளார்." இது தேவ வாக்கு. துன்பத்திற்கு இடமாகிற இப்பிரபஞ்ச வாழ்வை விட்டு உன் முழுமனத்தைக் கடவுளை நோக்கித் திருப்பு. அதனால் உபசாந்தம் பெறுவாய். வெளி விஷயங்களைத் துச்சமென நினைக்கப் பழகு. உள்ளே நோக்கிக் காலங்கழி. அதனால் கடவுள் உன் உடலுள் இடங்கொள்வார். சாந்தமும், ஆனந்தமும்* அதாவது பரமாத்மாவில் கலப்பதால் தோன்றும் ஆநந்தமும் உனக்குச் சித்திக்கும். இது தீயவருக்கு வெகுதூரம். கிட்டாது. கிறிஸ்து* உன் உள்ளே யுறைவார். ஆறுதலைப் பயக்கும் தரிசனத்தைக் கொடுப்பர். அவர் தங்குதற்குற்ற இடத்தை உன் உள்ளே ஆயத்தஞ் செய்வாயாகில், அவர் மகிமையும் அவர் அழகும் உன் உள்ளே பிரகாசிக்கும். அந்தர்முகப்பட்டு நடைபெறுதல் அவருக்குப் பிரியமாம். அப்படி ஒழுகுகிறவனை அவர் அடிக்கடி அணுகுவார். அதனால் இனிய வார்த்தை, சுகமான ஆறுதல், உயர்வான சாந்தம், அற்புதமான நட்பு இவை லபிக்கும்.

பக்தனே! உன் நாயகன் அருள்பற்றி வருகைக்கு உன் இதயத்தை ஆயத்தம் பண்ணு. அவர் அங்கே தங்குவார். அவர்

* ஆத்மபிரகாசம்.



பின்வரும் அருள்வாக்கை அளித்திருக்கின்றார். "ஒருவன் என்பால் பக்திபாராட்டுவானாகில், அவன் என் வாக்கை ஞாபகம் கொள்ளக; நாம் அவனிடம் வருவோம்; அவன் உடலிடம் கொள்வோம்."

ஆகையால், கிறிஸ்துவையே சிந்திப்பாய். வேறு ஒன்றுக்கும் இடங்கொடாதே. அவர் உன்னிடம் தங்கவே நீ பாக்கியவானாகிறாய். அவர் உனக்குப்போதும். உனக்கு வேண்டுவனவெல்லாம் அளிப்பார். உன் காரியங்களெல்லாம் தம்முடையதாக நடத்துவர். இனி மனிதர்களை நம்பவேண்டாம். மனிதரோ உறுதிப்பாடு அற்றவர். நிலையற்றவர். விரைவில் நம்மைக்கைவிடுவர். கிறிஸ்துவோவென்றால் ஊழிகாலம்வரை நம்மைக்கைவிடார். கடைமுறைகாலம்வரை நமக்கு உதவுவர். அற்பனாயும், மரணதர்மத்துக்கு உள்ளானவனாயுமுள்ள மனிதன், எவ்வளவு உபயோகமாக இருப்பினும், எவ்வளவு அன்பு பாராட்டினும், அவனை நம்ப ஒண்ணாது. அடிக்கடி மனிதன் நமக்கு இடையூறு புரியினும் நமக்கு விரோதம் செய்திடினும் அவனைப்பற்றிக் கெட்ட எண்ணம் எண்ணற்க*. மனிதர் இன்று நம்மோடு உறவாக இருப்பர். நாளை நம்மெதிரியோடு உறவாவர்; காற்றுப் போல நிலையற்றவர்.

அதனால், கடவுள் ஒருவரையே நம்பு. அவரே உன் பயத்துக்கும் உன் அன்புக்கும் லக்ஷியமாகட்டும். உனக்காக அவர் உலகத்தாருக்குச் சமாதானஞ் சொல்லுவர். உனக்கு அனுகூலத்தைச் செய்திடுவர். அதை நன்றாகச் செய்வார். உலகத்தில் நிலைமை உறைவிடங் கிடையாது. எங்கே போனாலுஞ் சரி, அங்கெல்லாம் நீ வழிப்போக்கனாகவே யிருக்கிறாய். சிந்தையின் உள்ளே ஆன்மா வுடன் அமையப்பெற்றாலன்றி வேறு எங்கும் ஆனந்தமடையமாட் டாய். அப்படி யிருக்கையில், நீ ஏன் வெளிப்பட நோக்குகிறாய்? உன் உறைவிடம் மோக்ஷமாம். உலக விஷயங்களெல்லாம் சென்று கொண்டிருக்கும் நில்லாத வீண் தோற்றமே. அவைகள் செல்லச் செல்ல, நீயும் அவைகளுடனே செல்லுவாய். அவைகளில் உன் மனம் பற்றாமல் கவனமாய் இரு. இன்றேல் அவைகளின் வலைக் குள் சிக்கிக்கொண்டு மருளுவாய். உன் எண்ணங்களெல்லாம் உயர் வான பூமியிலிருக்கின்ற இறைவனை நாடுக. உன் பிரார்த்தனைகள் எல்லாம் எப்போதும் கிறிஸ்துவை நோக்கி நேராகச் செல்லுக.

* "மறந்தும் பிறன்கேடு சூழற்க" என்பது குறள்.

மேலான மோக்ஷ ஸம்பந்தமானவைகளைப்பற்றிய பாவனைகளை உன் மனம் சிந்திக்க இயலாதாகில், கிறிஸ்துவானவர் உலகில் எவ்விதம் வருந்தினார் என்பதையாவது உன் மனம் நினைக்கட்டும். அவர் அடைந்த புண்களையும், அவைகளின் தழும்புகளையும் நீ விரைந்து விரைந்து சிந்திப்பாயாகில், உலகத்தில் உனக்குச் சங்கடங்கள் நேரும்போது நீ ஆறுதலடைவாய். உலக நிந்தனையை நினைக்கமாட்டாய். பழிச்சொல்லை மனம் நோவாமல் பொறுப்பாய். அவரை யுலகத்தார் நிந்தித்தபோதும், அவர்மேல் வீண் பழிகளைச் சுமத்தினபோதும், அவர் சிநேகிதர்களும் அவரை நன்கு அறிந்தவரும் அவரைக் கைவிட்டு விலகிக்கொண்டார்கள். கிறிஸ்து இவ்விதம் சங்கடத்துக்கும் நிந்தைக்கும் உள்ளாயிருக்க, நீ உலக இடும்பைகளுக்குவியசனப்படத் தக்க நியாயமுண்டா? கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பேசப் பகைவர்களிருந்தார்கள்; உனக்கு எல்லாரும் நண்பர்களாகவும் உதவி புரிகின்றவர்களாகவும் இருக்க விரும்புவது நியாயமா? உனக்குத் துன்பங்கள் நிகழாமல் உனக்குப் பொறுமையின் மகுடம் எப்படி யேற்படும்? கஷ்டங்களால் நீ வருந்தாமல் கிறிஸ்துவின் நட்பு எப்படிக் கிடைக்கும்?

"நிறை யுடைமை நீங்காமை வேண்டின்
பொறையுடைமை போற்றி யொழுகப்படும்." (குறள்.)

கிறிஸ்துவுடன் அரசாளவேண்டின் அவர்போற் பொறுமையாய் இரு. அவருக்காகச் சகிப்புள்ளவனாக இரு. ஒரு முறையாகிலும் அவர் உள்ளம் பூரணமாகப் புகுந்து அதன்கண் பெருகி வரும் அன்பு ரசத்தின் ருசி கண்டிருப்பாயாகில், உன் சொந்த யோகக்ஷேமத்தைப்பற்றி நீ சிறிதுங் கருதாய். மேலும், அவமானங்கள் வந்திடினும் மனக்களிப்பாய் இருப்பாய். ஏனென்றால், கிறிஸ்துவின்மேலுள்ள பக்தி தன்னைப்பற்றிய நிந்தனைகளைச் சகிக்கச் செய்கின்றது.

ஏசுவை அன்புடன் வழிபடுகிற சத்தியகாமி, உள்ளபடி அந்தர்முகப்படுவான்; மிதமிஞ்சிய ஆசாபாசங்களினின்று விடுபடுவான்; இறைவனைச் சுலபமாக உள்நோக்குவான்; தன்னுள்ளத்தில் தன்னை யுயிர்த்திடுவான்; ஈசனைத் தன்னுள் அனுபவிப்பான்: சாந்தம் பெறுவான்.



மற்ற ஜனங்கள் சொல்லுகிறபடி அன்றியும், மற்ற ஜனங்கள் மதிக்கிறபடி அன்றியும், ஆனால் உள்ளபடி உலக வாழ்க்கையை அநுபவத்தினால் அறிகிறவன், உண்மையான ஞானியாவான். அந்த ஞானம் உண்டாகக் கடவுள் அருளால் உபதேசம் பெறுகிறான். மனிதரு லன்று.

"உள்ளூ ரிருந்துந்தம் முள்ளமறப் பெற்றாரேல்
கள்ளவிழ் சோலையாங் காட்டுளார்—காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரேல் நாட்டுள்ளும்
நண்ணி நடுவூ ருளார்." (அறநெறிச்சாரம்.)

பகிருலகத்தை யற்பமெனக் கருதியொழுகுகிறவன், தியானஞ் செய்கிறதற்குக் குறித்த இடம் வேண்டான்; குறித்த காலம் வேண்டான்; அவன் மனம் உலக விஷயங்களிற் சென்று சிதறாமலிருக்கின்றதால், நினைத்த இடத்திலும் நினைத்த காலத்திலும் தன் மனத்தையொடுக்கி நேர்மையாக இருக்கச் செய்திடுவான்; தவம்புரிவான்; எந்த வேலையும் அவன் ஒழுக்கமுறைக்குத் தடையின்றாம். அவன் தவம் எந்த வேளையானாலும் காக்கவேண்டுவதின்றாம். எந்தக் காரியங்கள் செய்யவேண்டினும், அவைகளுக்குத் தக்கவாறு தன்னையமைத்துக்கொள்ளுகிறான். உள்நோக்கமும் மனநேர்மையும் உடையான், ஜனங்களின் கோணலான விபரீத வழிகளைப்பற்றிக் கொஞ்சமேனும் சலிக்கான்; கலைப்படான். நம்மனச்சலனமும் மனக்கலையும் நம்முடைய உலகப்பற்றின் அளவையதாகும்.

"பற்றும் உணர்வை அறுத்துப் பிரபஞ்ச
விகற்பம் உணர்வதே வீடு." (ஔவை குறள்.)

நீ நேர்மையாகவும் தூயனாகவும் இருப்பின், உன் எதிர்ப்பட்டவெல்லாம் நலமாக முடியும்; உன் வழிக்கு நன்மை பயப்பதாகும். அநேக ஸம்பவங்கள் உன்னைத் துக்கத்திற்குள்ளாக்கி உன் மனச்சமாதானத்தைக் கெடுக்கிறதற்குக் காரணமாம். யாதெனின், மரணதர்மத்திற்குள்ளானவையை முற்றும் வெறுக்காததும் உலகப்பற்றை முற்றும் அறுக்காததுமாம். சிருஷ்டிப்பொருளில் அதிக ஆசைதான் நம் நெஞ்சைப் புண்ணாக்குகிறது. வெளிச்சுகங்களைத் தவிர்.

"அவா இலார்க்கு இல்லாகுந் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்." (குறள்.)

உள்ளே பொங்கும் ஆனந்தத்தால் ஆரவாரிப்பாய். பலகால் தரிசனம் பெறுவாய்.'

## 2-வது அதிகாரம்.

### தாழ்மையான அடக்கமுடைமை.

அவன் உற்றான், இவன் மாற்றான், என்பதில் வீண் சிந்தனை வேண்டாம். ஈசன் உன்னுடன் இருக்கிறாரென நினைந்துகொள். என்ன செய்திடினும் சுத்த மனத்துடன் செய்தால் அவர் உன்னைக் காப்பார்.

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற." (குறள்.)

ஈசன் உதவி யிருப்பின், உலகத்தார் பகை யென் செய்யும்? நீ மௌனஞ் சாதித்துத் துன்பத்தினால் வருந்துவாயாகில், நிச்சயமாய் இறைவன் உதவிபுரிவார். உன்னைத் துன்பத்தினின்று விடுவிக்குங் காலமும் அதன் முறையும் அவர் அறிவார். அவரிடம் உன்னை யொப்புவித்து விடு. உன்னைக் காப்பாற்றுதலும் உன்னை மோஹத்தினின்று விடுவித்தலும் அவர் கடன்.

நம்மைத் தாழ்மைப்படுத்துதல் அநேக சமயங்களில் நலமாம். அதனால் நம்முடைய குற்றங்களையும் குறைகளையும் பிறர் கண்டு கண்டிக்க இயல்வதாகும். மேலும், தன் குற்றத்திற்காக ஒருவன் பணிவானாகில், குற்றம் கண்டுபிடிக்கிறவர் சகிப்புடன் சமாதானம் பெறுவர். அவர் கோபமும் சாந்தமாகும்.

2. தாழ்மையுள்ளவனை இறைவன் காப்பாற்றுவர். மோஹத்தினின்று விலக்குவர்.

தாழ்மையுள்ளவனே இறைவனுக்குப் பிரியன். அவர் ஆறுதல் அளிப்பார்.

தாழ்மையுள்ளவனுக்கே அவர் இரங்குவார்.

தாழ்மையுள்ளவனுக்கே அவர் அருள் ஏராளமாகக் கொடுப்பர். அவன் மனம் நொந்து வாடுங்காலத்தில், அவர் உற்சாகப்படுத்துவார்; உயர்த்துவர்.



தாழ்மையுள்ளவனுக்கே தம் ரகசியங்களை யுபதேசிப்பார்; அன்புடனே தன்னுடன் சேர்த்துக்கொள்வர்; வா என்று கூப்பிடுவர்.

தாழ்மையுடையவன் வெட்கத்திற்குள்ளாயினும் தன்னுள்ளே சாந்தம் பெறுவான். ஏனெனில், உலகத்தை அவன் நம்பாமல் கடவுளை நம்புகிறான். உன்னைக் கீழானவனாக நினைக்குமளவும் உனக்கு ஞானமார்க்கத்தில் விருத்தியில்லை யென நினை.

## 3-வது அதிகாரம்.

### சாந்தம்பெற்றவன் நிலைமை.

முதலில் நீ சாந்தம் பெறு; பின்பு பிறரைச் சாந்தம்பெறச் செய்யலாம். அதிகம் கல்வி கற்றவனைவிடச் சாந்தம் பெற்றவனால் உலகத்திற்கு அதிக க்ஷேமம் உண்டு. சினம் கொண்டான், நல்லதைத் தீயதாக ஆக்குவான். தீமையை விரைவில் நம்புவான். சாந்தமுள்ளான், தீயதை நல்லதாக ஆக்குவான். சாந்தமுள்ளவன், பிறரிடம் அவநம்பிக்கை கொள்ளான். சமாதானம் பெறாது சஞ்சலப்படும் மனத்தையுடையான், பெருகிய சந்தேகத்தால் தத்தளிப்பான். தானும் சாந்தம்பெறான்; பிறரையும் பெறவொட்டான். சொல்லக்கூடாதனவற்றைச் சொல்லுவான்; செய்யக்கூடாதனவற்றைச் செய்வான். தன் கர்மத்தை விடுவான்; பிறர் கருமத்தைப்பற்றி வீண் சிந்தனை கொள்வான். ஆகையால், முதலில் உன்னைப்பற்றி பக்தி வைராக்கியமுள்ளவனாகவிரு. பிறகு அயலாருடையதைப்பற்றி நடுநிலைமையாகக் கவனிக்க இயலுவதாகும். உன் கருமங்களைப்பற்றிச் சமாதானங்கள் லகுவாய் ஏற்படும். பிறர் கருமங்களைப் பற்றியோ அப்படி யன்றாம். அவைகளின் பார்வை வேறாம். சமாதானங்களை யொவ்வாய். உன்னைக் கடிந்துகொள்ளக்கடவாய். பிறர் குற்றத்தைப்பொறுத்து அவரை விடுவி. தீங்கு பிறருக்கு நினைக்க, அது தனக்கே வரும். என்ற நீதியைக் கைக்கொள்ளு.

2. தர்மகுணபாலமும் பணிவுள்ள மனமும் உள்ளார் தன்மைகளை யோஜித்துப்பார். தம்மையே கடிந்துகொள்ளுவர். பிறரைக் கோபியார். பிறரை நிந்தியார். அச்சுபாவத்தினின்று நீ எவ்வளவு தூரம் விலகியிருக்கிறாயென நினைத்துப்பார். நற்குணமுடையாருடனும் அன்புடையாருடனும் சேர்க்கையாக இருத்தல் ஒரு பெரிய

காரியமன்று. அப்படியிருத்தல் எல்லாருக்கும் பிரியமாம். தன்னுடைய நோக்கத்துடன் ஒத்து நிகழ்கின்றாருடனே ஒருவன் நேசத்துடன் நடைபெறுதல் சிரமமானதன்று. மாறுபாடான முரட்டுச் சுபாவமுள்ள துஷ்டருடனே நேர்மையாக ஒழுகுதலே நற்குணத்தின் அழகாம். புகழத்தக்கதாம். தீரத்தன்மையுமாம்.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தான்தன்
தகுதியால் வென்று விடல்." (குறள்.)

சிலர் தம்முடனும் உலகத்தாருடனும் சாந்தமாகக் காலங் கடத்துகிறார்கள். சிலரோ தாமும் சாந்தப்படார். பிறரையும் சாந்தமாக இருக்கவொட்டார். பிறருக்குத் துன்பம் தேடி தமக்கு அதிக துன்பத்தைக் கொள்கிறார்கள். சிலர் சாந்த சுபாவத்தையடைந்து, பிறரையும் அவ்வண்ணம் சாந்தராகவும் செய்விக்கிறார்கள். துக்கமான உலகவாழ்க்கையில் நாம் தணிந்து பொறுத்தலே, நம்முடைய சாந்த முறையாம். கன்னெஞ்சராயிருத்தல் சரியன்றாம்.

"பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று." (குறள்.)

சகிப்புள்ளவனே உபசாந்தம் பெறுவான். அவனே தன்னை ஜயித்த தீரன். எல்லாரும் தொழும் கிறிஸ்துவின் பிரியனாவான். வீடுபெறப் பாத்தியஸ்தனுமாவான்.

## 4-வது அதிகாரம்.

### சுத்த மனமும் ஒருமைப்பட்ட சிந்தையும்.

உலகப் பற்றுகளினின்று ஒருவன் வெளியேறிப் பறக்க இரண்டு இறக்கைகள் வேண்டும். கபடமின்மையும் தூய்மையுமாம். தன் நோக்கமெல்லாம் கபட மின்மையென்ற இசை பற்றியதாக இருக்கவேண்டும். தன் அன்பெல்லாம் தூய்மை யென்ற இசைபற்றியதாக இருக்கவேண்டும். அவன் நோக்கம் இறைவனிடம் செல்லவேண்டும். அவன் அன்பு இறைவனைத் தழுவவேண்டும். அவரையே சகிக்கவேண்டும். மனசஞ்சலமின்றிச் சமாதானம் உள்ளாயாகில், பிறர் நற்கருமங்கள் உனக்குத் தடை செய்யாவாம். உன் நோக்கமும் எண்ணமும் கடவுள் கைங்கர்யத்திலும் அயலான்



க்ஷேமத்திலுமிருப்பின், உன்னுள்ளத்தில் ஆத்மசுகம் அனுபவிப்பாய்.

"கெடுக்க வல்லதக் கெட்டவர் சங்கனை
எடுக்க வல்லது பிம்மனை மென்றதை
படக்க வல்லவை யாய பவக்கடல்
கடக்க வல்லவ ருவன சடிதரோ." (பிரபுலிங்கலீலை.)

உன் நெஞ்சம் நேர்மையாக இருப்பின், பார்க்குமிடமெல்லாம் சத்திய தர்சனமும் படிக்கும் சாஸ்திரங்களெல்லாம் நல்ல ஆதேசமுமாகத் தோன்றுவதாகும். எவ்வளவு அற்பமான வஸ்துவாயிருப்பினும், எவ்வளவு கேவலமானதாக விருப்பினும், அது அது அததன்கண் அமைந்துள்ள ஈசன் அருளை அறிவிப்பதாகும். மனத்துக்கண் மாசிலனாக இருக்கப் பெறின், எல்லாம் தெளிவாய் ஸ்படிகம் போலத் தோன்றும். களங்கம் ஒன்றுமிராது. ஈசனை மெய்யாய் உணர்வாய். சுத்தமனத்துக்கு வானமும் பாதாளமும் உள்ளபடி வெளியாகும்.

ஒவ்வொருவனும் தன்னுள்ளத்தில் நீதிக்குத் தக்கவாறு தனக்குப் புறம்பாயுள்ளவைகளைப் பற்றி எண்ணுகிறான். சந்தோஷம் உலகில் உண்டானால் நல்ல சிந்தனையுள்ளவன் உடனே யநுபவிக்கிறான். துக்கம் உலகில் நேர்ந்தால் தீய சிந்தையுள்ளவன் உடனே உணருகிறான்.

தீயிற் போட்ட இரும்பு துரு நீங்கிச் சுத்தமாகிறது. அதுபோலக் கடவுளை நோக்குகிறவன் தன் மோகங்கள் நீங்கிப் புது மனிதனாக ஆகிறான். கொஞ்சம் சோம்பலாற் சோர்ந்தால் சொற்ப அனுஷ்டானத்துக்கும் பயப்படுகிறான். பிறர்சகாயம் நாடுகிறான். தன்னை ஜயித்துத் தீரனாகக் கடவுளை வழிபடின், பாரமானதாக முன் எண்ணிய விஷயங்கள் லகுவாகும்.

## 5-வது அதிகாரம்.

### தன்னுள் நோக்கம்.

அருள் சக்தியும், அறிவு சக்தியும் இல்லார் நாம். அதனால் நம்மையே முற்றும் நம்பவொண்ணாது. நம்மறிவு அற்பமானது. மனக்கண் குருடதையும் நம்முடைய சோர்வினால் இழக்கிறோம்.

டரென நாம் அறிகிறோமில்லை; தீயவை புரிகிறோம். அதற்குச் செய்யும் சமாதானமும் அதினும் தீயதாம். கோபத்தால் வைப் பெறுகிறோம். அதை உற்சாகமெனக் கருதுகிறோம். பிறர் சிறு குற்றத்தைக் கடிந்து கொள்ளுகிறோம். நம்முடைய பெருங்குற்றங்களை யறியாதிருக்கிறோம். பிறர் செய்யுந் துன்பத்தை யுணர்ந்து நினைத்து நினைத்து உருகுகிறோம். நம்மிடம் பிறர்படுந் துன்பங்களைப் பற்றி நினையோம். ஒவ்வொருவரும் தம் தம் கருமங்களை நியாயமாகச் சிந்திப்பாராகில் பிறரைப் பற்றிக் கொடுமையான அபிப்பிராயங் கொள்ளநேராது.

2. அந்தர்முகப் படுகிறவன், தன் ஆத்ம க்ஷேமத்தையே கவனிப்பான். பிறருடைய விஷயங்களில் கவலைகொள்ளான், சுறு சுறுப்பாய்த் தன் உள்ளே நோக்குகிறவன் உலக விஷயங்களில் மௌனியாயிருப்பான். பிறர் விஷயங்களை யகற்றினாலன்றி, உள் நோக்க இயலாது. தூயனாக முடியாது. உள்ளே நோக்கி இறைவனிடம் மனத்தைப் பூர்த்தியாய் வைப்பாயாகில் வெளிவிஷயங்கள் உன்னைப் பீடிக்காவாம், உன்னை யசைக்காவாம். உன்னுடன் உன் மனம் இராமல் எங்கேயோ போகின்றதே! உன்னை மறந்து நீ ஊரெல்லாம் அலைந்ததினால் என்னபயன்? நீ சாந்தமும் மனவொருமையும் அடையவேண்டுமாகில் பிறவற்றை யெல்லாம் விரைவில் தவிர். உலக விஷயங்களினின்றும் பராமுகமாக விரு. நீ எப்பொழுதும் உன் மனக்கண் எதிர்நோக்காயிரு. அதனால் உனக்கு நலமுண்டு. உலக சம்பந்தம் உனக்குக் கொஞ்சமேனும் நேர்ந்தால் நீ மோசம் போய் விடுவாய்.

3. கடவுளையும் அவரைப் பற்றியவையையும் தவிர மற்றவை மேலாகவும் பெரிதாகவும் பிரியமானதாகவும் ருசியானதாகவும் இருப்பினும் அவற்றை யெல்லாம் அற்பமென நினை.

"ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேயத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே"

(பட்டணத்துப்பிள்ளையார்.)



விஷய சுகங்களெல்லாம் வீண்மயக்கமென மதி. கடவுளிடம் அன்பு பாராட்டுவான் அவரைவிட மற்றவைகளை யெல்லாம் வெறுப்பான். கடவுளே யெந்நாளும் உள்ளார்; அளவற்றவர்; உலகவியாபி; ஜீவனுக்கு ஸூகிருதராம். மனத்துக்கு உண்மையான ஆனந்தம் ஜனிப்பிப்பவராம்.

## 6-வது அதிகாரம்.

### சுத்த மனத்தின் ஸந்துஷ்டி.

நல்லான் ஒருவன் மகிமையை அவன் சாந்தமனங் காட்டிவிடும். அதுவே சான்றும். மனச்சமாதான மிருந்தால் என்றும் சந்தோஷமாம். சுத்த மனம் எல்லாம் பொறுக்கும். துன்பங்களின் மத்தியில் இன்பமுள்ளதாக விருக்கும். அசுத்த மனமோ எப்போதுஞ் சஞ்சலப்படும். எப்போதும் பயத்துக்குள்ளாகும்.

உன் மனம் உன்னைக்கடிந்துகொள்ளாவிடின் உன் விசிராந்தியினிதாகும். சத்கர்மம் ஒன்றுசெய்ய மனம் சந்தோஷமடையும். தீயவருக்கு உண்மையான சந்தோஷமில்லை. உள்ளே, உண்மையான சாந்தமுமில்லை. "பாபிகளுக்குச் சாந்தமில்லை" என்றது கர்த்தர் வாக்கு. "நாங்கள் உபசாந்தி பெற்றுளோம்; எங்களைத் துன்பம் அணுகாது. எங்களுக்கு ஒருவராலும் தீமை செய்யவொண்ணாது" என ஒருவர் சொல்லின் அதை நம்பவேண்டாம். தீடீரென்று அவருக்கு ஈசுவரன் கோபம் சம்பவிக்கும். அவர்கள் கர்மங்களெல்லாம் நசித்துப்போம். அவர் எண்ணங்களெல்லாம் பொய்த்துப்போம். அன்புடையாருக்கு இடுக்கண் வந்த காலத்தும் மனம் சோராமல் மகிமையுள்ளவராயிருத்தல் சிரமம் அன்றாம். அத்தன்மையான மகிமை தான் ஏசுநாதர் துன்பத்தை சகித்த மகிமைக்கு ஒப்பாம். மனிதரால் பெறப்படும் புகழுங் கீர்த்தியும் நாட்பட இராவாம். அதன் பின் வியசனம் தொடர்வதாகும்.

2. "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்." (குறள்.)

நல்லவர்களின் மகிமை அவர்கள் மனோதர்மம் பற்றியேயாம். பிறர் வசனிக்கும் வார்த்தைகளில் அன்றும். சத்தியமானவர்களின் கீர்த்தி ஈசவரனினின்று வருகிறது; அவரிடம் உள்ளது. அவர்கள் ஆனந்தம் சத்தியமானது; என்றுமுள்ளது. நித்தியமானதும் சத்தியமானதுமான கீர்த்தியை விரும்புகிறவன் அழியக்கூடிய அநித்திய உலககீர்த்தியைப் பற்றி நினையான். காலவரம்புக்குள்ளான உலககீர்த்தியை விரும்புவானும், உண்மையாய் வெறுக்கானும் மேலான லோகத்தின் கீர்த்தியை சற்றேனுஞ் சிந்தியான். இது யாருக்கும் விளங்கும்.

புகழையும் இகழையும் சிந்தியான் ஒருவன் சாந்த மனமுடையன் ஆவன். அவன் மனத்தின்கண் குற்றமிலாறாயின் அவன் சாந்தம் பெறுவான்; திருப்தியடைவன். பிறர் ஸ்துதி உன்னைத் தூயன் ஆக்காவாம். அவர் இகழ்ச்சியும் உன்னைத் தாழ்த்தாவாம். உனக்கு உள்ளது இருக்கே தீரும். இறைவன் உன்னையறிவார்; உண்மையாய் உனக்கு இருக்கும் யோக்கியதையைவிட அதிகமாக இருக்கிறதுபோல நடைபெற முடியாது.

நீ ஏகாந்தமாக இருக்குங் காலத்தில் உன்னைப் பற்றி உள்நோக்கிப்பார். பிறர் உன்னைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயத்தை நீ கவனிக்கவேண்டாம். மனிதர் வெளித்தோற்றத்தைப் பார்ப்பார்; கடவுள் உன் உள்ளத்தை யுள்ளபடி பார்ப்பார். மனிதர் கர்மங்களை கவனிப்பார். கடவுள், அவைகளின் காரணமான மனோபாவங்களையறிவார்; சீர் தூக்குவார்.

ஒருவன் எப்போதும் நேர்மையாக ஒழுகித் தன்னை உயர்வாக நினைத்திருப்பின் அவனே அடங்கினவனுவான். அவன் உள்ளத்தின் தூய்மைக்கும் உலக வஸ்துக்களின் சுகத்தை விரும்பாதுகொண்ட மனச் சந்துஷ்டிக்கும் அது சான்றும். தனக்கு வெளிச் சாட்சி வேண்டாதானே கடவுளைப்பற்றியவன் என வெளியாகும். தன்னைப் புகழுகிறவன் இறைவனுக்குப் பிரியனல்லனும். "அவர் எவனை அங்கீகரிக்கிறாரோ அவனே அவருக்குப் பிரியன்." எனப் பால் ஞானியார் உபதேசிக்கின்றார். உள்ளே கடவுளுடன் உறவும், வெளியில் உலகப்பற்றின்மையும், என்பது தான் உள்நோக்கிய மார்க்கம்.



# 7-வது அதிகாரம்.

## எல்லாப் பற்றையும் விட்டுக் கடவுளைப் பற்றுதல்.

கடவுளுக்காக தன்னை நொந்துகொண்டும் கடவுளினிடம் அன்புபாராட்ட உணர்பவனே ஆனந்தமடைந்தவன். நம்முடைய பிரியங்களிலெல்லாம் அவரை நோக்கி பற்றுவிடக்கடவோம். ஏனென்றால் எல்லாப்பற்றும்விட்டுக் கடவுளையே பக்தி செய்யவேண்டும். சிருஷ்டிப்பொருள்களில் பற்றுவைத்தல் பயனற்றது. அபாயத்திற்குள்ளாக்கும். அவரைப் பற்றுதல் பலவத்தாம்; என்றுமுள்ளதாம். அழிகிற வஸ்துக்களின்மேல் பிரியம் வைக்கிறவன், அவைகளைப் போலத்தானும் அழிவான். கடவுளின்மேல் அன்பு வைக்கிறவன் மென்மேலும் விருத்தியடைவான்.

2. அவரை நேசி, அவரை உன் நண்பனுக அன்பு பாராட்டு. உன்னை யெல்லாருங் கைவிட்டாலும், அவர் உன்னைக் கைவிடார். கடைமுறையில் நீ சாக, அவர் இணங்கார். மனத்துடனுவது அல்லது மன வெறுப்பினுலாவது எல்லாவற்றையும் நீ விட்டு ஒரு நாள் விலகிப்போக வேண்டியவன் தானே. அதனுல் உன் ஜீவதசையிலும் உன் மரண காலத்திலும் அவர்மேல் பற்றுவை. அவரையே சதமென நம்பு. அவரே உன்னைக் கை தூக்கி விடுவர். மற்றையர் உன்னைக் கைவிடுவார். உன் அன்பிற் குரியரானவர், வேறு ஒருவர்மேல் நீ அன்பு வைக்க இணங்கார். உன் மன முழுமையும் அவரிடமே வைக்கவேண்டும். அவர் உன் சிந்தை யிடங்கொள்ளுவர். அங்கேயே யாளுவர். நீ தூயனுகி உலக விஷயங்களின் பற்றைவிடுவாயாகில் அவர் எப்போதும் உன் உடலிடம் வசிக்கப் பிரியமுள்ளவராவர்.

3. அவரிடமன்றி, மற்றை மனிதரிடம் வைக்கும் நம்பிக்கை பயனற்றதாகும். காற்று லலையும் நாணலை நம்பாதே. "எல்லா ஜீவனும், புல்லைப்போன்றவாம்; அவைகளின் மகிமை புல்லின் பூப்போல் அழிவுள்ளதாம்." என்றது ஒரு ஞானியர் உயர்ந்த மொழி.

மனிதனின் வெளித்தோற்றத்தில் பற்றுவைத்து மயங்கி விரைவில் மோசம் போவாய். பிறரை நம்பி அவரை பற்றுக்கோடாய் நினைத்து நீ கஷ்டமடைவாய். நீ செய்யுங் கர்மங்களில்

எல்லாம் அவரையே நாடினுல், நீ நாசமுற, உன்னையே காண்பாய். கடவுளை நாடாதான் துன்பந் தனக்குத் தேடுவான். அத்துனபம் உலகெலாங் கூடி யவனைப் பகைக்கினும் அதைவிடப் பெரிதாம்.

## ௮-வது அதிகாரம்.

### கடவுள் நம்முடைய பழகிய சிநேகிதர்.

கடவுள் சமீபத்திலிருக்க எல்லாம் நன்மையாம். வருத்தமாக ஒன்றுந்தோன்ருது. அவர் இல்லாவிடில் எல்லாம் வருத்தமாம்.

அவர் நம் முள்ளத்தின்கண் பேசாராகில் எந்த ஆறுதலும் பயனற்றதாம். அவர் இருந்து ஒருமொழி வசனிப்பாராகில் அதிக ஆறுதல் உண்டு. "இதோ அந்த மஹாத்மா, உன்னை யழைக்கிருர்" என மார்தான் என்பவன் சொல்ல, மேரிமாக்டலின் என்பாள், கேட்டவுடனே தான் கண்ணீர் வடித்து அழுதுகொண்டிருந்த இடம் பெயர்த்து எழுந்தாளன்ருே?

கண்ணீரினின்று ஆனந்தத்திற்குக்கடவுள் அழைக்கும் சமயமே பெரும் பாக்கியம். அது நல்லகாலம். அவரின்றி நெஞ்சு உலர்ந்து ஈரம் வற்றிக் கடினமாக ஆகிறது. அவரின்றி எல்லாம் வெறுமையே; புத்தி ஹீனமே. உலக சம்பத்தை யெல்லாம் இழத்தலினும் அவரை யிழத்தல் அதிகக் கேடாம். ஏனென்ருல், அவரை யிழந்து உலக சம்பத்தெல்லாம் இருந்து என்ன பயன் செய்யும்? அவர் இல்லாமல் உலக வாழ்வு நரகம் போன்றதே; அவரிருந்தால் அது ஆனந்தவனமாம்; அவர் உன்னிடம் இருப்பின் உனக்குத் துன்பஞ்செய்யக் கூடிய பகைவரொருவரு மிலர். கடவுளைத் தம் மிடங்கொண்டவர் விலையிலா மாணிக்கம் பெற்றவராவார். அவரை யிழக்கின்றவர், அந்தோ! உலகெலா மிழக்கின்றவராவார். அவரை யுடையான் எல்லாமுடையான். அவர் இருந்தால் அரசனுவான்; அவரை யிலான் என்னுடையனேனு மிலனும்.

2. அவருடன் வாழும் முறையறிதல் பெரிய வித்தையாம். அவர் தன்னில் உறைவிடமாக இருக்கும்படி செய்யும் முறையின் அறிவே யறிவு. சாந்தமும் பணிவுமுள்ளவனுக இரு; அவர் உன்னை யுறைவிடமாகக் கொள்ருவார். உலகவியாபாரத்தில் பிரவேசிப்பா



யாகில் அவரை யுன்னைவிட்டுத் துரத்திவிடுவாய்; அவர் உன்னிடமிருந்து அகலுவார்; அவர் அருளை யிழப்பாய். அவரை யிழந்த பிறகு உனக்கு உற்ருர் யாவர்? உனக்கு நண்பர் யாவர்? நண்பரின்றி உலக வாழ்வு ரஸமன்று.

மற்றையரைவிட அவரை நீ அதிகமாக அன்பு பாராட்டாமல் போனுல், உனக்கு மனவருத்தமும் வியசனமுந்தான் ஏற்படும். அவரை விட்டுப் பிறரை நம்பினுல் அஃது அறிவின்மைக்குச் சான்ரும். உலகமெல்லாம் உனக்கு எதிர்த்தவரினும் அது நலமென விரும்பு. கடவுளின் கோபம் கொடிது. கொடிது, கொடிது! உனக்குப் பிரியமுள்ள வஸ்துக்களில் கடவுளையே அதிகப் பிரியமாக நாடு.

3. கடவுளுக்காகவே எல்லா வஸ்துக்களிலும் பிரியம் வை. ஆனுல் கடவுளின்மேல் பிரியம் அவருக்காகவே என்று அறி; அவரை வரம்பு கடந்த அன்பினுல் நேசி. நல்ல உற்ற சிநேகர் அவரைவிட இல்லையென நினை. அவரைநோக்க எல்லாரும் சிநேகராம். எல்லாப் பகைவரும் உனக்குப் பிரியர் ஆவர். அவர் எல்லாருடைய அன்புக்கும் பாத்திரமானவர்.

அதிக ஸ்துதி, அதிக அன்பு வேண்டற்க. அஃது ஒப்பு உயர்வு இல்லாக் கடவுளுக்கே தகும். பிறர் உன்மேல் பிரியம் வைக்க வேண்டற்க. அவர் (கடவுள்) உன் நெஞ்சிலும், எல்லா நல்லறிவாளர் நெஞ்சிலும் தங்குக.

"அற்றது பற்றெனில்—உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்—அற்றிறை பற்றே." (திருவாய்மொழி)

சிருஷ்டிப் பொருளின்மேற் காதல்கொள்ளாமல் உன் உள்ளத்திற் சுத்தமாயும் மாசு இல்லாமலும் இரு; களங்கமற்ற தூய மனத்தை ஈசனிடம் செலுத்து; மனமொடுங்கிப்பார்த்தாயாயின் ஈசன் அருள் எத்தன்மையது என உணர்வாய்.

உண்மையாய் இவை யெல்லாம் அவர் அருளால் உனக்குக் கிடைக்கவேண்டுமே யல்லாமல் உன்னுல் சாதிக்கக்கூடியனவல்ல. அவர் அருள் முன்போகவும் வழிகாட்டவும் உன்னைத் துறப்பாய். உலகப் பற்றை விடுவாய்; அவருடன் ஏகனுகவிருக்கப் பார்ப்பாய். அவரும் உன்னுடன் ஏகனுக இருப்பாராவர். இறைவன் அருள் ஒரு

வனுக்குக்கிட்டவே அவன் எதையுஞ்செய்திடுவான். அது தன்னை விட்டு விலகவே, அவன் வறியனும் அசக்தனும் ஆகிவிடுவான். துன்பத்திற்கும் துயரத்துக்கும் ஆளாவான். ஆயினும், இந்தக் கதியில் மனம் தளரப்படாது. நேர்மையான மனம் உடையவனாக ஈசுவர கைங்கர்யம் புரியவேண்டும். வந்த வெல்லாம் வருகவெனப் பொறுத்துக்கடவுளின்மேலுள்ள பக்தியால் தைரியம் கொள்ளுக. சீதகாலத்துக்குப் பின்னர் வசந்த காலமும், இரவுக்குப் பின்னர் பகலும், புயலுக்குப் பின்னர் சாந்தமும் வந்தே தீரும். அதுபோல முன் கஷ்டத்திற்கெல்லாம் பின் சுகம் உண்டு.

## 9-வது அதிகாரம்.

### ஆறுதலின்மை.

ஈசுவரன் அனுக்கிரகம் இருக்கும்பொழுது, மனிதன் ஆறுதலை அலக்ஷியஞ்செய்தல் குற்றமன்று. ஆனால் மண்ணினின்றும், விண்ணினின்றும் எவ்வித ஆறுதலும் வேண்டாதபடி அவ்வளவு நேர்மை பற்றி வாழ்நாள் நடை பெறுதல், அதிக மேம்பாடு உற்றதாம். இறைவனிடமுள்ள பக்தியினால் இயற்கையான் இருப்பிடம் விட்டு நீங்கின ஆன்மா, தன் பிரகிருத நிலைமையைப் பொறுத்தல் உயர்வாம். பூலோகம் மனிதனுடைய இயற்கையான இருப்பிடம் இல்லை. இறைவனிடம் இருந்து வந்தான். அவரிடம் போக வேண்டியவன் மனிதன். ஒன்றிலும் பற்று வையாமலும், பிரயோஜனத்தைக் கருதாமலும், தன் யோக்கியதையைப்பற்றி மெச்சாமலும் ஒழுகுதல் நலமாம்.

ஈசன் அருள் பெற்றவன் ஆனந்தமுள்ளவனும் அன்புள்ளவனும் ஒழுகுதல் ஒரு ஆச்சரியமா? இஃது எல்லாரும் பிரார்த்திக்கும் நேரம். அருள் என்ற குதிரை கட்டிய ரதத்தின்மீது, உல்லாஸமாய் அவன் சவாரி பண்ணுகிறான். சர்வ சக்தியுள்ள பரமகுருவாகிய பரமேசுவரனே தாங்கி, அவரே வழிநடத்தும்போது அம்மஹிமை பெற்றவன் ஒரு சிரமமும் உணராமல் சுகமாயிருக்கிறான் என்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

வதேனுமொன்றைப்பற்றி ஆறுதல் அடையச் சந்தோஷிக்கி



றேம். * நான் என்ற கோசத்தை ஒழிக்க மனிதனுக்குக் கூடவில்லை.

பிராணத் தியாகியாகிய லாரன்ஸ்என்பவரும் (இற்றைக்கு 1700- வருஷங்களுக்கு முன்னர் வலரியன் என்ற ரோமாபுரி சக்கிரவர்த்தியின் ஆஞ்ஞையால் நெருப்பில் வெதப்புண்டு மரணமடைந்தார்.) அவருடைய உபதேசகரும் கடவுளின் பக்தியில் மேம்பாட்டையடைந்தவராதலின், உலக சந்தோஷங்களை முற்ற வெறுத்தார்கள். அதனால் முன்னவர் தம்முடைய அத்யந்த பிரியமுள்ள உபதேசியாகிய ஸிக்ஸ்டஸ் என்பவரைத் தம்மினின்று பிரிய ஒப்பினார். சிருஷ்டிகர்த்தரின்மேலுள்ள அன்பினால் மனித சிநேகிதரை லாரன்ஸ் என்பவர் விட்டார். கடவுளுக்குப் பிரியமானதை யுத்தேசித்து மனுஷ ஆறுதலை விட்டார். அவ்வண்ணமே கடவுளின் திருப்திக்காக உற்ற சிநேகிதரையும் விடக்கடவாய். உனக்குச் சுகிருதமான ஒருவர் உன்னைவிட்டுப் பிரிந்தால் மனம் நோகாதே. சகித்துக்கொள்வாய். நாம் எல்லாரும் ஒருகாலத்தில் பிரிவினையுற வேண்டியவரேயாம்.

தன்னை முற்றிலும் வசப்படுத்திக் கடவுளின்பால் மனத்தைச் செலுத்த அறியுமுன் பலமுறையும் பலகாலும் தன்னுள்ளே ஒருவன் போர்புரிய வேண்டுவதாகும். தன்னை நம்புகிறவன் மனுஷ சுகத்தை நாடி நழுவுவான். கடவுளின் உண்மையான பக்தனும் நல்லாரை நாடி நடக்கிறவனும் ஆறுதல் வேண்டான். மாயா உலக ருசிகளைத் தேடான். கடுமையான கருமத்தையும் தீவிர தபோ முறைகளையும் செய்ய விரும்புவான்.

2. இறைவனே உனக்கு ஆறுதல் அருளுங்காலத்தில், அதை அடைந்து நன்றி பாராட்டி அவரைப் போற்றுக. அவரே யருட்பெருக்கால் உனக்குத் தந்த பாக்கியமென எண்ணுக. உன் யோக்கியதையால் கிடைத்ததென நினையற்க. அதனால் இறுமாப்புக் கொள்ளற்க. அதனால் அதிக சந்தோஷம் கொள்ளற்க. அதனால் வீண் செருக்குச் செய்யற்க. அந்த அருட்பேற்றினால் நீ தாழ்மையுடையவனாக இரு. முன்னைவிட அதிக கவனமுள்ளவனாகவும்

*நான் என்ற கோசம் - அகங்காரம் அல்லது அகந்தை.
"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்." (குறள்.)

அதிக வணக்கமுள்ளவனாகவும் இருக்கக்கடவாய். ஏனென்றால் ஒருகால், இந்த அருட்செல்வம் உன்னைவிட்டு விலகி, உன்னைச் சோதிக்கும் சங்கடம் நேரிடினும் நேரும். அருட்பேரான ஆறுதல் அகல, உடனே துக்கத்துக்குள்ளாகாதே. பண்புடனும் பொறுமையுடனும் ஈசன் அருளை எதிர் பார்த்திரு. முன்னரை விட அதிக சுகத்தை ஈசுவரன் அளிப்பார். கடவுள் முறையறிந்தவருக்கு இது புதுமையன்று. அற்புதமுமன்று. ஞானிகள் தத்துவதரிசிகள். சரிதங்களால் இது விளங்கும். ஒரு சுகத்திற்குப் பதிலாக வேறு சுகம் நேரும். ஆகையாற்றான் ஈசுவரன் அனுக்கிரகம் இருக்குமளவில் அடியில் வருமாறு ஒருவர் சொல்லுகின்றார். "நான் செல்வத்திற் செழித்திருக்குங்காலத்தில் ஒருவரும் என்னை யசைக்க முடியாது." அவர் அருள் விலகினபொழுது அன்னவரே தம் அனுபவத்தை இவ்வண்ணம் சொல்லுகிறார். "இறைவா! நீர் பராமுகமாகத் திரும்பின நிமிஷமே நான் துன்பத்துக்குள்ளாயினேன்." அவ்விதமே, அவருக்குத் துயரம் வந்திடவே மனம் தளர்ந்து மயங்காமல் கடவுளைப் போற்றி மறுபடி பிரார்த்திக்கின்றார். "ஈசா! உம்மை நோக்கியே நான் வாய் திறப்பேன்; உம்மை நோக்கியே நான் பிரார்த்தனை செய்வேன். உம்மைவிட வேறு புகலிடம் எனக்கில்லை.' இப்படியே யவர் ஸ்தோத்திரம் செய்ய ஈசன் அருள் திரும்பப் பெற்றார் ஆயினர். கடவுள் தன் பிரார்த்தனைக்கு இறங்கி அருளினார் என அடியில் வரும் விதம் உற்சாகத்துடன் அவர் வசனிக்கின்றார். "இதோ என் ரக்ஷகர், என் முறையிடுதலைக் கேட்டு, என்மேல் இரங்கி எனக்குத் துணையாகிவிட்டார். எவ்விதம் என்றாலோ கேளீர். என் அழுகையை யானந்தமாக்கி, என்னைச் சந்தோஷங்களால் நிரப்பிச் செய்வித்திருக்கின்றார்."

முதிர்ந்த ஞானிகளுக்கே இந்தச் சம்பவங்கள் நேரில் மெல்வியாகிய நாம் பயப்படவேண்டாம். மனம் தளரவேண்டாம். ஒருகால், கொதிப்பு இருந்தால் மற்றொருகால் குளிர் சம்பவிக்கும். ஈசன் செயலால் ஆன்மாவுக்கு உயர்கிறதும் தாழ்கிறதும் இயற்கையாம். தேவ அருள்பெற்ற ஜோப் சொல்லுகிறதாவது:—இறைவா! அருளினால் ஒருவனுக்கு அனுக்கிரகம் செய்கின்றீர். திடீரென அவனையே இடுக்கண்ணினாற் சோதிக்கின்றீர். அப்படியானால் எதைத் தான் அடைக்கலமாகக் கொள்ளுகிறது? எதை நம்புகிறது?



இறைவன் அருளேயல்லாமல் வேறு கதியில்லை. ஏனென்றால், ஈசன் கடாக்ஷமிலதேல் நல்லார் உடனிருந்தென்ன? அன்புள்ள சகோதரர் இருந்தென்ன? உண்மையான நண்பர் இருந்தென்ன? இனிய கீதம் என் செய்யும்? இவையெல்லாம் ருசிக்காவாம். வறுமையில் மூழ்கிடுவேன். அக்காலத்தில் எல்லாம் ஈசன் செயல் எனச் சிந்தித்துப் பொறுமை பாராட்டுதலே உற்ற விரதம். அதுவே நோய் தீர்க்கும் மருந்து.

ஒருகாலத்தில் அல்லது மற்றொருகாலத்தில் எவ்வளவு பக்திமானாகிலும், எவ்வளவு ஞானவானாகிலும் ஈசன் உதவி குறைந்து துன்பம் அடைவான். இது முற்காலத்திலும் சரிதான். எவ்வளவு அறிவுடையரேனும் எவ்வளவு அன்புடையரேனும் சோதனையான துயரத்துக் குட்படாதவர் ஒருவருமில்லை.

அவ்வண்ணம் சோதனையான துன்பத்தினால் வருந்தாமல் தத்துவஞானம் பெற ஒருவரும் அருகர் ஆகார். அருள் வரும் முன்னே சோதனை திண்ணமாக வரும். சோதனையால் பரிசுத்தரானவர்க்குத் தேவை அனுக்கிரகம் வந்திடும். பொறுமையுடன் தம்மை வென்றவருக்கு நான் அமிருதத்துவத்தை அளிப்பேன் என்றது தேவ வாக்கு.

ஆபத்தை சகிக்க, தேவன் ஆறுதல் கொடுப்பார். மனச்செருக்குத் தணியவே சோதனை நேருவதாகும். ஆசுரபாவம் எங்கே என்று காத்திருக்கிறது. மனுஷ சுபாவம் அற்றுப்போகவில்லையே. அதனால் போருக்குச் சந்நத்தனாக விரு. முன்னும் தூக்கமில்லாமல் உன்னைத் தம் வசமாக்க உன் பகைவர்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

## 10-வது அதிகாரம்.

### ஈசன் அருளுக்கு நன்றி பாராட்டுதல்.

உழைக்கப் பிறந்திருக்கச் சாந்தத்தை ஏன் நாடுவான்? பொறுமை பாராட்டுமின். சுகத்தை நாடன்மின். துன்பத்தைச் சகிமின். சந்தோஷத்தைத் தேடன்மின்.

கிடைக்கப் பெறுமாயின் உலகத்தாரில் யார்தான் மேலான
சுகத்தையும் ஆத்ம சந்தோஷத்தையும் விரும்பார்? ஏனென்றால்
சரீர சுகத்தையும் விஷய சந்தோஷங்களையும் பார்க்கில் ஆத்ம சுகம்
அதிக மேன்மையுள்ளது அன்றோ? உலக சுகங்கள் அற்பமானவை
கள் அல்லவா? வீணானவைகள் அல்லவா? ஈசன் அருளால் நற்கரும
ங்களின் பலனாகத் தூய மனத்தினர்களுக்கு ஆத்ம ஸந்தோஷம்
பெருகுவதாகும். ஆனால் இச்சந்தோஷம் எப்போதும் வேண்டுங்கால
மெல்லாம் மனிதனுக்குக் கிடைக்கத்தக்கதன்று. ஏனென்றால்
மாயா உலகமயக்கம் அவனை முற்றும் விட்டதன்றும். நான் என்ற
அகந்தையும், தன்னால் எல்லாம் சாதிக்கக் கூடுமென்ற செருக்கும்
ஈசுவர தர்சன பிராப்திக்குத் தடைகளாம். மனிதனுக்கு, ஈசன்
ஆறுதலை யன்புடனே யருளுகின்றார். ஆனால் அவன் அதை உண
ருகின்றானில்லை. கடவுளிடமிருந்து வந்த பாக்கியமென்று
எண்ணி நன்றி பாராட்டுகிறானில்லை. அதனால் அருள் வெள்ளத்
தின் தொடர்ந்த வருகை தடைப்படுகிறது. ரக்ஷகரை நாம் அன்பு
பாராட்டி அவருக்கு வந்தனங்கள் செலுத்தினோமில்லை. அன்பு
செய்கின்றவருக்கே ஈசன் அருள்புரிவார். தாழ்மை யுள்ளாருக்கு
அருள் கிடைக்கும்; இறுமாப்புள்ளாருக்குக் கிடைக்காது. அத
னால், என் பாவத்திற்குப் படும் அனுதாபத்தைக் கொடுக்கும் ஆறு
தல் நான் வேண்டேன். எனக்கு இறுமாப்பு உண்டாக்கும் நிலைமை
வேண்டேன். உயர்வானதெல்லாம் புண்ணியமன்று; ருசியான
தெல்லாம் நல்லவையல்ல; விரும்பியவை யெல்லாம் தூயவையல்ல.
இறைவனுக்குப் பிரியமானவெல்லாம் இனியவையல்ல, பண்பும்,
அச்சமும் அமையத் தன்னையே தியாகஞ்செய்யச் சித்தனாய் இருக்கு
ம்படி இறைவன் அருள் அடைய வேண்டுவேன்.

2\. அருளால் அறிவு பெற்றும் அருள் நீங்கிச் சோதனையான
துன்பம் தொடரவும் மெய்யுணர்வு அடைந்தவன் தன்னுடைய
யோக்கியதையைப்பற்றித் தன்னை மெச்சிக்கொள்ளத் துணியான்.
மேலும் அற்பனென்றும் கேவலன் என்றும் தானே ஒப்புக்கொள்ளு
வான். இறைவனால் ஏற்பட்டதை அவரால் என்றும், உன்னால்
ஏற்பட்டதை உன்னாலென்றும் ஒப்புக்கொள்க; அவரால் ஏற்பட்ட
நன்மைகளுக்கு நன்றி பாராட்டுக. உன்னால் ஏற்பட்ட குற்றத்து



க்கு உன்னையே குறைசொல்லுக. உனக்குச் சம்பவிக்கும் தண்
டனை உன் குற்றத்துக்கு வந்தது என உணர்க.

எப்போதும் கீழான நிலைமையை நாடு. மேலான பதவி நவர்
அருள்வார். கீழான நிலைமையிலிருந்தால் மேலான பதவிவந்து
சேரும். ஞானிகள் தங்கள் நோக்கில் தங்களைக் கீழாயினோர் எனக்
கருதுவார். கடவுள் நோக்கில் மேலானவராகத் தோன்றுவார்.
எவ்வளவுக்குத் தாழ்மையோ அவ்வளவுக்கு மேன்மையுண்டு. சத்தி
யமும் திவ்ய தேஜஸும் பொருந்தியவரான ஞானிகள் வீண்புகழை
விரும்பினாரில்லை. இறைவனிடம் மனத்தை நிலை நிறுத்தி ஸ்திர
பிரஞ்ஞை யுடையாரானதால் கர்வம் கொண்டார்களில்லை. ஈசனி
டத்திலிருந்து கிடைத்த பாக்கியத்தை அவருக்கே அர்ப்பணஞ்
செய்வார். பிறரிடமிருந்து புகழுங் கீர்த்தியும் வேண்டார். கடவு
ளிடமிருந்து வரும் அருளையே விரும்பினவராய்த் தாம் அவரைப்
போற்றியும் மற்றைய ஞானிகள் அவரைப் போற்றும்படி செய்வித
தும் இதே கவனமாயிருப்பாராயினர். அற்பகொடைகளுக்கும்
நன்றிபாராட்டின் பெரியகொடைகள் பெற அருகனாவாய். அற்பத்
தைப்பெரிதாக எண்ணு; உபயோகமற்றதைப் பயனுடையதாகநினை.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரிவார்." (குறள்)

கொடையாளியின் மகிமையை யெண்ணின் கொடையற்ப
மென்றும் விலை மதிப்புள்ளதென்றும் நினைக்கமாட்டாய். கடவுளி
டமிருந்து வரும் கொடை அற்பமாக இருக்கக்கூடியதன்று. அவர்
உனக்குத் துயரமும் தண்டனையும் சேரும்படி செய்வாராயினும்
அவை கடை முறையில் இனியவை யாகவே யிருத்தல்வேண்டும்.
அவரால் நமக்குக் கிடைக்கின்றவைகள் நம்முடைய ஆத்ம க்ஷேமத்
தின் பொருட்டேயாம். ஈசன் அருள் தன்னிடம் நிலைத்திருக்க
வேண்டுவோன் அது வருங்காலத்தில் நன்றியுள்ளவனாக இருக்க
வேண்டும். அது போகுங் காலத்தில் பொறுமையுற்றவனாய்,
இனி அதன் வரவை யெதிர்பார்க்கவேண்டும். வந்தால் ஒருகால்
இழப்போமேயென்ற பயத்துடனே கவனமாயும் தாழ்ந்த சிந்தையு
டையவனாயும் இருக்கவேண்டும்.

## 11-வது அதிகாரம்.

### கடவுளின் பக்தர்களில் அவர் பட்ட துன்பத்தை விரும்புகிறவர் துர்லபராம்.

மோக்ஷஸ்தானத்தை நாடுகிற கடவுளின் பக்தர்கள் அநேகர் உள்ளார். ஆனால் அவர்பட்ட வருத்தத்தைச் சகிக்க ஒருவரும் இலர். சுகத்தை வேண்டுவோர் அநேகர். துன்பத்தை விரும்புவோர் இலர் அவர் பந்தியில் (வரிசையில்) உண்ண இச்சிப்போர் பலர். அவர் விரதம் பூண்பவர் சிலர். அவர் சங்கத்தில் ஆனந்திப்பார் பலர். அவருக்காக ஏதேனும் பாரந்தாங்குவோர் இலர். அவர் உண்டியிற் பங்குபோட ஆசையுடையார் பலராம். அவர் குடித்த விஷத்தை மோந்து கூடப் பார்க்க ஒருவரும் இலராம். அவர் அற்புத வித்திகளை மெச்சுவார் பலராம். அவர் அடைந்த நிந்தையான கஷ்டத்தை அனுபவிக்க ஒருவரும் இலராம். துன்பம் வரும்வரை அவரை யன்பு பாராட்டுவார் பலபேர். அவர் அருள் குன்றிப் பாராமுகராயின் இவர் கத்திக் கதறித் துக்கத்தில் மூழ்குவர். அவராலுண்டாகும் ஆறுதலுக்கன்றி, அவரை யென்றும் விரும்புவோர் துன்பங்கள் வந்திடினும் சோதனைகள் நேரிடினும் ஸந்தோஷமுற்ற காலத்தைப் போன்று அவரைப்போற்றுவார். அவர் ஆறுதல் செய்யாவிடினும் அவரையென்றும் போற்றிடுவார். அவரிடம் அன்பு வைப்பார். பயன் கருதாத அவர் மேலுள்ள அன்பு எவ்வளவு வலிமையுடையது! ஒரு கைம்மாறு நோக்கிச் செய்கின்றாரது அன்பு கூலியாளனது போன்றதாம். தங்களையும் நேசித்தார்கள் அல்லர்; கடவுளையும் நேசித்தார்களல்லர். இத்தகையார் எப்போதும் ஒரு லாபத்தையே கருதுகின்றனரன்றோ?

பயன் நோக்காது இறைவனிடம் அன்பு பூண்டு அவர் கருமம் செய்வோர் உண்டோ? அந்தோ! அத்தகையார் இல்லையே. முற்றுந்துறந்து உலக சம்பத்தில் உள்ளபடி ஏழையாயிருக்குமவனை எப்படிக்காண்போம்? தூர தேசத்தினின்று கிடைக்கும் பொருள் போன்று அவர் அபூர்வமாய் இருப்பார்.

எல்லா ஸொத்தையுந் தானஞ்செய்தால் அது பெரிதன்று. உயர்ந்த தவம்புரிந்தாலென்ன? அது பெரிதன்று. எல்லா ஞான



முங் கற்றால் என்ன? அதுவும் பெரிதென்று. நல்ல யோக்கியதை யும் உயர்வான பக்தியும் இருந்து பலனென்ன? அதுவும் பெரிதன்று. பின்பு எதுதான் செய்திடல் வேண்டும்? என்றாலோ, அது இது வாம். முற்றுந் துறந்து தன்னையே தியாகஞ்செய்து பற்றற்றிருத் தல் வேண்டுவதாம். தான் செய்யவேண்டியவைகளை யெல்லாம் செய்தும், தான் செய்தது அற்பமென எண்ணவேண்டும். அது பெரிதென நினைக்கப்படாது. தான் செய்தது பெரிதாக இருந்திடினும் உண்மையில் தன்னை உபயோகமற்ற ஊழியனாக மதிக்கவேண்டும். சத்தியமொழி இதுவாம். "நீ கடமைப்பட்டிருக்கின்றவைகளை யெல்லாஞ்செய்து, நான் பயனற்ற அடிமையென உண்மையாக நினை".

இத்தன்மையானவன் தான், உண்மையில் எல்லாந் துறந்தவன். தாயவன்; தத்வதரிசிபோன்று அவன் இவ்வண்ணம் சங்கீதம் பாட லாம். நானே ஏகன். நான் உலகப்பற்று எல்லாம் விட்டவன். நான் ஏழை. ஆனால் உண்மையில் இவனைவிட வேறு செல்வவான் இல்லை. இவனைவிட வலியவன் இல்லை. இவனைவிடச் சுதந்திரனில்லை. தன்னைத் துறக்க அறிந்தவன் இவனே; தன்னை வெறுத்தவன் இவனே. தன்னைக் கீழாகத் தாழ்த்திக்கொண்டவன் இவனே.

## 12-வது அதிகாரம்.

### துன்பத்தைப் பொறுத்தல் ஞானத்திற்கு ராஜவழி.

"உன்னை வெறு; துன்பத்தைப் பொறு. கடவுளைப்போல் நட." என்ற உபதேசம் அநேகருக்குக் கஷ்டமாகவே தோன்றும். ஆனால் அதைவிட அதிக கஷ்டமானது இதுவாம். "நான் நடைபெற்ற வழியில் ஒழுகாமல் அதினின்றும் நழுவுகின்ற பாவிகாள்! நீங்கள் சாபத்திற்குஉள்ளாயினீர்கள். அழியாத அக்கினியில் மூழ்குவீர்கள்." அதைப் பிரியத்துடன் தியாக வழியின் உபதேசத்தைக் கேட்டு அதைப் பற்றி யொழுகின்றவர்களுக்குக் கொடிய நரககதியின் பயம் வேண்டாம். கடவுளின் தீர்ப்புநாளில் இந்தத் தியாகம் என்ற அறிகுறி மேலுலகில் இருப்பதாகும். அப்போது நியாயாதிபதியாகிய கிறிஸ்துவின் முன்பாக அவர் வழிபட்டு அவர்போன்று நடைபெற்றார், அச்

சமின்றி நம்பிக்கையுடன், அவருடன் வருவார். ஆகையால் தியாகத்தை பற்றிக்கொள்வதில் என்ன பயம்? அதன் வழியாய், மேலான உலகம் கிட்ட இடமுண்டு. தியாகத்தினால் அதைத் தர்மமாகக்கொண்டு ஒழுகுவதில் தஞ்சம் உண்டு; அதனால் பிழைப்புண்டு: அதனால் பகைவரிடமிருந்து ரக்ஷணை உண்டு. அதனால் விண்ணின்று இன்பப்பிரவாகம் வரும். அதனால் ஆத்ம சந்தோஷம் ஜனிக்கும். அதுபற்றி ஒழுகப்பெறின் அதன் கண் எல்லாத் தருமங்களும் அடங்கப்பெறும். அது பரிசுத்தத்திற்குள்ள அழகான இடமாகும். ஆத்மாவிற்குச் தியாக நெறியைவிட வேறு புகலிடமில்லை. அதனால் உனக்கு ஏற்பட்ட துக்கபாரத்தைப் பொறுத்துக்கொள். ஏசுவின் வழியிற் செல்லுக. அஃது என்றும் அழியாப்பதவியைக்கொடுக்கும். அவர் உனக்குமுன்னர் பாரந்தாங்கி வழிகாட்டி நடந்தாராயினர். உனக்காக அவர் அந்த தியாக வழியில் உயிர் நீத்தார். அதை அனுசரித்து நீயும் உனக்கு ஏற்படும் துக்கபாரத்தைத் தாங்கி உன்னைத் தியாகஞ் செய்யவேண்டுமெனக் கருதியே அவர் அப்படி செய்து காட்டினார். அவர் போன்று நீயும், உயிர்விடுவாயாகில் அவரோடு நீடுழிவாழ்வாய். அவர் துன்பத்தில் பங்காளியாகில் அவர் மகிமையிலும் பங்காளியாவாய்.

தியாக முறையில் எல்லாம் அடங்கும். தன்னைத்தான் வெறுத்தலே தியாக மார்க்கம்; அதனுள் எல்லா நலமும் இருக்கிறது. உள்ளபடியே உபசாந்தம் பெற இதைவிட வேறு நெறி கிடையாது. நம்முடைய பாவத்தைத் தினந்தோறும் தொலைத்து நம்முடைய வைராக்கியத்தினால் எல்லா நன்மையும் அடைவதாகும் எந்நெறியையும் எம்முறையையும் தேடு. இவ்வுலகில், தியாகத்தின் உயர்வான வழியைவிட வேறு இடையூறில்லாத மார்க்கம் இன்றாம்.

உன் மனம் போனவாறு நீ செய்தாலும், உனக்குப் பிரியமான வழியில் நடந்தாலும் நீ கட்டாயமாய் துன்பம் அடைவாய். உன் சரீரத்திலாவது உன் மனத்திலாவது துக்கத்துக்குக் காரணமான யாதாம் ஒரு துயரம் சம்பவித்தே தீரும். ஒவ்வோர் சமயத்தில் இறைவன் அருள் உன்னைவிட்டு விலகுவதாகும். ஒவ்வோர் காலத்தில் உனக்கு உற்ற சிநேகிதர் உன்னைப் பகைப்பர். இன்னும் சொல்லுகிறேன் கேள்.



நீயே உனக்குச் சத்துருவாகத் தோன்றுவாய். உன் கஷ்டத்தி
னின்று விலக உனக்கு முடியாமலிருக்கும். இறைவன் எண்ணம்
எதுவரை நீ கஷ்டம் அனுபவிக்கவேண்டுமென்றிருக்கிறதோ அதுகா
றும் எந்த உபாயத்தாலும் அதைத் தணிக்கவும் ஒண்ணாது. ஆறுத
லின்றி நீ கவலைக்குள்ளாகி மனம் நைந்து சோதனையான இடுக்கண்
களினால் வருந்துவாய். பின்பு பணிவும் தாழ்மையும் பெறுவாய்.
இவ்விதம் நிகழ்தல் ஈசுவர சம்மதமாம். கிறிஸ்துவின் துன்பத்தைத்
அவர்போன்று நடைபெற்றவரே அறிவார். அன்னியர் அறிகிலார்.
உலக வாழ்க்கையில் எவ்விடம் திரும்பினாலும் துக்கமே உள்
ளது. நீ எங்கே ஓடினாலும் உன்னை விடாது அது. அதைத் தவிர்க்
கமுடியாது. எங்கே ஒதுங்கினாலும்; எச்சமயத்திலும் அது முந்துறும்.
ஆகாசத்திற் பறந்தாலும் பாதாளத்தில் ஒளிந்தாலும் உள்ளே ஒது
ங்கினாலும் வெளியே திரிந்தாலும் அதை விட்டு விலக உனக்குப்
போக்கிடம் காணாய். உள்ளே மனச்சமாதானம் வேண்டில், பொ
றுமையாக இரு. அழியாத மகுடம் பெறுவாய்.
2. துக்கத்தை பிரீதியாய்ப்பொறுத்துக்கொள். அஃது உன்னை
நல்வழியில் நடத்தும். நெடுநாள் பிரார்த்தனை கிடைக்கும். அதா
வது துன்பம் நசித்து இன்பம் பிராப்தியாகும். இம்மையில் துன்
பத்திற்கு முடிவு இன்றாம். அப்பிரீதியுடன் துக்கத்தைப் பொறுத்
தால் உனக்குக் கஷ்டத்தைத்தான் உண்டுபண்ணிக்கொள்ளுவாய்.
உன் துன்பம் பெருகுவதாகும். அதனால் எப்பொழுதும் அதைப்
பொறுத்துநட. அதை உதறி எறிந்துவிட்டால் வேறு ஒரு துயரம்
வரும். அது முன்னதைவிட அதிக பாரமாக இருப்பதாகும்.
அதைவிட்டுத் தப்பலாம் என்று எண்ணாதே. எவன் அதை
விட்டு விலகி ஓடக்கூடும்? துக்கமும் கவலையும் இன்றி உலகில்
எந்த ஞானி நடைபெற்றிருக்கிறார். நம்முடைய இயேசு கிறிஸ்து
நாதரும் ஒரு நிமிஷமாவது துயரத்தினின்று விலகினாரில்லை.
இயேசுநாதரின் திருவாக்காவது உலகிற் பிறந்தவருள் கிறிஸ்து*
என்ற பெயர் உள்ளார், துன்பம் அனுபவித்தே தீரவேண்டும், மரண
தர்மத்தினின்று விலகி கடைசியில் மகிமை அடைவார்.
மோக்ஷத்திற்கு உள்ளமார்க்கம், இந்த ராஜபாதையாகிய
தியாகத்தைப்பற்றி ஒழுகுதலேயாம். வேறு நெறியில்லை. அவர்

*கிறிஸ்து—ஆத்ம சாக்ஷாத்காரம் பெற்றவர். பூரணம் பெற்றவர்.

ஆயுள் காலமுழுமையும் துக்கமும் தியாகமுமே நேர்ந்தது. நீயோ
சுகமும் சந்தோஷமும் வேண்டுகிறாய். இடுக்கண்ணும் துக்கமும
நீங்கலாக வேறு விரும்புவது வீணே குற்றமாம். குற்றமே ஜன்மமும்
துக்கமும். உலக வாழ்வு எப்போதும்துன்பமும் துக்கமும் நிறையப்
பெற்றுள்ளது. துறவுமார்க்கத்தில் உயர உயர சோதனையாக
துக்கமும் இடையூறும் பெருகிக்கொண்டேவரும். அன்பு மிகவும்
உலக தண்டனை அதிகரிக்கும். அதாவது உற்ற இடமில்லாது உல
கத்தின்கண் ஆயுஸும் விருத்தியாவதாகும்.

3. பல துன்பங்களினால், மனிதன் சோதனைக்குட்பட்டாலும்
தன்னை உயர்த்திக்கொள்ளலாமென்ற ஆறுதல் உண்டு. ஏனென்
றால் அத்துன்பங்கள் சார்ந்தத் தியாக மார்க்கத்தை அனுசரிப்பதில்
பெரிய நன்மை பயப்பதை உணருகிறான். பொறுமையுடன் கஷ்
டங்களை அனுபவிக்க அவைகளே இறைவனிடமிருந்து கிடைத்த
ஆறுதல்போன்று பரிணமிக்கின்றன. துன்பங்களினால், காயம்
கிலேசப்பட கிலேசப்பட உள்ளே பொங்கும் அருளினால் ஆன்மா
உறுதிப்பாடடைகிறது. ஆகவே சில சில சமயங்களில் துன்பமே
தனக்கு வரட்டுமெனப் பிரியமுடன் விரும்புகிறான். இயேசுநாதர்
போலே தானும் வருத்தமுறுதல் நலமெனக் கருதுகிறான். துக்க
மும் கவலையும் தன்னை விட்டு நீங்காமலிருக்கவேண்டுமெனக் கோ
ருகிறான். தன்னுடைய துயரமும் இடுக்கண்ணும் மிகப்பட மிகப்
பட ஈசன் அன்பும் அருளும் தனக்குப் பெருகுமென நினைக்கிறான்.

இத்தன்மைய மனோநிலையானது மனிதனால் உண்டாக்கக்
கூடியதன்று. கிறிஸ்துவின் அருளால் உண்டாகிறது. இயற்கை
யாகத் துன்பத்தை அகற்றிச் சுகத்தை நாடும் இந்த மானிட துர்பல
சரீரம்; அதுவே இப்போது சுகத்தை வெறுத்துத் துன்பத்தை விரும்
புகிறது. இஃது அந்த அருளின் அற்புத காரியமே. இடுக்கண்ணைச்
சகித்தலும் துன்பத்தை விரும்புதலும், சரீரத்தைக் கிலேசப்படுத்து
தலும், அதை அடிமைப்படுத்துதலும், புகழ் சம்மானங்களை விட்டு
அகலுதலும், பிறர் தன்னைத் தாழ்மைப்படுத்துதலும், பிறர் தன்னைக்
கீழோனாக நினைக்க விரும்புதலும், கஷ்டத்தையும் நஷ்டத்தையும்
அனுபவித்தலும், நல்லகால வரவை வேண்டாமெனக் கோருதலும்
இவையெல்லாம் மனிதன் இயற்கைச் சுபாவம் அன்றாம். உன்னை
நம்பி உன்னால் இவை சாதிக்கலாமென்ற எண்ணத்தைக் கைவிடு.



கடவுள்மேல் பாரம் வைத்து, அவரிடம் அன்புபாராட்ட, உனக்குத்
தைரியமுண்டாகும். சரீரப்பற்றும், உலகப்பற்றும் உன்னை விட்டுக்
கழலும். அவை உன் சுவாதீனமாகும். கிறிஸ்துவின் வழிபட்டுப்
பூர்ணநம்பிக்கை கொள்ளுவாயாகில் மாயா உலக மயக்கம் என்ற
பிசாசுக்கு நீ பயங்கொள்ளவேண்டாம்.

இனிமேல் கிறிஸ்துவின் நல்ல விசுவாசமுள்ள ஊழியனாக
இருக்கக்கடவாய்." அவர்போன்று தீரனாக துன்பத்தைச் சகிக்க
முடியும். உன்னுடைய ஆன்மக்ஷேமத்தின்பொருட்டு அவர் சிலு
வையில் உயிர்விட்டார். உனக்கு வைரியாக இருக்கும் துன்பங்க
ளைப் பொறுக்க ஆயத்தம் செய்துகொள்க. அதனால் துன்பத்தி
ற்கு இடமான உலகவாழ்க்கையில் அநேகத்தைத் தானாகவே நீ வெ
றுப்பாய். நீ எங்கேயிருந்தாலும நீ எங்கே ஒளிந்தாலும் உலகத்
துயரம் உன்னுடனேயே யிருக்கும். அதாவது, அவைகளை விலக்க
முடியாது. அவைகளைச் சகித்தலே உபாயம். கிறிஸ்துவின் சிநே
கமும் அவர் அம்சமும் நீ பெறவேண்டுவோயாகில் அவர் பட்ட துன்
பத்தைப் பிரியத்துடன் பற்றுக. ஆறுதலைக் கடவுளிடம் நீயாக
வேண்டற்க. அஃது அவர் இஷ்டமென நினைக. கஷ்டங்களை
யெல்லாம் சுகமெனக் கருதுக. இப்போது படும் துன்பம் இனி
வரும் சுகத்திற்கும் மகிமைக்கும் ஈடு உண்டா? உலகத்தின் துக்கங்
கள் எல்லாம் ஒருங்கே சேர்ந்து உன்னுடையதாக நேரினும் இனி
உனக்கு உண்டாகும் ஆனந்தபதவிக்கு உவமிக்க நேர் இல்லை.

4. துக்கங்கள் சுகமாகவும் கவலைகள் இனிமையாகவும் கிறிஸ்
துவை நோக்கிப் பொறுத்தலினால் ருசியாகவும் நீ எண்ணும்படி நேர்
ந்தால் அப்போது நீ மெய்யுணர்வு பெற அருகனாக யிருக்கிறாய் என
அறி. உலகத்தில் சொர்க்கத்தைப் பெற்றிருக்கிறாய் என அறி.
நினை. உலகத்தில் சொர்க்கத்தைப் பெற்றிருக்கிறாய் என அறி.

சகிக்கவேண்டுமென்பதைக் காட்டுவேன்." அதனால் என்ன தெரிய வருகிறதென்றால் இயேசுவை நேசித்து அவருக்கு அடிமைப்படின் துன்பமும் தொடர்ந்தே நிற்பதாகும்.

ஏசுவுக்காக துன்பப்படுதல் என்ற மகிமையைப்பெறப் பாத்திரவானாக இருக்கக்கடவாய். அதனால் ஞானிகளுக்குள் உனக்கு உண்டாகும் கீர்த்தி எத்தன்மையது என்று சொல்லுவேன்! உலகத்தாருக்கு எவ்வளவு அறிவு பயக்கும் உயர்வான உதாரணமாக ஏற்படுவாய்! எல்லாரும் துன்பத்தைப்பொறு என்பார், அந்தோ! அப்படி செய்வார் சிலரே, எல்லாரும் உலகத்திற்குப் பாடுபடுகின்றார். நீயோ இயேசுவுக்காகக் கொஞ்சம் வருந்துகின்றாய். அது தான் அறநெறி.

5. உன்னை வெறுத்துவெறுத்து வாழ்நாள் நடத்தலே நலமாம். ஒருவன் தன்னைத்தான் எவ்வளவுக்கெவ்வளவு வெறுக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு இறைவனுக்கு உற்றவனாவான். கிறிஸ்துவுக்காகத் துன்பம் பொறுக்க முயலாதான் மோக்ஷ விஷயங்களை அறியமாட்டான். பிரியத்துடன் ஏசுவுக்காக இவ்வுலகத் துன்பத்தைச் சகித்தால், அது போன்று கடவுளுக்குப் பிரீதியானது வேறு ஒன்று இன்றாம். இரண்டில் ஒன்று தேடவேண்டில், உலகசுகத்தை விடுக; ஏசுவுக்காகத் துன்பத்தைப் பொறுத்தலையே தேடுக. அதனால் அவரை யணுகுவாய். எல்லா ஞானிகள்போல் ஆவாய். நம்முடைய யோக்கியதையும் நம்முடைய உயர்வான மீர்க்க கதியும் உலக சுகத்திலும் சந்தோஷத்திலும் இல்லை. துன்பத்திலும் கவலையிலும் அழுந்தி வருந்துவதிற்றான் பிரகாசிக்கும்.

பொறுமையைத் தவிர சாவதானமான வேறு மார்க்கம் இருக்குமேயாகில் தம்முடைய வசனத்தாலும், ஒழுக்கத்தாலும் கிறிஸ்து வெளியிட்டிருப்பார். ஆனால் தம்முடைய வழிப்பட்டவர்களுக்கும் இனி வழிப்படுகிறவர்களுக்கும் அவர் உபதேசமாவது: "என்னை அனுசரிக்கிறவர் தம்மை வெறுத்தல்வேண்டும், துன்பம் சதமென எண்ணி என் வழிப்படவேண்டும். என்னைப்போன்று ஒழுகவேண்டும்."

ஆகையால் இதுவரை ஏற்பட்ட சாஸ்திரங்களைப் பாருங்கள். ஆராயுங்கள். "பல துன்பமும் இடுக்கண்ணும் பட்டுத்தான் இறைவன் அடி சேரவேண்டும்."

அந்தர்முகப்படுகிற முறையிலேச்சரிக்கை முற்றும்.

---

# புத்தகம் III.

## முகவுரை.

அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

கர்த்தர் சொல்லுகிறார்:—"வருந்துகின்றவர்காள்! சுமைதாக்கி அழுந்துகின்றவர்காள்! வாருங்கள் என்னிடம் வாருங்கள். உங்களுக்குச் சாந்த நிலை கொடுக்கிறேன். ¶நான் கொடுக்கிற உணவு இதுவாம். உலகப்பிராண உத்தாரணம் செய்வதற்காகத் தியாகம் செய்தேன் என் சதையையே. அதை உண்ணுங்கள். என் உடலையே உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். என் ஞாபகக்குறியாக இதைச் செய்மின். என் சதையை உண்ணுகிறவனும் என் இரத்தத்தை குடிக்கிறவனும், என்னிடம் தங்குகிறான். அவனிடம் நான் தங்குகிறேன். நான் சொல்லும் மொழிகள் உயர்வானவைகள். சுவாசம் போன்று இன்றி அமையாதவைகள். பிராணதாரமானவைகள்."

## I-ம் அதிகாரம்.

### சிரத்தை பக்தியுடன் கிறிஸ்துவை மனத்தில் வைக்க வேண்டும் என்பது.

சீஷன் மனம் உருகி உள்ளத்தில் சிந்தித்தல்.

என்றுமுள்ள சத்தியமூர்த்தி! கிறிஸ்துவே! உம்முடைய †மொழிகளை என் மனத்தால் கேள்வியுற்றேன். இவைகள் வேறு ஒரு

---

இப்புத்தகத்தை நான்காவதாக சிலபதிப்புகளில் சேர்க்கப்பட்டு இருக்கின்றது.

¶இதன் தத்துவம் இதுவாம்:—அவர் சரீரம் உணவும், அவர் இரத்தம் பானமும் என்றால், அவர் பக்தர்கள் அவர் அம்சம் பெற வேண்டுமென்பதாம். அதாவது அவர்போன்று ஒழுகற்பாலர் அதனால் அவர்போலாவர் என்பதாம்.

†முகவுரை.

காலத்திலும் சொன்னவையல்ல. வேறு ஒரு இடத்திலும் எழுதின
வையல்ல. அவை உம்முடைய சத்தியவாக்கு. சிரத்தை பக்தியுடன்
என்றால் உட்கொள்ளத்தக்கது. அவைகள் உம்முடைய சொந்த
வார்த்தைகள். அவைகளை வெளியிட்டீர். அவைகள் எனதாயின.
ஏனெனில் நான் கடைத்தேறும் பொருட்டு அம்மொழிகளை வசனித்
தீர். சந்தோஷத்துடன் உம்முடைய வாய்ப்பிறப்பை அங்கீகரிக்
கிறேன். என் சிந்தையில் பிரியத்துடன் வைப்பேன். இனிமையும்
அன்பும் அருளும் தோய்ந்த அம்மொழிகள் என்னைத் தூண்டுகின்
றன. ஆனால், என் பாவங்கள் என்னைப் பயமுறுத்துகின்றன. என்
அசுத்தமனம் இடிமுழக்கம்போன்று, 'இந்த ரஹஸ்யமான உபதேசங்
களைப் பற்றாதே' என ஆரவாரம் செய்கிறது. உம்முடைய இனிய
மொழிகள் 'வா' என்று அழைக்கின்றன. அந்தோ என் பாவங்கள்
என்னை ஆழ்த்துகின்றனவே!

உம்முடன் இருக்கவும் அமிர்தத்தை உண்ணவும் நித்தியத்வத்
தை அடையவும், மாக்ஷிமை பெறவும் என்னை 'வா' என்று அன்பு
டைய மனத்தினால் கூப்பிடுகின்றீர். "வருந்துகின்றவர்காள்! துன்
பத்தில் அழுந்துகின்றவர்காள்! என்னிடம் வாருங்கள். சாந்த
நிலையை அடையுங்கள்." என்று உம்முடைய வாய்ப்பிறப்பு நடை
பெறுகின்றது. பாவியின் காதுக்குப் பிரியமான இனிய மொழியே.
என்நாதா! என் இறைவா! உம்முடன் சாமீப்பியத்தை ஏழையும்
பாவியுமாகிய நான் அடையும்படி அழைத்தலான பாக்கியம் பெறு
கிறேன்.

2. கர்த்தாவே! விண்ணில் நிறைந்த விமலனே! உம்மிடம்
அணுகவும் அருகனல்லேன். ஆயினும் 'வா' என்று அழைக்கின்றீர்.
இந்த உயர்வான கவுரவம் கிடைத்ததுகாண்! இந்த அன்பு பற்றிய
அழைப்பை என்ன என்பேன்? எப்படி நான் உம்மிடம் வரத்துணி
வேன்? நலம் ஒன்றுமில்லாத யான், உம்மை 'என்னுடல் இடம் கொ
ள்க' என்று எப்படி அழைக்க எண்ணுவேன்? உம்முடைய அன்பு ஆர்
ந்த முகத்தை எத்தனை முறையோ என் பாவத்தால் நோகச்செய்தி
ருக்கின்றேனே! தேவர்களும் பிரதானதேவர்களும் உம்மைப் போ
ற்றுகின்றார்கள். ஞானிகளும் சுத்த சீலர்களும் உம்மை பயபக்தி
யுடனே அஞ்சலிபண்ணுகின்றார்கள். அவர்கள் எல்லாரும் இருக்க,



*நீர் என்னை 'வா' என்று அழைக்கின்றீர். நீரே வாய்திறந்து சொல்
லாவிடில் அந்த வார்த்தையை யார் நம்புவார்? அழைப்புவசனம்
உம்முடையதன்றேல், அதை நம்பி யார் உம்மிடம் செல்ல முயலு
வார்?

என்ன ஆச்சரியம் காண்! சத்திய சங்கற்பராகிய நோவா என்ப
வர், சில ஜீவர்களைக் காப்பாற்றிக் கரையேற்றும் வண்ணம் 100-வரு
ஷங்களாக ஒரு கப்பல் செய்தார். நானோ உலகசிருஷ்டி கர்த்
தாவையே, பக்தியுடனே என்னிடம் பெறுகிறதற்கு ஒருநாழிகையில்
ஆயத்தம் எவ்வண்ணம் செய்வேன்? பகவானே! உமக்குப்பிரியனும்
உற்ற முக்கிய நண்பனுமான, மோசே என்பார் பழுதில்லாத ஆறின
மரத்தைக்கொண்டு பேழை ஒன்று செய்து, அதைத் தங்கத் தகட்
டில் கவசம் போட்டு, அதின்கண் உபதேச சாஸ்திர புஸ்தகங்களை
(Tables of the law) வைத்தார்! அழிவுக்குரிய யான் பிராணதார
ராகவும், அந்த உபதேசங்களின் மூலமூர்த்தியாகவுமுள்ள நீர் என்
னை உறைவிடமாகக் கொள்ளவேண்டுமென எவ்வளவு சுலபமாகத்
துணிந்தேன்!

இஸ்ரேயல் ஜாதியாரின் அரசர்களுக்குள் ஞானசிகாமணியா
கிய ஸாலமன் என்பவர் உம்முடைய மஹிமை விளங்க, 7வருஷங்
ளாக கம்பீரமான ஒரு ஆலயம் கட்டிமுடித்தார்; 8 நாள் அதன் பிர
திஷ்டாக்கிரியைகள்மாத்திரம் நடந்தனவாம். தம்முடைய உபசாந்தத்
தின்பொருட்டு 1000 வரை பலியிட்டார். எக்காள முழக்கத்துட
னே, பெரிய சந்தோஷ ஆரவாரத்துடனும், பயபக்தியுடனும்,
தேவ உடன்பாடுகள் உள்ளமைந்த பேழையைத் தாம் நிர்மாணித்த
ஆலயத்தில் ஸ்தாபித்தார்.

நானோ அற்பன். மனிதர்களுக்குள் ஏழை. ஈசுவர சம்பந்தமாக
அரைநாழிகையாயினும் சத்காலக்ஷேபம் செய்தேன் இல்லை. அரை
நாழிகையாவது நல்ல பொழுதுபோக்கினேன் என்று மனம்கொள்ள
விரும்புகிறதோ! அந்தோ அப்படிச் செய்யவில்லையே! இத்தன்
மையான புலையனேன் உம்மை 'என் உடலிடம் உறைக' என்று எப்
படி அழைக்கத் துணிவேன்?

*"அன்பர் ஆகிமற் றருந்தவ முயல்வார் அழல்உறு மெழுகாம்
என்பராய் நினைவார் எனைப்பலர் நிற்க, இங்கு எனை
எற்றினுக் காண்டாய்?...." (மாணிக்கவாசகர்.)

ஈசுவரா! உம்மைத்திருப்தி செய்ய ஞானிகள் எவ்வளவு பாடு
பட்டார்கள். ஆ! நான் எவ்வளவு பலஹீனன். உம்மோடு ஐக்கியம்
பெற நான் செய்த முயற்சி எவ்வளவு சொற்பமான காலம்! ஒன்
றையே பற்றி என்மனம் ஏகாக்கிரசித்தத்தை அடைய முடியவில்
லையே. பல கவலைகள் அங்கும் இங்கும் என்மனத்தை இழுக்கின்றன
வே. அவைகளை மீறி ஒரு கணப்பொழுதேனும் இருக்க இயலவில்
லையே. ஆனால், உம்முடைய அனுக்கிரகமான தரிசனை அணுகு
கையில் அசுத்தமான எண்ணங்கள் என் மனதில் நாடக்கூடாது
என்று மாத்திரம் யான் அறிவேன். உலகப்பற்று ஒன்றும் என்மன
த்திடம் இருக்கக்கூடாதென்று எனக்குத்தெரியும். ஏனென்றால்,
சாதாரண தேவனு என்னை உறையிடமாகக் கொள்ளப்போகின்றான்?
தேவாதிதேவரே கோவிலிடமாக என்னைக் கொள்ளப்போகிறார்
அல்லவா?

பேழைக்கும் அதன்கண் உள்ள நிதிக்கும் வெகுதூரம். உம்மு
டைய சுத்தமான சரீரத்துக்கும் உம்முடைய சொல்லுதற்கரிய கல்
யாண குணங்களிற்கும் வெகுதூரமே. வரப்போகின்ற சம்பவங்
களின் அறிகுறியாகிய வியாதிபற்றிய பலிகளுக்கும் ஆதிகாலம்தொ
டங்கி இதுவரை செய்த யக்கியங்களின் பரிபூரணம் என்று சொல்
லற்பால உம்முடைய திவ்விய சரீரத்தியாகத்திற்கும் வெகுதூரமே.
உம்முடைய திவ்விய சந்நிதியை எதிர்கொள்ள நான் என் மனம்
நைந்து உருகுகிறேன் இல்லை. உம்முடைய அருட்பெருகிய உம்மு
டைய வரவை அதிக சிரத்தையுடனும் கவலையுடனும் எதிர்பார்க்க
ஆயத்தம் செய்கிறேன் இல்லை. அறிஞரும், தீர்க்கதரிசிகளும், முதி
ர்ந்தோரும், அரசர்களும், பிரபுக்களும், பொதுஜனங்களும் எவ்வள
வோ அன்புடன் கடவுள் வழிபாடுகள் செய்திருக்கின்றனரே!

3. பக்தசிரோமணியாகிய டேவிட் அரசர், தம்முன்னோர்களு
க்கு அருளால் கிடைத்த லாபங்களின்பொருட்டு, நன்றியுள்ளவராக
அன்பின் பெருக்கால், ஆடினார்; பற்பல வாத்தியங்கள் அமைத்தார்.
கீதங்கள் தாமே கவனம் செய்தார். ஜனங்கள் அவைகளை உற்சா
கத்துடனே கானம் பண்ணும்படி செய்வித்தார். பரிசுத்த ஆவி
பெற்று, ஆவேசம் கொண்டவராய்த் தாமும் பல்முறை யாழுக்கு
இசையப் பாடுவார். தம்முடைய இஸ்ரியல் ஜனங்கள் அன்பு ஆர்ந்த



நெஞ்சினராய் இறையனைப் போற்றும்படி செய்திடுவார். தினந்
தோறும் சங்கீதத்துடன் ஈச்வர ஸ்தோத்திரங்கள் செய்திடுவார்.

அக்காளில், பக்தியின் வைபவம் அவ்வளவு செழுமையாக நடை
பெற்றது. தேவப்பேழையின் முன்னர் ஈச்வர ஸ்தோத்திரங்களும்
கீர்த்தனைகளும் பாடினார்கள். இயேசுவின் சரீரத்தியாகம் செய்து
இருக்கின்ற ஸம்ஸ்காரமும், அவருடைய திவ்விய மஹிமைபற்றிய
சந்நதியும் அடையப்பெற்றிருக்கின்ற இக்காளில், நானும் மற்றும்
எல்லாக் கிறிஸ்தவரும் எவ்வளவு பக்தி சிரத்தை பாராட்டற்பாலது.

4. அனேகர், ஞானிகளின் சரீரங்கள் அடங்கியிருக்கும் இடங்
களைத்தேடித் தரிசிக்கச் செல்லுகின்றார்கள். அவர்களின் சித்து
விளையாட்டுகளைக் கேட்டு ஆச்சரியம் அடைகிறார்கள். அவர்கள்
அடங்கியிருக்கும் கோவில்களைக் கண்டு வியக்கின்றார்கள். உள்ளே
பிரவேசித்து பட்டிலும் சுவர்ணகலசத்திலும் வைக்கப்பெற்றுள்ள
ஞானிகளின் அஸ்தியை முத்தமிடுகிறார்கள். என்னுடைய பாக்கிய
த்தை நினைக்க என்சொல்வேன்! கடவுளே என்னுடலைக் கோவி
லாக இடங்கொண்டு உறைகின்றனரே. இறைவா! சுத்தத்தில்
சுத்தமே! தேவர்களின் கர்த்தாவே! மனிதர்களின் கர்த்தாவே!
என் பாக்கியமே பாக்கியம். நீரே என்னுடலை ஆலயமாகக்கொண்டு
உறைகின்றீரே. ஆனால் இவ்விதக் காட்சி காண்டலை, ஒரு வேடிக்
கை [illegible] விளையாட்டாகச் சாதாரண ஜனங்கள் மதிக்கின்றார்கள்.
அதனால் அவர்கள் தங்கள் ஒழுக்கமுறையில் சொற்பமேனும் சீர்
திருத்தம் பெறுகிறார்களில்லை. தங்கள் பாவங்களைப்பற்றிச் சற்றே
னும் அனுதாபப்படாமல் இங்கும் அங்கும் பரபரப்பாய்த் திரிகின்றா
கள். என் இறைவனும் மானுடப்பிறவியாக அவதரித்த இயேசு
கிறிஸ்துவும், ஞான சம்ஸ்காரம் பெற்ற பீடத்தில் (ஹிருதய கம
லத்தில்) உறைவார்கள். அங்கே உம்மை பக்தியுடனே எவ்வள
வுக்கெவ்வளவு பூஜிக்கின்றார்களோ, அதற்குத் தக்கபடி அளவு
கடந்த பலமும், என்றுமுள்ள மோக்ஷ சாம்பிராஜ்ஜியமும் கிடைப்ப
தாகும். இந்த ஸ்தானத்தை அணுகுதல் வேண்டுமானால் சஞ்சல
மான விஷய சம்பந்தமான வீண் எண்ணங்களைத் தவிர்க்கவேண்டும்.
உண்மையான நம்பிக்கை, உயர்வான சிரத்தை, யதார்த்தமான ஜீவ
காருண்யம் பற்றவேண்டும்.

றைபுமளித்தனர். மேலும் இனி இவ்வரசனது சரீரம் விழுந்தபின்னும், அவ்வரசனுக்குக் குறையாத சுவர்க்கவாசத்தையும் அசுரரால் கொல்லப்பட்ட இவரது புத்திரர்களுக்கு அக்ஷயங்களான உலகங்களையும் அளித்தனர்.

11-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 12-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:—அவ்வரசனுக்கு யோக்கியர்களான மூன்று குமாரர்கள். அவர்களுள் மூத்தவன் திருடாசுவன். சந்திராசுவன், கபிலாசுவன் என்றவர்கள் அவனது தம்பிகள். துந்துமாரராஜனது குமாரனான திருடாசுவனென்றவனுடைய புத்திரன் ஹரியசுவன் என்பவன். ஹரியசுவனுடைய குமாரன் நிகும்பனென்றவன். இவன் எப்பொழுதும் க்ஷத்திரிய தருமத்திற் பிரியமுடையவன். அந்நிகும்பனுக்கு ஸம்ஹதாசுவனென்பவனென்ற ரணசூரன் பிறந்தான். அவனுக்கு அகிருசாசுவன், கிருசாசுவன் என இரண்டு புத்திரர்களும் பொன்மயமான திருஷத்வதி என்ற ஸத்துக்களுக்கு மாதாவான ஒருபெண்ணும் உண்டானார்கள். இவள் மூவுலகங்களிலும் பெருமை பெற்றவள். இவளது புத்திரன் பிரசேனஜித் என்பவன். இவன் பதிவிரதையான கௌரீ என்பவளை தனக்கு மனைவியாக அடைந்தான். ஒருசமயத்தில் இக்கௌரியானவள் கணவனால் சபிக்கப்பட்டு பாகுதா என்றபேர் வகிக்கப்பட்டவளாகவானாள். அவளுக்கு யுவநாசுவனென்ற பெருமை பொருந்திய அரசன் புத்திரன், அவனுக்கு மூன்றுலோகத்தையும் ஜெயித்த மாந்தாதா என்றவன் குமாரன். அவனுக்கு சசபிந்துவினுடைய பெண்ணான சைத்திரரதீ என்பவள் மனைவி. இவள் சிறந்தபதிவிருதையும் நிகரற்றவுருவத்தால் இப்புவியில் பேர்போனவளும் பிந்துமதியென்ற பெயரால் பிரசித்திபெற்றவளுமாம். மேலும் தனது நூறு உடன்பிறந்தவர்களுக்குள் மூத்தவளாய் விளங்குபவள். அவளிடத்தில் இம்மாந்தாதா வென்பவன் தருமநெறி அறிந்த புருகுத்ஸன் என்றவனையும், தருமசீலனான முசுகுந்தன் என்றவனையும் பிறப்பித்தான். இவர்களுள் புருகுத்ஸன் என்பவனுக்கு திரஸதஸ்யு என்ற அரசன் மகன். நருமதை என்றவளிடம் சம்பூதன் என்ற மற்றோர் மகனையும் பெற்றான். சம்பூதனுக்கு சுதன்வா என்ற அரசன் மகன். இவனுக்கு வெற்றியாளனான திருதன்வா என்றவன் பிறந்தான். இவனுக்கு பேரறிவுடைய த்ரியாருணன் என்றவன் புத்திரன். அவனுக்கு ஸத்தியவிருதன் என்ற





பலசாலியான குமாரன் உண்டானான். இந்த ஸத்தியவிருதன் என்றவன் மிகவும் துர்புத்தியாதலால், பாணிக்கிரகணம் என்ற விவாக சம்பந்தமான மந்தரங்களுக்கு கெடுதியைச் செய்தான். யாதொருவனால் ஓர் பட்டணத்தில் வசித்த ஒருவனுடைய கன்னிகையை சிறு தன்மையாலும், காமத்தாலும், அறிவின்மையாலும் குதூகலத்தாலும் சாபல்லியத்தாலும் வேறு ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தும் அக்கன்னிகையான பார்யை அபகரிக்கப்பட்டாளோ, அப்படிப்பட்ட பாவத்தொழிலைச் செய்தவன் இந்த சத்தியவிருதன் என்பவனே. இந்த அதருமமாகிற பாபத்தினால் த்ரியாருண மகா ராஜன் இச்சத்திய விருதனை தன் தேசத்தை விட்டு எங்காவது ஓடிப்போ என கோபத்தோடு மொழிந்தான். அவ்விதம் உரைத்தபொழுது அப்புத்திரன் தகப்பனை நான் எங்கு செல்வேன் என அடிக்கடி கேட்டான். பின்பு அப்பிதா சுவபாகன் என்ற ஸ்வையர்களுடன் வசிப்பாய், போ, என உரைத்தனன். மேலும் அவ்வரசன் கூறியதாவது:— ஏ! குலத்தை கெடுத்தவனே நான் இப்பொழுது உன்னால் புத்திரனுடையவன் ஆக மாட்டேன். நீ எங்காவது செல், என பின்னும் உரைக்கப்பட்ட அந்த சத்தியவிருதன் தகப்பனுடைய வார்த்தையால் அவனது நகரத்தினின்றும் வெளிப்பட்டான். வெளிப்பட்ட அவனை பகவானான வசிஷ்ட மகரிஷியும் தடுக்கவில்லை. அந்த சத்தியவிருதனோ சுவபாகர்களுடைய குடிசைகளுக்குச் சமீபத்தில் தகப்பனால் விடப்பட்டது முதல் தீரனாகவே வசித்து வந்தான். இப்படி இருக்கையில் ஒருக்கால் திரியாருண மகா ராஜன் ஸத்திய விருதன் வசிக்கும் வனத்தை அடைந்தனன்—பிறகு அவனது தேசத்தில் இந்திரன், அவ்வதர்மத்தினால் அப்பொழுது பன்னிரண்டு வருஷங்கள் வரையில் மழையைப் பொழியவில்லை. அச்சமயத்தில் அத்தேசத்தில் மகா தவசியான விசுவாமித்திரன் தனது மனைவிகளை ஓரிடத்தில் விட்டு விட்டு கடற்கரையோரம் போய் பெருத்த தவத்தைச்செய்தார். அந்த சமயத்தில் அந்த ரிஷியினுடைய பத்தினியானவள் தனது வயிற்றில் பிறந்த நடுப்பிள்ளையை கழுத்தில் கயிற்றையிட்டு மற்றவர்களுடைய போஷணைக்காக நூறுபொன்னிற்கு விற்பதாய் விலைகூறி நடந்தாள். இவ்விதம் கழுத்திற் கயிறுகட்டி விக்கிரயம் செய்வதற்கு யோக்கியமாக விருக்கும் மகரிஷியின் புத்திரனை தருமசீலனான அவ்வரசனது மகனாகிய சத்தியவிருதன் என்பவன் விடுவித்தான். அன்றியும் ஓ! பரதனே சிறந்த கைகளையுடைய அவன் அவ்வந்தணனை ஆகாராதிகளால்.

என்ன காரணம்? அஃது எப்படியிருக்க முடியும்? இது நேர்மையல்லவே. தாம் தரிசனம் கொடுக்கும்படியான என்ன யோக்கியதை என்னிடமிருக்கின்றது? பாவியாகிய நான் உம்மை எதிர்கொள்ள எவ்விதம் துணிந்தேன்? நீர்தான் என்னை சந்திக்க எவ்விதம் இரங்கினீர். உம்முடைய அடிமை நன்மை ஒன்றுமறியான் என்றது நீர் அறிவீர். ஆயினும் இந்த அருள் புரிந்தீர். அதனால் என்னுடைய இழிவை நான் சிந்திக்கிறேன். உம்முடைய நன்மையை மெச்சுகின்றேன். உம்முடைய அருளைப்போற்றுகின்றேன். இப்போது கிடைத்த நலம் என்னிடமுள்ள நன்மையை நோக்கி அன்று. உம்முடைய அருளின்பெருக்கத்தால் சுயமாகவே செய்திருக்கின்றீர். உம்முடைய கருணை இத்தன்மையதென்று யான் நன்றாய் அறிகிறேன். ஏழைகளுக்கு இரங்கும் தன்மையை யான் உணர்ந்தேன். அப்படிச்செய்தல் உம்முடைய அபீஷ்டமாக இருக்கிறது. உம்முடைய தாழ்ந்து இரங்கும் சுபாவமானது, என் மனத்தில் ஆநந்தத்தை நிரம்பச் செய்கின்றது. என்னுடைய பாவமானது குறுக்கே இடையூறு விளைவியாமலிருக்கட்டும்.

அன்பும் கருணையுமுள்ள இயேசுவே! தாம் சரீரம் எடுத்து அதை எங்களுக்காகத் தியாகம் செய்திருக்கின்ற திறமையை எவ்வித பக்தி சிரத்தையுடன் போற்றுவேன்? அந்த மஹிமையை உள்ளபடி விளக்க ஒருவனாலும் இயலாது. இறைவா! சரியாய் ஆராதிக்க என்னால் முடியாது. *ஏகீபாவ சம்ஸ்காரத்தின் தத்துவத்தை (உண்மையை) நான் எவ்வண்ணம் சிந்திக்கக்கூடும்? ஆனால் அவர் என்னிடம் தங்கும்படி மிக்க ஆவலுறுகிறேன். என்னைத் தாழ்த்தியும் நான் பணிவுற்றும் உம்முடைய மஹிமையைப் போற்றுகிறதைப்பார்க்கிலும் உயர்வான க்ஷேமகரமான சிந்தனை வேறு உண்டோ? ஈசா! உம்மைப் போற்றுகிறேன் என்று உம்மை உயர்த்துகிறேன். என்னை இகழ்கிறேன் அந்தோ! பாவக்குழியில் என்னை அழுத்துகிறேன். தூயவையின் தூய்மையே. நீர் பாவிகளுள்ளும் கொடிய பாவியே யான். தாழ்ந்து என்மீது இரங்குகின்றீர் நீர்; மறுபடி உம்மைத் தலை நிமிர்ந்து பார்க்க அருகன் அல்லன் யான். என்னிடம் வருகின்றீர் நீர்; என்னிடம் உறைவீர் நீர்; இந்த விருந்து சாப்பாட்டுக்கு அழைக்கின்றீர் நீர். மண்ணின்

*ஒருமைப்படும் முறையின்,



உயிர்ப்புக்காக விண்ணின்று இறங்கின தேவ! அமிருத உணவை எனக்குக் கொடுக்கின்றீர் நீர்.

அன்பின் வழி இது என உணர்க. அதன் தயை எத்தன்மையாக ஜொலிக்கின்றது காண்! இக்கருணைக்கு என்ன வந்தனம் செய்யற்பாலது? இந்த ஞான சம்ஸ்காரத்தை ஏற்படுத்திய முறை எவ்வளவுக்ஷேமகரமாகவும்உபயோகமுள்ளதாகவுமிருக்கின்றதுபார்? உம்மையே தியாகஞ்செய்து உம்மையே விருந்தினருக்கு உணவாக அளித்திருக்கின்ற தன்மை எவ்வளவு ருசியுள்ளதாகவும், பிரியகரமாகவும் இருக்கின்றது. என் இறைவா! உம்முடைய செயல் என்ன, ஆச்சரியமானது! உம்முடைய சக்தி என்ன அற்புதமானது! நீர் வாக்குக்கு எட்டாதவர். நீர் ஆஞ்ஞை பண்ணினீர். இவையெல்லாம் உண்டாயின. நீர் வசனித்தீர். எல்லாம் விகாசித்தன. ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஆயினும் நம்பிக்கையுள்ளவை யிவை. என் கர்த்தாவே! என் இறைவா! கடவுளாகவும் பின்பு மனிதனாகவும் நீர் இருந்த தன்மையும், உண்டியாகவும் மதுபானமாகவும் இந்தக்கேவல ஸ்வரூபம் பெற்ற விந்தையும் அவ்வுணவையும், தயையும் உம் வழிபற்றினவர் உட்கொள்ளவும், அது குறைவின்றி நிறைவாக இருக்கின்ற அற்புதமும், மனத்துக்கு எட்டாத விஷயமாகவும் இருக்கின்றன.

உலகெல்லாம் ரக்ஷிக்கும் மூர்த்தி! ‡உமக்கு யாதொன்றும் வேண்டியது இல்லை. இந்த ஞான சம்ஸ்காரத்தால், என்னுடல் உறைவிடம் கொள்ளத் திருஉள்ளம் சிந்தித்தது. என் ஹிருதயத்தையும், என்னுடலையும் பாசம்பற்றாமல் தூய்மையாக இருக்கச் செய்யும். உம்முடைய மஹிமை விளங்கவும் அதனால், என்றும் உம்முடைய ஞாபகமிருக்கவும் ஏற்பட்டுள்ள உம்முடைய பரம ரகசியமான தத்துவங்களை உற்சாகத்துடனும் சித்தமனமுடனும், அடிக்கடி மெய்யுணர்ச்சியால் நான் கொண்டாடக்கடவேன்.

2. மனமே! சந்தோஷமடைவாய். உனக்குக் கிடைத்த பாக்கியத்துக்காக இறைவனைப் போற்றுவாய். வியசனத்துக்கிடமான இவ்வுலகத்தில் இந்த உயர்வான ஆறுதல் கிடைத்துளது. அது

‡"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில" —(குறள்)

பற்றி நீ நடைபெறுந்தோறும் அஃதாவது! கிறிஸ்துவின் தியாக முறையின் அறிகுறியாகிய ஞான சம்ஸ்கார நெறியை நீ அனுஷ்டானம் செய்துவர, செய்துவர, மோக்ஷசாதன வழியைப்பற்றி ஒழுகுகின்றாய். என ஏற்படும். அதனால் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவின் யோக்கியதாம்சத்தின் பங்காளியாக ஆவாய். அவர் அருள் குறையவில்லை. தியாகரூபமான பிரவாகம் வற்றிப்போகவில்லை. இன்றும் என்றும் நடைபெறுகின்றது. ஆகவே, புதிது புதிதான பக்திசிரத்தையுடனே உன்னை அவருக்கு அர்ப்பணம் செய்வாய். மோக்ஷத்தின் பரம ரகசியத்தைக் கவனமாய்ச் சிந்தனை செய்வாய். அப்படிச்செய்வாயாகில் அந்நாளில் உலக ரக்ஷணைக்காக கிறிஸ்துவும், மனித அவதாரம் எடுத்து, சுத்த கன்னிகையின் கர்ப்பத்தில் தோன்றிப் பின்னர் சிலுவையில் அறையப்பெற்று வருந்தி இறந்ததற்கு ஒப்பந்தம் இந்நாளும் அந்த லீலையைக் கொண்டாடுதலும் சிரவணம் செய்தலும் உயர்வாம். நலமாம். இனிதான் புதிதாம்.

## 3-வது அதிகாரம்.

### ஞான சம்ஸ்காரத்தை அடிக்கடி உட்கொள்ளுதல் நலம் என்றது.

சீஷன் உள்ளத்தில் சிந்தனை.

கடவுளே! உம் அருள் பிரசாதத்தைப்பெற்று க்ஷேமம் அடைவான் இதோ உம்மிடம் வருகிறேன். (அறிவில்) ஏழைகளின் மீது இரங்கி நீர் அருளியிருக்கின்ற உயர்வான (ஞான) விருந்தை உண்டு ஆநந்தம் பெற உம்மிடம் வருகின்றேன். [illegible] வேண்டுவதும் வேண்டக்கூடியதும், உம்மிடமிருக்கின்றன. என் அடைக்கலம் நீர். [illegible] பணயம் நீர். என் பிராணன் நீர். என் பலம் நீர். என் கீர்த்தி நீர். கண்ணியம் நீர்.

"அப்பன் நீ அம்மை நீ ஐயனு நீ
அன்புடைய மாமனு மாமியு நீ
ஒப்புடைய மாதரு மொண்பொருள் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரு நீ



துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்முத்து நீ இறைவன் நீ
ஏறூர்ந்த செல்வன் நீயே."

(திருநாவுக்கரசு ஸ்வாமிகள்.)

இயேசுநாதா! என் மனத்தை உன்மீது வைத்துள்ளேன். என் மனத்தைக் குளிரப்பண்ணு. என்மனம் ஆனந்திக்கட்டும். பக்தியுடனும் பிரீதியுடனும் உம்மை என்மனத்தில் வைக்கின்றேன். ஜாக்கியஸ் என்பவர்போல என்மேல் கிருபைகூர்ந்து என்னையும் ஆபிரஹாம் சந்ததியாரில் ஒருவனாக மதித்து அருள்வாய். உம்முடைய தியாகரூபமான சரீரத்தை நான் பற்றிநடைபெற அவாவுள்ளவனாக இருக்கிறேன். என் மனம் உம்முடன் இரண்டறக்கலந்து ஏகீபாவத்தை அடையவிரும்புகின்றது. உம்மை எனக்குத்தந்து அருள்வீர். அதுவே எனக்குபோதும். நீர்இன்றி என்சுகம் வீணே. உம்மைப் பிரிந்திருக்க இயலேன். உம்முடைய வரவுஇன்றி நான் உயிரோடு இரேன். உம்மிடம் நான் அடிக்கடி வரவேண்டும். நான் என் மார்க்கத்தில் நீர்இன்றித் தடுமாறிவிடுவேன். அதனால் என் ஆறுதலுக்கு உம்மை அழைத்துப்போவேன்.

நீர் ஒரு காலத்தில் ஜனங்களுக்கு உபதேசிக்கையில் அனேகர்கள் குற்றம் குறைதீர்த்து அடியில் வருமாறு வாக்கு உறுதி செய்திருக்கிறீர்.—

"மார்க்கத்தில் அவர்கள் தளர்ந்து சோர்வுறுவார்கள். ஆகையால் அவர்கள் வயிறுவருந்தப் பட்டினியாக அவர்கள்வீட்டுக்கு அனுப்ப மாட்டேன்." ஞானிகளின் ஆறுதலுக்காக ஞானசம்ஸ்காரத்தில் உம்மையே தியாகம் செய்துவிட்டீர். ஆத்மாவுக்கு உணவு நீரே. யோக்கியதையுள்ள ஒருவன் உம்மை உண்மையாய் உண்டிருப்பானாகில் உம்முடைய என்றுமழியா மஹிமையின் ஒரு அம்சத்தைப் பெறுவான்.

தவறுகிறேன் பலகால்; பாவம் செய்கிறேன் பலகால்; விரைவில் சோர்வடைகிறேன் ஒருகால். க்ஷணப்பொழுதில் தளர்கின்றேன். அதனால் பலவழியாலும், பல உபாயத்தாலும், பல உபாசனையாலும், உம்முடைய தியாகமுறையில் வழிபட்டு என்னைத் தூய

ளுக ஆக்கக்கடவேன், ஜாக்கிரதையாக இருக்கக்கடவேன், உற்சா
கப்படுத்திக்கொள்ளக்கடவேன்.

"இருதலைக் கொள்ளியனுள் எறும்பொத்து நினைப்பிறிந்த
விரிதலை யேனை விடுதி கண்டாய்."

"எறும்பிடை நாங்கூழ் எனப்புலனால் அரிப்புண்ட ந்த
வெறுந்தமியேனை விடுதி கண்டாய்." (மாண க்கவாசகர்.)

அன்றேல் நெடுநேரம் உம்மைவிட்டுப்பிரிந்து விலகி ன்றால், நன்
னெறியினின்று பிறழ்ந்து விடுவேன். பிறந்தது மு ல் மனிதன்
சுபாவம் தீயவையே நாடும். கடவுளாகிய மருந்து உ பெறுனில்
அதிக தீயகுழியில் அழுந்துவான். ஆகையால் னசம்ஸ்கார மு
றையை அனுசரித்து வழிப்பாடுகள் செய்கிற நான், இவ்வளவு மனத்
தளர்ச்சியும் சோர்வும் உடையேனாகில், ஞானசம்ஸ்காரமுறையைப்
பற்றாமலும் அவ்வழிப்படாமலுமிருப்பேனாகில், என் கதி என்னவித
மாக ஆகுமென்று சொல்லுவேன்? ஒவ்வொரு தினமும் அம்முறை
பற்றி ஒழுக இயலாவிடினும், அப்போதைக்கப்போது அனுகூல
மான சமயங்களில் அந்த குப்தமான சிரேயஸ் மார்க்கத்தைப் பற்றி
ஒழுகமுயல்வேனாக அந்த உயர்வான அனுக்கிரகத்தின் மகிமை
யால் ஒரு அம்சத்தையாவது அடைய முயற்சிப்பேனாக. சரீரமெ
டுத்து உம்மிடமிருந்து விலகி உலகவிஷயங்களில் அழுந்தியி க்கிற
ஒவ்வொரு ஜீவனுக்கும், ஒரு ஆறுதலான முறை கைக்கொள் ற்பது
லது. அதாவது கடவுளை எப்போதும் சிந்திப்பதும், அன்பு சார்ந்த
நெஞ்சினராக அன்புக்குரிய பொருளைத் ன்னுட்பெற ஆய
மாக இருப்பதுமாம். இது என்ன ஆச்சரி ம்! உலக
கர்த்தரே!உலகத்தை உயர்ப்பிக்கிறவரும், ஜீவனுக்குக் யி
ள்ளவருமான இறைவனே, மானுடவடிவங்கொண்டு அற
னிடம் வா அருள் புரிந்து, தாகத்தால் தபிக்கின்றவர்களுக்குத் தம்
மூடைய பூர்ண மஹிமையையும் சக்தியையும் காட்டி தாகம் தீர்க்
கின்றீர். உம்மைப் பக்திசிரத்தையுடனே உட்கொண்டு உம்மை
அனுபவிக்கின்ற ஜீவனின் பாக்கியமே பாக்கியம்! அதனால் பரமா
னந்தத்தைப் பெறுகிறான். அவனிடம் உறைவிடம் கொள்பவர்
மஹிமை என்ன என்பேன்! அவனிடம் விருந்தினராக வருகின்ற
வர் எத்தன்மையான பிரியத்துக்குப் பாத்திரமானவர்? எத்தகைய



பிரியத்தே ர் ஆவர்? எவ்வளவு மேன்மை எவ்வளவு அழகு பொ
ருந்திய நாயக ஆவர் என்பேன்? விரும்பியவற்றின் எல்லாம் மே
லானவர் அவர் ஆவர்.

என் டைய அன்பே! மண்ணும் விண்ணும் அவைகளின் வை
பவங்களெ லாம் மௌனமாக அடங்கி உம்முடைய சந்நிதியில்
நிற்க! அவை ளின் நன்மையும், மகிமையும் உம்மிடமிருந்து அன்
றோ? ஆயினு உம்முடைய திருநாமத்தின் ஞானமோ கரைகடந்
தது! அதன் கை அணுக அவைகளுக்கு யோக்கியதை உண்டோ?
இல்லை என் த்தட்
வர்க

## 4-வது அதிகாரம்.

### அன்போடு மனம் ஒருமைப்பட்டு நின்றோருக்குப் பல நன்மைகள் சித்திக்குமென்பது.

சீஷன் உள்ளத்தில் சிந்தித்தல்.

கடவுளே! என் நாதா! உம் அடிமை முன்பாக உமதருள் பிர
சாதத்துடன் முன் செல்லும். அதைப்பற்றிக்கொண்டு நேர்மை
யாகவும்,சிரத்தையுடனும் ஞானசம்ஸ்காரத்தை நான்பெற இயலும்.
உம்மைப்பற்றும்படி என்மனத்தை எழுப்பும். என்னைப் பிரமாதத்
தினி விடுவியும். உம்முடைய அருள் சக்தி ரூபமாய் என்னி
டத்தி வாரும். அதனால் நான் ஆனந்தத்தை அடையட்டும். நீர்
ற்றின்கண்போல, இவ்வானந்தம் இந்த ஞானசம்ஸ்காரத்தின்
ண ணமாய் மறைந்துள்ளது. அந்த உயர்வான ரசியத்தை
ணருமாறு, எனக்கு ஞானக்கண் தாரும். யாதொரு ஐயமும்
இன்றி அந்த ரகசியத்தை நம்பி நடைபெறுமாறு எனக்குத் தைரியத்
தைக் கொடும். அந்த ரகசியமோ, உம்மால் ஏற்பட்டது. மனித
னால் அன்று. அதுவோ பரிசுத்தமான ஏற்பாடு; அது மனுஷ சற்ப
னையன்று. அது தேவர்களுடைய நுண்ணுணர்வுக்கும் மேலா
னது. மனிதனே அதன உண்மையை அறியப்போகின்றான்? அற்பன்
யான். திரணமாத்திரன் யான்.பாவி யான்.நானோ இந்த ஞானசம்ஸ்
காரத்தின் பரம ரகசியத்தைப்பெற்று உள் நுழைந்து உண்மையை
உணரப்போகின்றேன்? இறைவா! மாசற்ற மனத்துடனே உம்

மேலும் மேற்கொண்டு, உறுதியான அன்புடனேயும் [..]தியுடனேயும் உம்மிடம் வருகின்றேன், உண்மையாய் நீர் [..] கடவுளாயும், மனிதனாயும் என் உடலிடம் உறைகின்றீரே.

அதனால், அன்பினால் உம்முடன் இரண்டறக்கலந்து யான் இருக்கும்வண்ணம் நீர் அருள்புரிவீராக. அவ்விதம் [..]ருவை பண்ணும். அத்தன்மைய அனுக்கிரகம் செய்யும். உம்மிடத்தில் அகம் குழைந்து அன்பால் நான் உருகட்டும்; அது மனம் [உ]ருகி வரம்பு கடந்து ஓடட்டும்; மற்றொன்றையும் சுகமென்று [..] நாடற்க; இந்த உயர்வான ஞானசம்ஸ்காரமே சரீரத்திற்கு உ[..]விக்கும் உற்ற துணை. ஆன்மாவின் துன்பநோய் தீர்க்கவும் எ[..]றங்களை நீக்கவும் அரிய மருந்தும் அதுவே. அதனால் என் ஆணவம் அடங்கும். என் மருளும் ஆசாபாசமும் நீங்கும். குறையும்; பெருகிய நன்னெறி தழைக்கும். பக்தி உறுதிப்படும். நன்னம்பிக்கை ஸ்திரமாகும். தருமசிந்தை பிரகாசித்து மலரும்.

2. "என் நாதா! என்னுள் உறைபவரே! என் குற்றத்தை விலக்கின என் களைகண்ணே!" என்று உம்முடன் மனங்கலந்து உம்மேல் அன்பு பாராட்டும் பக்தர்களுக்கு அனேக அனுக்கிரகங்கள் அருளுவதாக உம்முடைய ஞானசம்ஸ்கார வாயிலாக வாக்குத்தத்தம் செய்திருக்கின்றீர். இன்னும் செய்கின்றீர். பல[து]ன்பங்கள் உற்ற காலத்தில் உதவிகள் செய்கின்றீர். வியசனசா[கர]த்தில் மூழ்கிக்கிடக்கின்றவர்களை ரக்ஷகராகிய உம்மிடம் நம்பிக்கை [கொ]ண்டாக்கிக் கைதூக்குகின்றீர். உம்முடைய புதுமையான அருள்[..]தியால் நீர் அன்பர்களின் மனம்புகுந்து உற்சாகப்படுத்துகின்றீர். ஞானசம்ஸ்காரம் பெறுமுன் கவலை கொண்டவர்களாய் உம்மிடம் அன்பிலராய் இருந்தவர்கள் அது பெற்றபின் ஞான உணவு உண்டு ஞானமிருதம் குடித்து மனங்குளிர்ந்தவர்களாகின்றார்கள். புதிய மனிதர்களாகவே ஆகின்றார்கள். ஆகையால் உம்மருளால் உம்மை வணங்கும்படி செய்வித்து அவர் அவர்களுக்கு ஏற்ற உபாயங்களையும் சாதனங்களையும் ஏற்படுத்துகின்றீர். அவைகள்வழியாக அவரவர்கள் குற்றங்களையும் குறைகளையும் உள்ளபடி உணர்ந்து பின்பு உம்மிடம் நன்றியும் அன்பும் பாராட்டுகின்றார்கள். இயற்கையில் கடினமனத்தினராயும் ஈரமில்லா நெஞ்சத்தினராயும் அன்பு சற்றேனும் இல்லா



தவராயும் இருக்கின்றவர்களுக்கு இளக்கமனமும் சுறுசுறுப்பும் உயர்வான எண்ணங்களும் எல்லாமே உம்மிடமிருந்து வருகின்றன.

இனிமை என்ற பிரவாகத்தை அணுகினோர், அதைச்சிறிதேனும் ருசிபார்க்காமல் திரும்புவாரா? எரிகின்ற தழல் முன்நின்றோர் அதன் சூடு உணராமல் இருப்பாரா? நிறைந்துபெருகித்தேடுகின்ற ஊற்றுக்கண் நீர். அணையாத என்றும் எரிகின்ற தழல் நீர். நான் திருப்தியாகத் தாகம் தீர்த்துக்கொள்ளாவிடினும், உயர்வான ஞான நெறி என்ற ஊற்றுக்கண்ணில் வாயையாவது வைத்துப்பார்க்கின்றேன். அதனால் ஒரு திவலை ஜலமாவது என்னுட்புகுந்து என் தாகத்தைச் சாந்தப்படுத்தட்டும்; அஃது இன்றேல், முற்றும் வாடி வதங்கிவிடுவேன். தேவர்கள் போன்று முற்றும் தேஜஸ்வியாக நான் ஜொலிக்காவிடினும், அன்பினால் மனம் உருகி என் நெஞ்சை ஆயத்தம் செய்வேன். அதனால், வீரியமுள்ள ஞானசம்ஸ்காரம் அடைவேன். பரிசுத்தமான தேஜஸின் ஓரம்சத்தையாவது அமையப்பெறுவேன்.

இயேசுவே! என் இறைவனே! என் ரக்ஷகரே! என் குற்றம் குறையை உம்முடைய அன்பாலும் அருளாலும் தீரும். "வாருங்கள்! வருந்துகின்றவர்காள்! சுமைதூக்கி அழுந்துகின்றவர்காள்! வாருங்கள் சாந்தநிலை கொடுக்கின்றேன்." என்ற ஆப்தவாக்கு அருளின மஹாத்மாவே! நான் வருந்துகின்றேன். நெற்றி நீர் நிலத்தில் விழுமாறு உழைக்கின்றேன். மனோவியாதியால் என் நெஞ்சம் புண்ணாயிருக்கிறது. பாவத்தில் அழுந்தி இருக்கிறேன். சோதனைகளால் சஞ்சலப்படுகிறேன். பலவாறான ஆசாபாசவலைகளில் சிக்குண்டு தத்தளிக்கின்றேன். கர்த்தரே! கடவுளே! உம்மைத்தவிர எனக்கு வேறு கதியில்லை. நீரே ரக்ஷிக்கக் கடவீர். என் உடல் பொருள், ஆவி உமது அடைக்கலம். நித்திய பதவிக்கு என்னை நடத்தும். கொண்டு சேர்ப்பியும். உம்முடைய பெயருக்கும் புகழுக்குமாக என்னை உயர்த்தும். உம்முடைய உடலையும், ரத்தத்தையும் எனக்கு உணவாகவும், பானமாகவும், செய்திருக்கின்றீர். ரக்ஷகரே! என்னிடமணுகும். நீர் அணுக என் பக்தி கனல் விருத்தியாகும்.

## 5-வது அதிகாரம்.

### குரு இயல்பும் ஞானசம்ஸ்காரத்தின் உயர்வும்.

அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

தேவர்போலப் பரிசுத்தமானவனாக நீ இருப்பினும், ஜான்

என்ற ஞானியார் போலத் தூய மனமுடையவனாக இருப்பினும், இந்த ஞானசம்ஸ்காரத்தை அடையவும் அதை ஸ்பரிசிக்கவும் அருகனல்ல. மனிதன் கிறிஸ்துவின் ஞானசம்ஸ்கார முறையை அடைதலும் அதைப் பற்றி ஒழுகுதலும் அதனால் தேவர் உணவு உண்ணுதலுமான இப்பேர்க்கொத்த சம்பத்து மனிதனுடைய யோக்கியதையால் ஏற்பட்டதன்று. தேவர்களுக்கும் கிடைக்காத பாக்கியம் குருவர்களுக்கு கிடைத்துள்ளது. கோவில் ஞானசம்ஸ்கார மூலமாய் ஆசாரி அபிஷேகம் பெற்ற குருக்களே, கிறிஸ்துவின் சரீரத்தியாக லீலை நடத்தவும் அதைக் கொண்டாடவும் சக்தர்கள் ஆவார்.

உண்மையில் குரு, கடவுள் உபாசகர் ஆவர். கடவுளின் ஆதேசத்தைத்திருப்பிச் சொல்லுவார். அத்தொழிலுக்குக் கடவுளே அவரை ஆக்ஞாபித்தார். கர்த்தர் அந்தர்யாமியாக இருந்து காரியம் நடத்துவர். அவர் எண்ணம் நிறைவேறுகிறது. அவர் ஆக்ஞை நடக்கின்றது. இந்த ஞானசம்ஸ்காரமுறையில் சர்வசக்தரான இறைவனை நோக்கியே உன் மனம் செல்லட்டும். உன்னுடைய ஸ்தூல புலன்களை நம்பாதே. இந்த முறையைப் பயபக்தியுடனே பெற்றுப்பற்றுக.

2. சிரேஷ்ட குருவானவர் (Bishop) உன்னை ஆசீர்வதித்துத் தம்முடைய கையை உன் தலைமேல் வைக்கும் காலத்தில் உன் நோக்கிப்பார். யார் கைங்கரியத்தைச்செய்ய குரு என்ற உயர்ந்த பதவியை பெறப்போகின்றாய்? உன்னைக்குருவாக ஆசாரி அபிஷேகம் செய்யப்பட்டது என உன்னிப்பார். உற்ற காவல்களில் உண்மையாயும் சிரத்தையாயும் கடவுளுக்கு யக்ஞகிருத்தியங்கள் செய்யவேண்டும் எனக் கவனி. உன் ஒழுக்கம் குற்றம் நீங்கியதாக விருக்கட்டும். இந்தப் புதிய பதவியால் உன் வேலை, சொற்பமன்று. அதிகரித்து இருக்கிறது. அதிக தீவிர விரதம் பூண்டு ஒழுக உடன்பட்டாய். முன்னிலும் அதிக மேலான நெறிமுறைபற்றி நடக்கக் கடமையுற்றாய். குருவானவர் எல்லா நன்றிக்கும் உறைவிடமாக இருக்கவேண்டும். எல்லாரும் அறிய நற்குணங்களுக்குத் திருஷ்டாந்தமாக ஒழுகிக் காட்டவேண்டும். அவர் ஒழுக்கம் சாதாரண ஜனங்கள் போல் அன்று. விண்ணில் உள்ள தேவர்கள்போல் அவர் நடக்கற்பாலர். அல்லது மண்ணின்கண் பூர்ணம்பெற்ற மஹான்கள்போல் அவர் நடக்கவேண்டியவராம்.



தவவேஷம் பூண்ட குருவானவர் கிறிஸ்துவின் ஸ்தானத்தில் இருப்பவராவர். தன் க்ஷேமத்தின் பொருட்டும், மற்றையோர் க்ஷேமத்தின் பொருட்டும், இறைவன் அருள் பிரசாதம் கிடைக்கவேண்டுமெனக் கோருகின்றவராவர். கிறிஸ்துநாதர், சிலுவையின் கண் பட்ட துன்பமும் இடுக்கணும் எப்போதும் ஞாபகத்தில் இருக்குமாறு இக்குருவானவர் சிலுவையின் அடையாளத்தைத் தன் தேகத்தில் முன்னும் பின்னும் வைத்துக்கொள்ளல்வேண்டும். தன்னுடைய மேலே அங்கியில் முன்னில் சிலுவை அடையாளம் இருப்பின், அது இயேசுவின் வழிமுறை இத்தன்மையிலிருந்ததென ஞாபகப்படுத்தும். பின்னில் இருப்பின் தனக்குப் பிறரால் ஏதேனும் சங்கடங்கள் நேரிடினும் அவைகளைப் பொறுமையுடன் பொறுக்க வேண்டுமெனத் தெரிவிக்க அறிகுறியாவதாகும். முன்னுள்ளது தன் பாபத்திற்கு நொந்து அனுதாபப்படத் தூண்டும். பின்னுள்ளது, பிறர் பாபத்திற்கு நொந்து அனுதாபப்பட ஏற்பட்டது. கடவுளுக்கும் பாபிக்கும் இடையில் குருவானவர் நின்று வருந்தி மன்னிப்புக் கேட்கக்கடவர். இறைவன் அருள் பெறும் வரை அவரைப்போற்றுதலில் சோர்வும், அவர் கிருத்தியங்கள் செய்தலில் களைப்பும் கூடாது. அவர் உற்சவாதிகளைக் கொண்டாடல் அவரைப் போற்றுதலாம். அதனால் தேவர்கள் சந்தோஷம் பெறுகிறார்கள். கோவில் விருத்தியடைகிறது. ஜனங்களுக்கு உதவி ஏற்படுகிறது. அத்திருவிழாக்களில் இறந்தவர்களுக்காக இறைவனை ஸ்தோத்திரங்கள் செய்கின்றமையால் அவர்களுக்குச் சாந்தமும் திருப்தியும் உண்டாகின்றது. எல்லா நன்மைகளிலும் ஒரு பங்கு அவர்களுக்குக் கிடைக்கும்.

## 6-வது அதிகாரம்.

### ஒரு வினா—இரண்டறக்கலந்து ஐக்கியபாவம்பெற வேண்டின் என்ன பயிற்சி முன்னர் வேண்டுவது?

சீஷனின் உள்ளத்தில் சிந்தனை.

என் ரக்ஷகரே! உம்முடைய பெருமையையும் என்னுடைய சிறுமையையும் நான் நினைக்கும்போதெல்லாம் நான் நடுநடுங்குகிறேன். என்னுள்ளம் மயங்குகிறது. ஏனென்றால், உம்மிடம் நான் சொல்லாமல் இருப்பேனாகில்

உயிரை இழந்தவனாகிறேன். உற்றபண்பின்றி உம்மிடம் வருவேனாகில் அதிருப்திக்குள்ளாகிறேன். கடவுளே! என் ரக்ஷகரே! இடுக்கண்களின் களைகண்ணே! இந்நிலையில் நான் செய்யவேண்டியதியாது?

நேர்மையான வழியை எனக்கு உபதேசியும். சிரேயஸ்கரமான ஐக்கிய பதவிக்கு அனுகூலமானதும் சுருக்கமானதும் அனுஷ்டிக்க இலகுவானதுமான முறையை எனக்கு அருளவேண்டும். என் சிந்தையை ஒருமைப்படுத்தி உமக்கு உறைவிடமாக ஆயத்தஞ்செய்து கொள்ளக் கடவேன். அதனால் என் க்ஷேமத்தின்பொருட்டு உம்முடைய ஞானசம்ஸ்காரமுறையை அனுஷ்டிக்க நான் இயலுவேன். அது முடியாமற்போனால் அவ்வுயர்வான தெய்வீகமான எக்ஞத்தை திருவிழாவாகக் கொண்டாடுவேன்.

## 7-வது அதிகாரம்.

### சீர்திருத்த முறைகள் தன்னெஞ்சைச் சோதித்தல்.

### அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

இந்த ஞானசம்ஸ்காரமுறையைப் பிரஸ்தாபிக்கவும் அதைக் கையாடவும் அதன் விழாக்கொண்டாடவும் வேண்டுமானால் குருவானவர் (Priest) எவ்விதக் குற்றமும் குறைவும் இல்லாதவராக இருத்தல்வேண்டும். பணிந்த மனமும் அன்புசார்நெஞ்சமும் சிரத்தை நிறைவும் நன்னோக்கமும் இறைவனைப்போற்றும் மனவூக்கமும் உடையவராக இருத்தல்வேண்டும். உன்னுடைய எண்ணங்களைக் கவனமாய்ப் பரிசீலனை பண்ணுக; கூடியவரை அவைகளைச் சுத்தஞ்செய்க. அவைகளின் மாசுக்களைத் தவிர்க்க. உண்மையாய் உன் பாபங்களைப்பற்றி அனுதாபப்படுக; உன்னைத் தாழ்மைப்படுத்திக்கொள்ளுக; உன் பாபங்களைப்பற்றிக் கடவுளிடம் உள்ளத்தில் ஒத்துக்கொள்ளுக. அறிக்கை செய்க. அப்படிச் செய்திடில் கடவுளிடம் மனம் செல்ல இருக்கின்ற தடைகள் நீங்கும். பொதுப்படையாய் உன் பாவங்களை நினைத்து நொந்துகொள்க. விசேஷமாய் அன்றன்று செய்யும் பாவங்களைப்பற்றிப் பச்சாத்தாபப்படுக. சமயம் வாய்க்கில் உன் உள் நோக்கி, உன் கஷ்டங்களினால் உண்டாகும் துன்பங்களைப் பற்றி மனமுருகிப் பரிதாபப்படுக. இதுகாறும் உலக விஷயங்களில் உழன்றனை. ஊனை ஓம்பினை. ஆசாபாசங்களில்



அழுந்தினை. விரகதாபத்துள் மூழ்கினை. இந்திரியங்கள் வாயிலில் போயினை. வீண் தோற்றங்களில் மயங்கினை. வெளிவிஷயங்களைப் பற்றினை. உள்நோக்கிலை. சிரிப்பிலும் விளையாட்டிலும் காலம் கழித்தனை. பாபங்களை நினைத்திலை. அவைகளுக்காக மனமுருகிக் கண்ணீர் விட்டிலை. ஊனுக்கு அனுகூல விதிகளை நாடினை. வைராக்கியத்தைப் பற்றிலை. விருதம் பூண்டிலை. உலக வர்த்தமானங்களைக்கேட்க அவாவுற்றனை. அழகான பதார்த்தங்களைப் பார்க்கப் பிரியம் கொண்டனை. நொய்மையானவை தவிர்த்தனை. கீழ்மையானவை அணுகிலை. 'கிரகி' என்றால் விருப்புக் கொண்டனை. 'கொடு' என்றால் வெறுப்புற்றனை. கிடைத்ததைப் பேணினை. கரைகடந்து பேசினை. மௌனம் சாதிக்கவில்லை. பயிற்சியில்லாத சுபாவம் உள்ளாய்! உலக கருமங்களில் சுறுசுறுப்பும் உள்ளாய். உணவென்றால் வாய்திறப்பாய். கடவுள் என்றால் வாய் மூடுவாய். சோம்பித் திரிவாய். வேலை செய்ய வேண்டாய். கதை கேட்க நிசிராத்திரி விழிப்பாய். உபவாசம் என்றால் துயிலுவாய். பரபரப்பாய் இருப்பாய். மனச்சஞ்சலப்படுவாய். ஜபத்தால் காலஅளவையைக் கணக்கிடாய். விழாக்கொண்டாடப் பிரியப்படுவாய். மனம் ஒருமைப்பட இசையாய். உன் சித்த விருத்திகளோ பலவாறாகச் செல்லும். அவைகளை அடக்கக் கருதாய். விரைவில் சினம் கொள்வாய். அயலானை நோகச்செய்தல் உனக்கு இலகுவாம். பிறரைப் பற்றிய அபிப்பிராயம் உனக்கு விரைவாம். அவரைக் கண்ணுறுத்தல் கொடுமையாம். செல்வம் வந்திடில் குதூகலமாயிருப்பாய். துன்பம் வந்திடில் களைப்பாய். நீ நல்ல விதிமுறைகளைச் சிந்திப்பது பலகாலம். அவைகளை அனுஷ்டிப்பது சிலகாலம். இத்தன்மைய குற்றங்களையும் ஏனைய குறைகளையும் ஒத்துக்கொண்டு மனநொந்து அனுதாபப்படுக. உன்னை வெறுக்க. உன் நொய்மையை உணர்க. பின்பு, இனித் தினம் தினம் உன் ஒழுக்கம் இவ்விதம் நேர்மைபெற வேண்டுமென முறைப்படுத்துக. அந்நன்னெறிபற்றி நடைபெறுக. பின்னர் முற்றும் துறந்தவனாய், எனக்கு அர்ப்பிதமாக உன் ஹிருதயாக்கினியில் உன்னையே தியாகம் செய்க. அந்தத் தியாகமே என்றுமுள்ளது. உன் உடல், பொருள், ஆவி இவை மூன்றும் என்னிடம் ஒப்புவிப்பாயாக. அதனால் இறைவனையே அணுகி, அர்ச்சித்து என் சரீரத்தியாக ரூபமான சம்ஸ்காரத்தை நீ கடத்தே

றும் வண்ணம் அடைய அருகனுவாய்.

ஆராதனையிலும், உபசரணையிலும் கிறிஸ்துவின் சரீரத்தை யக்ஞம் செய்கின்ற கிருத்தியத்திய முறையில் உன்னையே உண்மையாய் முற்றும் தியாகம் செய்கின்றவனாக நினைக்கக்கடவாய். இதுவே பாவங்களைத் தகிக்க உற்ற சாதனம். இதனினும் மேற்பட்ட வேள்வி இல்லை. உயர்வற உயர்நலம் இதுவே.

ஒருவன் தான் இயன்ற அளவு நன்மை செய்து உள்ளபடி பச்சாத்தாபப்படின் என்னிடம் பாவவிமோசனம் பெறவும், அருள்பெறவும் அவன் என்னை அடைவான். இறைவன் வாக்கு இதுவாம். "நான் இருக்கிறேன். பாவியின் உயிர் குடிக்கவன்று. அவனை அதினின்று விடுவித்து அவன் உய்யுமாறு செய்யவே. அவன் பாவத்தை நினையேன். மறந்திடுவேன். எல்லாரும் மன்னிப்புப் பெறுவார்கள்."

## 8-வது அதிகாரம்.

### கிறிஸ்துவைச் சிலுவையின்கண் பலிகொடுத்தல்.

### நம்மைத் தியாகம் செய்தல்.

அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

உங்களுடைய பாவ விமோசனத்திற்காக இறைவனுக்குப் பிரீதி
யாக விரிந்த கைகளுடனே நிர்வாணமாய் முற்றுமாய் மலிதாரப்
பற்றற்றவனாய் என்னைச் சிலுவையில் பலி கொடுத்தேன். ஈசுவர
கோபாக்கினியைச் சாந்தப்படுத்த என்னிடமுள்ள யாவையும் அகங்
காரம் மமகாரம் என்றபடி ஒன்றும் தங்காமல், தியாகம் செய்திட்
டேன். அதுபோலவே ஆராதனைக் காலத்திலும் மனப்பூர்வமாய்
உன்னை முற்றும் எனக்கு அர்ப்பணம் செய்க. தினந்தோறும் திரி
கரண பூர்வமாக இந்த நற்றியாகம் செய்யக்கடவாய். உன்னை
எனக்கு அர்ப்பணம் செய்ய முயலக்கடவாய். இதுதான் நான் உன
னைவேண்டுவது. உன்னிடமிருந்து வேறொன்றும் வேண்டேன்.
உன்னைத் தவிர உன் உடைமைகளை வேண்டேன் அல்லன். எல்
லாம் இருந்தும் நான் இன்றேல் உனக்கு எப்படியோ அப்படியே.
எல்லாம் நீ கொடுத்தும் உன்னைக் கொடாவிடில் என்று உணர்க.
உன்னை முற்றும் கடவுளுக்குக் கொடு. அதனை அவர் அங்கீகரிப்



பார். உங்களுக்காக என்னை முற்றும் கர்த்தருக்குக் கொடுத்தேன். அவர் உண்ண என்னுடலும் அவர் குடிக்க என் இரத்தமும் கொடுத்தேன். நான் என்றும் உங்கள் அம்சமாகவும் நீங்கள் என்றும் என் அம்சமாகவும் ஆகவேண்டியே அவ்விதம் செய்துள்ளேன்.

ஆனால் நீயோ அகந்தை மமதைவிட்டு உன்னை முற்றும் என்னிடம் ஒப்பிவிக்காவிடின் பூர்ணத்தியாகம் ஏற்படாது. நாம் இருவரும் இரண்டறக் கலக்க ஒண்ணாது பூர்ண ஐக்கியம் நிகழாது.

ஆகவே ஈசுவர ஸ்பரிசமும் வீடும் வேண்டில் செய்யும் ஒவ்வொரு கருமத்தின் முன்னும் உன்னை முற்றும் மனப்பூர்வமாய்த் தியாகம் செய். ஈசுவர அருளும் மோக்ஷமும் அனேகர் பெறாததற்குக் காரணம் இதுவாம். தங்களை அவர் முற்றும் தியாகஞ்செய்கின்றார் இல்லை. என் உறுதிமொழி இதுவே—"முற்றும் தன்னைத் தியாகம் செய்யாதான் என் வழிப்படான்." அதனால், என் வழிப்படுகிறவர்களில் ஒருவனாக இருக்க விரும்புகிறாயா? உண்டேல் உன்னை எனக்கு மனப்பூர்வமாகக் கொடுப்பாயாக.

## 9-வது அதிகாரம்.

### நம்மையும் நம்முடைமையையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்தலும் எல்லாருடைய க்ஷேமத்தையும் கோர வேண்டலும்.

சீஷன் உள்ளத்தில் சிந்தனை.

கர்த்தரே! மண்ணிலும் விண்ணிலும் உள்ள எல்லாம் உம்முடையது. என்னை, உமக்கு மனப்பூர்வமாய்த் தியாகஞ்செய்யவேண்டுகிறேன். நான் உம்முடைமையாக என்றும் இருக்க விரும்புகிறேன். இன்று உம்முடைய அடிமையாகிறேன். உம்முடைய கைங்கரியம் செய்கிறேன், என்றும் போற்றி செய்யும் தியாகியாகிறேன். இன்று உம்முடைய சரீரத் தியாகமுறையின் அனுஷ்டானத்தில் அந்த திவ்விய சரீரத்துடனே என்னையும் தேவதைகள் மறைவாய் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கக் கொடுக்கிறேன்,

இதை நீர் ஒப்புக்கொள்ளவேண்டும். இது எனக்காகவும் மற்றைய ஜனங்களின் பிரயோஜனத்திற்காகவும் செய்கின்றேன்.

கர்த்தாவே! உமக்குமுன்னும் தேவர்களுக்குமுன்னும் நான் முன்னமே செய்துள்ள தீயகர்மங்களுக்கும் பாவங்களுக்கும் பரிஹாரமாக உம்முடைய பலிபீடத்தில் என்னையே தியாகம் செய்கின்றேன். நான் பாவஞ் செய்ய ஆரம்பித்தமுதல் நாளதுவரை நான் செய்துள்ள பாவங்களை முற்றும் உம்முடைய அருள் தீயினால் எரித்து பஸ்மம் செய்வீராக. என் மனத்தின் களங்கங்களையும் விலக்கி என்னைத் தூயவனாகச் செய்வீராக. பாவத்தினால் நான் இழந்துபோன உம்முடைய அருள் பிரசாதத்தைக் கொடுக்க அனுக்கிரகிப்பீராக. சாந்தமான நிலை அடையும்படி என்மீது இரங்கிக் கருணைகூர்ந்து எனக்குப் பூர்த்தியான பாவவிமோசனம் புரிவீராக.

என் குற்றங்களுக்காக உம்மிடம் பணிந்து சரணமடைந்து அனுதாபப்பட்டு, அவைகளுக்காக மனமுருகி அவர் அழுகவும் இடைவிடாமல், உம்மைப் போற்றிசெய்யவும் இயலுமே அல்லாது மற்று என்செய்வேன்? இறைவனே! என் குறைகளைக் கேளும். பாவங்கள் என்னை அழுத்துகின்றன. இனிப் பாவம் செய்யேன். நான் அவைகளுக்காகப் பரிதபிக்கின்றேன். என் வாழ்நாள் முழுமையும் அனுதாபப்பட்டே தீருவேன். என்னால் கூடுமானமட்டும் தியாகமும் பிராயச்சித்தமும் செய்ய ஆயத்தமாகவிருக்கிறேன். என் கர்த்தரே! என்னை மன்னியும். என் பாவங்களைப் பொறுத்து மன்னியும். உம்முடைய பரிசுத்தமான நாமத்தின்பொருட்டு என்னை மன்னியும். உம்முடைய உயர்வான இரத்தத் தியாகத்தினால் ஆன்மாவை ரக்ஷித்திருக்கின்றீர். உம்மிரக்கத்தில் என்னை அடைக்கலம் செய்கிறேன். உம்மிடம் சரணம் அடைகிறேன். நீரே எனக்குக் கதி. என் குற்றங்களையும் குறைகளையும் பாராமல் உம்முடைய திருவுள்ளம் நினைக்குமாறு என்னை நடத்தும்.

3. என்னிடம் உள்ள நலம் ஏது உண்டோ சிறிதும் குறைவுள்ளதாக இருப்பினும் அதை உமக்கு அர்ப்பணம் பண்ணுகிறேன். அதைத் தூய்மைப்படுத்தும். அதை மேன்மைப்படுத்தும். அதை ஐக்கியப்படுத்தவேண்டுமென்றால் அப்படியே செய்க. அதை மேன்மேலும் உயர்வுபடுத்துக. அற்பனும் பதருமான நான் நற்கதியடையுமாறு என்னை நன்னெறியில் நடத்துக.



4. நல்லோர் நல்ல விருப்பங்களையும், என் பெற்றோர் வேண்டுதலையும், எனக்குற்றாரான நண்பர் சகோதரர் சகோதரி இவர்கள் நல்ல எண்ணங்களையும், இன்னும் உம்மின்பொருட்டு எனக்கும் ஏனையர்களுக்கும் அன்புபற்றி நடைபெற்றவர்களுடையவும் நல்ல விருப்பங்களையும் உமக்குச் சமர்ப்பிக்கிறேன். மேலும் தங்களுக்காகவும் பிறர்களுக்காகவும் ஆராதனைகளும் அர்ச்சனைகளும் விழாக்களும் நடத்தும்படி என்னைக் கேட்டுக்கொண்டவர்கள் உயிருடன் இருந்தாலும் உயிர்விட்டு இறந்தாலும் சரி அவர்களின் நல்ல விருப்பங்களையும் உமக்குச் சமர்ப்பிக்கிறேன்.

அவர்கள் எல்லாரும் உம்முடைய சாதகத்தையும் சுகமான ஆற்றலையும் துன்பங்கள் அற்ற உம்முடைய நிலையையும் பெறவும், தங்களுடைய பாவங்களினின்றும் சங்கடங்களினின்றும் தப்பிக் கடைத்தேறவும், உமக்கு உயர்வான வந்தனங்களும் போற்றியும் செய்வார்.

5. என்னை நோகச்செய்தவர்களும், எனக்கு இடையூறு புரிந்தவர்களும் என்னால் அறிந்தும் அறியாமலும் மனம் வாக்கு காயத்தினால் துன்பம் பெற்றவர்களும் கடைத்தேறும் வண்ணம் உம்முடைய திருப்திக்காக உயர் அர்ச்சனை செய்குவேன். ஸம்ஸ்காரரூபமான ஆராதனைகள் செய்குவேன். எங்களுடைய பாபங்களை எல்லாம் மன்னிப்பீராக. அவைகளினின்று விமோசனம் பெறுவோமாக.

எங்கள் மனத்தின் கண்ணுள்ள சந்தேகம் கோபம் வெகுளி விதாண்டாவாதம் அன்புடைமைக்கு வயிரியான எல்லாத் தீய சுபாவத்தையும் விலக்கிவையும். அவைகளை அகற்றும். கர்த்தாவே! உம்மை நோக்கி வருந்துகின்றவர்களுக்கு அருள் புரியும். இரக்கப்படும். தவிக்கின்ற நெஞ்சுகளுக்குச் சாந்தம் செய்திடுவீராக. உம்முடைய அருள் சம்பந்தத்தைப் பெறவும், அமர்ந்த நிலையை அடையவும் யோக்கியர்களாக எங்களைச் செய்வியும். அப்படியே யாகுக.

## 10-ம் அதிகாரம்.

### மஹத்தான ஐக்யநிலை இலகுவாய்ப் போறுக்கற்பாலதன்று.

### அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

ஆசாபாசம் நிவர்த்திக்கவேண்டினும், பாபவிமோசனம் வேண்டினும், உலக வியாமோகங்களினின்று விலகவேண்டினும், மாயை

யின் வலையை அகற்றவிரும்பினும், அருளும் அன்பும் மயமான ஊற்றினுக்கு ஏகுக. நன்மைக் களஞ்சியத்திற்குச் செல்லுக. தூய்மைப் பரிபூரணத்திற்கே போகக்கடவாய். ஐக்யநிலையின் பயனாகப் பாவம் அற்றுச் சாந்திநிலை உண்டாகும். இக்காரணம்பற்றியே எந்தவழியினும் எந்நேரத்திலும் தீயசுபாவமானது பக்தர்கள் பாசங்களால் சிக்குண்டு வருந்த இடையூறு செய்ய முயலுகின்றது.

ஐக்யநிலையை நோக்கினாராய் சிலர் முயலுகையில், முன்னிலும் இடுக்கண்களுக்கு உள்ளாகிறார். அப்படி இடையூறு செய்கிறவன் சாத்தானும். (ஆசுரசுபாவமேயாம்). ஜோப் என்பவரின் சரித்திரத்தில் சொல்லியபடி அந்தச் சாத்தானே இவ்வுலகத்திலுள்ள கடவுளின் புத்திரர்களான மனிதர்களின் மனத்தைப் பேதித்து, வஞ்சனையால் அவர்களுக்குச் சோர்வும் அதைரியமும் உண்டாக்குவான். அன்பைக் கெடுப்பான். பக்தியைத் தளரச்செய்வான். புத்தியை மயக்கிடுவான். உள்ள சத்தியைக் குறைத்திடுவான். ஒருகால் அவ்வுயர் நிலைபற்றி ஒருவன் ஒழுகப்பெறுவானாகில், அவனுடைய உள்நம்பிக்கையைக் கெடுத்திடுவான். ஆனால் வெளிப்படை ஒழுக்கம் நேர்மைபோல் நடிக்கும்படி செய்வான். ஆனால் அவனுடைய கபடம்வஞ்சனைகளை நாம் சிந்திக்கத்தக்கதன்று. அவைகள் எவ்வளவு கொடுமையுள்ளவைகளாக இருப்பினும் அவைகளை நினைக்கற்பாலதன்று. அவைகள் நம்மனத்தைத் தாக்காமல் அவனிடமே திரும்பிச் செல்லத் தவிர்க்கவேண்டும். அந்த துர்பாவத்தை நம்மில் உண்டாக்காமல் அகற்றவேண்டும். அதற்குள்ளாகாமல் நாம் அதை அலட்சியம் செய்யவேண்டும். உயர்வான ஐக்ய நிலைமுறை அதற்காக விடக்கூடியதன்றே.

மனிதருக்கு இந்த இடையூறு அடிக்கடி நேரிடுகிறது. அதாவது மனச் சமாதானமாய் இருக்குந்நிலை வேண்டுமென்பதைப் பற்றி அதிகக் கவலையும், பாவத்துக்கு இறங்கி அனுதாபப்படுதலினால் உண்டாகும் மனச்சஞ்சலமுமாம். அறிஞர் செய்யும் முறையை அனுசரித்து நட. மனக்கவலை மனச்சஞ்சலம் இவைகளைத் தவிர். இவை இறைவன் அருள் வருதலைத் தடுக்கும். நல்லெண்ணங்களைக்கெடுக்கும். விக்கினங்கள் வந்தே தீரும். மனசு கொஞ்சம் சஞ்சலிக்கும். ஆயினும், அதனால் உன் ஐக்யநிலைமுறையை அகலாது பற்று. உடனே உன் பாவங்களை உன்னி அனுதாபப்படு. உன்



மனம் இரங்கட்டும். உனக்குத் தீங்கு செய்தார் யாரேனும் உளரேல் அவரை மனதார மன்னித்துவிடுக. *நீ எவருக்கேனும், துன்பஞ்செய்ததுண்டேல், அவரை நோக்கி மன்னிப்புக்கேட்டுக்கொள்க.

2. உன் பாவத்தை நினைந்து நீ பரிதாபப்படு. அதில் காலவிளம்பம் வேண்டாம். ஐக்யநிலை முறைபற்றி ஒழுகும் பிரயத்தனத்தில், தாமதம் வேண்டாம். முதலில் உன் மனமாசுகளை அகற்று. அவைகளை வெளியில் கக்கு; பின்பு ஔஷதம் தேட முயலு. அதிகத்தாமதம் செய்தலைவிட, இதனால் சுகங்காண்பாய். தாமதத்துக்குக்காரணமாக ஒரு சங்கடம் நேர்ந்தது. நாளை இதைவிட அதிகச் சங்கடம் நேரும். இவ்வண்ணமே சங்கடத்தின்பின் சங்கடமாக மென்மேலும் வந்துகொண்டே வளரும். கடைமுறையில் ஞானவழிக்கு முற்றும் அநர்கனாக ஆகிவிடுவாய். இன்று உன்னைப் பற்றியசோம்பலையும் ஆலஸ்யத்தையும் உடனே தவிர். நாளெல்லாம் இடுக்கண்ணில் வருந்த நீண்ட ஆலோசனையினால் என்ன பயன்? தினந்தோறும் துன்ப நினைப்பாய் இருந்து, மோக்ஷசாம்ராஜ்ய பதவியை இழக்கலாமா? ஞானமுறையில் பிரவேசம் ஒண்ணாது. *தாமதம் துன்பத்திற்கு ஏது. அதிகத் திமிரையும் மருளையுங்கொண்டுவரும். மந்தமதியாளரும் சஞ்சல மனமுடையவரும் தம்பாவங்களுக்கு அனுதாபப்பட இலகுவாய்ச் சீக்கிரமாய் இசையார். இதில் காலவிளம்பம் அவருக்குப் பிரீதியாம். அந்தோ! இஃது என்ன அறிவின்மை? தம்குற்றங்களை ஒறுத்துத் தம்மை நொந்து தாம் அடக்கமுடைமையைப் பெறார். அவர் தர்மசிந்தை மந்தமாக இருக்கிறது. அவர் ஸத்சங்கற்பங்கள் சோர்வு அடைகின்றன. சோம்பலே மேற்கொள்ளுகின்றது. நல்வழியில் நின்று மனத்தூயனாகித் தன் உள்ளத்தை நேர்மையாக வைத்துக்கொண்டு, கடவுளின் ஐக்ய நிலைமுறையை நோக்கினவனாக ஆயத்தனாகுக; எப்போது அப்பதவி நேரிடுமென எதிர்பார்த்துக்கொண்டு, தன் வாழ்நாளை வீழ்நாள்படாமல் நடத்துகிறவன் பாக்கியமே பாக்கியம்.

---

*"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்." (குறள்.)

*"அன்றறிவா மென்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை." (குறள்.)

அதிகப் பணிவினால் ஒருவன் இந்த ஐக்யநிலைமுறை தனக்கு
அன்று என நினைந்து அகலுவானாகில், அவன் அடக்கமும் அன்பும்
மெச்சற்பாலது. ஆனால், ஆலஸியம் நேரிடுமாகில், உடனே அஃது
அகற்றற்பாலது. தான் முயற்சியுடையவனாக இருத்தல்வேண்டும்.
இறைவன் அவன் மனத்தை அறிந்து அருள்புரிவார். இதுதான்
ஒருவன் வேண்டற்பாலது. ஒருகால் நேரிடும் இடையூறனது
நியாயமாக இருப்பின், அவன் மனம் தளராது ஊக்கத்துடன்
ஞான ஸம்ஸ்கார முறையை நோக்கினவனாக நடைபெறக்கடவன்.
கடைசிமுறையில் அது வீணாகாது. பலன் உண்டு.

ஒவ்வொரு பக்தனும் நாடோறும் எவ்விடத்திலிருந்தாலும் சரி,
தட்டுத் தடையின்றி அவன் உள்ளத்தில் கிறிஸ்துவை இருத்தி,
அவரிடம் அவன் தன் பாவங்களை ஒப்பித்து, அனுதாபப்படவேண்
டும். அதனால் தன் ஆன்மாவுக்குச்சுகமுண்டு. பயனுண்டு.

தவிரவும், பல குறித்த தினங்களில்,குறித்த நேரங்களில் அன்பு
சார் மனத்தினனாய் நம்மை ஈடேற்றும் ரக்ஷகர் உள்ளத்தில் உறை
யும்படி செய்வித்து, ஞானஸம்ஸ்காரத்தின் அறிகுறியாக அவர்
செய்த சரீரத்தியாகமுறையைச்சிந்தித்தும்,தியானித்தும்,அதனபின்
னர்க் கடவுளையே போற்றிசெய்யவேண்டும். தனக்கு என்று ஒரு
லாபத்தையும் கருதற்க. இவ்வண்ணம் கிறிஸ்துவின் அவதார
மஹிமையையும், அவர் சிலுவையில் பட்ட துன்பத்தையும், நினைக்க
நினைக்க உன் உள்ளத்தில் அவர்மேல் அன்பு ஜனிக்கும். அதனால்
ஞானமுறை பற்றி நிகழ்வாய். அதனால் நீ அறியாமலே இறைவன்
அருளால் மனச்சமாதானம் பெறுவாய். தன்னை முன்னரே ஆயத்த
மாக்காமல், விழாநாள் அணுகுங்காலத்திலும் வணக்கத்தினால்
தூண்டப்பட்ட காலத்திலும், தன்னை ஆயத்தம் செய்ய எத்தனிக்கி
றவன் ஞானஸம்ஸ்காரத்தைப் பெற அருகனாகமாட்டான்.

விழாக்கொண்டாடும் காலத்திலும் அல்லது ஞானஸம்ஸ்காரம்
பெறும் அனுஷ்டானமுறையிலும் ஈசனுக்குத் தன்னை முற்றும் தியா
கஞ்செய்யவேண்டும். அப்படிச் செய்பவனே அருள்பெறுவான். ஆன
ந்தபிராப்தி அடைவான். திருவிழாக்கொண்டாடுங்காலத்தில் மற்ற
வர்கள் ஒப்பந்தம் நீ அதிகப் பதட்டங்கொள்ளாமலும் அதிகத் தாம
தம் செய்யாமலும் சீராயும் நேர்மையாயும் செய்துமுடிக்கக்கடவாய்.
அதனால் பிறருக்கு வருத்தமுண்டாக்காமலும் பிறர் தளர்ச்சிகொ



ள்ளாமலும் உன் முன்னோர் செய்த ஆசாரணைப்படி செய்யக்கடவாய்.
உன் பக்தியும் அன்பும் மாத்திரம் அபிவிருத்தியடையும் வழி கருதா
மல், பிறருக்குச் சாதகமாயிருக்கும் நெறிபற்றி இவ்வுற்சவத்தை நடத்
தக்கடவாய்.

## 11-வது அதிகாரம்.

### அன்புள்ளாருக்குக் கிறிஸ்துவின் சரீரமும்,பரிசுத்தமானவிவி லியநூலும் எல்லாவற்றிலும் இன்றியமையாதவை என்பது.

இனிய இயேசுவே! என்னன்பிக்குரிய நாதா! அன்புசார்
மனத்துக்கு நீர் இனிப்பாயிருக்கிறீர். உம்மையே உண்ணுதல் மிகப்
பிரியமாகவிருக்கிறது; வேறு எவ்வுணவும் நாவிற்கு ருசியன்று.
மனசுக்கு ருசியானவைகளில் எல்லாம் நீர் சால இனிமையானீர்.
நீரே என்னுடல் இடம் கொண்டு உறைய, உயர்வுபெற்ற மாக்ட
லின் அம்மையார் உம்முடைய அடிகளை நீரினால் அலம்ப, அத்தரிச
னம் நான் காண, என் நெஞ்சு உருகி, உம் அன்பின் பெருக்கால்
அடங்காமல் கண்ணீர் வெள்ளம் பெருகவும் இவ்வானந்தானுப
வம் இனிது இனிது. என்றும் இனிது. இத்தகைய அன்பு உடைமை
வேறு எங்குக் காண்பேன்? அன்பினால் உருகி வரும் கண்ணீர் வெள்
ளம் வேறு எங்கு உண்டு?

உம்மைக் காணும்போழ்தும், உயர்வான தேவர்களைத் தரிசிக்
கும்போழ்தும், என் மனம் அன்பால் தபித்து, ஆனந்தக் கண்ணீர்
விட்டுப் புலம்பவேண்டுமென யான் அறிவேன். வேறு ஒரு ரூபமாக
நீர் மறைந்திருப்பினும், ஞான ஸம்ஸ்காரமுறையில் நீர் உண்மை
யாய் என்னுடனே குடிகொண்டிருக்கின்றீர். உம்முடைய எதார்த்த
வடிவமான தேஜோமயமான ரூபத்தில் நீர் தோன்றுவீராகில்,
என்னுடைய ஸ்தூலக்கண்ணால் பார்க்க இயலாது. மஹிமையுள்ள
உம்முடைய திவ்விய தேஜஸை உலகமே சகிக்காது. அதனால்,
என் நொய்மையை அறிந்து, அதற்கு இணங்க ஞானசம்ஸ்கார
முறையில் மறைந்தீர். உம்மையே நான் அடையப்பெற்றேன்.
உம்மையே நான் உபாசிக்கிறேன். வானவர் தேவலோகத்தில் எந்த
வஸ்துவை உபாசிக்கின்றார்களோ அதையே ஆராதிக்கின்றேன்,
உபாஸனையில், என் மனோபாவத்திற்கேற்ற சிரத்தையின் கற்பித

மூர்த்தியாக விளங்குகின்றீர். அவர்கள் (தேவர்கள்) உபாசனையில்
மறைவுநீங்கிய பூர்ணபிரகாசம் தங்கிய அழகான மூர்த்தியாகத்தோ
ன்றுவீர்.

உள்ளபடி ஞாயிறுபோன்ற தேஜோமயமான தர்சனம் கிடைக்
கும் நாள் அணுக அணுக, பிரதிகங்களும் படங்களும் பயனற்றவை
யாகப் போகும். நான் அந்நிலைக்கு வருமளவும் என் நெறிமுறை
யில் என் அன்பே எனக்கு ஆதரவு. அவ்வன்பு பயக்கும் அறிவே
எனக்கு உற்ற துணை. குறைவிலா நிறைவே! நீர் என்னைப் பெ
றுங்காலத்தில், ஞானஸம்ஸ்கார முறையாகிய உயர்அர்ச்சனை அற்
றேன். பரிசுத்தாளான அமரர்கள் அர்ச்சனையின் சாதகம் வேண்
டார். கடவுளின் சந்நிதானத்தில் ஆனந்தம் பெற்றவர்களாய் நேரி
லேயே தரிசித்துக்கொண்டும் உரை உணர்வு இறந்த மூர்த்தியின்
பலவாறுக ஜொலிக்கின்றதேஜோமயத்தை வியந்தும், கண்ணுற்றும்,
ஆதியில் இருந்தவண்ணம் என்றும் உள்ளவஸ்துவே நாதரூபமாக
மூர்த்திகரித்துப்பின்பு உடலையே அமைக்கப்பெற்ற ஸ்வரூபத்தைப்
பார்த்தும், தேவர்கள் மகிழ்வார்கள்.

இத்தன்மையான அற்புதங்களை நினைக்க நினைக்க, ஏனைய
மனோபாவங்களும் மனச்சமாதானங்களும், வீணாகத்தோன்றுகின்
றன. அவை பயனற்ற சுமையாம். உள்ளபடி மஹிமை தங்கிய
கர்த்தரைக் காணுதபோழ்து, மற்றும் உலகில் நான் பார்க்கிறதும்
கேட்கிறதும் இல்லாமைபோன்றதாம். இதற்குச் சாக்ஷி நீரே.
வேறு எதினாலும் எனக்குச் சுகமில்லை. எதினாலும் சமாதானமில்லை
என்பதை நீர் அறிவீர். என் இறைவா! நீரே எனக்கு அடைக்கலம்.
உம்மை அன்றி வேறு எவரையும் என்றும்நான் சிந்திக்கேன். ஆனால்,
இவ்வுலகில் உள்ளநாளில் இவ்விதம் நடக்க இயலேன். ஆயினும்
பொறுமையுடன் நான் காத்திருத்தல் வேண்டும். உம்மையே
நினைப்பாய், நான் பணிவுடனே இருத்தல்வேண்டும். விண்ணுல
கில் இப்போது, உம்முடைய சந்நிதியில் ஆனந்தமாயிருக்கின்ற
ஞானிகள், பொறுமையுடன் உம்மை நம்பினவரே, அப்பொழுது
அனுபவிக்கும் மாக்ஷிமையின் வரவை எதிர்பார்த்துக்கொண்டே
வெகுகாலம் உலகில் கழித்தனர்கள். அவர் நம்பினது எதுவோ
அதையே யானும் நம்புவன். அவர் எதிர்பார்த்த பேரின்பமெது
வோ அதையே நானும் எதிர்பார்ப்பன், அவர் அடைந்த உயர்



பதவியையே யானும் உம்மருளால் அடைகுவன். அக்காலம் அணு
கும்வரை இடைநடுவில் அவர் அனுஷ்டித்து வழிகாட்டியவாறு
யானும் நல்நம்பிக்கையுள்ளவனாய் அந்நெறிபற்றி நடக்கக்கட
வேன். ஞானசாஸ்திரங்களைத் துணைகளாகப்பற்றுவேன், அவை
களை ஞானக்கண்ணாடியாக வைத்துக்கொள்ளுவேன். இவைகளு
க்கு எல்லாம் மேலாக உம்முடைய பரிசுத்தமான சரீரத்தையே
லக்ஷியஸ்தானமாகவும், நான் கரையேறும் துறையாகவும், நினைக்
கக்கடவேன்.

உலகில் இன்றியமையாதவைகள் எனக்கு இரண்டு வேண்டு
வன என மதிக்கின்றேன். அவையின்றித் துன்பங்கள் நிறைந்த
வாழ்நாளைக் கழிக்க இயலுவேன். உடம்பிற்கும் அதன்கண்ணியங்
கும் ஆன்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தை அடியில் வரும் குறள் மிக
அழகாய்க் காட்டுகின்றது. *சிறைச்சாலை போன்ற இச்சரீரத்தின்
கண் அடைக்கப்பெற்றுள்ளேன் என அறிகுவன். இரண்டு வேண்டு
கோள் உள. அவை உணவும் ஒளியுமாம். சோர்வும் தளர்ச்சியு
முள்ள எனக்கு மனத்தாகம் தீர்ந்து தைரியம் பெறவும், மரணதர்மம்
பற்றிய ஆக்கை உறுதிபெறவும், உம்முடைய சுத்தமானசரீரத்தையே
கொடுத்து அருளினீர். அதுவே எனக்கு உணவு. நான் நேர்மை
யாய் நடைபெறுமாறு உம்முடைய உபதேசமே எனக்கு வழிகாட்டும்
ஒளி. இவை இரண்டும் இன்றேல், நான் நன்னெறியில் நடைபெற
முடியாது. என் மனத்துக்குத் தீபம் கடவுள் வாக்கே. என் உயிரு
க்கு உணவு ஞானஸம்ஸ்காரம் பற்றிய உம்முடைய சரீரத்தியாகம்.
இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாக இரண்டு குசிகைகளான முறை
கள் பரிசுத்தமான கோவிலின்கண் அமைக்கப்பெற்றுள்ளன. உயர்வு
தங்கிய பலிபீடம் ஒன்று; அதன்மேல் கிறிஸ்துவின் விலை மதிப்பு
உள்ள சரீரமாகிய உண்டியைப் பலியாக வைத்துள்ளது. மற்றது
மஹிமை பெற்ற அமரத்துவத்தை விளங்கச்செய்யும் திவ்ய உபதே
சம் அமைந்துள்ள தர்மமாம். இதுவே எனக்கு அறிவு ஊட்டிப்
பதபாகமாக குப்தமான மேலான பதவியைப் பெறுமாறு நெறிகாட்
டுமியல்பினது.

---

*"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு." (குறள்.)

இயேசுநாதரே! உமக்கு வந்தனம் அளிக்கின்றேன். என்று
முள்ள ஒளியின் சுடரே! போற்றி. மேலான உபதேசம் செய்தீர்.
உம்மால் ஏற்படுத்தப்பட்ட போதகர்கள் (Apostles) குருக்கள்கள்
(priests) மற்றுமுள்ள ஞானிகள் அவ்வுபதேசத்தை என்போலியர்
களுக்குக் கற்பித்தார்கள்.

மனிதரைக் கரையேற்றினவரே போற்றி! மனித ரக்ஷகரே
போற்றி! உலகத்தாருக்கு உம்முடைய கருணையைக் காட்டும்வண்
ணம் ஓர் உயர்ந்த இரவு விருந்து வைத்து அதில் எங்கள்முன்னர்,
எங்களுக்கு உண்டியாக உம்முடைய பிரதீகமாகிய செம்மறியாட்டுக்
குட்டியை வைத்தீரில்லை. ஆனால், உம்முடைய திவ்விய சரீரத்தை
யும் உம்முடைய ரத்தத்தையுமே உம்முடைய பக்தகோஷ்டிகள்
உட்கொண்டு ஸந்தோஷிக்கும்படி செய்வித்தீர். அமிருதபானம்
பண்ணி, ஆநந்தபரவசராக ஆகும்படி செய்வித்தீர். மோக்ஷத்தின்
எல்லா ஆநந்தங்களும் அதில் நிரம்பியிருக்கின்றன. ஆனால் அவ்
விருந்தினையே தேவர்கள் அதிக ருசியுடனும் பிரீதியுடனும் உண்டு
சுகித்தார்கள். அவ்வுயர்வு பெற்ற விருந்து அதுவே.

பரிசுத்த மொழிகளால் 'மஹிமைதங்கிய இரக்ஷகரைப்
பிரதிஷ்டை செய்தற்குரிய கிரியாமுறைகளை அனுஷ்டிக்கவேண்டிய
குருவின் (Priest) உத்தியோகம் எவ்வளவு உயர்வுள்ளது பார்.
இரக்ஷகரைத் தன்னுவால் போற்றவும், தன் கையால் அவரைப்
பிடிக்கவும், தன் வாயால் எடுக்கவும், பிறருக்கு அதன் மஹிமையை
அறிவுறுத்தவும் குருவானவர் செய்யவேண்டியவர்.

அதனால், குருவின் கைகள் எவ்வளவு சுத்தமாய் இருத்தல்
வேண்டும்? அவர் வாய் எவ்வளவு தூய்மையாக இருத்தல்வேண்
டும்? அவர் சரீரம் எவ்வளவு மேன்மை அமையப் பெற்றிருத்தல்வே
ண்டும்? அவர் மனம் மாசற்று எவ்வளவு பரிசுத்தமாக இருத்தல்
வேண்டும்? ஏனென்றால் பவித்திரத்திற்கே இருப்பிடமாம் மூர்த்தி
அடிக்கடி குருவின் தன்னெஞ்சையே உறைவிடமாகக் கொண்டுவர
வேண்டியவர் அன்றோ? அவர் வாய்ப்பிறக்கும் சொல் சுத்தமாகவும்,
நலமாகவும், கம்பீரமாகவும் இருத்தல்வேண்டும். அவர் அடிக்கடி
கிறிஸ்துவின் ஞானஸம்ஸ்காரமுறையைத் தன்னுட் பெறுகின்றால்
லவா? கிறிஸ்துவின் திவ்விய சரீரத்தைப் பார்க்கும் அவர் கண்கள்
நேர்மையுடனும், ஒரே லக்ஷியம்பற்றியும், பண்பு அமைந்தும் இருத்



தல்வேண்டும். மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் சிருஷ்
டித்த நாதனையே தொடும்கைகள் சுத்தமாகவும் மேல்நோக்கிய
தாகவும் இருத்தல்வேண்டும். எல்லோருக்கும் சொல்வதுடன்
முக்கியமாய் குருக்களுக்கு (Priests) தர்மசாஸ்திரம் சொல்லுகிற
தாவது:—

"நீங்கள் பரிசுத்தமாக இருப்பீர்கள். ஏனெனில், உங்கள்
இறைவனும் இரக்ஷகனுமான நாம் பரிசுத்தமாம்."

எல்லாம்வல்ல கடவுளே! உம்முடைய ஸ்பரிசத்தால் எங்களை
உதவி செய்யும். 'குரு' என்ற உயர் உத்தியோகம் வகிக்கப்பெற்று
உள்ள நாங்கள் நேர்மையாகவும் சத்தியமாகவும் பண்பாகவும் உம்
முடைய கைங்கரியங்களை அடிமைகள்போல் நடத்தும் வண்ணம்
எமக்கு அருள் உதவி புரியும். குற்றங்குறைகளின்றி நாங்கள் வாழ்
நாள் கழிக்க இயலாவிடினும், என் குற்றங்களை நினைந்து உண்மை
யாய் அனுதாபப்படும்படியாகவாவது அருள்புரியும். பணிந்த மன
முடனும் நலமுள்ள சிந்தையுடனும் அதிக அன்புடனேயும் இனி
நிற்கும் நாளை உம்முடைய கைங்கரியத்தில் செல்லாநிற்கும்படி
அனுக்கிரகிப்பீராக.

## 12-வது அதிகாரம்.

### ஐக்யநிலைபெற விரும்புவான் நனி கவலையுடன், கிறிஸ்துவின் வரவுக்காகத் தன்னை ஆயத்தம்பண்ண வேண்டுதல்.

அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

நானே பரிசுத்தத்தில் விருப்புடையவன். சிரேயஸ் எல்லாம்
கொடுப்பவன். மாசற்ற மனம் எனக்கு வேண்டுவது. அது என்
உறைவிடம். ஆகவே அத்தன்மையான விசாலமான உறைவிடம்
எனக்கு ஆயத்தம் செய்வாய். நாமும் எம் சீஷர்களும் விடுதலை
உற்சவமாகிய (Paschalfeast) விருந்தை உன்னுள்ளத்தில் வந்து
தங்கிச்செய்குவோம். நான் உன்னிடம் வரவேண்டும் எனவும்
உன்னிடம் குடிகொள்ளவேண்டுமெனவும் இருப்பின் பழைய உலக
விஷயதாபத்தை நீக்குவாய். உன் உள்ளமான என் ஆலயத்தைச்
சுத்தம் செய்வாய். உலக விஷயங்கள் அதின்கண் பிரவேசியாமல்
தடுப்பாய். பாவக்குரல் அதில் நுழையாமல் தவிர்ப்பாய். அடைக்

கலான்குருவி வீட்டின் உச்சியில் தனிப்பட இருக்கின்றவாறுபோல நீயும் ஏகாந்தத்தை நாடுவாய். மனம் நைந்து உள்ளம் கனிந்து பாவங்களை நினைந்திடுவாய். அன்புடையான் தன் அன்பிற்குரியாருக்கு அழகும் பண்பும் நிறைந்த ஆலயம் அமைப்பிப்பான். அஃது அவன் அன்பின் அளவை வெளிக்காட்டும். ஆயினும் உன் யோக்கியதையால் நான் உன்னுடன் இடங்கொள்வேன் என்று உன்னற்க. மற்றொன்றையும் கருதாமல், என்னையே நினைப்பாய். ஒரு வருஷ காலம் உன்னை ஆயத்தம் செய்திடினும் என் வரவுக்கும் நான் தங்கவும் அது போதுமான ஆயத்தமென்று நினைக்கின்றாயா? (அது அன்றாம் என்றபடி.) *நானே உனக்கு அருள்புரிய வேண்டுமென எண்ணுகிறேன். என் அன்பின் பெருக்கமும் என் கருணையின் விரிவும் நீ என்னை அணுகச்செய்கின்றது காண். வலியவன் விருந்துக்கு எளியவனை அழைத்தல்போலும். இந்நலத்திற்கு எளியவன் என்ன கைம்மாறு செய்வான்? பணிவும் வந்தனமும் அன்றி வேறு என்ன அவனால் முடியக்கூடியது? (அன்று என்றபடி.)

உன்னால் இயன்றதைச் செய்திடுவாய். அதனைச் சிரத்தையுடன் முடிப்பாய். அது செய்யவேண்டிய வழக்கமுறை. அஃது உன் கடமை என நினைத்து முடிக்கிறதில் பலனில்லை. பயபக்தியுடனேயும் அன்புடனேயும் அதைச் செய்வாய். பிரீதியாய் நாதரை உன்னிடம் அழைப்பாய். அன்பினால் கடவுளே உன்னிடம் வர அருள் புரிகின்றார். உன்னை அழைத்தது நானே. என் ஆக்ஞைப் பிரகாரம் அது நடக்கிறது. உன்னிடம் உள்ள குறையை நான் நிறைவு பண்ணுகின்றேன். வருகின்ற எனக்கு உன்னுள்ளத்தில் இடங்கொடு.

2. என்னை உபாஸிக்க உனக்குச் சக்தி கொடுக்கின்றேன். அதற்காக நீ கடவுளைப் போற்றுவாய். நீ யோக்கியதை உளன் என எண்ணாதே. நான் உன்னைக் கண்டு இரங்கினேன் எனக் கருதுவாய். ஒருகால் மனம் ஈரமில்லாமல் வற்றியிருக்கும். சக்தி பொய்த்துப்போயிருக்கும். ஆயினும் ஈசுவர உபாஸனையை நடத்துவாய். மனத்தை நொந்துகொள்ளுவாய். அடிக்கடி பயின்றால் அன்பின் அறிகுறியான ஒரு திவலை கண்ணீராவது ததும்பும். அதனால் மனம் திடப்படும். உபாஸனையும் நடைபெறும். என்னை நீ

*"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" (மாணிக்கவாசகர்.)



உன்னுள்ளத்தில் வைக்காமையே உன் குறை; உன்னை நான் என்னிடம் வைக்காமை யன்று. நீ என்னைத் தூயனாக்கப்போகிறதில்லை. நான் உன்னைத் தூயனாக்கி நீ மேம்பாட்டை அடைய உன்னிடம் உறைகிறேன். உயர்நலம்பெற நீ என்னிடம் வருகிறாய். என்னுடன் ஐக்கியம் பெற விரும்புகிறாய். என்னிடம் புதிய அருள் அடைய அணுகுகிறாய். முன்னிலும் உயர் ஒழுக்கமுறையை நாடி விரைவில் பிரகாசிக்க நினைக்கிறாய். பிரார்த்தனை ரூபமான உபாஸனையை விடாதே. உன் மனத்தைச் சிரத்தையுடனே ஆயத்தம் செய். உன் அன்பிற்குரியர் அதின்கண் உறையும்படி நட. அவரை அழைத்திடு.

3. ஐக்யநிலை அடையும்வரை மாத்திரம் உன் மனதைத் தூய்மையாகவும் அதில் நல்ல எண்ணங்கள் அமையவும் இருக்கச் செய்தல் போதாது. ஞானஸம்ஸ்காரம் அடைந்தமேலும் அதிக பக்திசிரத்தையுடனே பரிசுத்தமான அவ்வெண்ணம் என்றும் உன் மனத்தில் தங்கும்படி செய்யவேண்டும். அவ்வுயர்நலம்பற்றிய நிலை அடையும்முன் நல்ல சிந்தை இருத்தல் பெரிதே. அந்நிலை அடைந்தபின் தம்மைக் காத்துக்கொண்டு எச்சரிப்புள்ளவனாய் இருத்தல் அதனினும் பெரிது. தம்மைப் பாதுகாத்தலே, இனி மேன்மேலும் அருள்வரவுக்கு நெறியாம். உலக சுகத்தை நாடிச் சித்த விருத்திகள் உண்டாகில், பின்பு ஐக்யநிலை பற்றிய ஞானஸம்ஸ்காரத்தை நோக்க மனம் இயலாது. அதிகப் பேச்சைத் தவிர். ஏகாந்தத்தை நாடு; இறைவனைத் தியானத்தில் சுகி. உலகெல்லாம் ஒருங்கே கூடினும் அவரை உன்னின்று கொண்டுபோக இயலாது. அவரே நான். உன்னை முற்றும் எனக்கு அர்ப்பணம் செய். இனி நீ தானாய் ஜீவிக்கிறேன் என்ற நினைப்பை விடு. எல்லாக் கவலையும் தவிர். என்னிடத்திலேயே நீ ஜீவிக்கக்கடவாய்.

## 13-வது அதிகாரம்.

### அன்புள்ள ஆன்மா ஞானஸம்ஸ்காரமுறையில் கிறிஸ்துவுடன் ஒருமைப்பட்டு இருக்க முழு மனத்துடனே அவா உள்ளதாக இருத்தல்வேண்டுமென்பது.

பக்தனுடைய வாசகம்.

என் நாதனே! உம்மைக் கண்ணுறவும் என் மனத்தை உம்மிடம்

[illegible] என்னுள்ளத்தில் தங்கவும் அருள்புரி வீராக. [illegible] என்னை நோக்காது இருக்கட்டும். சிரு [illegible] என் மனத்தைப் பேதிக்காமலிருக்கட்டும். என்னை [illegible]த்தாமலிருக்கட்டும். நீர் என்னுடனும் நான் உம்முடனும் மாத்திரம் சம்பாஷிக்கட்டும். நாயகன் நாயகி [illegible]ர்கள்போன்றும் நாமிருவரும் இருக்க அருளு வீராக. என் [illegible] என் பிரார்த்தனையும் இதுவாம். [illegible] ஞானஸம்ஸ்காரமுறைபற்றிய திருவிழாவைக் கொண் டாடி, [illegible] உலக வியாபாரங்களினின்று என் மனத் தைத் திருப்பி, [illegible]த்துவத்தையும் அமிரதத்துவத்தையும் யான் அனுபவிக்க [illegible]வதாம்.

என் இறைவா! என் கர்த்தரே! உம்முடன் எப்போது ஒன்று படுவேன்? உம்முடன் எப்போது ஐக்யமாவேன்? உம்மையே நாடி எப்போது இருப்பேன்? என்னை எப்போது முற்றும் மறந்தி டுவேன்? நீர் என்னிடமும் நான் உம்மிடமும் வேற்றுமையின்றி என்று இருப்போம்? இவ்வண்ணம் இரண்டற ஒன்றாகவே இருக்க அருள்வாய். நீரே என் அன்பிற்கு உரியவர். நீர் பல்லாயிரர்களில் ஒருவரே ஒருவர். என் வாழ்நாள் முழுமையும் உம்மிடத்திலேயே உறைவிடமாக இருக்கவே விரும்புகிறேன். நீரே எனக்குச் சாந் தம் அளிக்கும் மூர்த்தி. நீரே சாந்தம். நீரே எனக்கு உண்மை யான அடைக்கலம். உம்மைவிட்டு விலகில் எனக்கு முடியாத் துன் பமும் துயரமுமேயாம். உண்மையாய் நீர் மறைந்து உள்ளீர். தீய வருக்கு உம்முடைய[illegible] அன்றாம். நலனும் பண்பும் உள்ளாருக்கு உம்முபதேசம் உரித்தாம். என் கர்த்தாவே! உம் கருணை எத்தன் மையது என்று சொல்லுவேன்? விண்ணின்று வரப்பெற்ற ருசி யான [illegible] உம் அன்பர்கள் உண்பான் அருள்புரிந்த தன்மை யால் உம் கருணை விளங்குகிறது. உலகின்கண்ணுள்ள ஜாதியார் கள் தங்கள் தேவர்களைத் தம்பால் இருக்கப்பெறும் பெரும்பாக்கியம் நீவிர் எங்களுக்கு இருக்கும் தன்மைபோல் பெற்றார்களில்லை; நீர் உம்மன்புடையாருக்கு நண்ணியவராகிறீர். உம்மையே அவர் உண் ணும்படி உம்மைத் தியாகஞ்செய்தீர். அவர் நடைபெறும் வழியில் நீர் உயர்த்தினீர். [illegible] அவர் பெறுவான் அவரைக்கைதூக்கி விடுவீர். [illegible]போன்று எந்த ஜாதியார் மேம்பாட்



டைப் பெற்றுள்ளார்? இறைவனே சரீரமெடுத்து அவரிடத்து அன்புடையார் உள்ளத்தில் உதயமாகி ஆறுதலான அமுது ஊட் டப்பெற்ற ஞானசிலனைப்போல அன்புக்குரியான் ஆகாயத்தின் கீழ் வேறு யாருள்ளான்? வாக்குக்கெட்டாத கருணையே! ஆச்சரி யமாம் இரக்கமே! மனிதனுக்கே என்று ஏற்பட்ட அளவுகடந்த அன்பே! இதற்கு யான் என்ன கைம்மாறு செய்வேன்? இத்தகைய உயர்நலத்திற்கு நான் என்ன பிரதிபலன் கொடுக்கவல்லேன்? என் மனத்தை முற்றும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்தலும் அவரு டன் ஐக்யப்படுத்தலும் அன்றி வேறு யாது என்றால் செய்யற்பா லது? அதனால் என் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளிக்குதிக்கும்; கூத்தாடும்; இறைவனிடமே இரண்டற ஒன்றுபட்டிருப்பேன். அந்நிலையில் அவர் இவ்வண்ணம் வாக்களிப்பர். "நீ என்னுடன் இருக்கின்றாயா? யான் உன்னுடன் இருக்கின்றேனே" அதற்கு இவ்வண்ணம் மறுமொழி செய்திடுவேன். "என் ஈசா! எனக்கு இரங்கி என்னுடல் இடங்கொள்ளும். உம்முடன் உறைய விரும் பாநின்றேன். என் அவாவின் எல்லை இதுவாம். என் ஆன்மா உம்முடன் ஒன்றுபடுத்தலேயாம்."

## 14-வது அதிகாரம்.

### அன்பர்களில் சிலர், கிறிஸ்துவின் சரீரத்தியாகப் பிரதீகத்தையே சிந்திக்க விரும்புதல்.

அன்புடையான் உள்ளத்தில் சிந்தனை.

கர்த்தரே! உம்மேல் பயபக்தி பாராட்டுகின்றவர்களுக்கு எத் துணை மாதிரியான இன்பவாரிகளை அர்தர்கதமாய் நீர் ஏற்படுத்தி யுள்ளீர்! கர்த்தரே! உம்முடைய ஞானஸம்ஸ்கார முறையை நாடி பிரவர்த்திக்கின்ற நல்லோர்களின் மிகுதியான அன்பையும் உயர்நலத்தையும் நான் சிந்திக்கையில் எனக்கு எக்கமும் வெட்க மும் உண்டாகிறது. உம்முடைய பலிபீடத்திற்கும் ஞானஸம்ஸ் காரமுறையின் உயர்வானஸ்தானத்திற்கும் வன்னெஞ்சனாகிய நானு

முயலற்பாலது? *என் நெஞ்சில் சற்றேனும்ஈரமில்லை என்னுள்ளத்தில் கொஞ்சமேனும் இரக்கமில்லை. இறைவ! உம்முன்னர் தபித்திலனே! என் மனம் தீவிரமாய் உம்மிடம் பற்றவில்லையே! அன்புடையார்போல என் சிந்தை வருந்தித்தயங்கவில்லையே! அன்பினால், உருகி அவாவினால் தபித்து மனம்நொந்து தம்மால்தடுக்கொண்ணாத கண்ணீர்வாரி அன்னார்போல் எனக்குப்பெருகவில்லையே! கடவுளே! வற்றாத ஊற்றுக்கண்ணே! அன்னார் உள்ளமும் உடலும் ஒன்றுபட்டு ஊனே உருகி வாயால்போற்றி செய்வார். நல்லெண்ணத்துடனும் தீவிர ஆவலுடனும் உம்முடைய சரீரத்தியாகமுறையை உட்கொள்ளவும் அனுஷ்டிக்கவும் அவர்களுக்கு உள்ளதாகமும் விருப்பமும் வரம்புமீறியிருக்கின்றன. அவர்களுடைய பக்தியின் உறுதிப்பாடும் தாபமும் என்னவென்பேன்! நீரே! அவர் உள்ளம் உறைவிடமாகக் கொண்டிருக்கின்றீரென்பதற்கு அது தெளிவான சான்றாம். திருவிழாவில் ரொட்டியைப்பங்கிடும் கிரியையில் அவர்கள் கர்த்தரையே உண்மையில் சிந்தித்துள்ளார். இயேசுவே அவருடன் இருக்கின்றமையால் அவர்மீது அவர் உள்ளத்தில் அன்பு மேன்மேலும் பொங்கிக்கொதிக்கின்றது. இத்தன்மையான அன்பும் தாபமும் பக்தியும் ஊக்கமும் என்னிடம் இலவே. அவைகளுக்கும் எனக்கும் வெகுதூரமே.

2. இயேசுவே! அன்பே! இனிமையே! நன்மையே! என்மீது இரங்குவாய்; உம்மிடம் என் மனம் பற்றி அடிக்கடி ஞான ஐக்ய ஸம்ஸ்காரமுறையில், அன்பு பாராட்டுவோன் ஏழையாகிய எனக்கு அருள்வாய். அதனால் என் பக்தி உறுதிப்படும். உம்முடைய நலத்தில் என் நல் நம்பிக்கை அதிகரிக்கும். அந்த ஜ்வாலை மூட்டவும் ஞான உணவு ருசிதட்டவும் என் அன்பு இனிமேல் தவறாது. சோராது. உம்மருள் சக்தி விரும்பியவாறு நலம் தரும். உமது அருள் வாய்க்குங்காலத்தில், பக்தி என்னுள்ளத்தில் பிரபலமாகி நீரே என்னிடம் வர இணங்குவீர். முக்கிய பக்தர்கள்போன்று

*“பதையேன் மனமிக உருகேன், பரிகுவேன்
பரியா உடல்தனைச் செற்றிலேன்.”
“வன்பராய் முருடொக்கு மென்சிந்தை மரக்கண்
என்செவி யிரும்பினும் வலிது.” (மாணிக்கவாசகர்.)



பதையேன். மனமிக உருகேன். ஆயினும் உம் உயர்நலம் பெற்ற தொழும்பில் யானும் ஒருவனாகும்படியான தாகமும் அன்பின் மிகுதியும் ஏக்கமும் உம்மருளால் எனக்கு வரவேண்டுமென விரும்புகின்றேன்.

## 15-வது அதிகாரம்.

### பண்பினாலும் பணிவினாலும் தியாகத்தினாலும் இறைவனைப் போற்றும் பாக்கியம் கிடைக்கத்தகாதது என்பதாம்.

அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

பக்தியுள்ளவனாக இருக்க ஊக்கத்துடன் முயலு. கவலையுடன் அதில் கண்ணாயிரு. நல் நம்பிக்கையுடன் அஃது உன்னிடம் உண்டாவதை எதிர்பார்த்திரு. அது உண்டாக நீ வந்தனத்துடன் அதை ஏற்றுக்கொள். பணிவுடன் அதைக் காப்பாற்று. விசுவாசத்துடன் அதன்மூலமாய் வேலைசெய். பக்தி என்ற இந்தத் தெய்வ சம்பத்து உன் உள்ளத்தில் உண்டாகும் காலம், கால்நீட்சி, முறை இவைகளை இறைவன் இஷ்டம்போல நிகழட்டும் எனக் கருது. அவரே தாம் உன்னிடம் வர அருளுவர்.

உன்னுள்ளத்தில் நல்ல பரிசுத்தமான ஈசுவர சிந்தனைகள் அற்பமாக இருப்பினும் அல்லது முற்றும் இல்லாவிடினும் அதைப் பற்றி நீ உன்னைத் தாழ்மைப்படுத்திக்கொள். ஆனால் அதற்காக நனி வருந்தற்க. அளவுகடந்த விசனம் கொள்ளற்க. பல நாள் இல்லாதது ஈசன் அருளால் ஒரு கணப்பொழுதில் பலமுறை உனக்கு சித்திக்கும். சில சமயத்தில் அவரைப் போற்றி செய்து பிரார்த்திக்க ஆரம்பத்தில் அவர் அனுக்கிரகிக்காதது அந்தியத்தில் அவர் அருளப்பெறுவோம். அவர் அருள் ஸ்பரிசம் லகுவாய் நினைத்தமாத்திரத்தில் கிடைக்குமாகில் மனத்தளர்ச்சியுள்ள சாமானிய ஜனங்கள் அதைத் தாங்கமுடியார். ஆகையால் நன்னம்பிக்கையுடனும் பணிவும் பொறுமையுடனும் ஈசுவரபக்தியும உபாஸனையும் புரிய சக்தி உனக்கு *என்றுவருமென எதிர்பார்க்கக்கடவாய்.

*“இன்றுவருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்று
என்றுவருமோ யானறியே னென்கோவே—துன்றமல
வெம்மா யையற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா விருக்கும் சுகம்.” (திருவருட்பா.)

அப்படி எதிர்பார்த்தது கிட்டாவிடினும், அத்தன்மையன்றே நிலை உன்னைவிட்டு விலகினும், அவ்விதம் நிகழ்தலுக்குக் காரணம் உன்னிடமே உளது என எண்ணுக. உன்பாவங்களே காரணங்கள் எனக்கருதுக. ஒருகால் ஒரு அற்ப விஷயம் அதற்குத்தடையாக நேரிடும். அஃது அற்பமாயினும் இவ்வுயர்வான அருள்வரவைத்தடுக்கும் தன்மையுடையது பெரிதன்றோ? இத்தடை சிறிதேனும் பெரிதேனும் அதை நீ நீக்குவாயாகில் நீ விரும்பியது உனக்குக்கைகூடும். ஏனெனில், உன்பிரியத்துக்கு ஒற்றமையாயும் உன்மனத்துக்கு அனுகூலமாயும் இது வேண்டும் இது வேண்டாம் என்ற பாவங்களை முற்றும்விட்டு உன் உடல் பொருள் ஆவிகளை இறைவனிடம் அர்ப்பணம்செய்து அவரிடம் உன்மனத்தை நிலைத்திருக்கும்படி செய்தவுடனே அவரோடு ஏகீபாவத்தை அடைவாய். உபசாந்தி பெறுவாய். அப்போது அவர் பிரியமும் அவர் கருமமும் தவிர மற்றையது உனக்கு ருசியாது. உனக்குப்பிரியம்தராது. *எவன் தன் மனத்தை ஒருங்குபடுத்தி ஓரே எண்ணத்துடனே எவன் விஷயாதிகளினின்றும் அகன்று தன் அன்பை விடுவித்தவனோ எவன் சிருஷ்டிப் பொருள்களின் விருப்பு வெறுப்புக்களை அற்றவனோ அவனே அவர் அருள்பெற உற்றவன். அவனே அவர் உயர்உபாசனைபுரிய உரியவன்.

மனம் மாசின்றி வெறுமையாக இருப்பின், ஈசன் அருள்புரிவார் கீழானவை முற்றும் துறக்குமளவும் தன்னை அற்பன் என இகழுமளவும் தன்னைமுற்றும் மறக்குமளவும் அவ்வருள் சக்தி வெள்ளம் மேன்மேலும் வருவதாகும். களங்கம் நீங்கின நெஞ்சம்மேல் நோக்கிச்செல்லுவதாகும்.

2. "அதன்பின்னர் அகக்கண் திறக்கும். அவர் தரிசனம் கிடைக்கும். தனக்குள்ளே ஆச்சரியங்கொள்வன். தன்மனம் அகலும். பூரிக்கும்." இத்தன்மைய நிகழ்ச்சிக்குக்காரணம் இதுவாம். கடவுள் அருள்சக்தி அவனிடம் இறங்கியிருக்கின்றது. ஏனெனில், அவரே என்றும் அடைக்கலம் எனத்தன்னை அவர் கையில் ஒப்பித்திருக்கிறான், வீண்விஷயாதிகளில் தன் மனம் பற்றாமல்தடுத்தும் தன்மனத்தை

*"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்." (குறள்.)



முற்றும் அவரிடம் வைத்தும், அவரையிடையறாமல் நாடுகிறவன் இவ்வண்ணம் அருள்பெறுகிறான் காண். தேவநற்கருணைபெறவும் ஈசனை ஸ்தோத்திரம்செய்ய மனமிளகவும் கடவுளுடன் ஐக்யமாகிறான். அப்போது *தன் நன்னினைவும் தன் ஆன்மசுகந்தனைவும் அவனுக்கு அன்றும். இவைகளுக்கெல்லாம் மேலானவும் மனவாக்குக்கடந்தவுமான ஈசுவர மஹிமையையும் §உயர்நலத்தையும் உள்ளத்தில் தரிசிக்கிறான். அனுபவிக்கிறான்.

## 16-வது அதிகாரம்.

### கிறிஸ்துவிற்கு நம்முடைய வேண்டுதலை வெளியிட்டு அவர் அருள்வரவைக் கோரல்.

அன்புடைய சீஷன் உள்ளத்தில் சிந்தனை.

இனிய கர்த்தாவே! அன்புடைய் நாதரே! பரிசுத்த சிந்தனைகள் உள்ளவனாய் உம்முடைய வரவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். என்னுண்மையை நீர் அறிவீர். என் குறைகள் உமக்குத்தெரியும். நான் பாவங்களாலும் தீமைகளாலும் கட்டுண்டிருக்கிறேனென்று நீர் அறிவீர். அவைகளால் அழுந்தப்பெற்றும் மனச்சஞ்சலமடைந்தும் சித்தம் தத்தளித்தும் புத்தியை மருள்மூடி மயக்கியும் நான் அவதிப்படுகின்றேன். பரிகாரம்பெற உம்மிடம் வருகிறேன். ஆறுதலும் ஆதரவும் அடைய உம்மைப் பிரார்த்திக்கின்றேன். உம்மிடம் என்னுள்ளத்திலுள் என்னை முற்றும் அறிந்திருக்கின்றீர்.

*"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன் நீயலாற்
பிறிதுமற் றின்மை." (மாணிக்கவாசகர்.)

§உயர்நலம்—பேரானந்தம்.

ளதைச் சொல்லுகின்றேன். என் அந்தரங்கம் முழுமையும் உமக்கு நன்றாய் வெளியாகியிருக்கிறது. நீரே எனக்கு ஆறுதலும் பூர்ண உதவியும் அளிக்க இயலும். என்னுடைய குறைவும் வேண்டுதலும் இதுவென நீர் அறிவீர். சீலத்தினால் கீழ்மையானவன் எனவும் அறிவீர். யாதொன்றும் பற்றிலாதவன், ஏழைதான். உமது அருள்வேண்டி உம்பிரகாசத்தைநாடி மனம்தபித்து உம்முன் மன்றாடிநிற்கின்றேன்.

2. மன்றாடி வருந்துகிறவன் தாபத்தைத் தீரும். அணைந்திருக்கின்ற பக்தி என்ற அக்கினியை என்னுள்ளத்தில் மூட்டும். உம்முடைய தர்சனத்தின் ஒளியால் என் மருளை விலக்கும். உலக விஷயங்களில் நான் கசப்புறும்படி செய்யும். எச்சங்கடங்கள் நேரிடினும் அவை சகிக்கப் பொறுமையை அருளும். அற்ப சிருஷ்டிப் பொருள்களை நான் மறக்கும்படி செய்யும். விண்ணுலகில் இருக்கின்ற உம்மேல் என்னுள்ளம் நோக்கச் செய்யும். உலகத்தில் என் மனம் திரியாமல் இருக்கும்படி நடத்தும். இப்போதும் எப்போதும் நீரே எனக்கு மேன்மேலும் இனிமையாக ஆகுகின்றீர். என் உணவும் நீர். என் பானம் நீர். என்னுயிர் நீர். என் இன்பம் நீர். என் நலமெலாம் நீரே. நான் செய்யப்புகும் ஒவ்வொரு கருமங்களின் பின்னமில்லா நன்னயமான வழியும் நீர். நான் நாள்முழுதும் நினைக்கும் நினைவும் நீர். உம்மைக் காணவேண்டுமென்னும் அவாவினால் இரவில் தோன்றும் தூய்ய கனவும் நீர். உள்ளன்பால் என் மனத்திடை மலிந்த ஒளியும் நீரே. உவகையும் நீரே. ஆகையால் உம்முடைய பரிபூரண தரிசனம் எனக்குக் காட்ட அருளுவீராக. தபிக்கின்ற அன்பின் அனலால் நம்மிருவர் உள்ளமும் இரண்டறக் கலப்பதின் வாயிலாய் நாமிருவரும் ஏகமாகும்வண்ணம் என்னைத் தகித்து உம்மோடு ஐக்யப்படுத்துவீராக. பசியால்வருந்தி நாவுலர்ந்து நான் உம்மைவிட்டு அகலாமல் இருக்க அருளும். முன்னே ஞானிகளை நீர் அற்புதமாய் ஆதரித்து இருக்கின்றீர். அதுபோல் என்னையும் உங்கருணைக்குப்பாத்திரவானாக ஆக்கும். நான் என்ற பாவம்செத்து என்மனம் முழுதும் உம்மால் அன்பு அக்கினியால் தபிக்கில் அதுவே ஒரு ஆச்சரியம் அன்றோ? அணையாத என்றும் தபிக்கும் ஓர் அக்கினி நீர். மனத்தைத் தூய்மைப்படுத்தும் அன்பு நீர். நெஞ்சின் இருளைப்போக்கும் ஒளி வெள்ளம் நீர்.



## 17-வது அதிகாரம்.

### கிறிஸ்துவைப் பற்றி ஒழுகத் தீவிர அன்பும் தீவிர அவாவும் வேண்டும் என்பது.

அன்புடைய சீஷன் உள்ளத்தில் சிந்தனை.

என் கர்த்தாவே! *என்னுள்ளம் கனிந்து அகங்குழைந்து மனமுருகிப் பரிசுத்த சிந்தனைகள்கொண்டு அன்பு அக்கினியால் தபித்து நான் உம்மைப்பெற விரும்புகிறேன். மாசற்ற ஒழுக்கமுறையாலும் தீவிர அன்பு உபாசனைகளாலும் உம்மைத் திருப்திபண்ணியிருக்கின்ற அநேக ஞானிகள் பக்தஜனங்கள்போன்றும் யானும் நீர் என்னுள்ளத்தில் உறைவிடம்கொள்ள ஆசக்தியுள்ளவனாகவிருக்கிறேன்.

என் சுவாமி நீர். நித்தியமான என் அன்பு நீர். என் நன்மை நீர். ஈறிலா என் இன்பம் நீர். உம்முடைய பக்தர்களில் உம்[illegible] எவரெவர் உயர்வான பக்தியும் அன்பும் பாராட்டி இருக்கின்றார். அம்மாதிரியான தீவிரமான பக்திசிரத்தையுடனே என்னிடம் உம்முடையவரவை மிக்க அவாவுடனே வேண்டுகிறேன். அவர்கள் போன்று உயர்வான மனோபாவங்கள் என்னிடம் இல்லாவிடினும் அப்பாவங்கள் என்னுள்ளம் இருக்கின்றவாறுபோல் என்மனச்சக்திக்கு இயலும் அன்பும் பிரியமும் உமக்கு அர்ப்பணம் செய்கிறேன். அன்பின்மிக்கார் என்ன என்ன சிந்தனை கொள்ளுவாரோ என்ன என்ன விருப்பம் பெறுவாரோ அவையெல்லாம் மிக வணக்கத்துடனும் உள்ளன்புள்ளவனாயும் உம்முடைய பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். உமக்கு மறைவாய் யான் ஒன்றும் ஒளித்தேனில்லை. மனப்பூர்வமாய் யாதொரு தகுதடையின்றி ஒரு பலிபீடத்தில் போன்ற என்னையும், எனக்குள்ளது யாவையும் உமக்குத் தியாகம் செய்கிறேன்.

ஆண்டவரே! என் கர்த்தாவே! என் ரக்ஷகரே! அந்நாள் அதாவது உம்முடைய பரிசுத்த மாதா உயர்நலம் பெற்ற கன்னி

---

*"அன்போ டுருகி யகங்குழைந் தார்க்கன்றி
என்பொன் மணியானை யெய்த லொண்ணாதே." (திருமந்திரம்.)

கைப் பருவமுள்ள மேரி அம்மையார் உம்மைக் கருப்பம் [illegible] நாளில், தேவதூதனை நீர் அந்தக் கர்ப்பத்தில் அவதரிக்கிற சமாசாரம் சொல்லப், பணிவுடனும் பக்தியுடனும், அம்மையார் அதைக்கேட்டு உத்தரம் சொன்னதாவது— "இதோ ஆண்டவருடைய ஏவற்பெண் யான் ஆனேன். உம்முடைய வாக்கு என்னிடம் பலிக்கட்டும்." அத்தகைய எண்ணமுள்ளவளாய், அத்தகைய ஸ்தோத்திரம் வணக்கம் உடையவளாய், அத்தகைய நன்றி [illegible] அன்பு நிறைந்தவளாய், அத்தகைய நல் நம்பிக்கை பக்தி [illegible] உள்ளவளாய், இன்று நீர் என்னுடைய டம் கொள்ள விரும்புகின்றேன்.

ஒப்பும் உயர்வுமில்லா ஞானியாரும் உம்முடைய [illegible] குளிப்பித்தவருமான ஜான் என்பார் (John The Babtist) [illegible] தம்தாயின் கர்ப்பத்திலிருக்கின்ற நிலையிலேயே நீர் அவதரித்திருக்கிறீரெனத் தெரிந்து, பேரானந்தத்தால் பூரித்தப் பின்னர் வெகு காலம் சென்றமேல் மனிதனுடன் மனிதராய் இவ்வுலகில் சஞ்சாரம் பண்ணும்நாளில், அவரைக் கண்ணாரவும் உடல் [illegible] பரிந்து அன்புசார் மொழிகளை அடியில் வருமாறு [illegible] "மணவாளன் தோழன் இங்கே நிற்கின்றான், மணவாளனுடைய வாக்கைக் கேட்கின்றான். அதனால் ஆநந்திக்கின்றான்." [illegible] தன்மையைப்போல உயர்வான சுத்தமான விருப்பங்கள் [illegible] பெற்றுப் [illegible]க்குமாறு நானும் இச்சிக்கின்றேன். [illegible] னையே உமக்குக் கொடுக்க விரும்புகின்றேன். பக்திமான்கள் [illegible] ளத்தில் பொங்கிப் பெருகுகின்ற ஆனந்தக் கூக்குரல், [illegible] அன்பு, மனக்களிப்பு, அருளால் தோன்றும் உயர் [illegible] ளால் லபிக்கும் தர்சனங்கள், மண்ணுள்ளும் விண்ணுள்ளும் இருக்கின்ற சிருஷ்டிகளினின்று எழும் ஸ்தோத்திரங்கள், [illegible] நன்மைகள், என் பொருட்டும் நான் வேண்டுவோரின் பொருட்டும் செய்ததும் இனி செய்யப்பெறுவதுமான ஸ்தோத்திரங்கள் இவை எல்லாம் உமக்கு அர்ப்பணம்செய்கின்றேன். [illegible] செலுத்துகிறேன். எல்லாரும் உம்மைத் தக்கபடிப் போற்றி செய்வாராக. என்ஞான்றும் உம்முடைய மஹிமை விளங்குவதாக.

2. ஸ்வாமி! என் இறைவனே! என் ஸ்தோத்திரங்களை [illegible] காரம் பண்ணும். முடிவில்லாமல் என்றும் உம்மைப் போற்றி செய்ய எனக்குள்ள ஆசையை ஏற்றுக்கொள்ளும். [illegible]



ஆசீர்வதிக்கவும், பலவாறாகப் பரவியிருக்கின்ற உம் உயர்நலத்தைப் பற்றி உற்றவாறு வாழ்கள் பாடவும், எனக்கு அனுமதி கொடும். உமக்கு இவையெல்லாம் நான் தருவேன். இனி நாள்தோறும் ஒவ் [illegible] நிமிஷமும் நான் கொடுப்பேன். நான் போற்றுவேன். [illegible]ண்ணிலும் உள்ளஜீவர்கள் எல்லாரையும் உம்மைப்போற்றும்ப[illegible]செய்வேன். உம்முடைய பக்தஜனங்கள் எல்லாரையும் உம்மைஸ்தோத்திரம் செய்யும்படி அழைப்பேன். எல்லா ஜாதியாரும் எல்லாப் பாஷைகளும் உம்மைப் போற்றி செய்யட்டும். உம்முயர் நாமம் ஓங்குக. உம்முடைய சுத்தமான பெயரைப் பக்தர்கள் அன்பால் ஆரவாரம் செய்க. உம்முடைய உயர்நலம் வாய்க்த ஞான ஸம்ஸ்கார முறைகளை உத்ஸவமாகப் பக்தியுடனேயும், மேலான எண்ணங்களுடனேயும் கொண்டாடுகிறவர்களும் கூட உம்முடைய அன்பிற்கும் அருளுக்கும் பாத்திரவான்களாகட்டும். பாவியாகிய என் நிமித்தமாக அவர்கள் ஸ்தோத்திரங்களும் விண்ணப்பங்களும் செய்யட்டும். அவர்கள் விருப்பமுற்ற உயர்பாவங்கள் அடை[illegible] மேலும், அவர்கள் ஞானமுறையில் ஒருமை அனுபவம்பெற்றமேலும், பூர்ண ஆறுதலும் தாகசாந்தியும் தாபநிவர்த்தியும் அடைந்தமேலும், பின்பு திருவிழாவில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள †உயர்வான விருந்தினர்கள் மேஜையைவிட்டு நீங்கும் காலத்தில் ஏழையாகிய என்னைப் பற்றி நினைக்க இரங்குவாராக.

## 18-வது அதிகாரம்.

### ஒருவன் ஞானஸம்ஸ்கார முறையைப்பற்றிப் பரிசீலனை செய்கிறதைவிட்டுப் பணிவுடனே கிறிஸ்துவின் வழிபட்டு தன் சிந்தனைகள் யாவையும் அவர் நெறிமுறையில் செலுத்தவேண்டியது.

அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

சந்தேகமென்ற சுழியில் அழுந்தி விழாமல் அகலவேண்டுவோன்

† இக்கிரந்தகர்த்தா தன்னை அக்காலத்தில் நினைக்கவேண்டுமென விருப்பம் தெரிவிக்கின்றார்.

பரமரகசியமான ஞான ஸம்ஸ்கார முறையைப்பற்றிய வீண் குதர்க்கங்களையும் பயனில்லா ஆராய்ச்சியையும் செய்யற்க. அதன் மஹிமையை ஆராய்ச்சி செய்யச்செய்ய, அதனால், அவன் நனி நசிக்கப்பெறுவான். ஏனெனில், கடவுள் செயலை எல்லாம் தன் அறிவால் அளக்கக்கூடியவனல்லன். சத்தியத்தைப் பற்றி ஆராய்ச்சியைப் பண்பும் பக்தியுமுடன் செய்யலாமென்பது ஈசன் கருத்தாம். முன்னோர்கள் நெறிமுறைகளைத்தெரிந்து அவைகளைப்பற்றி நடக்கவேண்டிப் பரிசீலனை கூடுமென்பது இறைவன் கட்டளையாம். தெளிவும் உறுதியுமுள்ள இறைவன் ஆக்ஞையான நெறியில் நடைபெறுதல் நேர்மையாம். அஃது உயர்நலம் பயக்கும். தர்க்க விசாரணை நலமன்றாம். அது முட்செறிந்த கஷ்டவழிகளில் கொண்டுவிடும். கம்பீரமான பரமரகசியங்களின் ஆராய்ச்சி செய்யும் விருப்பத்தில் பரமனையே மறந்தவர்கள் அநேகர். நல் நம்பிக்கையும் தூய்மையான அன்பும்தாம் ஒருவனிடம் வேண்டியவை. புத்தி நுட்பமும் கல்விப்பயிற்சியும் வேண்டாவாம். கீழ்க்கடையான விஷயங்களையே மனம் வாங்கிக்கொண்டு அறிய இயலாமலிருக்க, மேலான விஷயங்களைப் பூரணமாகப் பிடித்துவிட முடியுமா! இறைவனைப் பணி. பக்தி செய். அறிவின் பயிற்சியைத் தணி. உன் யோக்கியதைக்குற்றவும் வேண்டுவதுமான ஞானம் அருள்பெறுவாய்.

2. ஞானஸ்ம்ஸ்கார முறைகளைப்பற்றிய சந்தேகங்களினாலும் நம்பிக்கையின்மையினாலும் சிலர் மனம் சஞ்சலப்படுகின்றது. அஃது அவர்களால் வந்த வினை அன்று. சத்துருவாகிய மாயையின் வேலையால் விளைந்தது. வீண் கவலையைத் தவிர். மனத்தில் எழுகின்ற யுக்திகளுடன் போர்புரிதலை நீக்குக; (Devil) மாயாசக்தி உன் உள்ளத்தில் உண்டுபண்ணுகின்ற சந்தேக வினாக்களைக் கவனியாதே. அவைகளுக்கு விடைசெய்யவேண்டுமென நினையாதே. தேவவாக்கை நம்பு. ஞானிகளையும் தீர்க்கதரிசிகளையும் விசுவாசி. தானாகவே கொடிய பகையாகிய மருள் நீங்கும்.

சில சமயங்களில் சந்தேகங்களும் தடுமாற்றங்களும் பக்தர்கள் உள்ளத்தில் உண்டாதல் நலமாம். பாவிகளுக்கும் விசுவாசமல்லாத பாதகர்களுக்கும் இத்தகைய உபத்திரவங்கள் அன்றாம். அவர்கள்



முற்றும் மருளில் அழுந்தினவர்கள் அன்றோ? பக்திமான்களுக்குத்
தான் பலவாறான சந்தேகங்களும் சோதனைகளும் ஏற்படுகின்றன.
அதனால் நேர்மையுடனும் நல்நம்பிக்கையுடனும் நீ கைக்கொண்ட
நெறியில் நடைபெறுவாய். ஞானஸம்ஸ்காரமுறையைப் பணிவுட
னும் பக்தியுடனும் அணுகுவாய். உன் புத்திக்கு எட்டாததைப்
பற்றி நீ கவலை கொள்ளாது இறைவனிடம் ஒப்புவித்துவிடுவாய்.

இறைவன் உன்னை வஞ்சியார். ஒருவன் தன்னையே நம்பி
மோசம் போகிறான். கபடமற்ற மனத்தினரிடம் ஈசன் மகிழ்ந்து
இருப்பார். பணிவுடையாருக்குப் பிரத்தியக்ஷமாவார். *தளர்ச்சி
யுடையவனுக்குத் தைரியத்தைத் தருகிறார்; மனமாசு இல்லாதா
ருக்கு தத்வத்தை விளக்குகிறார்; வித்தையினால் செருக்குள்ளாருக்
கும் வீண் தத்வவிசாரணையுடையாருக்கும் தம்மை ‡மறைத்திடும்
மனிதன் அறிவோ நொய்மையானது. அது தடுமாறும். பக்தி
தவறாது.

---

*"முனிவற நோக்கி நனிவறக் கௌவி
ஆண்எனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்தும் சேண்வையின்
ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்.
... ... ...
"அவன் பக்திவலையில் படுவோன் காண்."

"கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டோன்றி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்."(மாணிக்கவாசகர்.)

‡"உறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந்திரத்திற் காண்டும் என்றிருந் தோர்க்கு
அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்தும்." (மாணிக்கவாசகர்.)

அறிவும் ஆராய்ச்சியும் பக்திநெறிபற்றி நடைபெறல்வேண்டும் முதன்மையில் பக்தி. பின்பு அறிவும் வினவும் அதைத் தொடரவேண்டும்; அதிக நுட்பமான அறிவும் வினவும் நன்மைபயக்கா. இந்த உயர்நலம் அமைந்த ஈசுவர சம்பந்த முறையில், நல் நம்பிக்கையும் அன்பும் எல்லா நலத்தையும் கொடுக்கும்; நாம் அறியாமலே பல வழிகளாலும் சுகிருதத்தைச் செய்விக்கும் நித்தியரான கடவுள் *அளவை கடந்தவர்; வரம்பில்லா சக்தியுள்ளவர். மண்ணிலும் விண்ணிலும் நம் சிற்றறிவுக்கெட்டாத எத்தனையோ பெரிய காரியங்களைச் செய்விக்கிறார். அவர் மஹிமையும் அவர் செயலும் மனிதனின் அறிவால் அளக்கமுடியுமாகில், அவரை ஆச்சரியமானவர் என்றும் அற்புதமானவர் என்றும் அழியாதவர் என்றும் சொல்லுவது எங்ஙனம்?

அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு முற்றும்.

*"உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே."
"முத்தனே முடிவிலா முதலே."
"எண்ணிறந்த எல்லையிலாதானே."

# *புத்தகம் IV.

## 1-வது அதிகாரம்.

### நேர்மையான மனமுடன் $ஆன்மா சம்பாஷணை இடல்.

நன்னுள்ளே ஆறுதலும் தேறுதலும்.

இறைவன், என்னுள்ளத்தில் உரை ஆடுதலை கவனிப்பேனாக! தன்னுள்ளத்தில் இறைவன் உரை ஆடலை அனுபவிப்பவன் பாக்கியமே பாக்கியம்! நேரில், அதன் ஆறுதல் அமைந்த மொழியைக் கேட்டு நம்புகிறவன் உயர்நலம் பெறுவான். நிலையற்ற உலக ஆரவாரத்தைத் தவிர்த்தும், வெளிச் சப்தங்களை ஒழித்தும், மனம் அந்தர்முகப்பட, தன்னுள்ளத்தில் தொனிக்கின்ற ஆன்மாவின் உருக்கமான ரகசிய வசனங்களைக் கேட்கின்ற செவிகளே அருள் பெற்றனவாம். வெளிப்பார்வையற்று இருக்கின்ற கண்களே கிருபை அடைந்தனவாம். இந்திரியங்களை விஷயங்களினின்று திருப்பி உள்ளடக்கியும், உள் நோக்கியும், தினம் தினம் உயர்நலம் பெறக் கருத்தினராய் முயலுகின்றவரே அருள் பெற்றவராம். உலகப்பற்றை

*கடவுளும் ஆன்மாவும் ஒருவரோடு ஒருவர் சம்பாஷணை இடுதல் ரூபமாக இப்புத்தகம் நடைபெறுகிறது.

இப்புத்தகம் சில பதிப்புகளில் 3-ம் புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

$கிறிஸ்து என்ற மொழிக்கு ஆன்மா என்ற பதம் உபயோகித்திருக்கிறேன்.

விட்டு, காலமுழுமையையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய முயலு கின்றவரே உயர்நலம் பெற்றவராம். §

2. என் மனமே! இவ்வழி திருப்புக. இந்திரிய வாயில்களை அடைக்குக. அதனால் உன் உள்ளே உறைகின்ற இறைவன் வாக்குக் கேட்பாய்.

உன் அன்புக்குரிய அவ்விறைவன் வாக்கு இதுவாம்:—உன் சுகம் யான். உன் சாந்தம் யான். உன் உயிர் யான். என்னை அணுகினால் உனக்கு † வீடு உண்டு. தோன்றி மறையும் உலக வாழ்வை விடு. என்றுமுள்ளதை நாடு. காலங்களின் கோலங்கள் எல்லாம் பயனற்றனவாம். அவை பொய்வழியில் நடத்திவிடும். இறைவன் கைவிட்டால், உலக வைபவங்கள் மற்று என்ன பயனுள தாகும்? அதனால், நீ என்னிடம் வருக; எல்லாவற்றையும் துறப்பாயாக; முன்னுள்ளபடி இருப்பாயாக; நேர்மை பற்றுக; அன்பு பாராட்டுக; ‡ மெய்யான ஆநந்தம் பெறுவாய்.

## 2-வது அதிகாரம்.

### உள்ளத்தில் உண்மையே பேசுகின்றது என்பதும் வெறும் வார்த்தைகளின் ஆரவாரம் அன்று என்பது

#### ஜீவாத்துமா.

"கடவுளே பேசுவீராக! அடிமை கேட்கிறேன்." யான் உம் அடிமை. உம்முடைய சின்னங்களை நான் அறியும்படி எனக்கு மெய்யுணர்வைத் தந்து அருளும். உம்முடைய வாய்ப்பிறப்பில் என் மனம் பற்றட்டும். பனித்துளிபோல், மெல்ல மெல்ல உம்முடைய வசனம் என்னுள்ளத்தில் வந்து இறங்கட்டும். அமையட்டும்.

முன் ஒரு காலத்தில், இஸ்ரேயல் ஜாதியார் மோஸஸ் என்பவரிடம் சொன்னதாவது—நீவிர் எம்மிடம் பேசுவீராக! நாங்கள் கேட்

§ மாணிக்கவாசகர் கோவிற்றிருப்பதிகம் இப்புத்தகத்தின் உட்கருத்தை அழகாய்க் காட்டும்.

† மோக்ஷம்.

‡ பகவானை அடைக்கலமாகக் கொள்ளுக.



கின்றோம். கடவுளே நேரில் எம்மிடம் பேசவேண்டாம். பேசிடில் நாங்கள் சகியோம். நாங்கள் ஒருகால் மரணத்துக்குள்ளாவோம். யானோ அவ்வண்ணம் விரும்பினேன் அல்லன். தீர்க்கதரிசி சாமியுல் என்பார்போல், பணிவுடனும் ஆவலுடனும் மனம் பதைத்து இவ்வண்ணம் வேண்டுகிறேன். "ஈசா! பேச அருள்வாய். உம் அடிமை கேட்கச் சித்தனாயிருக்கிறான்.

2. மோஸஸ் அல்லது வேறு எந்தத் தீர்க்கதரிசியும் என்னுடன் பேசற்க. ஆனால் நாதனே! நீரே என்னுடன் நேரில் பேசுவீராக. அவர்களுக்கு ஞான ஒளி கொடுத்ததும் நீரே. ஆத்ம தத்துவம் அளித்ததும் நீரே. அதனால் அவர்கள் உதவியின்றி, நீரே என் உள்ளத்தில் பூர்ணமாக நிறைந்து உறைவிடம் கொள்ளுவீராக. நீர் இல்லாமல் அவர்களுக்கு யாதொரு யோக்கியதையும் இல்லையே. ஒருகால் அவர்கள் வெறும் வார்த்தைகள்மாத்திரம் பேசுவதாகும். ஆனால் அவைகளுக்கு உயிரும், ரசமும் நீர்தான் தரக்கூடும். அவர்களால் இயலாது. அவர்கள் வாக்கு அழகாய் இருக்கக்கூடும். நீர் இல்லாமல், அதைக்கேட்டு மனமுருகாது. அவர்கள் வாசிக்கப் புத்தகம் கொடுக்கக்கூடும். நீர்தான் அதன்கண் உள்ள அர்த்தத்தை வெளியிட முடியும். எங்கள்முன் இவை ரகசியங்கள் என அவர்கள் சொல்லக்கூடும். அவைகளின் திறவுகோல் உம்முடையது. அவர்கள் இவை விதிகள் இவை விலக்குகள் என சொல்லக்கூடும். அவைகளை அனுஷ்டிக்கும்படியான திறமையை நீர்தான் கொடுக்கமுடியும். அவர்கள் வழி இதுவெனக் காட்ட இயலும். அவ்வழியில் நடைபெறும் வண்ணம் ஊக்கத்தையும் பலத்தையும் நீர்தான் தரக்கூடும். அவர்கள் உதவி வெளிக்காரியங்களில்மாத்திரம் உண்டு. எங்கள் மனத்துக்கு உற்ற குருவும் விளக்கும் நீரே. அவர்கள் மேலுலக வாரியை எங்கள்மேல் வெளிப்படையாய்ச்சொரிவார்கள். நீர் அவ்வாரிப் பெருக்கத்தை எங்கள் உள்ளத்தில் அளிப்பீர். அவர்கள் வெறும் கூச்சல் போடுவார். நீர் எங்கள் காதில் மெய்யுணர்வைப் புகட்டுவீர்.

ஆங்கையால் மோசே என்னுடன் பேசற்க. என் இறைவ! சத்தியமே! மெய்ப்பொருளே! நீரே என்னுள்ளத்தில் பேசுவீராக. இன்றேல், அந்தோ நான் வீணாய் யாதொரு பயன் இல்லாமல் மரணமடைவேன். வார்த்தைமாத்திரம் கேட்டும் அதன் உட்பொருள்

உணராமலும் அதனால் மனம் உருகாமலும் போய்விடுவேன்! சொல் மாத்திரையில் எனக்கு அறிவும், அனுஷ்டானத்தில் எனக்கு மருளும் உடையவனாக இருந்திடுவேன். வசனம் மாத்திரம் என் செவியிற் படும். ஆனால் என் மனம் அன்பால் உருகாமல் இருந்துவிடும். வாக்கில் நம்பிக்கை உண்டு. அதை உள்ளபடி பேண சக்தி இல்லை. அதனால் என் நாதனே! உன் அடிமை யான்: என்னுடன் பேசுவாய். என் மனம் எவ்விதத்தாலும் ஒரு ஆறுதல் பெறுமாறு பேச அருள்வாய். யான் உளநாள்வரை எனக்குத் தோற்றமாம் வழி முறை தந்திடுவாய். உன்னைப் போற்றவும், உன்னைத் துதிக்கவும் என்னைச் செய்திடுவாய்.

## 3-வது அதிகாரம்.

### உள்ளத்தில் இறைவன் பேசுங்காலத்தில் அதைப் பக்தியுடனும் பணிவுடனும் கவனிக்கவேண்டும் என்பதும் ஆனால் பெரும்பான்மையோர் அதைத் தீர்க்கமாகச் சிரவணம் செய்து தியானிக்கின்றாரிலர் என்பதும்.

கடவுள்.

என் குழந்தாய்! என் இனிய மொழிகளைக் கேள். அவைகள் எல்லா ஞானசாஸ்திரங்களைவிட மேலானவை. உலக ஞானத்தை எல்லாம் அதிக்கிரமித்தவைகள். என் மொழிகள் உண்மையும், உயிருமாம். மானுட அறிவால் அளக்கக்கூடியவை அல்ல. மனச்சாந்த நிலையில் பெறத்தக்கவை. அன்புடனும், பணிவுடனும் கேட்கத் தக்கவை.

ஜீவாத்துமா.

இறைவ! நீரே நேரில் திருத்த அங்கீகரித்துள்ள மனுஷன் பாக்கியமே பாக்கியம். தர்மமுறையை நேரேயே அவனுக்கு உபதேசிப்பீர். தீயநாள் நன்னாளாக அவன் அறிந்துகொள்வான். அவ்வுணர்வினால், உலக வாழ்வு கஷ்டமாக இராது.



கடவுள்.

உலகம் தோன்றியநாள்முதல், தீர்க்கதரிசிகளுக்கு உபதேசித்துள்ளேன். இன்னும் யாவருக்கும் உபதேசிக்கின்றதை விடாமல் வகிக்கின்றேன். ஆனால் அனேகர் என் வார்த்தைக்குச் செவிடாக இருக்கின்றார். மனத்தில் வாங்குகின்றார் இல்லை. பெரும்பான்மையோர் கடவுள் வழிவிட்டு அன்புடன் உலகநெறி பற்றுகின்றார். ஊனை ஓம்புகின்றார். உயிரை இழக்கின்றார். இறைவனது உயர்நலம் பொருந்திய முறையினின்று நழுவுகின்றார். உலகத்தில் பெறக்கூடியவை, காலத்திற்குட்பட்ட அற்பமானவையாயினும், அதிக ஆவலுடனும் பரபரப்புடனும் அவைகளை அடைய வருந்துகின்றார்கள். அடிமைகளாக ஆக்கிக்கொள்ளுகின்றார்கள். நான் கொடுக்கும்வைகளோ என்றுமுள்ளவை. உயர்நலம்பற்றியவை ஆயினும், மனிதர்கள் உள்ளம் இவைகளில் நோக்கவில்லையே: கவியவில்லையே. அந்தோ! என்ன பரிதாபம்! உலக ஸம்பத்தை எவ்வளவு ஊக்கத்துடனும், ஆவலுடனும் வருந்தி முயலுகின்றார்கள் பார்! அவ்விதம் என்னைக் கவனிக்கின்றார்களா? என் வார்த்தை ஏறுகின்றதா? ஏராளமான ஸம்பத்து நிறைந்த விரிவான சமுத்திரம் இருக்க; அதை நாடாது சொற்ப மீன் உள்ள குட்டையினிடம் போய் முட்டிக்கொள்ளுகின்றார்களே! இனி விவரிக்கின்றேன். கேள். அற்ப வருவாய்க்கு, அதிக தூரம் ஓடுவார். அழியாச் சுகம் கிடைக்க அடி எட்டி வையார். அவர் அடையும் பொருள் அற்பமே. ஆனாலும் அவர் படும் போராட்டம் பெரிதே. ஒரு காசுக்கு அவர் செய்யும் அழிவழக்கின் கொடுமை என்ன என்பேன்! ஒரு பைசா இருந்தால் போதும், அல்லது ஒரு பைசா கொடுக்கிறேன் என்று ஒருவன் சொன்னால் போதும்; அவர்கள் இரா இல்லை; பகல் இல்லை; வருந்தி வருந்தி முயற்சிப்பார்கள். அந்தோ! அழிவில்லா நன்மை. ஒப்பு உயர்வு இல்லா நலம். பெரிதான வரம்பு கடந்த திவ்விய கீர்த்தி. இவைகளை அடைய அற்பமேனும் முயலுகின்றார் இல்லையே. இனைத்தனை வேலை புரிவாரில்லை. சோபனே! குறைகள் முறையிடுவதில் வல்லனே! உயிர் பெற நீ தயங்கி முயலுவாய். நாசமடைய மனிதர்கள், துரிதமாக தீவிர முயற்சி செய்குவார். *திருள்நாடி நீ செல்

* திருள்—உண்மை ஞானம்.

லும் வேகத்திலும் அவர்கள் இருந்நாடிச் செல்லும் வேகம் அதிக மாம். அவ்விதம் அவர்கள் முயற்சி இருப்பினும் அவர்கள் அடிக்கடி மோசம் போகின்றார்கள். என்னை நம்பி மோசம் போனவர் இல்லை. என்னிடம் பக்தி பாராட்டினவர் வெறுங்கையாய்ப் போனவரில்லை. கடைசிவரையில் என்னை அன்பு பாராட்டி என்னையே நம்பி நடை பெறுவாராகில், வாக்குத்தத்தம் செய்ததை எல்லாம் கொடுக்கிறேன். முன் சொன்னதை எல்லாம் நிறைவேற்றுகிறேன். நல்லவர்க்கு எல்லாம் நன்மை செய்கின்றேன். பக்திமான்களுக்கு எப்போதும் பிரியமாகவிருக்கிறேன்.

என் வார்த்தைகளை உன் ஹிருதயத்தில் எழுதிக்கொள். அவை களைக் கவனமாய்ச் சிந்தித்துப் பார். ‡மருள் கொண்ட காலத்தில் அவைகளால் தேறுதல் பெறுவாய். படிக்கும்போது, உன் மனதில் படாத விஷயம், நான் உன் உள்ளத்தில் உறைவிடமாகத் தங்கும் போது தெளிவு பெறும். என்னன்பிற்குரியரிடம் நான் வரும் சம யம் இரண்டு உண்டு. சோதனையாக வருவேன். ஆறுதல் அளிக்க வருவேன். தினந்தோறும் அவர்களுக்கு இரண்டு விஷயங்கள் உப தேசிப்பேன். அவர் குற்றம் கடியும்போதும் அவர் நற்காரியத்தை உற்சாகப்படுத்தும்போதும் அவர்களுக்கு அறிவு புகட்டுவேன். என் வார்த்தையைக் கேட்டும், அதன் வழிபடாது அலக்ஷியம் செய்பவன் கடைசித் தீர்ப்புநாளில், தன்னை நொந்துகொள்ளுவான்.

*நாதனே! இறைவ! என் எல்லாம் நீ! உன்னுடன் பேசவல் லான் யாவன்? உன் அற்ப அடிமை நான்; புன்புழு யான். அறிய ஒண்ணு அற்பன் யான். தெரிவிக்க ஒண்ணு ஏழை யான். ஈசா! ஆயினும் என்னை நினைப்பாய். ஒன்றுமில்லான் யான்; ஒன்றுமுடை யான் இலன் யான். நலமொன்றுமே இல்லான் யான். உண்மை நீ. நேர்மை நீ. நன்மை நீ, தூய்மை நீ. எல்லா வல்லமை நீ. கொடுப்பாய் நீ. நிறைவிப்பாய் நீ. பாவிகளினின்றும் ஒழிவாய் நீ. அன்பர்களை அடைவாய் நீ. அவர்மேல் மனம் வைப்பாய் நீ. உன் அருள் வெள்ளத்தால் என்னுள்ளத்தை நிறைவிப்பாய் நீ. உன் காரி யம் வீணாகாமல் செய்திடுவாய் நீ. என்மீது இரங்கி, உதவிபுரிந்து,

‡மருள்—மயக்கம்.

*மாணிக்கவாசகர் திருச்சதகம் இங்கு கவனிக்கத்தக்கது.



தைரியப்படுத்தாவிடில், துன்பத்துக்கிருப்பிடமாம் இவ்வுலக வாழ்க் கையில் எவ்விதம் கடைத்தேறுவேன்? உன் முகத்தைக் காட்டாமல் இராதே. உன் வரவில் தாமதிக்காதே. என் உள்ளத்தை ஈரமில் லாவிடமாகச் செய்யாதே. உன் வழிப்படும் வண்ணம் எனக்கு அருள்வாய். உன்முன் நலமுடையனாகவும் பணிவுடையனாகவும் நடைபெறச் செய்வாய். என் ஞானமே நீ. என்னை அறிவாய் நீ. இவ்வுலகம் உண்டாவதற்கு முன்னரே, நீ என்னை அறிவாய். அதில் நான், பிறக்குமுன்னமேயே என்னை அறிவாய் நீ.

## 4-வது அதிகாரம்.

## இறைவன் கண்முன்னர் உண்மையும் பணிவும்பற்றி ஒழுகும் முறை.

### கடவுள்.

குழந்தாய்! என்முன் உண்மையில் நட. மாசற்ற மனத்துடன் என்றும் என் நோக்காய் இரு. இவ்விதம் நடக்கிறவனைத் தீய எண் ணங்கள் அணுகா. தீய வழியினின்று விலகி தீயர் தீஞ்சொற்களைக் கவனியாது உண்மையில் நடைபெறுவான். உண்மை ஒழுக்கத்தி னால் சுதந்தரம் பெறுவான். உலகத்தார் வீண் வார்த்தைகளைக் கவ னியான்.

### ஜீவாத்துமா.

இறைவ! அஃது உண்மையே. நீர் சொல்லியபடி இருப்பீராக. அவ்விதம் உண்மையில் நான் நடைபெறுமாறு உபதேசிப்பீராக. அதினின்று நழுவாமல் இருக்க என்னைப் பாதுகாப்பீராக. கடைசி யில் ஸாவதான நிலைமையை அடையும்வண்ணம் என்னை நடத்துவீ ராக. தீய ஆசையினின்றும், துன்பத்திற்கிடமாம் கோபத்தினின் றும் என்னை விடுவித்து, அருள்புரிவீராக. அதனால் ஹிருதயத்தின் கண்ணுள்ள பற்றுக்கள் அற்று அவைகளின் தீய கட்டுக்களினின்று விலகி, உம்முடன் கூட நேர்மையாக நடைபெறுவேனாக.

### கடவுள்.

சத்தியமே உபதேசிக்கின்றது:—எது நேர்மையோ என்முன் எது நலமோ அதையே உனக்கு கற்பிக்கிறேன். உன் பாபங்களை

வெறுப்புடனும் துக்கத்துடனும் சிந்திப்பாய். நன்மைகள் செய்திருக்கிறதினால், நீ ஒரு விஷயமாகமாட்டாய் என அறி. நீ மருள்கொண்டவன் என நினை. எத்தனையோ குரோதபாவங்களின் வசமாய், அவைகளின் பின்னலில் சிக்குண்டு தவிக்கிறாய். தனிமையாய் உன்னால் யாதொன்றும் செய்ய இயலாய். நொடிக்குள்ளே தவறுகிறாய். விரைவில் தோல்வியடைகிறாய். கணத்தில் திகைப்புக்கொள்ளுகிறாய். உடனே மனங்கலங்கி உருகுகிறாய். பெருமை பாராட்ட உன்னிடம் ஒன்றும் இல்லையே. அற்பன் எனக் காட்ட அநேகம் உன்னிடம் இருக்கின்றனவே. அதனால், நீ செய்யும் எக்காரியமும், பெரிதென்றும், உயர்வென்றும், நலமென்றும், அதிசயமென்றும், ஆச்சரியமென்றும், கீர்த்திபற்றியதென்றும் நினையாதிருப்பாயாக. என்றுமுள்ள இறைவன் அன்றி வேறு யாதும் உயர்வன்று. புகழ அருகமன்று. நினைத்தற்பாலதுமன்று. என்ற உண்மையே உனக்கு இன்பம் தரட்டும். உன் அற்பத்தன்மை உனக்குத் துன்பந் தரட்டும். குற்றங்கள், குறைகள், தீயவை, பாவம் இவைகளைக் கண்டு அஞ்சுதல்வேண்டும். இவைகளை விலக்குதல்வேண்டும். இவைகளை கடிதல்வேண்டும். இவைகளைக் கண்டால், நிதி இழந்த துயரத்தை விட அதிகத் துயரம் உனக்கு உண்டாகட்டும்.

நிறைந்த மனத்துடன் என்முன் ஒழுகுகின்றவர் இலரே. மாசற்ற மனத்துடன் நடைபெறுகின்றவர் இலரே. ஆனால், விநோதத்தை நாடிச் செருக்குடையராய், என் இரகசியங்களை அறிய விரும்புவார். இறைவனின் ஆழ்ந்த மறைபொருள்களை அறிய முயலுவார். அதனால் தமக்கு என்ன பயனென்றும் கருதார். அதனால் தாம் கரையேறும் வகை இன்னதென்றும் தெரியார். இவர்கள் பாபத்தில் மூழ்கி, சோதனையான துன்பத்திற்குள்ளாவார். அவர் பரீக்ஷிக்கும் முறைகளும், செருக்கும் எனக்கு வெறுப்பாம். அதனால் அவைகளை எதிர்க்கின்றேன் யான். கடவுளின் விதி வாக்கியங்களைப் பயபக்தியுடன் விசுவாஸி. எல்லாம்வல்ல ஈசன் கோபத்திற்குப் பயப்படு. மேலோன் கிருத்தியங்களைப் பரீக்ஷியாதே. உன் குற்றங்களையும் உன் பாவங்களையும் உய்த்துணர்ந்து பார். எவ்வளவு மயக்கத்திற்குள்ளாயினாய் என்று அறி. எவ்வளவு நலம் விட்டு விலகினாய் என்று நினை.



சிலர் பக்தி அவர் புத்தகங்களில் அடக்கம். சிலர் பக்தி அவர் படங்களில் அடக்கம். சிலர் பக்தி வெளி வேஷங்களிலும் சின்னங்களிலும் அடக்கம். சிலர், என்னை தம் நாவில் வைப்பார். ஒருவரும் என்னை தம் மனத்தில் வையார். சிலர் மெய்யுணர்வுடனேயும் களங்கமற்ற அன்புடனேயும், என்றுமுள்ள இறைவனை அடைய ஆவலுடன் தவிப்பர். இவர்கள் உலகப் பற்றுக்களில் மனத்தை வைத்தும் வையாமலும் சரீர யாத்திரைவிஷயங்களில்கூட விருப்பற்ற நொந்த மனமுடனே நடைபெறுவார். இவர்களே உண்மையின் உயர்நலம் உணர்வார். அஃது அவர் உள்ளத்தில் நேரில் பேசும். அதினால் அன்றோ அவர்கள் உலகசம்பத்தை வெறுக்கின்றார்கள். தெய்வசம்பத்தை விரும்புகின்றார்கள். உலகம் பொய் என்று உள்ளபடி உணர்ந்து வீடு பெற ஆவலுடன் தினம் தினம் மனமுருகுகின்றார்கள்.

## 5-வது அதிகாரம்.

### ஈசன் அன்பினால் விளையும் ஆச்சரிய காரியம்.

பரமண்டலத்திலிருக்கும் பிதாவே! வாழி. இயேசுகிறிஸ்து நாதரின் அப்பா வாழி. என் நாதனே வாழி. ஏழையின்மீது கருணைகூர்ந்து என்னை நினைக்க அருளினாய். கருணையின் இருப்பிடமே! ஆறுதலின் இறைவ! போற்றி போற்றி. அன்புசார் மொழிகளால் அப்போதைக்கப்போது, யாதொரு நலமில்லாத என்னைத் தேற்றினாய். உன்னை என்றும் போற்றுகிறேன். உன்னுடைய ஏகபுத்திரனும் உலகத்தை உய்ப்பிக்கும் பரிசுத்த ஆவியுமாகிய இவ்விருவரையும் உலக முடிவுவரை போற்றி செய்கின்றேன். நாதனே! இறைவனே! என் அன்பே! என் நாயகனே! என் மனத்திடை நீ தங்குங்கால், என் உள்ளுயிரெல்லாம் நலம் பெருகிறது. என் மஹிமை நீ. என் உள்ளத்தை ஆநந்திக்குமவன் நீயே. என் ஆதரவு நீ. என் நோக்கம் நீ. நான் துன்பமுறுங்கால், என் அடைக்கலஸ்தானம் நீ.

நானோ அற்பன். என் குணமோ குறைவுள்ளது. என்னன்போ மெலிந்தது. அதனால் உன் ஆதரவு எனக்கு வேண்டும். உன்னால் நான் நன்கு மதிப்புறவேண்டும். அடிக்கடி எனக்கு உன் தரிசனம் அருளவேண்டும். உன் உயிர் விதி நலம் உரைக்கவேண்

டும். தீய குரோதங்களினின்று என்னைத் தவிர்க்கவேண்டும். கீழான
ஆசாபாசங்களினின்று என் மனத்தைத் தூய்மைப்படுத்தவேண்டும்.
என்னுள்ளம் முழுதும் மாசற்று நிர்மலமாக ஆக்கவேண்டும்.
என் நெஞ்சம் நலம்பெறச் செய்யவேண்டும். அன்புடையனு ஆக்க
வேண்டும். எவ்வின்னு வரினும் அதைச் சகிக்கும் சக்தி கொடுக்க
வேண்டும். கடைமுறை வரை என்னைத் தீரன் ஆக்கவேண்டும்.

2. *அன்பு பெரிது. அஃது உயர்நலம் வாய்ந்தது. எந்தப்
பாரமும் அதற்குத்தான் இலேசானது. ஏற்றத்தாழ்ச்சியும், மேடு
பள்ளமும், அதன் சகிப்பில் அடங்கும். அது பெரிய சுமையைத்
தாங்கும். அதனைப் பாராட்டாது. கசப்பையெல்லாம் இனிப்பாக்
கும். எசுவின் பேர் அன்பு. ஜனங்களைப் பெரிய கர்மம் செய்யத்
தூண்டும். மேன்மேலும் உயர்நலம் பெற்ற காரியங்களை முயல
என்றும் ஏவும். அன்பு என்றும் மேலே நோக்கும். உலக ஸம்பத்
தின் வரம்பில் அது அடங்காது. நிற்காது. அது வரம்பு கடந்து
போகப்பார்க்கும். உலகப்பற்றை மீறி ஓடும். வரம்புக்குள் அடக்
கினால் அதன் ஒளி மங்கும். பொய்யான உலக இன்பவலையின்கண்
சிக்கிக்கொள்ளும். யாதேனும் துன்பம் நேர அதனால் நொந்து
வருந்தும். கீழே விழும். இறக்கும்.

விண்ணிலும், மண்ணிலும் அன்பைவிட இனியது இல்லை.
வலியது இல்லை; அகன்றதில்லை; உயர்வுள்ளதில்லை; நிறைந்ததில்லை
நலம் சார்ந்ததில்லை; ரம்மியமானதில்லை. அன்போ இறைவன்
குழவி. அவரிடமே தங்கும்; வேறெங்கும் நிற்காது. சிருஷ்டி
யான உலகத்தைக் கடந்தது. அன்புடையான் ஓடுவான், பறப்பான்;
களிப்பான்; வரம்புபட்டான். ஒன்றுக்குமடங்கான். தான், தனது
என்பவை அற்றவன். தன்னுடைமை எல்லாம் யாவர்க்கும் உளன்.
தன்னை எல்லாரிடமும் காண்பான். வேற்றுமை இல்லாதான்.
மனமெல்லாம் ஒன்றிலே லயமாகவிருப்பான்; மற்றொன்றையும் கவ
னியான். எல்லாம் எங்கிருந்து வருகின்றனவோ அவ்வொன்றை

---

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யிட்டு இருப்பரே.—திருமந்திரம்.



யே பற்றியிருப்பான். வரும் கொடைகளை நினையான். கொடுக்
கின்றவரையே சிந்திப்பான்.

அன்பு எல்லை அறியாது அளவுக்குமேல் பொங்கும். அதன்
வேகத்துக்கு எத்தடையும் இன்றாம். எப்பாரமும் இலேசாம். எக்
கருமமும் எளிதாம். அஃது அளவிறந்த செயல் செய்யக்கூடும்.
அதற்கு முடியாதது யாதொன்றும் இல்லை. எதையும் முடியுமென்று
சிந்தித்து அவ்வண்ணம் செய்துமுடிக்கும். எல்லாம் செய்யவல்லது
அது. அஃது எங்குமுள்ளது. வேலை செய்ய ஊக்கம் உண்டாக்கு
கிறது. அஃது இன்றேல், செயல் குன்றி, சோர்வு உண்டாகி, மன
த்தளர்ச்சி நேரிடுகிறது. அஃது எப்போதும் விழிப்பாகவிருக்கும்.
தூங்காமல் தூங்கும். அயர்ந்தும், அது தளராது; கட்டுண்டும் அத
ற்குட்படாது. பயந்தும் அது கலங்காது. ஆனால், ஜீவிக்கின்ற
ஜ்வாலை போலவும், எரிகின்ற தீவர்த்தி போலவும், பிளந்துகொண்டு
ஜ்வலித்து மேல் எழும்பும். எவ்விதத் தடையிருப்பினும் அதை
மீறும். அன்புடையார் எவரேனும் இருப்பின் இவ்வார்த்தைகளின்
பொருளை உணர்வார். அன்புருகி மனங்குழைந்து செய்யும் பேர்
ஒலி இது. இறைவன் காதில் விழும். "என் நாதனே! என்
இறைவனே! நீயே எனை உடையாய். நானே உனை உடையேன்"
உன் அன்பில் நான் பெருகட்டும். அதனால் என் நெஞ்சம் அதன்
உள் நாவினால் இனிப்பை ருசிக்கட்டும். அதில் உருகட்டும். அதில்
மிதக்கட்டும். அதில் நான் ஆழ்ந்து, மெய்ம்மறந்து அன்பினால் பர
வசமாகி, என் மனம் சொக்கியிருக்கட்டும். அன்பு நிறைந்த கீதம்
பாடுவேன். என் அன்பன் போகுமிடமெல்லாம் போவேன்; ஆகா
சத்தில் பறப்பேன். பாதாளத்தில் புகுவேன். உன்னைப் போற்றி
செய்துகொண்டே என் மனம் சோர்வை அடையட்டும். என்
அன்பே! என் அன்பே! என்று அலறிக்கொண்டே என் மனம் இள
கட்டும். என்னை நேசிக்காது உன்னையே பற்றி என் நெஞ்சம் தபி
க்கட்டும். உனக்காகவன்றி நான் என்னை விரும்பேன். உன்னை
நோக்கியே எல்லாவற்றிலும் அன்பு பாராட்டுவேன். அன்பின்
விதிமுறையினால் உன்னை நேசிக்கிறேன். உன்னிடம் அன்பு பிரகா
சிக்கின்றது. அன்பு விரைவாய் ஓடும். அஃது உண்மையுள்ளது.
அதுவே பக்தியாம். அஃது இன்பம் தரக்கூடியது: அது மனதை
ரம்மியப்படுத்தத் தக்கது. அது தைரியமுள்ளது. அது பொறுமை

யுள்ளது. அது நன்றி மறவாதது. அது கவனிப்புள்ளது. அஃது
எத்துயர் வரினும் சகிப்புள்ளது. அது மனுஷத்தன்மையுடையது.
அது சுயநயம் என்றும் பாராட்டாதது. ஏனெனில் தன் நலம் ஒரு
வன் எப்போது பாராட்டுவானோ, அப்போதே அவன் அன்பு பொ
ய்த்துப்போம்.

அன்பு என்றும் விழிப்புள்ளது. சாவதானமுள்ளது. பணி
வுள்ளது. நேர்மை பற்றியது. தளர்ச்சியற்றது. நொய்மையற்றது.
அற்பவிஷயங்களில் பற்றற்றது. சாந்தமுள்ளது. அமைவுள்ளது.
தூய்மை யுள்ளது. களங்கமற்றது. உறுதிப்பாடுள்ளது. சாந்தம்
உள்ளது. இந்திரியங்களை நன்றாய் அடக்கப்பெற்றது. மேலாயி
னோருக்குத் தானும் அடங்கிய தன்மையுள்ளது. தன்னுயிர் ஓம்பாது
தன்னை இகழ்ந்து, தன்னை அலக்ஷியம் செய்து இறைவனிடம் பக்தி
பாராட்டி, அவருக்கு ‡திருப்தி செய்விக்கும் தன்மையது. அவர்
அணுகாமல் தூரமே இருந்தாலும், தான் அவரையே நம்பி அவரே
ஆதரவு என்று எண்ணியிருக்கும். துயரமின்றி, அன்புபற்றி நிகழ்
தல் முடியாது. தன் அன்பனுக்காகத் துன்பம் பொருதானும்,
தன் அன்பன் மன அபீஷ்டப்படி செய்யாதானும், அன்புடையான்
எனப் பெயர் வகிக்க அனருகனும். அன்பனுக்காகக் கஷ்டம்,
கடினம், துன்பம், துயரம் எல்லாம் சகித்து, எவ்வருத்தம் வரினும்,
பின் வாங்காது பொறுக்க வல்லானே அன்புடையனாவன்.*

## 6-வது அதிகாரம்.

### மெய்யன்புடையான் இலக்கணம்.

கடவுள்.

என் குழந்தாய்! இன்னும் தைரியவானாக, இல்லை. சாவதான
மான அன்புடையான் அல்லான்.

ஜீவன்.

நாதனே! ஏன் அப்படி உத்திரவாகிறது?

---

‡ அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (குறள்.)

* அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு." (குறள்.)



கடவுள்.

நண்ணிய இடருக்கஞ்சி, எண்ணிய கருமத்தை விடுகிறாய்.
சுகத்தை விரைவில் நாடுகிறாய். தீரனோ இடர் உறுங்காலத்தில்
சலியான். உறுதியோடிருப்பான். துன்பம் வந்துவிட்டதெனச்
சிந்தியான். மனம் நோகான். இன்பம்வருங்காலத்தில், அது என்
னால் கிடைத்த பாக்கியமென்றெண்ணி அவன் என்னிடம் சந்தோஷ
மாகவிருப்பான். அதனால் துன்பம்வருங்காலத்தில், அவனை வரு
ந்தும்படி செய்கிறதில்லை. மெய்யன்புடையான் அன்பன் கொடை
யை அதிகமாக எண்ணான். கொடையாளன் உள்ளன்பின் அளவை
மெய்ச்சுவான். கொடையின் அளவைப்பற்றிச் சிந்தியான். அதற்
குக்காரணமாம் அன்பின் சால்பை நினைப்பான். கொடைகளைப்பார்
க்கிலும் அன்பன் மேல் ஏன்று சித்தாந்தம் கொள்ளுவான். என்மேல்
மெய்யன்புடையான், என் கொடைகளைக் கருதாது, அவைகளுக்கு
மேலாக என் நினைப்பாகவே இருப்பான். என்னையே நம்புவான்.
என்னையும், என் ஞானிகளையும்பற்றிச் சில சமயங்களில் உனக்கு
அன்பு குறைவு நேர்ந்ததினால் எல்லாம் போகவில்லை என்று அறி.
நல்லன்பும் நன்னம்பிக்கையும் நீ கொண்டால், அஃது இறைவன்
அருள்பிரசாதம் எனவும் இனி நீ அடையும் மேலான பதவியின்
முன் அறிகுறி எனவும் நினை. அவ்வித அனுபவம் வருதலும் போத
லும் இயல்பு. அதனால், அதைப்பற்றி அதிகக் கவலை கொள்ளாதே.
மனத்தின்கண்ணுள்ள தீய பாவங்களைத் தவிர்க்க முயல். தீயவழி
யில் தூண்டும் ஆசை என்னும் பிசாசைக் கடிந்து விலக்கு. அது
தான் உன் யோக்கியதைக்கும், உன் மேலான குணத்துக்கும் அடை
யாளம்.

எக்காரணம் பற்றியும், வீண் எண்ணங்கள் உன் மனத்தில்
உண்டாகாது இருக்கட்டும். தீர்க்கமான தீர்மானமுள்ளவனாகவும்
கடவுளிடம் நேர்மையான கருத்து உள்ளவனாக இரு. திடீரென்று
பரவசனாக நீ ஆய்விடின் அது பொய்யன்று. அதன்பின் உன் வழக்
கமான மடமைதங்கிய கீழான விஷயங்களின் நினைவு வரும். இக்
கீழான நினைவுகள் நீயாக வருத்திக்கொண்டவை அல்ல. மனத்
துக்கு விரோதமானவைகளே. அவைகளைப் பொறுக்கவேண்டியவ
னாக இருக்கிறாய். அவைகளின் வழிப்பட்டு நடக்கவேண்டியவன்
அல்லன். அவைகள் உனக்குப் பிரியமில்லாமல், நீ அவைகளைக்

கடிந்துகொண்டு எதிர்த்து நடைபெறுவாயாகில்; அஃது உன் உயர்
குணத்தைக் காட்டும். அது நலமாம். அதனால் உனக்கு யாதொரு
நஷ்டம் இல்லை.

பாசமாகிய உலக மாயை உன்னை நல்வழியினின்று நழுவச் செ
ய்ய எங்கேயென்று காத்துக்கொண்டிருக்கிறது. அந்நல்வழியின்
முயர்சிகளைக் கெடுக்க எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. ஞானி
களை வணங்குதலையும் §யேசுகிறிஸ்துவாக நான் அவதரித்து அப்
போது நான் அனுபவித்த துன்பம் துயர்களைப்பற்றி நீ சிந்தனைசெய்
தலையும், உன் பாபங்களைப்பற்றி அனுதாபப்படுதலையும் உன்மனத்
தின் நேர்மை குன்றாமல் எச்சரிப்பாய் இருத்தலையும் எப்போதும்
நலன்தான் செய்வன் என்ற உன் உறுதிப்பாட்டையும், கெடுத்து
விட இப்பாழான மாயை சந்து பார்த்துக்கொண்டிருக்கின்றது.
இதைக் கவனிப்பாயாக. அநேக தீய எண்ணங்களை உன் மனத்
தில் புகட்டி, உன்னை அது அதைரியப்படுத்தியும், ஈசுவர ஆராத
னையும், உயர்நலம் வாய்ந்த படிப்பும் நீ நடத்தாமல் உன் புத்தியை
பேதிக்கும்படியும் செய்யும். பணிந்து பாவ அறிக்கை செய்தால்,
அதற்கு நோகும். இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நிலைக்குரிய
உபாசனை முதலானவைகளைக் கூடுமானால் கெடுக்கவும் செய்யும்.
அதன் வார்த்தைகளை நம்பாதே. அதைக் கவனியாதே. அடிக்கடி
அது சோதனையான துன்பவலையை விரித்து, அதில் நீ சிக்கிக்கொ
ள்ளப்பார்க்கும். துர் எண்ணங்களும் தீய பாவங்களும் உன் மனத்
தில் உண்டாக்கும். அப்போது நீ செய்யவேண்டியது இதுவாம்:—
"கொடும்பாவி! ஒடிப்போ. பாழான பாதகமே! என்னிடம் வர
வெட்கமில்லையா? அசுத்தன் நீ. ஏன் இத்தீய எண்ணங்களை என்
காதில் போடுகிறாய். என்னிடம் விட்டு நீங்கு. என்னைத் தீமைக்
குட்படுத்தப்பார்க்கின்றாய். உனக்கு என்னிடம் வேலை இல்லை;
நிற்காதே; ஓடு. யேசு என்ற தீரன், என்னைக் காக்க இருக்கின்
றார். உன்னைத் திகைப்பிப்பார். நீ அழிந்துபோவாய். உன் புத்தி
கேட்டு உன் வழிப்படுகிறதைவிட, உயிர் நீத்தல் நலமாம். எத்
தண்டனையும் சுகமாம். உன் ஒட்டம் வேண்டாம். உன் வாயை
அடக்கு. உன் வார்த்தை என் காதில் இனி வருது. நீ என்ன துன்பத்

§என் துன்பம், துயர், என்று மூலத்தில் உள்ளது. தானும் யேசு
கிறிஸ்துவும் ஒன்று என இதில் அறிவித்திருக்கிறது.



தை எனக்கு உண்டுபண்ணினும், கடவுளே எனக்கு ஒளி. அவரே
எனக்கு அடைக்கலம். யாரையும் அஞ்சேன். போர்கள் என் எதிர்ப்
பட வந்தாலும் என் நெஞ்சம் அஞ்சாது. கடவுள் என் துணை.
அவரே என் இரக்ஷகர்."

2. உண்மையான வீரனைப்போல் அதனுடன் போராடு. ஒவ்
வொரு சமயத்தில், அசக்தியால், நீ தோல்வியடையினும் என்னு
டைய நிறைவுள் பலத்தை நம்பி முன்னிலும் அதிக தைரியம் சாதி
த்துக்கொள். வீண் கருவம் பாராட்டாதே. வீண் இறுமாப்புக் கொ
ள்ளாதே. இவைகள் அநேகரைத் துர்க்கதியில் தள்ளியிருக்கிறது.
கரையேற மார்க்கமில்லாமல் இருள்பற்றிய படுகுழியில் அகங்காரத்
தினாலும், செருக்கினாலும் வீழ்கிறார்கள். இவர்கள் தம்மையே
நம்பி, நாசமாய்ப் போனார்கள். பணிவும் தாழ்மையும் வேண்டுவது
என்பதை உனக்கு இதன்மூலமாய் எச்சரிக்கிறேன்.

## 7-வது அதிகாரம்.

### விழிப்புள்ள பணிவில் பக்தியின் வலிமை அடங்கற்பாலது.

**கடவுள்.**

என் குழந்தாய்! இறைவனைப் போற்றிசெய்யத் தூண்டும் பக்தி
யை ஆடம்பரம் செய்யாமல் உன் உள்ளேயே அடக்குவது நலமாம்,
சாவதானமாம். அதனால் அதிக இறுமாப்புக் கொள்ளாமையும்,
அதைப்பற்றி அதிகமாகப் பேசாமையும், அதன் கவர்வத்தை அதிக
மாகச் சிந்தியாமையும் உனக்கு நலமாம். உன்னைத் தாழ்த்தலும்,
அற்பனேனும் எனக்கு இப்பெரும் பாக்கியம் கிடைக்கப்பெற்றே
னே என அஞ்சுதலும் உனக்குச் சாவதானமாம்.

2. இச்சிந்தனையில் உனக்கு அதிக நேசம் வேண்டாம். உட
னே மாறிப்போனாலும் போய்விடும். அது உன் மனத்தில் இருக்
குங்காலத்தில், அதுவின்றி எவ்வளவு ஏழை, எவ்வளவு அசக்தன்,
எச்சரிக்கவனமாய் நினை.

இம்மனக்குளிர்ச்சி உனக்குக் கிடைத்திருப்பதினால், ஞானவழி
யில் அதிகமாக விர்த்தியாயிருக்கிறாய் என்று எண்ணாதே. உன்
மனச்சந்துஷ்டி போய்விட்டாலும் உன்னை ஓம்பாது உன்னைத்

தாழ்மைப்படுத்திக்கொண்டும், பொறுமை பாராட்டியும், முன்போலவே உன் கடமைகளைச் சரியாய் நடத்தியும், நீ செயற்பாலதை எல்லாம் நேர்மையாயும் மனமுடனேயும் செய்தும், மனச்சஞ்சலத்தால் ஏகாந்தம் வேண்டுமெனக் கருதாமலும், நாடாமலும் நீ ஒழுகுவாய் ஆகில், அப்போது ஞானவழியில் நீ அபிவிருத்தி யடைந்திருக்கிறாய் என்று வெளியாகும். அநேகர் ஏதாவது கொஞ்சம் சங்கடம்நேர்ந்து, மனத்தளர்ச்சிகொண்டால், தாங்கள் கைப்பற்றிய ஞானமுறைகளில் அசிரத்தையும், பலன் சீக்கிரம் கிடைக்கவில்லை என்ற ஆத்திரமும் கொள்ளுகிறார்கள். மனிதன் கதி என்றும் அவன் கைக்குள் இல்லை. எல்லாம் ஈசன் செயல். அவர் வரவும் அவர் அருளுதலும் அவர் அபீஷ்டத்தைப் பொறுத்தது. யாருக்கு அருள்புரிதல் எப்போது அருள்புரிதல் எவ்விதம் அருள்புரிதல் என்ற இவை எல்லாம் அவர் மனோரதம். வேறன்று.

சிலர், ஈசுவர பிரசாதம் கிடைத்ததும், கண், தலை தெரியாமல் புத்திஹீனத்தால், நாசம் அடைகிறார்கள். தங்கள் யோக்கியதைக்கு அதிகமாக, வேலை செய்ய முயன்று, அறிவுபற்றி நடவாமல், மனம் போனபடி செல்லுகின்றமையால் அவர்களுக்கு அக்கேடு சம்பவிக்கிறது. தன் அளவுக்கு மீறிச் செய்தும், ஈசுவர சம்மதமில்லாமல் அதிகக் காரியம் செய்ய முயற்சித்தும் ஈசுவர அருள் பிரசாதத்தை இழக்கின்றார்கள். தேவலோகத்தில் அவர்கள் வீடு கட்டிக்கொண்டிருந்தும், உலகத்தில் வறுமையால் வருந்தி துன்பத்திற்குள்ளாகின்றார்கள்.

கடைமுறையில் அவர்கள் அறிந்துகொள்ளும் ஞானம் இதுவாம். வறுமையடைந்து. அதனால் இழிவுக்குள்ளாகி, இனி நம்மையே நம்பி மோசம் போனோம் என்று உணர்ந்து, என்னை (இறைவனை) நம்பி, அடைக்கலம் பெறவேண்டும் என்பதுதான்.

என்னை வழிபடும் முறையில் (ஞானமுறையில்) புதியவர்கள், பழகிய அறிஞர்கள் புத்தி கேட்டு ஒழுகாமற்போனால், துன்பத்திற்கு உள்ளாகி மோசம் போவார்கள். அநுபவ ஞானிகளின் உபதேசத்தைப் பெறாமலும், அதன்படி நடவாமலும், தம்மனப்போக்கின்படி அவர்கள் நடைபெறுகின்றபடியால், அபாயத்திற்கு உள்ளாவார்கள். தங்கள் மனோரத வழியை விட்டுத் திரும்பாமல் போனால், கேடு சம்பவிக்கும். தாங்கள் அறிஞர்கள் என எண்ணமுள்ளவர்கள், பணி



ந்து பிறர் வார்த்தையைக் கேளார். அதன்படி ஒழுகார். பண்பும் பணிவும் வாய்ந்த சொற்ப அறிவு, தான் என்ற அகம்பாவம் பற்றி அகண்ட அறிவைவிட நலமாம். பணிவு பொருந்திய அற்பப்படிப்பும் ஞானமும் உனக்கு நலம் தரும். பணிவின்றிய பெரிய படிப்பும் விரிந்த அறிவும் கல்விச்செருக்கை உண்டுபண்ணும்.

3. முன் வறுமையை மறந்தும் இறைவன் அருள் இன்று போய்விடுமோ நாளைப் போய்விடுமோ என்ற பயபக்தியைத் துறந்தும் தான் முற்றிலும் உல்லாச வழியில் இறங்கி ஒழுகுகிறதானது அறிவுபற்றிய நெறியன்றாம்.

துன்பம் உற்ற சமயத்தில், என்மேல் நம்பிக்கை குன்றியும், என்னைக் கொஞ்சமேனும் நினையாமலும், ஏக்கமுற்று, மனச்சஞ்சலம் அடைகின்றவர் ஞானம் வலியதன்றாம். எல்லாம் நேர்மையாய் நிகழுங்காலத்தில், கவலையற்று இருப்பவர்களோ துன்பமும் துயரமும் போராடுங்காலத்தில், தைரியம் குன்றி, மனச்சோர்வு அடைகின்றார்கள்.

எப்போதும் பணிந்து, தான் அற்பன் என நினைந்து தன் மனத்தை நேர்மையுடன் வரம்புக்குட்படுத்தி, ஒழுகுவானாகில், அவன் அபாயங்களுக்குள்ளாகான். பாவத்தைச் செய்ய இயலான்.

இறைவன் அருள் ஒளி கிடைத்திருக்கின்ற காலத்தில், அஃது இன்றேல், உன் கதி என்னவாகும் எனச் சிந்தனை செய்தல் நலமாம். அது மறையுங்காலத்தில், அது திரும்பும் என நினை. உனக்கு எச்சரிக்கை உண்டுபண்ணவும், என் மஹிமையை உனக்கு அறிவுறுத்தவும், சொற்பகாலம் அது மறையும்படி செய்கிறேன். மனத்துக்கு இசைய சுகவாழ்வு எப்போதும் இருந்துகொண்டிருக்கின்றதைப்பார்க்கிலும், சிற்சில சமயம் இவ்வித சோதனை நிலைமை நேர்தல் நன்மை பயக்கும்.

ஒருவன், யோக்கியதையும் மனச்சீலமும், அவனுக்குப் பல தர்சனங்கள் சம்பவிக்கிறது. ஆறுதலான வாக்குக்கள் கேட்கிறது. ஞானசாஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளது. அவனுக்கு உயர்வான ஸ்தானம் கிடைத்திருக்கிறது என்றதினால், அளவிட முடியாது, இவை சரியான பிரமாணம் அன்றாம். ஆனால், அவன் வறுதியான பணிவுடையன்; பூர்ண தர்மசிந்தை நிறைந்தவன்; இறைவன் மஹிமையையே என்றும் பிடிவாதமாகக் கருதிச்செல்லுகிறவன். தன்னை

அற்பன் என நினைப்பன். தன்னைத் தாழ்மைப்படுத்துவன். உலகம் தன்னை மெய்ச்சுதலைவிட, நிந்தித்தலை விரும்புவன். இத்தகைய குணமிருக்குமாகில், அவன் தகுதி உயர்நலமுள்ளதென அறி.

## 8-வது அதிகாரம்.

### * இறைவன் கண்முன் நாமொன்றுமில்லையெனத் தெளிதல்.

தூசிபோன்றவன் யான், ஆயினும் இறைவனுடன் உரையாடுவேன். என்னை உயர்வாக நான் நினைத்தால், அது சரியல்லவென்றதற்குச் சாக்ஷியாக நீர் எதிர் நிற்பீர். என் தீமையே எனக்கு விரோதமாகச் சாக்ஷி கூறும். அப்போது நான் என்ன சமாதானம் சொல்லப்போகிறேன். நான் அற்பன் நலமொன்றுமிலான் என நினைந்து, என்னைப்பற்றிய எண்ணங்களை எல்லாம் துறந்து, தூசியினும் கடையனாக எண்ணுவேனாயின், உம்மருள் எனக்கு நலன் செய்யும். உம் ஒளி என் நெஞ்சை அணுகும். என்னைப்பற்றிய உயர்வான நினைவு, எள்ளளவேனும் இல்லாமல் பொய்த்துப்போம். நானே அற்பன், ஒன்றுமில்லான் என்ற எண்ணமே நிலைத்திருக்கும். அச்சமயத்தில், 'நான் எத்தன்மையன், எவ்விதம் இதுகாறும் நடைபெற்றேன், என்ன துறைக்கு நான் வந்துள்ளேன்' என்றதை நானே அனுபவசித்தமாய் உணர நீர் அறிவிப்பீர். ஏனெனில், நானோ அற்பன் ஒன்றும் அறியாதவன். உம்முதவியின்றி, நானுண்டு என் நினைப்புண்டு, என்று என்னைக் கைவிட்டால் ஏக்கம் உற்று மனச்சோர்வு அடைந்திருப்பேன். அப்போது சூன்னியமேயாம். எல்லாம் கொடுமையும் தீமையுமாகத்தான் இருக்கும். நீர் திடீரென என்மீது இரங்கி, உம் கருணைக்கண்ணால் நோக்குவீராகில், தக்ஷணமே நான் தைரியம் பெற்று, புதிய சந்தோஷம் நிறைந்தவனாவேன். நானே என்னுள்ளத்தில் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாகி ஏங்கி ஏங்கி வாவரத் துயரத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து கிடக்கின்ற சமயத்தில் உம் அருளால் விரைவில் உயர்ந்து,

* இன்ற எனக்கருளி உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை ... ... ... ... ஒன்று நீ
அல்லை அன்றி ஒன்றில்லை.—மாணிக்கவாசகர்.



அணைத்து ஆறுதல் செய்யும் உம்முடைய கைகளிடமே சேரும் பாக்கியம் பெற்றேன். இஃது ஒரு பெரிய ஆச்சரியம் அன்றோ!

இஃது உம் கருணையின் செயல். பாவத்தில் விழாமல் தடுத்தும், அநேக ஆபத்துக்காலங்களில் என்னைத் தைரியப்படுத்தி உதவி புரிந்தும், பயங்கரமான அவதிகளினின்று என்னைப் பாதுகாத்தும், கணக்கில்லாத் துன்பங்களினின்று என்னைக் கைதூக்கிவிட்டும், நீர் செய்திருக்கின்றீர். என்னையே நேசித்து, என்னையே ஓம்பி, என்னை இழந்தேன். உம்மையே தேடி, உண்மையாய் உம்மிடமே பக்தி பாராட்டி, உம்மையும் என்னையும் கண்டுகொண்டேன். இப்பக்தியினால், என் அகந்தையை முற்றும் ஒழித்தேன். என் அன்பே! என் பிரியமுள்ள நாதனே! என் அளவை மீறியும், என் தகுதிக்கு அதிகமாகவும், என் நினைப்புக்கு மேற்பட்டும், என் விருப்பத்தைக் கடந்தும் நீர் உபகரித்திருக்கின்றீர்.

2. இறைவ! வாழி! வாழி! இந்நன்மை எல்லாம் பெற இன்னும் அனருகனாக இருப்பினும், உம்முடைய கரை கடந்த நன்மையும், மகத்துவமும், உம்மை விட்டு விலகி, நன்றி இல்லாக் கடையருக்கும் எப்போதும் அருள்பிரசாதத்தைச் செய்துகொண்டே இருக்கின்றது. எங்கள் மனத்தை நேர்ப்படுத்தும். சீர்ப்படுத்தும். நன்றியுள்ளவர்களாகவும், பணிவுள்ளவர்களாகவும், அன்புடையர்களாகவும் செய்யும். நீரே எங்களுக்கு ஆதரவு. எங்களுக்கு நீரே தைரியம். நீரே எங்களுக்குப் பலம்.

## † 9-வது அதிகாரம்.

### எல்லாம் ஈசன் செயல் என்று இருத்தல்.

#### கடவுள்.

என் குழந்தாய்! உனக்குச் சுகானுபவம் வேண்டுமானால், என்னையே முடிவாக எண்ணு. என்னையே கடைப்பிடியாக நினை. நினைவை உன் சிந்தையில் வைக்க. உன் பக்தி கல்மஷம் இன்றி விளங்கும். இன்றேல், உன் அன்பு அதிகமாய் உன்னையே பேணுவதாகும்; சிருஷ்டிப்பொருள்களிடம் பற்றித்திரிவதாகும். உன்னை நினைப்பில் நீ வழுவுவாய். உன்னுள்ளம் ஈரமற்றுப்போம். அன்பு

† அப்பர் சுவாமிகள் தேவாரங்களைப் பார்க்க.

உன்னை விட்டு அகலும். அதனால், எல்லாம் என்னிடமிருந்து வந்தன என நினை. நானன்றே எல்லாம் உனக்கு அளித்தது. உயர்வற உயர் நலத்தினின்று யாவும் உண்டாயின அல்லவா? அதைச் சிந்திப்பாய். எல்லாவற்றுக்கு நான் காரணமென நினைக்கற்பாலது. ‡

2. சிறியோரும், பெரியோரும், எளியோரும், வற்றாத ஊற்றுக்கண்ணின்று பெறுவதுபோல, வலியோரும் என்னிடமிருந்து புதிது புதிதாய் உயிர்நீர் பெறுகின்றார்கள். உண்மையுடன், மனப்பூர்வமாய், என் கைங்கரியம் செய்கின்றவர்கள் மேன்மேலும் ஒன்றின்மேலொன்றாய் சாதகம் பெறுகின்றார்கள். ஆனால் என்னை மறந்து, தன் மஹிமையில் இறுமாப்பு அடைந்து, தான் ஒரு நன்மையைச் செய்கிறதாக எண்ணிக்கொண்டு தன்னுள்ளே செருக்குற்று, இருக்கின்ற மனிதன் சந்தோஷம், நிலைத்ததன்று. அஃது உண்மையான சந்தோஷமுமன்று. அவன் மனம் விரிந்து மலராது குன்றிக் குறுகி, கிலேசங்கட்குட்படும். ஆகையால், எந்த நன்மை இருப்பினும், அதை உன்னதாக நினையாதே. வேறு எந்த மனிதனாலும் நேர்ந்தது என மதியாதே. எல்லாம் ஈசன் செயல். இறைவனன்றி, மனிதன் ஒன்றுமில்லை.

நான் எல்லாம் உனக்குக் கொடுத்தேன். அவை எல்லாம் என்னிடம் திரும்ப எதிர்பார்ப்பேன். செய்ந்நன்றி உன்னிடம் வேண்டுவேன். வந்தனம் வழிபாடு வேண்டுவேன். இவ்விஷயத்தில் நான் கண்டிப்பாய் செய்தலைக் கோருவேன். தற்பெருமையும், தற்புகழும் நீக்க இதுவே உற்ற உபாயம். இதுவே உண்மை முறை. இறைவன் அருளும் உண்மையான அன்பும் உள்ளத்தில் படியுமாயின் பொறாமை இராது. அற்ப புத்தி அகலும். மமதை அறும். ஈசன் அருளும் கருணையும் எல்லாவற்றையும் மேவிடும். ஆத்மாவின் சக்திகளை விசாலமாக்கும். அறிவுள்ளவனானால் என்னையே பற்றிச் சந்தோஷிப்பாய்; களிப்பாய்; என்னையே அடைக்

‡ வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி
ஊனாகி, உயிராகி, உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி அவன் அவனைக் கூத்தாட்டுவானாகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவனே.—மாணிக்கவாசகர்.



கலமாக நம்புவாய்; இறைவனை விட வேறு உயர்நலம் இன்றாம். எல்லாவற்றினும் அவரே புகழத்தக்கவர். அவரே ஸ்துதிக்கத்தக்கவர்.

## 10-வது அதிகாரம்.

### * உலகத்தை வெறுத்து, இறைவனுக்கு அடிமையாக இருத்தல், இனிமையானது.

பக்தன்.

மறுபடி மறுபடி, கடவுளே! நான் வசனிப்பேன். நான் பேசாமல் இரேன். என் இறைவனே! மேலுலகத்தின்கண் உள்ள என் அரசே! கடவுளின் செவிகளில் என்னுள்ளத்தில் உள்ளதைச் சொல்லுவேன். எத்தனையோ நலன்கள் எனக்கு அருளினை; உன்னைப் பயந்திருக்கின்றவர்களுக்கு அவைகளை மறைத்தனை; உன்னுடைய அன்பர்களுக்கு நீ எத்தன்மையை? உள்ளம் கனிந்து, நெஞ்சு உருகி உன்மீது பக்திபாராட்டுகின்றவர்களுக்கு நீ என்ன ஆவாய்! உன்னை நினைந்தார் மனத்தில் உன்னைப்பற்றிய சிந்தனையின் உயர் நலம் அம்ம! அம்ம! என்ன என்பேன்! முக்கியமாய் என் விஷயத்தில் உன் அன்பின் நலம் அளவுக்குமிஞ்சிக் காட்டினாய்! நான் உயிரில்லாப் பிணமாகக் கிடந்தேன். என்னை ஆக்கினாய்! என்னை உயிர்ப்பித்தனை. உன் நெறிவிட்டு நீங்கினேன்; திரும்பி என்னை உன் வழியுட்படுத்தினை. உன் கைங்கரியம் செய்ய அறிவித்தனை. உன்னை அன்பு பாராட்டும் எனக்கு ஆஞ்ஞை செய்தனை.

என்றும் பெருகி ஓடும் அன்பின் ஊற்றே! உன்னைப்பற்றி என்ன என்பேன்? உன்னை எப்படி மறப்பேன்? என்னை நினைக்க இரங்கி அருள் புரிந்தனை! எல்லாம் இழந்து பாழாகி என் உயிரும் நீங்க எத்தனிக்கையில், நீ அருள்புரிந்தனை! இவ்வடிமையைப் பொருளாக நினைந்த ‡"என்பரமில்லா இன்னருந் தந்தாய்" நலமொன்றுமில்லா எனக்கு உன் நட்பின் நலம்சார் ஸ்பரிசம் கொடுத்தாய். §"யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு."

* சுந்தரமூர்த்தி தேவாரங்களைப் பார்க்க.

‡ மாணிக்கவாசகர்.

§ மாணிக்கவாசகர் செத்திலாப்பத்து என்ற பதிகத்தைப் பார்க்க.

எல்லாம் விடவும், உலகத்தை மறக்கவும், துறவறம் பூணவும் யாவரும் செய்யக்கூடியதன்றாம். இயலாதாம். ஆனால், சிருஷ்டி ராசிகள் எல்லாம் உனக்குத் தொண்டு செய்யவேண்டியவைகளாக இருக்க, உன் கைங்கரியம் செய்தல் கடினமோ? பெரிதோ? கஷ்டமோ? எனக்குப் பெரிதாகத் தோன்றப்படாது. ஆனால் நானோ ஏழை. அற்பன். அபாத்திரன். ஆயினும் நீ என்னை ஆட்கொண்டாய். உன் தொண்டரில் கூட்டினாய். இதுவே பெரிது. இதுவே ஆச்சரியம் தான். எல்லாம் உனதே. நான் என்ன தொழில்செய்தாலும் அதுவும் உனதே. எனது என்று சொல்ல ஒன்றுமில்லை. அதனால் உண்மையில், நீயே என்னடிமை. என் ஏவலாள். நான் அல்லன். மண்ணும் விண்ணும் உன் வேலை செய்ய ஆயத்தமாக இருக்கின்றன. அவைகளையோ மனுஷனுக்கு ஊழியஞ் செய்யச் சிருஷ்டித்தாய். உன் ஆஞ்ஞையை அவைகள் கொண்டு செலுத்துகின்றன. இது பெரிய ஆச்சரியமன்று. தேவர்களும் கூட மனுஷனுக்குத் தொண்டு செய்ய கட்டளையிட்டிருக்கிறாய். இதுவும் பெரிதன்று; மனுஷனுக்கு நீயே ஏவலாளாய் இருக்கவும் சம்மதிக்கிறாய்; உன்னைத் தியாகம் செய்யவும் வாக்குறுதி கொடுத்திருக்கிறாய்.

†இத்தகைய ஆயிரக்கணக்கான நலன்களுக்கு, நான் என்ன கைம்மாறு செய்திடுவேன்? என் வாழ்நாள் முழுமையும் உன்னடிமையாகி உனக்குத் தொண்டு செய்யேனோ? உண்மையான தொண்டு ஒருநாளேனும் செய்யமாட்டேனோ? என்ன வேலை யான் செய்தாலும் அது உனக்குத் தகும்; என்ன அர்ச்சனை யான் செய்தாலும், அஃது உனக்கு நேர்மையாகும். என்ன உபசாரம் யான் செய்தாலும் அஃது உனக்குப் பொருந்தும். நீ என் நாதனே. நானே உன்னடிமை. என் சக்தி முழுமையும் உனக்கு அர்ப்பணம் செய்கிறேன். உன்னைப் போற்றி செய்தலில் சோர்வடையேன்; இது தான் என் விருப்பம்; என்னுயர் நோக்கமும் இதுவே. என்னில் உள்ள குறைவை நிறைவு செய்ய அருள்வாய்.

2. உன்னை நேசித்து, உலகைத் துறந்து, உன் தொண்டு செய்தலே பெரும்பாக்கியம்! அதுவே பெருங்கீர்த்தி. உன் உயர் கைங்கரியம் சிரத்தையுடன் செய்ய இணங்குகிறவர்கள் உன் பேர்

†மாணிக்கவாசகர் கோயிற்றிருப்பதிகம் பார்க்க.



அருள் பெறுவர்; பரிசுத்த ஆவியின் இனிய ஆறுதலைக் காண்பார். உன் அன்பினால் உலக வாழ்வை முற்றும் துறந்து, உன்னையே நம்பி கூர்மையான உன் வழியில் பட்டு நடைபெறுகின்றவர் சாந்தம் அடைவார். சுவராஜ்ஜியம் வகிப்பார்.

இறைவனின் உயர்கலம் வாய்ந்த கைங்கரியமே! உன்னால், மனிதன் உண்மையாய்ச் சுதந்தரம் பெறுகிறான்; பரிசுத்தன் ஆகிறான். ஈசனுக்கு அடிமைத்தொழில் செய்யும் உயர்குணமே! நீ மனிதனைத் தேவர்களுக்குச் சமானமானவனாக ஆக்குகிறாய். இறைவனுக்கு உள்ள இனிமையான நிவேதனமாகச் செய்கிறாய். அசுரர்கள் அவனைக் கண்டால் நடுங்கும்படி பண்ணுகிறாய். அன்புடையார்க்கு ஒரு ஆறுதலை உண்டாக்கினாய்.

ஈசுவர கைங்கரியமே உன்னை யாரும் ஏற்றுக்கொண்டு அனுஷ்டிக்கவேண்டும். அதனால் உயர்வற உயர்நலம் பெறுவார். அந்தமில்லா ஆநந்தம் அடைவார்.

## 11-வது அதிகாரம்.

## மனத்தின் ஆசைகளை பரிசீலனை செய்து வரம்புக்குட்படுத்தல்.

கடவுள்.

குழந்தாய்! நீ தெரிந்துகொள்ளவேண்டியவைகள் இன்னும் அநேகம் இருக்கின்றன. அவைகளை நீ பூர்ணமாய்க் கற்கவில்லை.

ஜீவன்.

நாதனே! அவை என்ன?

கடவுள்.

1 உன்னுடைய பிரியங்களை ஒழித்து, என்னுடைய பிரியங்களை செய்வதில் ஊக்கமுள்ளவனாய் இருத்தல்; சுயநயம் பாராட்டாமை; எனக்குப் பிரியமான கருமங்களைச் செய்தலே உத்தமமானதென்று சிந்தித்தல். இத்தகைய விருப்பமும் சிந்தனையும் கருமங்களைச் செய்ய உன்னைத் தீவிரமாகத் தூண்டும். அப்போது, என் கருமங்களைச் செய்தலாகிய பூஜையை நடத்தவா அல்லது உன் இலாபத்துக்காகவா என்று கவனிப்பாய். என் கருமம் செய்தலாக இருப்

பின், என்ன வேலையாகவும் அதை ஆஞ்ஞாபித்தாலும் உனக்கு மனரம்மியமும் திருப்தியும் உண்டு. ஆனால், ஏகதேசம் அதன் கண், உன் ஸ்வாபம் அற்பமேனும் மறைந்திருப்பின், தக்ஷணமே உனக்கு வந்தது கேடு. உன்னை மேற்போகாமல் தடுத்து, உன்னைக் கீழே தள்ளிவிடும். அதனால், என்னுடன் கலந்து, என் மனோரதம் இன்னதென அறியாமல், உன் இச்சையை நிறைவேற்றச் செய்யும் முயற்சியில் சாவதானமும் சிந்தனையும் உள்ளவனாக இருக்கவேண்டும். அன்றேல், பின்னர் நீ துக்கிப்பாய்; உன்னையே நொந்து கொள்ளுவாய். "ஆ! ஆ!! என்ன மோசம் போனேன்; இறைவன் வழிப்படாமல், என் விருப்ப வழியில் பட்டுக்கெட்டேனே" என்று நீ அனுதாபப்படுவாய். நன்மைபோன்ற நினைப்பெல்லாம் நலன் ஆகா. உடனே அனுஷ்டிக்கத்தக்கவையாகா. தீமை போன்ற நினைப்பெல்லாம் தீயனவாகா. உடனே தவிர்க்கப்பாலதன்று.

2. நல்ல விருப்பங்கள், நல்ல வாஞ்சைகள் மனத்தின்கண் உண்டானால் நிக்கிரகம் செய்தல்வேண்டும்; அன்றேல், மனத்தில் எழும் ஆவேசத்தாலும், உற்சாகத்தாலும், அஜாக்கிரதையானவழியில் தவறிப்போவாய். உன்னுடைய எச்சரிக்கைக் குறைவால் பிறருக்கு அவதூறும் பழியும் சம்பவிக்கும்படி செய்வாய். அல்லது பிறர் தடையும் விரோதமும் நேரிட்டு, திடீரென நிலைகுலைந்து, கெட்டுப்போவாய். சிற்சில சமயங்களில், ஆசைகளின் போக்கைப் பலவந்தமாய்த் தடுக்கவேண்டும். தேகத்தின் விருப்பு வெறுப்புக்களைக் கொஞ்சமேனும் நினைக்கக்கூடாது. தேகம் இசைந்தாலும் சரி. இசையாவிடினும் சரி. அது ஆத்மரக்ஷிப்புக்குரிய வழியில் படியும்படி முயலவேண்டும். அதைக் கடியவேண்டும். தண்டனைக்குட்படுத்தவேண்டும். அதைப் பணியும்படி செய்யவேண்டும். எல்லாவற்றையும் செய்ய அது இசையும்வரையிலும், அற்பத்தில் திருப்தியடையும்வரையிலும், இயல்பாய் நேருமவைகளில் சந்தோஷம் அடையும்வரையிலும், நேர்மையில்லா விஷயங்களில் முணுமுணுப்பின்றிச் சாந்தமாக இருக்கும்வரையிலும் அதைக் கடிதல்வேண்டும்.



## 12-வது அதிகாரம்.

### துராசையுடன் போராட்டமும், பொறுமையும்.

ஜீவன்.

என் இறைவனே? உண்மையாய் எனக்குப் பொறுமை வேண்டுவதுதான். ஏனெனில் உலகவாழ்வு வெகுதுன்பத்துக்கும் துயரத்துக்கும் உள்ளானது சமாதானத்துடன் காலம்கழிக்க எவ்வளவு முயன்றாலும், வியசனமும் போராட்டமும்இன்றி நிகழவில்லை.

கடவுள்.

குழந்தாய்? அதுவாஸ்தவம்தான், ஆனால், துன்பமும் துயரமும் என்றும் இல்லாத சமாதானத்தை நீ நாடுவது உசிதமன்று, அது நலமன்று. கவலைக்கு இடமுள்ள சம்பவங்கள் துன்பங்கள் தடைகள் நேரிட்டால்தான், சாந்தநிலை, அனுபசித்தமாய்க் காணலாகும் என்று நீ தெரிந்துகொள்ளவேண்டும். துன்பங்கள் சகிக்கமுடியவில்லை என்றாலோ, புவர்லோகமாகிய பாபவிமோசன ஸ்தானத்தின் கொடுமையான ஜ்வாலைபோன்ற அனுபவங்களை எப்படிப் பொறுக்கப் போகின்றாய்? எப்போதும் இரண்டு துன்பங்களில் இலேசானதைப் தெரிந்துபற்றுக. இனிவரப்போகின்ற, என்றுமுள்ள மரணதண்டனைகளை விட்டுத்தப்பிக்கும் வண்ணம் தற்கால துக்கங்களை, இறைவனைவேண்டிச் சாந்தமனசுடனே பொறுத்துக் கொள்ள நீ முயலவேண்டும். உலகத்தில் மனிதர்கள் அனுபவிக்கின்ற துன்பம் அற்பமென, எண்ணுகிறாயா? அதிக உல்லாசமாகக் காலங் கழிக்கின்றவர்களையே நீ கேள். அவர்களுக்கு அனேக சுகானுபவங்கள் இருக்கின்றன; சுயேச்சையாக நடைபெறுகின்றார்கள் என நீ நினைக்கக்கூடும் அதனால், அவர்களுக்குக் கவலைகிடையாது, துன்பமில்லை என்று நீ மதிக்கலாம்.

நீ நினைக்கிறபடியே, அவர்கள் விரும்பியபடி காலங்கழிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். இத்தகையவாழ்வு எவ்வளவு காலம் நடக்குமென நினைக்கிறாய்?. இப்பெரிய சம்பத்தெல்லாம் புகைபோல் பறந்துபோம் நிற்காது. அவைகளைப்பற்றிய ஞாபகம் கூட இல்லாமல் பொய்த்துப்போம்.

மேலும், அவர்கள் வாழ்வுடன் இருந்த காலத்திலேயும் சுகம் உண்டா? வியசனமும், பயமும், சோர்வும், துக்கமுந்தான் அவர்கள் உண்மையான அனுபவம். சுகமென்று எண்ணி அதை நாடினதின் பலன் அதன் தண்டனையாக துக்கந்தான் அவர்கள் கண்டார்கள். அதைத்தான் அவர்கள் பெற்றார்கள். அது நியாயமே மனம்போனபடி சந்தோஷங்களை நாடித்தேடி, வரம்பின்றி அவைகளை அனுபவித்தால் மனக்கிலேசமும் குழப்பமும் வந்துதானே தீரவேண்டும். அந்தோ! இச்சுகங்கள் எல்லாம் அற்பமே. அவை பொய், அவை கசுமலம் குடி வெறியினாலும், மதிமயக்கத்தினாலும், ஜனங்கள் இவைகளை அறிகிறார்கள் இல்லை. வாயில்லா மிருகங்கள்போல, உலகவாழ்வின் அழியக்கூடிய அற்ப சுகத்துக்காக ஆத்மஹத்தி செய்கின்றார்களே! (அஞ்ஞான இருளில் மூழ்கின்றார்கள் என்பது பொருள்) தங்கள் ஆண்மை இழக்கின்றார்களே.

2. அதனால் என் பிரியனே, துராசைகளைத்தவிர். உன் மனப்போக்கைத்தடு. அதன் வழியினின்றுந்திரும்பு. இறைவனிடம் சந்துஷ்டியாக இரு. அவர் உன் அபீஷ்டங்களை அருள்வார். இறைவன் அருள்வேண்டுமா?. ஏராளமான சுகம்வேண்டுமோ? வேண்டின் உலகவாழ்வைச்சிந்திப்பாய், உலகவைபவங்களை அலக்ஷியம் செய்வாய், அற்பசுகங்களை தவிர்ப்பாய் உனக்கு அழியாச்சுகம் வரும் எவ்வளவுக்கு எவ்வளவுதூரம் உலகப்பற்றினின்று அகலுகிறாயோ, அவ்வளவுக்கு அவ்வளவு என்னிடம் சுகத்தையும் ஆறுதலையும் காண்பாய்.

3. ஆனால் முதன்மையில், சொற்பகஷ்டம், சொற்பதுக்கம் இன்றி இதை எல்லாம் அடையமுடியாது. பழயவாசனைகள் உனக்குக்குறுக்கே தடையாக இருக்கும். அவைகளை ஜயித்து, நல்ல வாசனைகள் ஏற்றவேண்டும். அடிக்கடி சரீரதர்மங்கள் உன்னை தொந்தரவு செய்யும். திடமானபுத்தியால அவைகளை நிக்கிரகம் செய்ய வேண்டும். புராதனபகையான பாம்பு உன்னைக்கடிக்கும். உன் மேல் விஷம் ஏறும். தபஸாலும் தியானத்தாலும் அதை விலக்கவேண்டும். அதன் பிரவேசம் இல்லாமல் நிகழும் வண்ணம் நலன் சார்ந்த வேலையை நீ எப்போதும் செய்துவரவேண்டும்.



நீ, பிறர் காலில் விழப்பழகுவாய், உன் அகங்காரத்தைத் தணிக்க அறிவாய், யாவர்க்கும் அடிமையாக இருக்க விரும்புவாய், உன்னைக் கடிந்து கொள்வாய், செருக்கைத்தவிர். தாழ்மையுடையனாக இரு அற்பனாக அமைதி கொள், பிறர் எல்லாம் உன்னை மேற்போகச்சகி, ஒரு பள்ளத்தின் சேற்றை போல, உன்னை அலக்ஷியம் செய்யப்பொறுமை பாராட்டு. பாழானவனே! ஒன்றுமில்லானே, உனக்கு ஏன் முணு முணுப்பு இருக்க வேண்டும்? அசுத்தனே, கொடிய பாவியே பிறர் நிந்தித்தால் உனக்கு என்னசமாதானம் இருக்கிறது இறைவன் மனம் பலகால் நோகச் செய்தாய், நரகத்துக்கு அநேகம் தடவை அருகனாய். ஆயினும் என் கருணையால் நீ தப்பினாய் உன் ஆன்மா என் நோக்கில், உயர் காலம் வாய்ந்தது, அதனால் என் அன்பை அறிந்து, நலனுக்கு என்றும் நன்றி பாராட்டி, உண்மையான கைங்கரியத்தை வகித்து, அடங்க ஒழுகி, அவதூறு மூட்டை சுமந்து பொறுமை பற்றி நடை பெறுவாய் என, உன்மீது யான் இறங்கினேன்.

## 14-வது அதிகாரம்.

### நலன்கார் வேலைசெய்தோமென இறுமாப்பு உண்டாகா வண்ணம் கடவுளின் குப்தமான தீர்மானங்களைப்பற்றிய சிந்தனை.

என்நாதனே! என்மீது தண்டனைகளை இடிமுழக்கம்போல விதிக்கின்றீர். பயத்தினாலும், திகிலினாலும், என்னெலும்புகள் நடுநடுங்கின்றன. நான் திடுக்கிட்டுத் தயங்குகிறேன். பிரமித்து, வாய்மூடி ஸ்தம்பம்போன்று நிற்கிறேன். உம்முன் தேவர்களே பரிசுத்தமில்லாதவர்களாக இருக்கிறார்கள் என மதிக்கிறேன். தேவர்களே மாசற்றவர்களாக இருந்தும் அவர்களும் உம்முடைய தண்டனைகளுக்கு உள்ளாவார்களாகில், நான் எம்மட்டு? நான் ஒரு பொருளா? விண்ணின்று நக்ஷத்திரங்கள் விழுந்தனவே. தூளி போன்றவன் யான். என் கதி என்ன என்பேன். மெய்ச்சதக்க கருமங்கள் செய்தவர்கள் அந்தோ! அதப்பாதாளத்தில் வீழ்ந்தனர்களே! தேவாஅமிர்தம் உண்ட பெரியோர்கள் பன்றியின் இரையாகிய தவிடு உண்டு திருப்தியடைந்தார்கள்! அதனால் உம்மாதரவு நீங்கினால் தூய்மை எங்கே? நலம் எங்கே? உம்மாளுகை அகன்றால் ஞானம் எங்கே? உம்மாக்ஷணை இன்றேல் தைரியம் எங்கே? உம்முடைய

## 13-வது அதிகாரம்.

### ஏகநாதரின் ஒழுக்கமுறையை அனுசரித்து, பக்தன் பண்பும் பணிவும் உடையவனாயிருத்தல்.

கடவுள்.

என் குழந்தாய்! பணிந்து அடங்கி நடவாதவனுக்கு அருள் பிரசாதம் இன்னும். சொந்த லாபத்தை வேண்டுபவன் பொது நன்மையை இழப்பான். தன் எஜமானனுக்கு மனப்பூர்வமாய் எவன் படிந்து நடக்கவில்லையோ, அவன் சரீரம் அவனுக்கு நேர்மையில்லை என்றும் அவனுடன் போராடுகிறதென்றும் வெளியாகும். இதனால் நீ தெரிந்து கொள்வது யாதெனில், உன் தேகத்தின் போக்கை தடுத்து, அது உன் வசமாகவேண்டின், உன் மேலானவனுக்குப் படிந்து நட. உன் உள்ளம் பாழாய் இராமல் நேர்மையாய் இருப்பின், வெளிப்பகையான தேகத்தை அடக்கி ஆளலாம். ஆன்மாவிற்கு விரோதமாய் நீ போராடுவாயாகில் உனக்குப்பகை நீயே. உனக்கு கடூரமானவும், துன்பம் செய்யக்கூடியவனுமான பகைவன் உன்னை அன்றி வேறு ஒருவனும் இலன். உன் தேகத்தையும் உன் இரத்த ஊக்கத்தையும் நீ வெல்ல வேண்டுமானால் உன்னைப்பற்றித் தாழ்வாக நினை. உன்னைப்பற்றிய அபிமானம், அளவுக்கு மேல் இன்னும் இருக்கின்றமையால், பிறர் சொற்படி நடக்கவும், பிறர் மனத்துக்கு நேர்மையாக ஒழுகவும் நீ இணங்கப் பயப்படுகின்றாய்.

2. அற்பன் நீ, பாததூளி நீ, இறைவனை உத்தேசித்து, பிறருக்குப்படிந்து வேலைக்காரனாக நீ இருத்தல் ஒரு பெரிய காரியமா? சர்வல்லமையுள்ளவன் நான் உயர்வற உயர்நலமுடையவன் நான், அசத்தினின்று பிரபஞ்சம் முழுமையும் சிருஷ்டித்தேன் நான், இத்தன்மையனாக இருந்தும் ஈச்வரன் அவதாரங்கள் எல்லாம் இம்மாதிரியே. பாகவதம் பகவத் கீதை விஷ்ணுபுராணம் இவைகளைப்பார்க்க. மனிதனுக்குட்பட்டு பணிந்தேன். வேலைக்காரனாக அமர்ந்தேன். அற்பனினும் கேடனாக ஆனேன். உன்போன்றவர் இதைப்பார்த்தாவது பண்பும் பணிவும் தாழ்மையும் பற்றி நடை பெறுவார்கள் என்று எண்ணியே இவ்வண்ணம் செய்தனன். பாததூளியானவன் நீ கீழ்ப்படியத் தெரிந்து கொள்வாய். தாழ்மையாக நடைபெற அறிந்து கொள்வாய். மண்போன்றவன் நீ, அற்பன் நீ, அசுத்தன்



காப்பு நீங்கில் காப்பு எங்கே? கண்கொட்டாத உம்முடைய உயர்வான பாதுகாப்பு இல்லாவிடில், எங்கள் காப்பு என்ன செய்யும்? எங்களையேநம்பி நடைபெறுவோமாகில், நாங்கள் அமுழ்வது திண்ணம்! அழிவது உண்மை! நீர் சமீபத்தில் இருப்பின், நாங்கள் தலையெடுப்போம். பிழைப்போம. நிலையற்றவர்கள் நாங்கள். உம்மால் உறுதிப்பாடு அடைவோம். உற்சாகமில்லாதவர்கள் நாங்கள். உம்மால் தீவிர உற்சாகம் பெறுகின்றோம்.

2. எவ்வளவு தாழ்மையும், பணிவும் அமைந்து நான் நடக்க வேண்டுபவன்? என்னால் செய்யபெறும் நன்மை எவ்வளவு அற்புதமானது? உம்முடைய மதிப்பில், எவ்வளவு தாழ்ந்தவனாக அதபாதாளத்தில் கிடக்கின்றேன் யான்? நலம் ஒன்றும்இல்லாதான நான் ஒன்றுமில்லாதான யான் என்று அறிகிறேன். உம்முடைய உயர்ந்த மஹிமை எங்கே? நான் எங்கே? வெகுதூரம் காண்! அந்த இடை நடுவாகிய சமுத்திரத்தை கடக்க வல்லான் யாவனே? என்னிடம் ஒன்றும் காணேனே என்னை முழுவதும் சோதித்தாலும் ஒன்றும் இல்லானே! நான் தற்புகழ்ச்சி சாதிக்க என்ன ஆதாரம் இருக்கின்றது? என்னலம் என்னிடம் கண்டு நான் இறுமாப்பு கொள்வேன்? உம்முடைய திவ்விய தீர்ப்பினால், என் செருக்குக் கிடமுண்டோ.?

3. உம்முன் மனிதன் யோக்கியத்தை என்ன என்பேன்? உருவாக்குவோன் முன்னர், களிமண் பெருமை ஏற்றமிட்டும் இயலும்? உள்ளபடி ஈசுவர அபிமானமுடையவன் ஜனங்கள் வாசாஸ்துதியால் இறுமாப்பு அடையான். உண்மை அறிந்து அதனால் பண்பும் பணிவும் பெற்றவன், மனத்தை உலகம் (உலக சம்பந்தம் எத்தன்மையதாயினும்) பேதிக்கமாட்டாது. இறைவனைச்சரணம் அடைந்தவன் ஜனங்களின் வாய்ஸ்துதியினால் மயங்கான். ஸ்துதிசெய்கின்றவர்களே அன்பர்கள் ஆவார்கள். அவர்கள் வாக்கு எப்படிலயமடைகிறதோ அப்படியே அவர்களும் போகின்றார்களே (மறிக்கின்றார்கள்). சத்தியம் ஒன்றுதான் என்றும் நிலைக்கின்றது. இறைவன் ஒருவனே என்றும் இருக்கிறான்.

## 15-வது அதிகாரம்.

### யாதேனும் ஒன்றுவேண்டின், அதை எந்நிலையினின்று எவ்விதம் கேட்கின்றது.

## கடவுள்.

என் குழந்தாய்! ஒவ்வொரு சமயத்திலும் அடியில் வருமாறு பிரார்த்தனை செய்—: "இறைவனே, (பகவத்கீதை—18-ம் அத்தியாயம் ஞானம் பெற்ற மேற்கூறிய அர்ச்சுனனின் மனோநிலை இதுவாம்) உன் திருவுள்ளம் எப்படியோ, அப்படி இவ்விஷயம் நிகழட்டும். உன் மஹிமை எப்படியோ, அப்படியே இதில் உன் நாமம் விளங்கட்டும். இவ்விஷயம் எனக்கு அனுகூலமாக விருப்பின், எனக்குப்பயன் படுமென நீர் எண்ணுவீராகில், உம்முடைய மஹிமை பிரகாசிக்க நான் அதைப் பெறும்படியாக நீர் அருளுவீராக. அஃது எனக்கு அனுகூலமின்றித் தீமை பயக்குமென நீர் அறிவீராகில், அதைப்பற்றியே சிந்தனை கூட என்னிடம் உண்டாகாமல் விலக்கி வைப்பீராக."

நம்முடைய ஒவ்வொரு விருப்பமும், நன்மை போலவும், நேர்மை போலவும் இருப்பினும், பரிசுத்த ஆவியினின்று வருதலை உடையதன்று. உன் விருப்பதை உண்டு பண்ணுகிறவன் நல்ல தேவனோ தீய அசுரனோ அல்லது உன்னுடைய சொந்தக் கருத்துத்தானோ என சில சமயங்களில், உண்மை கண்டு பிடிக்க முடியாமையாகவிருக்கிறது. மோசம் போகி பெரும்பான்மையோர் ஒரு தேவனே அந்த விருப்பத்தை உண்டு பண்ணினான் என முதலில் நினைந்து, கடை முறையில் மோசம் போகிறார்கள்.

2. விரும்பக்கூடியதென உன் மனத்தில் எது எது தோன்றுகிறதோ, அது ஈசுவரபயபக்திபற்றியும் பணிவுடனும் வேண்டப்படுகிறதா என, நீ யோஜித்துப்பார். இவை எல்லாம்விட, நீ செய்ய வேண்டியது என்னவெனில், நீ என்னை அடைக்கலம்கொள். பூரணமாய் என்னை நம்பு. பின்பு உனக்கு வேண்டியதை அடியில்வருமாறு பிரார்த்தித்துக்கொள். "நாதனே! எனக்கு நலன் எது என்பதை நீர் அறிவீர். உம்திருவுள்ளபடி இதுவோ, அதுவோ, எதையும் எனக்கு அருளும். அது எவ்வளவு என்றாலும், எப்போது என்றாலும், உன் மனப்படி நிகழட்டும். உம்மிச்சைப்படி என்னை நடத்தும். என்னை எங்கே வைத்தாலும்சரி, தங்குதடையின்றி என்னை தினம் தினம் என்னசெய்குவீரோ அது உம்முடைய யுக்தம். நான் உம்முடைய கைக்குள் அடங்கியிருக்கிறேன். என்னை எவ்வி



தஸ்வரூபப்படுத்த விருப்பமோ அவ்விதம்செய்வீராக. நான் உம்மடிமை. உம் ஆக்ஞை எதை செய்யவும், நான்சித்தமாக இருக்கிறேன். என்னுயிர் ஓம்பேன். எனக்காக ஜீவித்திரேன். உம்மின் பொருட்டு நான் உயிர்வாழ்கின்றேன். சரியாயும் நேர்மையாயும் என் வாழ்நாள் நடைபெறவேண்டுகின்றேன்.

3. திரு உள்ளம் நிறைவேற வேண்டுமென பிரார்த்தனை.

ஜீவன்.

பிரியமுள்ள இறைவ என்னுடனிடம் தங்க நீ அருள்வாய்; என் கைங்கரியத்தில் ஒரு பாகம் ஏற்பாய்; கடை முறைவரை என்னுடன் இருப்பாய்.

உன் உள்ளமும், உனக்குப்பிரியமானதும், என்னுடைய அபிஷ்டமாக இருக்கச்செய்வாய். உன் சிந்தை என் சிந்தையாகட்டும்; என் மனம் உன் மனமுடன் நேர்மையாக நடை பெறட்டும்; என் விருப்பு வெறுப்புக்கள், உன்னுடைய வைகளுடன் ஒத்து இருக்கட்டும். உன்னை அன்னியதாக எனக்கு ஒரு பிரியம் அப்பிரியம் இல்லாமல் இருக்கட்டும். உலக சம்பத்தின் பற்று என்னிடமிருந்து நீங்கட்டும்; உன்னிமித்தம் பிறரால் இகழ்ந்தும், பிறர் அறியாமலும் என் வாழ்நாள் நடக்கட்டும்; என் விருப்பங்கள் எல்லாம் அடங்கி, உன்னிடம் நான் பற்று வைக்கட்டும்; உன்னிடம் என் மனம் உபசாந்தம் பெறட்டும்; நீயே என்னுள்ளத்திற்கு உண்மையான சாந்தி; விசிராந்திஸ்தானம். நீயின்றி எல்லாம் கல்லுங்கரமாம். சலனமாம். இவ்விசிராந்திஸ்தானத்தில், இந்தச்சாந்த விடத்தில், அதாவது, என்றும் உள்ள உயர் நலமாகிய உன்னிடத்தில், தங்கிப் பள்ளி கொள்ளுவேனாக.

## 16-வது அதிகாரம்.

## இறைவனிடம் தான் உண்மையான ஆறுதல் தேடற்பாலது.

ஜீவன்.

என் வேண்டுதலும், என் சுகமும் பெறுவேன் என்று நினைக்கற்பாலதன்று. இனி, மறுமையில் பெறுதல் கூடும். உலகம் அளிக்கக் கூடிய எல்லா சுகங்களையும், நான் பெற்றேன் என்றாலும், எல்லாச் சந்தோஷங்களையும் அனுபவித்தமாக அடையக்கூடியதேன்

என்றாலும், அவைகள் நீடித்து இரா. ஆதலால் என்மனமே! உண்மையாய், சுகந்தரக்கூடிய நலமும், பூர்ணமான தேற்றமும், இங்கு இல்லை. கடவுளிடம்தான் சித்திக்கும். அவர், அற்பனை ஆதரவோடு அங்கீகரிப்பர், ஏழைகளுடன் ஆறுதலாய் வசிப்பார். மனமே, சற்றுநேரம் பொறுத்துக்கொள். கடவுள் வாக்குத்தத்தம், நிறைவேறும் எதிர்பார். மேலுலகின் எல்லா வைபவங்களும் உன்னுடையதாகும். கண்டதே காட்சி கொண்டதே மோக்ஷம் என்று நினைந்து தோன்றும் சம்பத்தைச் சதமென மதித்தும், அவைகளை ஆவலுடன் விரும்புவாயாகில் என்றுமுள்ள மறுமையின் சம்பத்துகள் யாவையும் இழந்துவிடுவாய். லௌகிக விஷயங்களை அனுபவித்தாலும் எண்ணமெல்லாம் என்றுமுள்ள மறுமையிலேயே நிற்கட்டும்.

2. காலவரம்புக்குட்பட்ட பொருள்களால் உனக்கு பூர்ண திருப்தி உண்டாகாது. அவைகளில் சந்தோஷம் அனுபவிக்கவா இச்சரீரம் யெடுத்தாய்? சிருஷ்டிப்பொருள் யாவையும் உன்னிடமிருப்பினும் அவைகளால் உனக்குச் சந்தோஷம் இன்றாம். அவைகளால் சுகமும் இன்றாம். ஆனால் இவையெல்லாம் சிருஷ்டித்த கர்த்தர்பால்தான் உன் ஆனந்தமும் சுகமும் உனக்கு நிகழும். அவ்வானந்தமும் அச்சுகமும் உலகப்பற்றுள்ள ஜனங்கள் வெளிப்படையாக அனுபவிக்கிற சுகங்கள், அவர்களால் ஸ்துதிக்கப்படுகின்ற வைபவங்கள் இவைகள் அன்று. ஆனால், அவை கிறிஸ்துவின் உண்மையான அன்பர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஆநந்தமும் சுகமுமேயாம். அவை ஈசுவரனையே சிந்தைகொண்டவரான சில ஞானிகளும் மாசற்ற மனமுடையாரும் சிற்சில சமயங்களில் அனுபவிக்கும் ஆநந்தம் சுகம்போன்றவையாம். மனுஷசுகம் அற்பமே, நிலையற்றது. உள்ளத்தின்கண் மெய்யுணர்வினால் நிகழும் சுகமே உயர்நலம் பெற்றது. உண்மைவாய்ந்தது.

3. ஈசுவரபக்தன் எப்போதும் ஏசுவை தன் ஆறுதலுக்கு ஆதாரவாகச் சிந்தனையில் வைப்பான். ஏசுவினிடம் அடியில் வருமாறு சொல்லுவான்—"ஏசுநாதனே எக்காலத்திலும் எவ்விடத்திலும் நீ என்னிடம் இருப்பாய். மனுஷனால் ஏற்படும் ஆறுதலை விட்டு நீங்கியும் உன்னைப் பற்றியே நான் இருத்தலுமே எனக்குச் சுகமாம். உன்னுடைய தேற்றமும் தவிர என்னைவிட்டு நீங்கினால் என்னைச்



சரியானபடி பரீக்ஷைக்காக உன்னுடைய சபீஷ்டம் இப்படி நிகழ்ந்தது என நான் தேறுதலை அடைவேனாக. உன்னுடைய கோபம் எப்போதுமா என்மேல் இருக்கப்போகின்றது? அஃது எப்போதுமா என்னை பயப்படுத்தப்போகின்றது?

## 17-வது அதிகாரம்.

## நம்முடைய கவலையை எல்லாம் இறைவன் பொறுப்பு என்று அடைக்கலம் புகுதல்.

### கடவுள்.

என் குழந்தாய்! உன்னை என் வசம் ஆக்கு. உன்னை என் இஷ்டப்படி நான் எவ்விதமும் செய்யட்டும். உனக்கு உயர்நலம் இதுவென நான் அறிவேன். உன் எண்ணங்கள் எல்லாம் மனுஷத்தன்மையுள்ளவைகள். உன் விருப்பங்கள் எல்லாம் மனுஷ்யகதி பற்றியவைகள்.

### ஜீவன்.

நாதனே! நீர் சொல்வது உண்மையே. என்னைப்பற்றி என் கவனம், கவலைகளைவிட உம்முடைய ஆவலுள்ள சிந்தனை மிக அதிசயமானது. எவன் தன் கவலையை எல்லாம் உம்மேல் பொறுப்புச்செய்யாமலிருக்கின்றானோ, அவன் அபாயத்துக்குள்ளாவான்.

என் சிந்தை நேர்மைபற்றியும், உம்மையே லக்ஷியமாகவும் நடைபெறட்டும். மற்று நீர் என்னை எவ்விதம் நடத்தினாலும் நடத்தும். நீர் எனக்கு நன்மைதான் செய்வீர். என்னை அந்தகாரத்தில் தள்ளும். அப்போதும் உம்மையே போற்றி செய்கிறேன். என்னை வெளிச்சத்தில் விடும். அப்போதும் உம்மைப் போற்றிசெய்கிறேன். நீர் எனக்கு ஆறுதல் அருளினாலும் சரி, என்னை இடுக்கணுக்கு உட்படுத்தினாலும் சரி, உம்மைப் போற்றுவேன்.

### கடவுள்.

குழந்தாய்! என்னுடன் நேர்மையாக நடைபெற வேண்டுவாயாகில், முன் நீ சொல்லியவண்ணம் நீ ஒழுகற்பாலது. சுகத்தையும் துக்கத்தையும் சமமாக எண்ணுதலும், வறுமை வந்தாலும் செல்வம் வந்தாலும் மன நேர்மையாக இருத்தலும் இதுதான் உயர்வழி.

ஜீவன்.

நாயகனே! என்னவிதமான சம்பவம் எனக்கு நிகழும்படி நீர் செய்தாலும் அதை சாந்தமாய்ப் பொறுப்பேன். அது உம்மிடமிருந்து வருகின்றமையால், நன்மையானாலும் தீமையானாலும் இனிமையானாலும் கசப்பானாலும் சந்தோஷமானாலும் துக்கமானாலும் அதைச் சகிப்பேன். அதற்காக உமக்கு வந்தனமும் தந்திடுவேன். நன்றியும் பாராட்டுவேன்.

என்னைப் பாபத்தினின்று என்றும் பாதுகாரும். மரணமும் நரகமும் என்னை ஒருகாலும் பயப்படுத்தக்கூடியதன்று. உம்மை விட்டு என்றும் நான் அகன்றுபோகாமல் இருக்கும்படி செய்வீராக. மோக்ஷம் பெற அருகாளுடைய பட்டியினின்று என்னை விலக்காதிருப்பீராக. அப்படி செய்யாதிருப்பீராகில் என்ன துன்பத்தினாலும் எனக்கு கேடு வாராது.

## 18-வது அதிகாரம்.

### ஏசுநாதர் ஒழுகிக்காட்டியபடி லௌகிக துன்பங்களைப் பொறுத்தற்பாலது.

ஏசுநாதர்.*

என் பிரியனே! உன்னுடைய ரக்ஷணைக்காகவே மேலுலகங்களினின்று இங்கு அவதரித்தேன். அது யாதொருவர் பலவந்தத்தினால் அன்று; கருணையால் ஏவப்பட்டு நான் வந்தேன். நீ பொறுமைக்குணம் பெறவும், உலகத்தின் துக்கங்களை யாதொரு முறுமுறுப்பு இன்றிச் சகித்து நீ நடைபெறவும், அறிவுறுத்தும்வண்ணம் நான் தோன்றினேன். நான் பிறந்த நிமிஷமுதல் சிலுவையில் இறக்கும்வரை துன்பமும் துயரமும் இன்றி இருந்தேன் இலன். லௌகிக சுகங்கள் எனக்குக் கிடையா. என்னைப் பற்றிய நிந்தனைகள் பலவாம். அவமானங்களும், தூஷணைகளும் எண்ணில. அவையெல்லாம் பொறுமையாய்ச் சகித்தேன். நான் செய்த நன்மைகளுக்கு எல்லாம் நன்றியீனம்தான் பெற்றேன். அற்புதமான

*ஏசு என்பார் அவதாரத்தின் உண்மையை இப்புஸ்தகத்தின் அநுபந்தத்தில் பார்க்க.



சித்திகள் காண்பித்தேன். அவைகளுக்குக் கைம்மாறு நிந்தனைகள் ஏற்பட்டன. நான் ஞான உபதேசம் செய்ததற்குப்பதிலாகக் குற்றமும் பழியும் என்மேல் சுமத்தினார்கள்.

ஜீவன்.

நாதரே நீர் அவதரித்தநாளில் உம்முடைய பிதா (கடவுள்) வின் திரு உள்ளப்படி எல்லாத்துன்பங்களையும் சகித்து ஒழுகிக் காட்டினீர்; ஆகையால் ஏழையும் பாபியுமாகிய நான், உலக துக்கங்களைப் பொறுப்பேன். நீர் எவ்வளவுகாலம் இம்மையில் நான் இருக்கவேண்டுமென கட்டளை இடுகிறீரோ அவ்வளவுகாலம்வரை வீடுபெற விரும்புகின்ற யான் அழியக்கூடிய இச்சரீரபாரம் சகிப்புடனே தாங்கக்கடவேன். உலகவாழ்க்கை கஷ்டமானதாகவிருப்பினும் நீரே அவதரித்து கஷ்டங்களைப் பொறுத்து ஒழுகிக்காட்டினதினால் அவ்வுலகவாழ்க்கை புகழ்ச்சிக்கிடமான சுகிர்தம்பற்றியதாயிற்று. உம்முடைய ஒழுக்கமுறையாலும் உம்முடைய பக்தர்களான முனிவர்களின் அனுஷ்டான விதிகளாலும், பலஹீனர்களும் இவ்வாழ்வைப் பொறுக்கக்கூடியபடி இலகுவாகவும் சந்தோஷமாகவும் இருக்கின்றது. மோக்ஷக்கதவு அடைபட்டும், அதன் வழிமுறை தெனவென்றும் இருந்த காலமான பழய ஏற்பாடு அனுஷ்டித்த சமயத்தைவிட இப்போதிய வழிமுறை சுகமாகவும், ஆறுதல் பற்றியுமிருக்கின்றது. அதனாற்றான் முன்காலத்தில், வீடுபெற முயன்றவர் அற்பமே. மேலும் நீர் அவதரித்துத் துன்பமுற்று உம்முடைய மரணத்தினால் உலகத்திற்கு மீட்சி நேருமுன்னர் முற்காலத்தில் நல்லவர்கள்கூட மோக்ஷபூமியில் பிரவேசிக்கக் கூடாமையாக இருந்தது.* அதனால் எனக்கும் மற்ற எல்லா அன்பருக்கும், கருணையால், நித்தியமான சாந்தபதத்திற்குப் போகும் நல்ல நேர்மையான நெறியைக் காட்டினீர். இதற்கு நான் எவ்வளவோ நன்றி

*இஃது அறிவின்மை. முன்காலத்தில் இருந்த சத்புருஷர்கள் மோக்ஷம் பெறவில்லை என்றது வியப்பினும் வியப்பே. ஏசு என்பார் அவதாரத்துக்குமுன் மோக்ஷக் கதவு அடைபட்டிருந்ததாம். இவர்போல் எத்தனைபெயரோ ஞானிகள், மஹான்கள் உலகத்தின்கண் ஒவ்வொரு தேசத்திலும் அவதரித்து உள்ளார். ஏசு என்பார் சரித்திர உண்மை இப்புத்தகத்தின் அனுபந்தத்தில் பார்க்க.

பாராட்டக்கடவேன். உம்முடைய அவதார ஒழுக்கம் எங்களு
டைய பாக்கியம். எங்கள் மகுடம்போன்றிருக்கின்ற உம்மை வழி
பட்டு, பொறுமையுடன் உம்மை நாடுகிறோம். நீரே நடந்து காட்
டாவிட்டால் இம்முறையை யார் அனுஷ்டிக்கப்போகின்றார்? ஒரு
வரும் இலர்; நீர் ஒழுகிக்காட்டின திவ்வியமான மார்க்கத்தை
ஜனங்கள் அறியாராகில், அதை விட்டு விலகி எவ்வளவுதூரம் அப்
பால் பிறகே இருப்பார்கள். உம்மைப்போன்று தெள்ளிய ஒளியோ
லொழுகிக்காட்ட ஒரு மஹான் எங்களுக்கு அவதரிக்காமற்போ
னால் எவ்வளவு சித்திகள் இருந்தென்ன? எவ்வளவு அற்புதக்காட்சி
கள் நேர்ந்தென்ன? எவ்வளவு உபதேசம் கிடைத்தென்ன? இவை
பயனிலவாம்.

## 19-வது அதிகாரம்.

### துன்பங்களைச் சகித்தல், உண்மையான பொறுமை யுடையவன் அதன் லக்ஷணம்.

ஏசுநாதர்.

என் பிரியனே! நீ என்ன சொல்லுகின்றாய்? உன் குறை
கூறுதலை இனி நிறுத்துவாய். நான் பட்ட வருத்தங்களையும், அன்
பர்கள் பட்ட பாட்டையும் பார்த்து தேறுதல் அடைவாய். உன்
இயற்கையான போக்கை இன்னும் தடுத்தாயில்லை. நீ பொறுத்தது
என்பதெல்லாம் அற்பமே. எவ்வளவோ துன்பங்களை பிறர் சகித்
திருக்கின்றார்களோ! எவ்வளவோ சோதனைகளுக்குட்பட்டு நின்றாக
ளோ! எத்தனை விதமாயோ பரீக்ஷைக்கு உள்ளாயினார்களே! அவை
களையெல்லாம் ஜயித்து தேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள் காண்.
அவர்கள் அனுபவித்த இடுக்கண்களை அறிந்து, உனக்கு நேரும்
துன்பம் எவ்வளவு சிறிதானது எனத் தேறி. பொறுமை பாராட்டு;
உன்னுடைய துன்பங்களும் சிறிதல்ல என்று நினைப்பாயாகில், அந்
நினைப்பு உனக்கு பொறுமையின்மை காரணம்பற்றி நிகழ்ந்தது
அன்று என அறிந்திடுவாய். துன்பம் சிறிதாகிலும் பெரிதாகிலும்
சகிக்க முயலக்கடவாய். எவ்வளவுக்கு எவ்வளவு சகிக்கின்றாயோ,
அது எவ்வளவுக்கு அவ்வளவு உன் கருமம் அறிவுள்ளதாகும். அது
சிரேயஸ்கரமாம். அதனால் – அதாவது உன் மனமும், உன் முறை



களும் யோசனையின்மேல் நேர்மைப்படுத்தப்பட்டிருக்கின்றமையால்
இனி எல்லாவற்றையும் பொறுத்தல் இலகுவாகிவிடும்.

2. அடியில் வருமாறு சொல்லாதே. இவன் கொடு
மையைச் சகிப்பேனு? இத்தகைய விஷயத்தை நான் பொறுப்பேனு?
அவன் எனக்கு அதிக பாதகம் செய்திருக்கிறான். நான் கனவி
லும் நினையாத பழியை என்மேல் சுமத்துகிறான். மற்ற எவன்
என்னசெய்தாலும் சந்தோஷமாகப் பொறுப்பேன். அது
மெனவும் நினைப்பேன். இத்தன்மையான எண்ணங்கள் அறிவின
மையாம். இதனால் துன்பம் பொறுத்தலின் பலனைக் கருதாம
லும் அப்பொறுமையின் மூலமாய், மகுடம்போன்ற சிரேயஸ் (உயர்
நலம்) எவர்மூலம்¶ கிடைக்கப் பெறுகின்றோமென, நினையாமலும்,
துன்பம்செய்தவரையும், துன்பத்தையும் சிந்திக்கிறதாக ஏற்படுகி
றது.

தனக்கு எவ்வளவு சரிப்படுகிறதோ அவ்வளவு துன்பத்தையும்
எவர் அத்துன்பத்தைச் செய்தால் தனக்குப் பொருந்துமோ, அவ
ரையும், பொறுமை பாராட்டுவான் பொறுமை, பொறுமை அன்று
உண்மையான பொறுமையுடையான், துன்பம் எவர் செய்தார்
என்று சிந்தியான். தன்னைவிட வலியானோ, மெலியானோ, தன்
னுடன் சமானனோ, நல்லவனோ, முனிவனோ, தீயனோ எனக்
கருதான். எவ்வளவு துன்பம் எத்தனைதரம் எதினின்றும் தனக்கு
நேரிட்டாலும், மனச்சமாதானத்துடன், கடவுளே செய்
என நினைந்து சகிப்பான்! நன்றிபாராட்டிக் கடவுளைப் போற்றி
செய்வான். தனக்கு அதனால் ஒரு லாபமும் கிடைத்ததென
ப்பான். இறைவன் நிமித்தமாக, எள்ளளவு துன்பமேனும்
றத்தால் அவர் பார்வையில் வீண்போகாது. சுகிர்தம் உ

3. அதனால் வெற்றிவேண்டின், போராட்டத்திற்கு
மாகவிரு. போராட்டமின்றி, பொறுமையின் மகுடம் பெற
ளது. பொறுமை பாராட்ட இயலாவிடின், அம்மகுடத்தை
கிறாய். அம்மகுடம் வேண்டின், தீரனைப்போல் முயற்சி செய்;
பொறுமை பாராட்டு. முயற்சியின்றிச் சாந்தநிலை சித்தியாது.
யுத்தம் இன்றி ஜயமில்லை.

---

¶ஏசுநாதர்மூலம்

ஜீவன்.

4. என் சுபாவத்தால் முடியாத இத்தகுதி என் நாதா! உம்
மருளால் எனக்குக் கிடைக்கட்டும். என் பொறுமையின் அளவை
நீர் அறிவீர்; அஃது அற்பமானது. சிறிய துன்பம் நேரிடினும்
அதனால் தளர்ச்சி அடைகிறேன். உம்முடைய நாமமகிமையால்,
எல்லாத் துன்பமும் எனக்குச் சுகமாகவும், விரும்பத்தக்கதாகவும்
இருக்கட்டும். உம்முடையநிமித்தம் துன்பம் துயரங்களை பொறுத்
தல், எனக்கு க்ஷேமமாம். அனுகூலமாம்.

## 20-வது அதிகாரம்.

### நம்முடைய தளர்ச்சியை அறிவித்தலும்—உலகவாழ்வின், சங்கடங்களும்.

ஜீவன்.

நாதரே! எனக்கு விரோதமாகவே, என் சுகீதியை உமக்கு
அறிவிப்பேன். தர்மத்தினின்று எவ்வளவுதூரம் விலகிஇருக்கின்
றேன். எனத்தெரிவிப்பேன். பலகால் அற்பவிஷயம் என்னைத்,
தளர்த்துகிறது; என்னை வியசனத்தில் தள்ளுகிறது. ஒருசமயத்தில்
தைரியமாக இருக்கவேண்டுமெனத், தீர்மானம்செய்து கொள்ளு
வேன்; அடுத்தநிமிஷம் ஒருசிறு சோதனைநேரிட, அதைச்சகியாமல்
சங்கடத்துக் குள்ளாவேன். சிலசமயத்தில் ஒரு அற்பவிஷயத்தி
னின்று, பெரிய வியசனகரமான சோதனைவிளையும். சாவதானமாக
இருக்கிறேன், என நினைத்திருக்கும் வேளையில், நான் கொஞ்சமே
னும் எதிர்பாராமல், திடீரென, ஒருசிறு புசல்காற்று அடித்தாற்
போல, என் மனம் சிதறி நான் பதறுவேன்.

2. கடவுளே! என் நொய்மையையும் என் தளர்ச்சியையும்,
நீர் அறிவீர். என்மீது இரங்கும் இத்துன்பமான படுகுழியினின்று
என்னைக் கரை ஏற்றும். அதிலேயே என்றும் அழுந்தி மூழ்கிப்போ
காமற் செய்யும். இதுதான் என்னை அடிக்கடி கீழே தள்ளுகிறது;
உம்முடைய பார்வையில், என்னை வெட்கப்பண்ணுகிறது; என்னைத்
தடுமாறும்படி செய்விக்கிறது. நான் மிக நொய்மையுடையன்; மிகத்
தளர்ச்சியுடையன்; வைராக்கியமற்றவன்; தீய சுபாவத்துடன் போ
ராட அசக்தன்: அது என்னைப் பூர்ணமாக மேற்கொள்ளாவிடினும்



அடிக்கடி என்னைத் தொடர்கிறது, வருத்துகிறது, துன்பத்திற்குள்
ளாக்குகிறது: இவ்விதம் எப்போதும் போராடிக்கொண்டு வாழ்
நாள் கழித்தல், தொந்தரவான காரியமாக இருக்கிறது. இதனால்,
என் அசக்தம் வெளியாகிறது; நான் விலக்கமுடியாவண்ணம்,
மேன்மேலும் தீவிரமாய், தீயஎண்ணங்கள் என் மனத்தில் புகுகின்
றனவே!

3. இஸ்ரேல் ஜாதியாரின் இறைவனே! சர்வவல்லமை யுள்ள
வரே! பக்தரக்ஷகரே! உம்முடைய அடிமையின், சங்கடத்தையும், துய
ரத்தையும், உமமருட் கண்ணால்பாரும்; அவன் செயல்களில் எல்
லாம் ஆதரவாக இரும். அவனுக்கு மேலான தைரியத்தை அருளும்.
அப்படிச் செய்வீராகில், தேகசுபாவம்$ அவனை மேற்கொண்டு,
அவனைத்தன் வசப்படுத்தாது அவன்தேகம் இன்னும் ஞானமுறை
பற்றி, நேர்மைப் படவில்லையே. நான் உயிருடன் இருக்குமளவும்,
இச்சரீர தர்மத்துடன் போராடக்கடவேன்.

உயிர்வாழ்க்கை என்ன அற்பமான! துன்பமும் சோதனையும்
அதில் எப்போது குடிகொண்டிருக்கிறது; பார்த்தவிடமெல்லாம்,
பகையும், கலக்கமும், மயக்கமும், ஒருதுயரம் அல்லது சோதனை
அகல, தணிய, மற்றொன்று நேரிடுகியது; உயர்கிறது, ஒருஇடுக்க
ணுடன் போராட்டம் நிகழ்கின்ற பொழுதே, மற்றவைகள், கூட்
டங் கூட்டமாய் அடர்ந்து வருகின்றன.

4. இத்தகைய கசப்பும் கைப்புமுள்ள, உயிர்வாழ்வை எப்படி
நான் விரும்புவேன்? கொடுமையான வியாதிகளுக்கும், மரணத்துக்
கும், இருப்பிடமாகும் இவ்வுலக வாழ்வை "உயிர் வாழ்க்கை"
என்று எப்படிச் சொல்வேன்? அந்தோ! இது விரும்பப்படுகின்றதே!
அதில் வைபவங்கள் உண்டென்று அனேகர் நாடுகிறார்கள்! "உலக
பொய்; வீண்மயக்கம்;" எனச்சிலர் அடிக்கடி முறையிடுகின்றார்கள்.
ஆனால் உலகப்பற்றுக்களும் காமங்களும் தம்மை மேற்கொண்டு
தம்மை ஆளுகின்றமையால், உலகத்தைவிட அவருக்குக்கூட மனம்
வரவில்லையே! அதைவிட அதிககஷ்டமும் வருத்தமும் படுகிறார்
களே! சிலவைபவங்கள், மனிதனை உலகத்தை நேசிக்கும்படி இழுக்

---

$மானுஷ்யத்தன்மை.

கின்றன. தேகஅபிமானம், கண்ணுக்கு பிரியமானவை, அகங்காரம்,
இறுமாப்பு, இவையெல்லாம், உலகவாழ்வை நேசித்தற்குக் காரண
மாம். அவைகளின்பின்னே அவைகளின் பயனாக, நேரிடும் துன்
பங்களும், தண்டனைகளும், அவ்வாழ்வை பகைத்தலுக்கும் வெறுத்த
லுக்கும் காரணமாம். ஆனால், அந்தோ! பிரவிர்த்திமார்க்கம்பற்றி
யஜீவன், விஷயசுகங்களில் அழுந்துகிறான். முள்ளில்மேற் படுக்
கையைச் சுகமெனமதிக்கிறான் இறைவனின் சந்நதியின் உயர்நறும்
அனுபவித்திலனே! அதனால் உள்ளத்தில் உண்டாகும் மனக்குளிர்ச்
சியை பெற்றிலனே? இவ்வனுபவம் நேரிட்டிருக்குமாகில், உலகமயக்
கத்தில் அழுந்தான். ஆனால் உலகத்தை வெறுத்து, இறைவனுடன்
நேர்மைபற்றி, விரதம்பூண்டு. நடைபெற முயற்சிக்கின்றவர், இந்தத்
திவ்விய சுகஅனுபவத்தைப் பெறுவார்; அதுவோ, உலகப்பற்றை
விட்டவருக்கு ஏற்பட்டுள்ளது. மருள்பற்றியும், மோசத்திற்குள்ளா
கியும், உலகம் அநியாயமாக நடைபெறுகின்றதென, அவர் உள்ளபடி
தெளிவாய் அறிவார்.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவது அறிகென்று அருளி."

—மணிமேகலை.

## 21-வது அதிகாரம்.

### எல்லா நன்மைகளையும், எல்லா கொடைகளையும் துறந்து, இறைவனே அடைக்கலம் என்று இருத்தல்.*

ஜீவன்.

என் மனமே! யாவற்றுக்கும் மேலாய்,யாவற்றுக்குமுள்ளுமாய்$
பராபரனை என்றும் நாடு. அவரிடம் ஓய்வை அடை. அவர் ஞானி
களின் சாந்த நிலை.

*பற்றது பற்றின் பரமனைப் பற்றுமின்—திருமந்திரம்.

$"எவ்வுயிரும் பராபரன் சந்நிதி யாகும்
இலங்குடடல் உயர் அனைத்தும் ஈசன் கோவில்"
—பன்னூற்றிரட்டு.



இனிய என் அன்புக்குரிய ஏசுவே! உலகப்பற்றை விட்டு
உம்மேல் என் மனம் தங்கும்படி செய்யும். தேகசுகமென்ன, அழ
கென்ன, கீர்த்தி என்ன, கவர்வமென்ன, அதிகாரம் என்ன, கண்
ணியம் என்ன, பிரஞ்ஞானம் என்ன, விஞ்ஞானம் என்ன, செல்
வம் என்ன, கலைஞ்ஞானம் என்ன, இன்பம் என்ன மனச்சந்துஷ்டி
என்ன, புகழ் என்ன, ஸ்துதி என்ன, இனிமை என்ன, சுகானுப
வம் என்ன, விருப்பம் என்ன, உறுதிப்பாடு என்ன, தகுதி என்ன,
ஆசை என்ன, உம்மால் நான் கிடைக்கப்பெறும் கொடைகள்
என்ன, வெகுமானங்கள் என்ன, என் மனத்தில் உண்டாகும்
சந்தோஷாரவாரம் என்ன, சாதாரண தேவர்கள் என்ன, பெரித்
தேவர்கள் என்ன, தேவக்கூட்டங்கள் என்ன, என் கண்ணுக்குள்
தோன்றுபவை, தோன்றாதவை என்ன, சுருக்கமாய் உம்மைவிடச்
சிறிதானவை யாவற்றிலும், என் மனம் பற்றாமல் இறைவனே!
உம்மீது தங்கும்படி செய்வீராக.

2. ‡என் நாதனே! உயர்வற உயர்நலமுடையவன் நீ! எல்லா
வற்றினும் மேலானவன் நீ! எல்லா வல்லமையுமுடையவன நீ!
குறைவிலா நிறைவே! இனிமை நீ! தேற்றம் நீ! அழகு நீ! அன்பு நீ!
சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் நீ உன்னை இன்றி வேறு
எதைத் தந்தாலும், எனக்கு அஃது அற்பமே; என் குறை தீராது
உன் தரிசனமின்றி, உன்னைப்பற்றியது எதைக் காட்டினாலும்,
எதைக் கொடுக்கிறதாக வாக்களித்தாலும், அஃது எனக்குப் போ
தாது. திருப்தியாகாது; அதனால் ஒன்றை அடைந்தேனில்லை.
உன்னைவிட வேறு ஒன்றிலும் என் மனம் உண்மையாய் நிலைத்தி
ராது, சாந்தம் பெறாது; எந்தக் கொடைகளிலும், எந்தச் செல்வத்
திலும் என் மனம் செல்லாது.

3. என் ஏசுவே! என் நாயகனே! என் அன்பனே! சிருஷ்டி
கர்த்தாவே! உன்னிடம் வந்து பறந்து உறையும்படி, எனக்கு யா

‡"உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறு அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே."
—நம்மாழ்வார்.

ரேனும் சிறகுகள் கொடுக்கமாட்டார்களா? உன்னிடம் வந்து சாந்
தம் பெறேனா? என் நாதனே! கடவுளே! பூர்ணமான சுதந்தர
னாக எப்போது ஆவேன்? எவ்வளவு இனிமையாக இருக்கிறாய்
என எப்போது யான் அறிவேன்? உன்னுடைய அன்பின் பெருக்
கால், உன்னிடம் என்னை இழந்து, என்னைக் காணமல், உன்னையே
கண்ணுற்று, என் நினைப்பு அற, உன்னையே நினைந்து இருக்க
வல்லேன் ஆகில்* மேற்கண்ட உயர்நலம் பெறலாம். இஃது எல்
லாரும் அறிந்த விஷயமன்று.

நானோ அடிக்கடி துன்பத்தால் வருந்துகிறேன். என் துக்க
அனுபவங்களைச் சகியாமல் புலம்புகிறேன். துக்கசாகரமான இந்
தச் சம்சாரத்தில் பல துன்பங்கள் நேரிடுகின்றன. அவைகள் என்
னை வருத்துகின்றன. என்னை மயக்குகின்றன. என்னைக் கிலேசப்
படுத்துகின்றன. என்னை முன்னும் பின்னும் ஓடவொட்டாமல் கலக்
குகின்றன. என் மனத்தைக் குழப்புகின்றன. என்னை நலங்காட்டி
ஆசைவலையிற் சிக்குண்டு தவிக்கச்செய்கின்றன; அதனால் உன்னி
டம் தன்னிஷ்டமாய் வருகிறேன் இலன். ஈசன் அருள்பெற்ற
மஹாத்துமாசகளுக்கு எப்போதும் சித்திக்கும் உன்னுடைய இனி
மையான ஆலிங்கனம் பெற்றேன் இலன்.

4. என் பெருமூச்செறிதலையும், துன்பத்தினால் நான் பரி
தவித்தலையும் கண்ணோக்கி, என்மீது கருணை வைப்பாய். ஏசுவே!
என்றுமுள்ள மகிமையின் ஜோதியே! உலக யாத்திரையில் தப்பித்
தயங்கும் ஜீவனுக்கு, ஆறுதலே என்னுள்ளத்தின்கண் எழும் எண்ண
ங்களை வசனிக்க என் நா எழக்கூடவில்லை. மௌனத்தினால் உன
க்கு என் ஹ்ருதயத்தைத் தெரிவித்துள்ளேன். எவ்வளவுகாலம்,
என் நாதர் என்னிடம் வரத் தாமசிப்பான்? நொந்துபோயிருக்கி
ன்றேன் யான். ஏழைநான். என்னிடம் வரட்டுமே நீ என்னைச்
சந்தோஷிக்கச் செய்யட்டுமே! இடுக்கணின்று அற்பனை என்
னைக் கைதூக்கிவிடட்டுமே! வாரும்! சீக்கிரம் வாரும்! நீர் இன்றி
ஒரு நாள், நாழிகைகூட நான் சுகமாய் இரேன். நீரே என் சந்
தோஷம். நீர் இல்லாமல், என் உணவு பாழாக இருக்கின்றதே.
நீரே தரிசனம் தந்து, என்னை விடுவித்து, எனக்கு இனிய முகம்

*மாணிக்கவாசகர் அருளிய கோயிற் திருப்பதிகம் பார்க்க.



காட்டி, ஆறுதல் செய்வீராக. நான் ஏழை. அதுவரையில் சிறை
யில் விலங்குகளால் கட்டுண்டு கிடக்கிறேன். மற்றவர் உம்மை வே
ண்டாது, தம்மிஷ்டங்களை விரும்புவர். *நானே உம்மைத் தவிர
வேறு ஒன்றையும் வேண்டேன்! கடவுளே! என் தேற்றமே! என்
றுமுள்ள புகலிடமே! நான் மௌனமாக இரேன். உம் கருணை
எனக்குத் திரும்பவரும்வரையிலும், நீர் என் உள்ளத்தில் பேசும்
வரையிலும் உம்மிடத்தில் பிரார்த்தனை செய்யாமல் இரேன்.

5. [இப்பிரார்த்தனையின்மீது ஏசு காட்சி கொடுக்கிறார். பேசு
கிறார்.] இதோ பார்! நான் இங்கு உற்றேன். நீ கூப்பிட்டாய்.
உன்னிடம் வந்தேன். உன் கண்ணீர், உன் ஹிருதய விருப்பம்,
உன் பணிவு, உன் மனத்தாங்கல் இவை எல்லாம் என்னை வரும்படி
தூண்டின. உன்னை அணுகும்படி செய்தன.

ஜீவன்.

6. நான் சொன்னதாவது:—நாதரே! நான் உம்மை அழைத்
ததுண்டு. உம்மோடு சந்தோஷமாக இருக்க விரும்பியதுண்டு.
உமக்காக எல்லாவற்றையும் துறக்கச் சித்தமாக இருக்கிறேன்.
உம்மை நாடவேண்டுமென்று என் மனத்தில் சிந்தனை முதலில்
நீரே உண்டுபண்ணினீர். இறைவனே நீ இதற்கு நான் உம்மைப்
போற்றுவேன். உம்மடிமைக்கு இந்நலம் அருளினீர்; இக்கருணை
காட்டினீர்; உம்முடைய சந்நிதியில் இதைவிட அதிக நான் பேச
வல்லேன் அல்லன்; பணிந்து உம்மை நமஸ்கரிக்கிறேன்: என் தீய
சுபாவத்தையும் என் இழிவையையும் நான் சிந்தனையில் வைக்கின்
றேன். ஆகாசம் பூமி இவைகளில் உள்ள அற்புதங்கள் உம்மைப்
போன்றது ஒன்றுமில்லை.† உம்முடைய கிருத்தியங்கள் மிக நல
முள்ளவைகள். உம்முடைய தீர்மானங்கள் உண்மை அமைந்தவை

பேர்வேண்டேன்
*"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போல் கசிந்துருக வேண்டுவனே."
—மாணிக்கவாசகர்.

† ஒன்று நீ இல்லை அன்றி ஒன்றில்லை—மாணிக்கவாசகர்.

கள், உம்முடைய முன் யோஜனையால் எல்லாம் நடத்தப்பெறுகிறது. அதனால் உமக்கு நமஸ்காரம், உம்முடைய கீர்த்திக்கு நமஸ்காரம். எர்நாவே! என் மனமே நீ எல்லாச் சிருஷ்டிவர்க்கங்களே- அவரை வாழ்த்துவாய்; அவரைப் போற்றுவாய்.

## 22-வது அதிகாரம்.

## இறைவனுடைய பல அருட்பிரசாதங்களைச் சிந்தித்தல்.

இறைவனே! என் ஹிருதயத்தை மலரச்செய்யும். உம்முடைய தர்மமுறையை அறிவியும். உம்முடைய விதிகளை அனுசரித்து நடக்கும்படி உபதேசியும். உம்முடைய மனோபாவம் நான் அறியும்படி செய்யும். நீர் அருளியபல நன்மைகளை அன்புடனும், சிரத்தையுடனும் நான் சிந்தனை செய்யட்டும். அவைகளுக்கு நான் நன்றிபாராட்டட்டும். அவைகளில், யாதேனும், ஒரு அணுப்போன்றதுக்கும் என்னால் யாதொரு கைம்மாறு கொடுக்க இயலாதென நான் அறிவேன். இப்போதும் ஒப்புக்கொள்ளுகிறேன். நீர் எனக்கு எத்தனையோ நன்மைகள் செய்திருக்கின்றீர். நான் அவைகளுக்கு எல்லாம் கீழ்ப்பட்டவன். உம்முடைய பெருமையை நான் சிந்திக்கின்றேன். அதை நினைக்க நினைக்க, என் மனம் சோர்வை அடைகிறது.

2. நான் என்ன, என் உடல், என் ஜீவி என்ன; இவைகளின் உள்ளும் புறம்புமாயுள்ள, யாவும் விண்ணில் உள்ளன, மண்ணில் கிடப்பன எல்லாம் உம்முடைய, அருளால் கிடைத்த கொடையாம். இவ்வருமை பெருமையுள்ளவைகள் எல்லாம் உம்மிடமிருந்து வந்தன; உம்முடைய கருணையையும், நன்மையும், மகிமையையும் வெளிப்படுத்துகின்றன. ஒருவன் அதிசயத்தைப் பெறுவான்; மற்றவன், சொற்பத்தைப் பெறுவான். ஆனால் எல்லாம் உம்மிடமிருந்தவையேயாம். நீர் இன்றி, எள்ளளவேனும் நன்மைகிட்டாது. அதிகம் பெற்றவன், பெற்றேன் என, பெருமை பாராட்ட இடமில்லை. அதனிமித்தம், இறுமாப்புடன் அதிகாரஞ்செய்ய நியாயமில்லை. பிறரைவிட தான் உயர்வு என மனமகிழ்ச்சி கொள்ளவும் ஆதாரமில்லை. தன்னை எவ்வளவுக்கு எவ்வளவு, அற்பனாகவும், அசக்தனாகவும் நினைக்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் பெரியனாகவும் பெரு



மையுள்ளவனாகவும் ஆகிறான்; தான் பெற்ற நன்மைகளுக்கு நன்றிபாராட்டல், தன் அன்பையும் பண்பையும் காட்டுகின்றது. "தன்னிலும் கடையன் ஒருவனும் இலன், தன்னிலும் கீழான அபாத்திரன் ஒருவனும் இலன்," இவ்விதமாக எவன் தன்னைப்பற்றிச் சிந்திக்கிறானோ- அவன் உயர்நலம்பெற தனிஅருகனாகிறான். தனக்கு அற்ப சம்பத்துத்தான் கிடைத்தது எனநினைத்தும் பிறர்பெரும செல்வத்தைப்பார்த்தும், துக்கப்படப்படாது. பொறாமை கொள்ளல் ஆகாது. கடவுளே! உம்மை நினைந்து உம்மை நோக்கி, உம்மால் கிடைத்தது இந்தப் பாக்கியமென, உம்மைப் போற்றிசெய்யவேண்டும். அவன் இவன் என்று எண்ணாமல், தங்குதடையின்றித் தாராளமாய் மனப்பூர்வமாய் மனிதர்களுக்கு சம்பத்துக்கள் கொடுக்கிறீர். எல்லா வரவும் உம்மிடம் நின்றே எல்லாவற்றுக்கும் உம்மை போற்றிசெய்யக்கடவோம்.

3. அவன் அவனுக்கு எது எது தகுதி எனவும், ஒருவனுக்குக் குறைவும், மற்றவனுக்கு அதிகமும் ஏன் இருக்கவேண்டும் எனவும் நீர் அறிவீர். அதைப்பற்றி விசாரணை செய்ய நாங்கள் அநர்கர்கள். அஃது உம்மைப் பொறுத்ததுவே. அதனால், நாதனே ஜனங்கள் மதிப்பில், பெருமையுள்ளவும் கீர்த்திபற்றியதுமான சம்பத்துக்கள், என்னிடம் அதிகமாக இல்லாமையானது எனக்கு நலமாம். ஒருவன் தன் வறுமையையும் கீழான நிலைமையையும் சிந்திக்கும்போது மனம் தளராது, சோர்வடையாது, மனக்கலக்கம் கொள்ளாது இருப்பதுடன் ஆறுதல் அடைந்து மனக்களிப்புள்ளவனாக இருக்கற்பாலது. ஏனெனில் ஏழைகளும், கீழாயினோரும், உலகத்தார் யாரை நிந்திக்கின்றார்களோ அவர்களுமே இறைவனுக்கு உற்றார் உறவினர் நட்பினர் ஆவர். உம்மால் அனுப்பப்பட்ட மஹான்களைப் பாரும். அவர்களை உலகத்தின் கண்ணே முதல் மனிதர்களாக ஆக்கினீர். அவர்கள் கீழான நிலைமையிலிருந்து கபடநாட்டமின்றி, யாதொரு முறுமுறுப்பு இன்றி தீய எண்ணமும் சூதும் நெஞ்சில் வையாமல் தங்கள் காலத்தைக் கழித்தனர்கள். உமக்காக பிறர் நிந்தையையும் பொறுத்தனர்கள். உலகம் எதை வெறுக்கின்றதோ அதை அன்புடன் கைப்பற்றினார்கள்.

4. ஆகவே, உம்முடைய நன்மையை நன்கு உணர்ந்த பக்தனுக்கு உம்மிஷ்டத்தை நிறைவேற்றுதலும், உம்முடைய சநாதன

தர்மமுறையை அறிதலுமே சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொடுக்கற்பாலது. மற்றது எதுவேனும் சந்தோஷத்தைக் கொடுக்காவாம். பிறர் பெருமையால் சந்தோஷிப்பர், இவன் சிறுமையால் சந்திக்கக் கடவன். பிறர் உயர்ந்த ஸ்தானத்தினால் மகிழ்வர், இவன் இழிவான நிலைமையில் மனச்சமாதானம்பெற்று மகிழக் கடவன். பிறர் நிந்தனையும் பிறர் இகழ்ச்சியும் இவனுக்கு ஆசீர்வாதமும் புகழுமாம். பேர்வேண்டான், கீர்த்திவேண்டான். ஆனால், பெயரும் கீர்த்தியும் உயர்பெருமையும் உடையான்போல் மனசசந்துஷ்டியாக இருப்பான். இவை எல்லாம் விட உம்முடைய உயர்நலம்வாய்ந்த அன்பும், உம்முடைய மஹிமையும் பெரிதானதே; ஆறுதலும், தேறுதலையும், மனச்சமாதானமும் உம்மால் உண்டு. மற்றும் எந்த நன்மை கிடைப்பினும் இன்றும்.

## 23-வது அதிகாரம்.

### சாந்தம்பெற 4 உபாயம்.

கடவுள்.

என் குழந்தாய்! சாந்தமும் சுவாதந்தரியமும் அடையும் முறையை உனக்கு உபதேசிக்கிறேன்.

ஜீவன்.

கடவுளே! அப்படி அனுக்கிரகம் செய்க. என் காதுக்கு அஃது இனியது.

கடவுள்.

1. என் பிரியனே! எப்போதும் உன்னைப்பார்க்கிலும் பிறர் அபீஷ்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்க.
2. அதிகம் வேண்டற்க, அற்பத்தில் திருப்தி அடைக.
3. எப்போதும் கீழான நிலைமையை நாடுக. ஒவ்வொருவனுக்கும் தாழ்ந்தவனாக இருக்கப் பழகுக.
4. கடவுள் சித்தம் பூர்ணமாய் உன்னிடத்தில் நிறைவேற வேண்டுமென, எப்போதும் பிரார்த்தனை செய்க. இத்தகைய மனிதன் தான் சாந்தம் சமாதானம் என்ற எல்லைக்குள் பிரவேசிப்பான். பார்.



ஜீவன்.

உம்முடைய வாசகம் சிறிது. ஆனால் அதனில் பெரும்பொருள் நிறைந்துள்ளது. சொல்லப்புகன்றது சில்வகைமொழி; வந்தது பல்வகைப்பொருளும் பயனும் நிறைந்துள்ளது. இவ்வுபதேசத்தை உள்ளபடி கைக்கொண்டு, நான் அதன் நெறியில் நடைபெறவேனாகில், மனதைக் கலக்கும் சிந்தனைகள் இலகுவாய் என்னுள்ளத்தில் ஏற்படா. என் மனம் சஞ்சலப்படுங்காலத்தில், நான் வருந்துகையில், இப்போது செய்த உபதேசத்தினின்று விலகிப்போயிருக்கிறேன் என்று நான் அறிகிறேன். எல்லாம் வல்ல இறைவனே! ஆன்மாவின் க்ஷேமத்தை ஆதரிக்கிறவனே! உன்னுடைய உபதேசத்தை முழுமையையும் நான் அனுஷ்டித்து மோக்ஷம் பெறும்வண்ணம் அருளுவாய்.

2. தீய எண்ணங்கள் வாராமலிருக்கப் பிரார்த்தனை.

காதனே! இறைவனே! என்னைவிட்டு வெகுதூரம் அகலாது இருப்பீராக. என்னைக் காப்பாற்ற நினைப்பீராக. பல தீய எண்ணங்கள், பெரிய பயங்கரமான பாவங்கள் என் மனத்தில் எழுகின்றன. என்னைக் கலங்கச்செய்கின்றன. அவைகளினின்று துன்பம் உறாமல் எப்படி நிசழுவேன்? அவைகளைக் கடந்து எப்படி நடைபெறுவேன்?

[கடவுள் பிரார்த்தனையைக் கேட்டு ஆறுதல் சொல்லுகின்றார்.]

உன்முன்னர் நான் போவேன். உலகில் உள்ள வீம்பர்களைத் தாழ்த்திடுவேன். சிறைச்சாலையின் கதவைத் திறந்திடுவேன்; குப்தமான மஹா ரகசியங்களின் திரைகளை அகற்றி உண்மைகளை வெளியிடுவேன்.

[பிரார்த்தனைத் தொடர்ச்சி.]

அப்படியே ஆகுக. தீய எண்ணங்கள் எல்லாம் உன் முகம் கண்டமாத்திரத்தில் ஓடக்கடவன. எனக்குத் துன்பம் நேரும் காலத்தில் உன்னிடத்திற்கு ஓடி வருவேன். நீயே என்னடைக்கலம்; என்னுள்ளம் உருகி உன்னையே கூப்பிடுவேன்: உன் ஆறுதல் அமைந்த அருள் சக்தியின் விரவை என்றும் சாந்தமாக எதிர்பார்ப்பேன். இதுதான் என் மனப்போக்கும் எனக்கு தேற்றரவுமாகும்.

[மனத்தின்கண் ஞான ஒளி படவேண்டுமெனப் பிரார்த்தனை]

நன்மையுள்ள ஏசுநாதரே! என் உள்ளத்தில் ஞான வெளிச்சம் உண்டாக்கும். என் நெஞ்சின் இருளை அகற்றும். என் மனத்தின் அலைகளை அடக்கும். எனக்காக போர்புரிந்து என்னை மயக்கும் தீய காமங்களான மிருகங்களை தோல்வி செய்யும். அதனால் எனக்குச் சாந்தம் உண்டாகி மாசற்ற என் உள்ளமான உம்முடைய உயர்நலம் பெற்ற பெருங்கோவிலில், உம்மை வைத்துப் போற்றி செய்வேனாக. அந்த ஆரவாரம் எப்போதும் கோஷிக்கச் செய்யும். காற்றையும் புசலையும் ஆளும். 'நில்' என்று கடலைக் கட்டளையிடும். வடகாற்றை நோக்கி, "வீசாதே" என்று சொல்லும். பெருகிய சாந்தம் சம்பவிக்கும். சத்தியமாகிய வெளிச்சத்தை உலகத்திற்கு அருளும். உம்மால் வெளிச்சம் சிருஷ்டிக்கப்பெறுமுன். உலகம் வெறுமையாகவும் இருள் அடர்ந்தும் இருந்தது. அதுபோல நானும் உம்மொளியன்றி இருளான மருளில் மயங்கி இருக்கிறேன். எனக்கு உம்மருள் புரியும். என் ஹிருதயம் குளிர, மேலுலகத்தின் பனிபோன்ற ஜீவகாருண்ணியம் பெறச் செய்யும். பக்திவெள்ளம் உலகமெங்கும் பாயச்செய்யும். அதனால், உயர்நலம், உயர்பயன் உண்டாகட்டும். பாவத்தினால் அழுந்திக்கிடக்கின்ற என் மனத்தை உயர்த்தும், என் பற்றுகள் எல்லாம மோக்ஷமுறைபற்றி நிகழட்டும். அப்படி நடைபெறவேணுகில், உலக விஷயங்களில் என் மனம் செல்லாது. அவைகளில் ருசிக்காது. அழியக்கூடிய நிலையற்ற உலக சுகங்களினின்று என்னை வேறுபடுத்தி விடுவீயும். சிருஷ்டிப் பொருள் ஒன்றும் எனக்கு திர்ப்தியைக் கொடுக்கற்பாலதன்று. அன்பு எனும் உறுதியான கயிற்றால், என்னை உம்முடன் கட்டும்; உம்மை பக்திபாராட்டுகிறவனுக்கு நீரே போதும்; வேறு ஒன்றும் வேண்டாம், நீர் அன்றி பிரபஞ்சம் வாழ்க்கை துக்ககரமேயாம்

## 24-வது அதிகாரம்.

### பிறரைப்பற்றிய வீண் விசாரணையை விலக்குதல்.

கடவுள்.

என் குழந்தாய்! வீண் விசாரணையைத் தவிர். பிறரைப்பற்றி வீண் கவலை கொள்ளாதே. அஃது என்ன, இஃது என்ன என்ற கவலை உனக்கு வேண்டாம். என் வழி நட. உன் அயலான் எவ்



விதமாக இருப்பினும் உனக்கு அதனால் ஆவது ஒன்றில்லை. அவன் இவ்விதம் சொல்லுகிறான்; இவன் வேறாகச் சொல்லுகிறான் என்ற சிந்தனை உனக்குப் பயனில்லை. பிறர் கருமத்திற்கு நீ உத்திரவாதி யில்லை. உன் கருமத்திற்கு வகைசொல்லவேண்டியது நீயே. நீயே அதற்குக் கணக்கு ஒப்பிவிக்கவேண்டும். அதனால், பிறர் விஷயத்தில் நீ ஏன் சிக்கிக்கொள்ளுகிறாய். அதில் ஏன் பிரவேசிக்கவேண்டும்? நான் மனிதர் எல்லாம் அறிவேன். சூரியன் சாயை விழும் இடமெல்லாம் எனக்குத் தெரியவரும். அததன் செயல் இன்னது என்றும், அவன் அவன் நினைப்பு இன்னது என்றும் அவன் அவன் விருப்பம் இன்னது என்றும், அவன் அவன் கருமம் எந்த எந்த ஆசைபற்றி நடக்கிறதென்றும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால், எல்லாவற்றையும் என்னிடம் ஒப்புவிக்கலாம். நீயோ சஞ்சலம் அற்று இரு. சஞ்சலமின்மை நலமாம். பரபரப்புள்ளவன் அப்படியே, பரபரப்புள்ளவனாக நடை பெறட்டும். அவன் செய்தது, அவன் சொன்னது எல்லாம் அவனுக்கே திரும்பும். அவன் என்னை ஏய்க்க ஒண்ணாது.

2. உயர் பெயர் வேண்டுமென கவலைப்படாதே. அது நிழல் போன்றது. எல்லாருடன் சிநேகம் வேண்டுமென நினையாதே அனேகர் நட்பு வேண்டாதே. அதனால், உனக்கு வீண் மனக்கலக்கம் நேரிடும். கொடுமையான மனத்துன்பமும் தொடரும். உன் மனத்தில் நான் உறையும்படி செய்யவேண்டின், இருள் நீங்குமாறு, ஒரு வார்த்தை சொல்லுகிறேன், கவனமாய்க் கேள்.

எச்சரிக்கையாய் நட, கவனமாய் இரு. இறைவனைப் போற்றி வாழ். ஒவ்வொன்றிலும் தாழ்மை பாராட்டு.

## 25-வது அதிகாரம்.

### மனச்சாந்தமும் ஞானமார்க்கத்தின் ஒழுக்கமும் எதனால் கிடைக்கற்பாலது என்பதைப்பற்றி.

ஏசுநாதர்.

என் குழந்தாய்! "நீ வாழ்க! நீ சுகம் பெறுவாய்" உலகப்பேறு அன்று; உலக சுகம் அன்று நான் கொடுக்கிறது —"என்று

நான் சொன்னதன்றோ. எல்லாரும் சுகத்தை நாடுகின்றார்கள். ஆனால், உண்மையான சுகம் எதுவென்று, அறியமுயலுகின்றார்கள் இல்லை. நான் சொல்லுகின்ற "சுகமோ" அகந்தை அற்ற அன்புள்ளாருக்கு உண்டு; உன்சுகம்-பொறுமையின்கண் உள்ளது. என் வார்த்தையைக்கேட்டு, அதன்வழியில் நடைபெறுவாயாகில், பூர்ண சுகம் பெறுவாய்.

ஜீவன்.

நான் செய்யவேண்டியதென்ன?

ஏசுநாதர்.

நீ செய்கின்ற ஒவ்வொரு விஷயத்திலும், நீ வசனிக்கின்ற ஒவ்வொரு வார்த்தையிலும், ஒவ்வொன்றிலும், என்னை திருப்திசெய்ய வேண்டுமென்பதே உன் நோக்கமாக இருக்கவேண்டும். நான் அன்றி, வேறு ஒன்றையும் விரும்பவேண்டாம்; வேறுஒன்றையும் கேட்கவேண்டாம்; அயலான் கருமங்களையும், சொற்களையும்பற்றி நினையாமல், துடுக்காய், தீர்மானம் செய்யவேண்டாம்-உன் சம்பந்தமில்லாதவற்றில் வீணாய்மாட்டிக்கொள்ள வேண்டாம். இப்படி நிகழுவாயாகில், துன்பமும் துயரமும் உன்னை அணுகா. ஆனால்-துன்பமும் துயரமும், என்றும் இல்லாமல் இந்த உலகத்தில்இரா. அது இவ்வுலகவாழ்விற்கு நேர்மையானதன்று. அஃது, நித்தியமான சாந்தநிலைமையின் தர்மம்.

2. உன்மனத்தில் கவலைஎன்ற சுமைநீங்கினால், எல்லாம் பெற்றேன் எனநினையாதே; உனக்குப்பகை எதிர்ப்படாததினாலே எல்லாம் சுகமென்று ஏமாந்து இருக்காதே. உன் மனப்போக்குப்படி எல்லாம் நிகழ்ந்தால் அதுவே உயர்நலமென மயங்காதே. உன் மனம், பேர் அன்பினால் உருகிட், உன்மனத்தில், இனிமையான சிந்தனைகள் உதயமாகின்றதினால், ஒரு ஞானி நீஎன்றும், பிறரைவிட் உன்னிடம் உயர்அன்பு இருக்கிறதென்றும் வீண் எண்ணம் கொள்ளாதே. இவைகளினால் ஒருவன் மெய்யுணர்வு உள்ளானவன எற்படான். ஞானமார்க்கத்தின் உன்உயர்வும் உன்னுயர்நலமும், இவைகளில் இன்றாம்.



ஜீவன்.

என் கர்த்தாவே, பின் எதின்கண் உள்ளது.

ஏசுநாதர்.

இறைவனுக்கு உன்னை முற்றும் தியாகம் செய்தலிலும், இம்மையிலும், மறுமையிலும், சிறிதேனும், பெரிதேனும், உனக்கென்று ஒன்றும் வேண்டாமையிலும், நல்லதுவரினும், தீயதுவரினும், மனம் கோணாமல் இறைவனை என்றும் நன்றிபாராட்டிப் போற்றுதலிலும், எல்லாவற்றையும் சமமாக பார்த்தலிலும் அஃது உள்ளது. நெடுநாளாக சுகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தும் கிடைக்காமலிருப்பினும், அதனால் மனம்தளராது தீரனாயும், என்னகொடுமையான துன்பம்நேரிடினும் அதைச்சகிக்க வல்லனாயும், உன்னுடைய நன்மையைப்பற்றி மெய்ச்சிக்கொள்ளாமலும், என்போலியார் இத்தகைய துயரம் அனுபவிப்பது என்று செருக்குக் கொள்ளாமலும், எல்லாம் ஈசன்செயல்என உணர்ந்து அது நியாயமேஎன சமாதானம் பெற்றும் மஹிமைதங்கிய என்னைப் போற்றிசெய்தும் ஒழுகுவாயாகில், அப்போதுதான், நீபற்றிய நெறிமுறை யதார்த்தமானதென்றும், நேர்மையுள்ளதென்றும் அறியத்தக்கது நீசாசுவத சுகம்பெறுதலில், எள்ளளவேனும் சந்தேகம்இல்லை. என்னையே நேரில்பார்க்கும்படியான பாக்கியம் உனக்குச் சம்பவிக்கும். அனால் உற்சாகத்துடன் மனக்களிப்பு அடைவாய். மேலும், உன்னைமுற்றும் வெறுப்பாயாகில், உலகத்தில் உள்ளார் பெறக்கூடிய சுகத்தின் எல்லாவற்றுக்கும் உயர்ந்த சுகத்தைப்பெறுவாய்.

## 26-வது அதிகாரம்.

### அதிகப்படிப்பினாலன்றி, தாழ்ந்த மனத்துடன் செய்யும் தபசினால், அடையும் உயர்நலம்.

கடவுளே. பூர்ணம் பெற்றவன் தான், சிரேயஸானமார்க்கத்தைவிட்டு தன்மனசு நழுவும்படிவிடான்.

எவ்வளவு துன்பம் துயரங்கள்வந்தாலும் அவைகளைக், கவலையில்லான்போலப், பொறுப்பான், கவலையில்லான் என்றால், சோம்பலாளன் அன்று-மாசற்ற மனத்தின் தர்மமாகிய, வஸ்துக்களின்மீது வரம்கடந்த பற்றுவைக்காமை என்பதாம்.

2. கருணைமூர்த்தி! போற்றி போற்றி, உலகவாழ்க்கையின் கவலைகளை அகற்றும், அவைகளில், அதிகமாக நான் மாட்டிக்கொள்ளாமல் செய்யும். சரீரவருத்தங்களினின்று என்னைக்காப்பாற்றும், விஷயங்களில் நான் அமுக்திப்போகாமல் என்னைக்காரும். என் மனம் தடுமாறாமலும், சஞ்சலப்படாமலும், என்னை ஆதரியும். இடுக்கணால் வருந்திநொந்து மனத்தளர்ச்சி கொள்ளாமல் செய்யும். இதனால், உலகமாயையின் காரியமாக, மதிமயக்கத்தினால், விஷயசுகங்களை நாடிச்செல்லும் சுபாவத்தைத் தவிர்க்கவேண்டுமென கோரினேன் அல்லன். பாவசடாத்திற்குள்ளான மனிதன், அதிகாரணமாக வருந்தும் துன்பம், துயரம் கவலைகளினின்று என்னை, விடுவியும். இதுதான் உன்பக்தனுக்குக் குறுக்கேஇருக்கும் தடை-இதுதான் அவனை உயரஏறாமல் தடுக்கிறது. இதுதான் அவனை உயர்நலம் பெறாமல் கெடுக்கிறது. இதுதான், அவனை சுதந்தரஸ்தானத்தை அடையாமல் செய்கிறது.

3. என் நாதனே! உரை கடந்த என் இனிப்பே! நித்தியமான உயர்நலம் வாய்ந்த நெறியினின்று, என்னைக்கவர்ந்து, பகட்டினால் என்மனத்தைத் தடுமாற்றிடும் விஷயசுகம் எல்லாம் எனக்குக் கசப்பாக ஆகட்டும்; அதுஎன்னை மேற்கொள்ளாது இருக்கட்டும்; அது என்னை ஜயிக்காமல் போகட்டும்; என்னை அது தாக்காமல் ஒதுங்கட்டும்; உலகமும் அதன் க்ஷணிககீர்த்தியும் என்னை மய்க்காமல் போகட்டும்; பிசாசு (ஆசை) அதன் சூதானசுழலில் என்னை இழுக்காமல் விலகட்டும்; இவைஎல்லாம் எதிர்க்க எனக்குத் தைரியத்தையும், சகிக்கப், பொறுமையையும், உறுதியாய்நிற்க, ஊக்கத்தையும், உலகசுகங்களுக்குபதிலாக, நான் தளராமல், உம்முடைய உயர்நலம்பற்றிய இனிய தேற்றரவையும், உலகஆசைக்குபதிலாக; உம் நாமத்தின் பக்தியையும், எனக்குதந்து அருளும்.

4. சொற்பகால சரீரரக்ஷணைக்காக ஏற்பட்டுள்ள, உணவு, பானம், உடை முதலியன, அன்புள்ள தீவிரஞானிக்கு பெரும் சுமையாம். வரம்புமீறி இவைகளைநான் விரும்பாதிருக்கக் கடவேன். அவைகளில் எதையும்பற்றி அதிகபிரியம் வைக்காமல் இருக்க முயலுவேன். அவைகளின் வலையில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கவழுகுவேன். எல்லாப்பற்றையும் ஒருங்கேவிடு என்றால்கூடுமோ? சரீரயாத்திரை நிகழவேண்டுமல்லவா? ஆனால், வேண்டியதற்குமேல் வேண்டாமலும், அவைகளைப் பிரியமாகக் கொள்ளாமலும் இருத்தலே உம்முடைய சிரேயஸ்மார்க்கத்தின் முறையாம். இவ்வண்ணம் நான் ஒழுகின் அல்லால், சரீரதர்மம், என்னைமேற்கொண்டு, நான் எடுத்த உயர்வான துறையினின்றுநழுவ என்னுடன்போராடும் இத்தருணங்களில் எல்லாம், அளவுக்கு மிஞ்சிப்போகாமல், வேண்டுதலுக்கு, வேண்டாமைக்கு இடைநடுவில் வந்து அருளி, என்னை கைதூக்கிவிட்டு என்னைக் காப்பாற்றும்-உமக்கு ஒன்றும் பெரிதன்று.



## 27-வது அதிகாரம்.

### மமதையும், தந்நயம் பாராட்டுதலும், மனிதனை உயர்நலம் அடையாமல் தடுக்கும்.

கடவுள்.

என் குழந்தாய், நீஎல்லாவற்றையும் துறக்க வேண்டும். அதினால் நீஎல்லாம் பெறுவாய்; உன்னையே நீதுறக்கவேண்டும்! எல்லாவற்றைப் பார்க்கிலும், உன்மமதை? உனக்குச்சத்துரு. உனக்கு இடையூறுசெய்கிறது: உன்விருப்பத்தின் அளவைக்குத் தக்கவாறு எல்லாவஸ்துகளும் உன்னைப்பற்றுகின்றன, உன்னை வசப்படுத்துகின்றன. உனவிருப்பத்தை சுத்தமாகவும் நேர்மையாகவும் இருக்கும்படி செய்வாயாகில் ஒவ்வொருகாரியமும், சம்பவமும் உன்னை அடிமையாக்காது. உனக்கு இல்லாததைப்பற்றி விரும்பாதே; வருந்தாதே; உன் ஒழுக்கமுறைக்கு இடையூறாகவும், உள்ளத்தின் சுதந்தரத்தையும் சுகத்தையும், கெடுக்கும் எந்தவஸ்துவையும் நீவைத்துக் கொள்ளாதே.

உன்னை எனக்குப் பூர்ணமாய், அர்பணஞ்செய்ய மனப்பூர்வமாய் நீ இணங்குகிறாய் இல்லையே! உனக்கு இருக்குமவை வேண்டுபவை எல்லாவற்றையும் எனக்கே என்றுவிட உனக்கு மனமில்லையே. வீண் துக்கத்தினால் நீ என்மனம் தடுமாறுகிறாய்? வீண்கவலைகொண்டு நீ என் தளருகிறாய்? எல்லாம் ஈசன்செயல், அவன் இஷ்டம்-என, தாழ்வு அடைந்து இரு: ஒரு கஷ்டமும் உனக்குநேராது; துயரப்படாய்.

2. இதுவேண்டும், அதுவேண்டும், இங்குஇருப்பேன், அங்கு இருப்பேன், இதுசாதகமானது, அது பிரியமானது. என இவ்விதமாய் மனப்போக்குப்படி நடைபெறுவாயாகில், உனக்குச் சமாதானம் இன்றாம். கவலை ஏராளமாய்உண்டு. ஏனெனில், ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஒருகுற்றம், குறைஇருந்தேதீரும். எங்கேபார்த்தாலும் உனக்கு எதிராக ஒரு ஒருசத்துரு ஏற்படுவான். உலகசம்பத்தை விர்த்திபண்ணுதலும் குவித்தலும் உனக்கு பலன் அன்றாம்; சாகதமின்றாம். அதைமுற்றும் வெறுப்பாய். உன் ஹிருதயத்தில் பதிந்திருக்கும் அதன் காமவேரை அடியோடு களைவாய். (ஹிருதயகிரந்தியை வேரோடு எடுப்பாய்.) அதைவெட்டி எறிவாய். பணஆசையைப்பற்றி மாத்திரம் சொன்னேன் அன்று. செல்வமென்ன கவர்வமென்ன, பிறர்புகழ் விருப்பமென்ன. எல்லாவற்றையும் தவிர்ப்பாய். உலகம் சொல்லவே (அழியவே) அவைகளும் சென்றுவிடும்.

மனம்கனியாவிடில், இடம் வேறுபட்டு என்னபயன் உண்டு? உள்ளத்தில் ஆதாரம் இன்றேல் அதாவது என்னிடம்மனம்* புறம்பான சாந்தமும் சுகமும் நிலைநிற்காவாம். நீ வெளிவேற்றுமை பெறலாம். நீ நலம்பெறசெய்யஇயலாது. சோதனையாக ஒருசம்பவம் நேரிட, அதைநீபற்றுவாய், முன்னர், எதைவிட்டு ஓடிஒழிந்தாயோ, அதுவே உன்முன் குருக்கிடும், மேலும்மேலும் துன்பமும் இடுக்கணும் உண்டாகும்.

3. மனத்தூய்மைபெற பிரார்த்தனை. கடவுளே, உம்முடைய மஹிமைதங்கிய பரிசுத்தஆவியின் அருளால், என்மனம் உறுதிப்பாடு பெறசெய்வாய்; என்னுள்ளத்தில் உண்மை குடிகொள்ளப் பண்ணுவாய். அதனின்று, வீண்கவலையையும், துக்கத்தையும் அகற்றிவைப்பாய் சிறிதும் பெரிதுமான, எல்லாவிருப்பமும் என் மனத்தை சலிக்காமல் இருக்கும்படி பாதுகாரும். நான் உள்பட க்ஷணிகத்தில் மறையும் தோற்றமென நான் உணர்ந்து கண்டத்தேறவேணுக! சூரியனுக்குக்கீழ், இருப்பு—ஒன்றுக்கும் அன்றாம். எல்லாம் வீண் மயக்கமே—துன்பத்துக்கு இடமேயாம். இவ்விதம் உலகவாழ்வை அறிகிறவனே ஞானியாவான்.

*பற்றாமல் இருக்குமாயின்.



4. மெய்யுணர்வுபெற பிரார்த்தனை நாதரே:—எல்லாவற்றிற்கும் மேலாக உம்மையே நாடி, உம்மையே காண்பான, எனக்கு மருள் நீங்கிய உயர்நலம் வாய்ந்த ஞானத்தைத் தந்து அருளும். உம்மையே, சுகித்து, உம்மையே நான் அன்புபாராட்டச்செய்யும். உண்டாயின எல்லாம், உம்முடைய ஞானகதியின் முறைப்படி அமைந்துள்ளன என்று நான் அறியட்டும். என்னை ஸ்துதிக்கிறவனின்று நான் அகலட்டும். எனக்கு இடுக்கண் செய்பவனிடம் நான் பொறுமை பாராட்டட்டும். காற்றின் காரியமான புகழ்வார்த்தையைத்தவிர்த்து அது என் மனத்தை கவராமல் காத்தலே, அறிவாம். அந்த நிலையின் நெறிக்கு இது ஆரம்பத்தில் உற்றபடியாம்.

## 28-வது அதிகாரம்.

### புறந்தூற்றுவார்களின் நாவுக்கு, பயப்படாமை.

கடவுள்.

என் குழந்தாய், சிலர் உன்னைப்பற்றி தீமை எண்ணுகிறார்கள் எனவும், நிந்தனையாய்ப் பேசுகிறார்கள் எனவும், மனவருத்தம் வேண்டாம். அவர்களைவிட இன்னும் கொடுமையான அபவாதம் உன்மேல், பிறர்சொல்ல நீ எதிர் பார்க்கவேண்டும்; உன்னைவிட கடையான் இல்லை என நீ சிந்தனைகொள்வாய். நீ அந்தர் முகப்பட்டு நடைபெறுவாயாகில், பறக்கும் இவ்வதூறுகள் உன்னைச்சஞ்சலப்படுத்தாவாம். பிறர் அபிப்பிராயத்தை நினையாமல் பொல்லாத காலத்தில், பொறுமைபாராட்டி, மௌனம்சாதித்து உள்ளத்தில் என்னைத் தியானித்தல் நலமாம்.

2. உன் மனச்சாந்தம் பிறர்நாப்பற்றியது அன்று. அவர் மனத்துக்குத்தோன்றியவாறு நிகழும் வார்த்தைகள், நன்மையாகவும் தீமையாகவும் இருக்கும். அவைகளால் உனக்கு என்ன மாறுதல் ஏற்படக்கூடும். ஒன்றுமில்லை, உண்மையான சாந்தமும், உண்மையான மஹிமையும், எங்கே காண்பாய்? என்னிடம் அன்றோ? அதனால், ஜனங்களை திருப்திசெய்ய விரும்பானும், அவர்களின் அதிருப்தியை கண்டு வருந்தானுமே, ஆழ்ந்த சாந்தபதவியை அடைவார்; அநுபவிப்பார். வரம்புமீறின வாஞ்சையாலும், வீண்பயத்தாலும், மனச்சஞ்சலம் எல்லாம் உண்டாகிறது. அதனால், இந்திரியங்கள் சிதறிப்பலவற்றைப்பற்றுகின்றன.

## 29-வது அதிகாரம்.

### இடுக்கண் நேரிடுங் காலத்தில், இறைவனைப் பிரார்த்தித்து போற்றி செய்யற்பாலது.

இறைவனே, உம்மை என்னும் போற்றி செய்கின்றேன். இந்த சோதனையான துன்பமும் துயரமும் எனக்கு வரவேண்டுமென உம்முடைய இஷ்டம்,—அதைவிட்டு விலக என்னால் முடியாது. ஆனால் உம்மை அடைகிறேன், எனக்கு உதவி செய்வீராக? அத் துன்பம் எனக்கு நலமாகட்டும்.

2. நாதரே:— இப்போது நான் கஷ்டத்திற்குள்ளாயிருக்கிறேன். என் மனம் சுகமாகயில்லை. பிரகிருத துன்பத்தினால் நான் மனவருத்தமுறுகிறேன். என் பிரியமுள்ள பிதாவே! வலைக்கண் சிக்கிக்கொண்டு விழிக்கிறேன். என் என்பேன். இந்தச்சமயம் என்னை காப்பாற்றும். நான் உண்மையாய் என் நொய்மையையும் என் இழிவையும் உணர்ந்து, அதன் மூலமாய், உம்மருளால் சுதந்தரம் பெறுவேன். உம்முடைய மகிமையும் விளங்கும். இதற்காகவன்றோ— எனக்கு இத்துன்பம் வந்து உற்றது? கடவுளே ஏழை நான். இன்ன செய்யலாம் என் அறியாது வருந்துகிறேன். என்னைக்கலக்க தாக்கிவிட அருள்வீர். உம்மைவிட்டு, வேறு எனக்கு போக்கிடம் ஏது? இந்த ஒரு சமயம் எனக்கு பொறுமைக்குணம் தாரும். ஈசனே எனக்கு உதவி செய்யும்; அஃது உண்டேல், எத்தகையபாரம் என்மேல் ஏறினும் நான் பொறுப்பேன்; பயப்படேன்.

3. இந்தச்சம்பவங்களின் மத்தியில், ஈசுவரா—நான் சொல்லற்பாலது என்ன? இதுதான்—எல்லாம் நும்செயல். இவ்விடுக்கண்ணும், இத்துன்பமும் நான் அனுபவிக்கவேண்டியதுதான்; என்று உம்முடைய சங்கற்பமாயின், நான் சகிக்க வேண்டியதே. இத்துன்பம் நீங்கி எனக்கு, நல்லகாலம் வரும்வரையில், இதை எல்லாம் பொறுக்க எனக்கு சக்தியைகொடும். நீர் மனம்வைத்தீராகில் இத்துன்பம் எனக்கு இல்லாமலே செய்தல் கூடும். கடவுளே, என் கருணைமூர்த்தி நான் அதன் வசம் ஆகாவண்ணம் முன்பு அடிக்கடி எனக்கு அருளியிருக்கிறபடி அதன் கொடுமையைத் தணித்து எனக்கு உதவுவீராக. எவ்வளவுக்கு எவ்வளவு எனக்கு வருத்தமா



இருக்கிறதோ—அதைத்தணித்தல், அவ்வளவுக்கு அவ்வளவு உமக்கு லகுவாம். துன்பத்தை இன்பமாக்கும் சாமர்த்தியம் உமக்கே உரியது.

## 30-வது அதிகாரம்.

### ஈசன் அருள் உதவி விரும்புதலும் திரும்பவும் ஈசன் அருள் கிடைக்குமென்றநம்பிக்கை இருத்தலும்.

கடவுள்.

என் பிரியனே:—துன்பம் வருங்காலத்தில் உனக்கு ஆறுதலும் தேறுதலும் கொடுக்க வல்லான் யான். உனக்கு நல்ல காலம் இல்லாத சமயத்தில், என்னை அடைவாய். ஈசன் ஆதரவுகிடைக்கிறதில் தடையாதெனில். உங்கள் பிரார்த்தனையின் தாமதமேயாம். என்னிடம் மனம் வருந்திக்கேட்கும் முன்னர், பலவிதமாக ஆறுதல் பிறரிடம் தேடுகின்றீர்கள். வெளிவஸ்துகளினால் ஆகுமென நினைந்து முயற்சிக்கின்றீர்கள். அதனால், என்னை நோக்கிக் கோருகிறவரையில் அவையெல்லாம் பயனற்றவையாக முடியும். என்னை நம்பினவரை நான் ஆதரிப்பேன்; கைவிடேன். நானன்றி உண்மையான உதவி இன்றாம்! பலனுள்ள புத்திமதி இன்றாம்! நிலைக்கின்ற சுகம் இன்றாம். இப்போது புசல்போன்ற துன்பம் நீங்கிவிட்டது. மனத்தை ஆற்றிக்கொள்; தேற்றிக்கொள்; என் கருணையின் கடாக்ஷத்தால், தைரியம்கொள்! உனக்கு அருகில் இருக்கிறேன்; எல்லாவற்றையும் நேர்மையாக நிகழும்படி செய்கின்றேன். ஆனந்தமும் சுகமும் ஜனிக்குமாறும் செய்கின்றேன். என்னால் முடியாதது ஒன்றும் இல்லை! வார்த்தை ஒன்று சொல்லி செய்கை வேறுவிதமாக முடிக்கிறவன் அல்லன். என்மீது சிரத்தை வை. உறுதியாக இரு. இடையறாது முயலு. நீண்டகாலம் சகிப்பாயிரு. தீரனாக இரு. தேற்றரவு, அது உற்றகாலத்தில், வரும். என்னையே எதிர்பார். என்னையே நம்பு. நான் வருவேன், சுகப்படுத்துவேன்.

2. சோதனை அன்றோ, உன்னைத் துன்பப்படுத்துவது? வீண் பயம் அன்றோ, உன்னை வருத்துவது? இனி வரப்போகின்ற சம்பவங்களைப்பற்றிக் கவலைகொள்வதில் என்ன பயன்; துக்கிப்பதில் என்ன லாபம். துன்பத்தின்மேல் துன்பம் தானே நேரிடும். அத்தந்த நாட்கவலை அந்தந்தநாள்மட்டுமே இருத்தல் நலம். இனிவரப் போகின்ற சுகதுக்கங்களைப்பற்றி முன்னாடி நினைந்து, சந்தோஷிப்

பதும், மனச்சஞ்சலப்படுவதும் வீணே. ஒருகால், அவை வாராமலும் இருக்க நேரும்.

இவ்வித வீண் நினைப்பினால், கவலைப்படுதல் மனிதன் இயற்கை. இஃது நொந்தமனதின் தன்மை. ஏதேனும், ஒன்றை அசுத்தமனம்* சங்கற்பிக்க அவ்வழியே செல்லுதல், இலகுவாம். அச்சங்கற்பங்கள், உண்மையோ பொய்யோ என அதை ஆராய்தல் இல்லை. எதிரில் தோன்றும் விஷயங்களின் விருப்பமோ, இனிவருபவையின் விருப்பமோ மோசத்திற்குள்ளாக்குகிறது, என்று அறிகிறானும் இல்லை. நீ மனச்சஞ்சலப்படாதே: பயம் வேண்டாம். என்னை நம்பு. என் கருணையில் உறுதிகொள்ளு. என்னைவிட்டு வெகுதூரம் விலகியிருக்கிறாய் என்று நினைப்பாய்! நான் அடிக்கடி உன் அருகேயே நிற்பேன். எல்லாம் முழுகிப்போயிற்று என்று எண்ணுவாய்; அடுத்தே உனக்கு அனுகூலமான, பலன் கிடைக்கும். நீ நினைக்கக்கூடியதைவிடப் பெரிதான, சம்பத்து கிடைக்கும். நீ நினைத்தபடி நிகழாவிட்டால் எல்லாம் போயிற்று, என்ற எண்ணம் வேண்டாம். இப்போதிய உன் மனப்போக்கின்படி தீர்மானம் கொள்ளாதே. எத்தகைய துன்பமும் துயரமும் வந்திடினும் அதன் வசமாகாதே; அதைப்பற்றி சிந்தனைகொள்ளாதே; இனி முழுகிவிட்டோம் விமோசனம் இல்லை என நினையாதே. உதவி புரிவார் யாருமில்லையே, அநாதி ஆனேனே என்று வியாகூலம் அடையாதே. சொற்பகாலம் இத்துன்பம் உனக்கு இருக்கட்டும் என செய்திருப்பேன். அல்லது நீ விரும்பிய சுகத்தை இல்லாமல் செய்திருப்பேன். மேலான மோக்ஷமார்க்கம் இதுவே; இத்தன்மையாக நிகழ்ந்திடும்.

நீயும், எனக்குச் சுகிர்தமான ஞானிகளும் எப்போதும் எல்லாம் சுகமாய் இருத்தல் நலமன்றும் துக்கங்கள் நேரிடுதல் நலமாம். இதில் சந்தேகம் வேண்டாம்.

உன்னுள்ளக் கருத்துக்களை நான் அறிவேன். ஈசன் அருள் வாய்ந்த ஆறுதலின்றி இடைஇடையே இருத்தல் உனக்கு நலமாம். அப்படி நிகழாமல் போயின் உனக்கு நல்லகாலம் நேர்ந்து, எல்லாம் சுகமாய் நடைபெறுங் காலத்தில் கருவங் கொள்ளுவாய், அகம்பாவம் பெறுவாய். உள்ளதைவிட அதிகமாக இருப்பதுபோலத் தோன்ற

*பகைவன்.



விரும்புவாய். நான்கொடுத்த கொடையைத் திரும்பவும் சுவீகரித்தல் நியாயமே. மறுபடி கொடுத்தலும் என்னிஷ்டமே. கொடுக்கும்போது அஃது என்னுடையது. திரும்ப உன்னிடமிருந்து கிரகிக்கும்போது உன்னுடையதை ஒன்றும் நான் எடுக்கிறேன் அல்லன். ஒவ்வொரு நலமும் என்னுடையதே. ஒவ்வொரு பூர்ணமான நன்கொடையும் என்னுடையதே. உனக்குத் துன்பம் சம்பவிக்கும்படி செய்தேனாயினும், இடுக்கண் விளைவித்தேனாயினும், கோபம் கொள்ளாதே. தைரியமாக இரு. உன்னை அமுத்துகிற பாரத்தை நீக்கிவிடுவேன், எல்லாத் துன்பத்தையும் இன்பமாக ஆக்கிவிடுவேன். ஆயினும் இஃது உண்மை இஃது உண்மை. நான் நடுநிலைமையாளன். இவ்வண்ணம் உனக்கு செய்கின்றதற்கு, நான், பூஜிக்கக் கடவேன்.

3. நீ சரியான சிந்தனைகொண்டு, விஷய சம்பவங்களை உள்ளபடி உணர்ந்தால், அதிக வியசனத்துக்கு உள்ளாகாய், அதிகமாகக் கவலையுறாய். அதற்குமாறாக, சந்துஷ்டி அடைவாய்! நன்றி பாராட்டி வந்தனங்கள் செய்வாய்; மேலும், உனக்கு துன்பம் நேரிடுதலும் கஷ்டம் உன்னையும் விட்டுவிலகினதன்று என அறிந்து இஃது ஓர் அருமையான ஆநந்தசம்பவமென நினைப்பாய். பிதா என்னை நேசித்தபடி, நானும் உன்னை நேசிக்கிறேன். என்னுடைய பிரியமான சிஷர்களுக்கும் இவ்விதமே சொன்னேன். உண்மையாய், உலக சந்தோஷத்தைக் கொடுத்தேன் அல்லன். கஷ்டத்தையும், நிந்தனையையும் அனுபவிக்கச் செய்தேன்; வேலையால் வருந்தச்செய்தேன். சுகமாய் இருக்கவிட்டேன் அல்லன். துயரமடைந்து அதன் பயனை அதிகமாக அனுபவித்துப் பொறுக்கச் செய்தேன். கவலையின்றித் தூங்கச்செய்தேன் அல்லன். என் பிரியனே இந்த மொழிகளைக் கவனமாய்ச் சிந்தனைகொள்ளு.

## 31-வது அதிகாரம்.

### சிருஷ்டிப்பொருளை மறந்தால் சிருஷ்டி கருத்தரை அடையலாமெனல்.

ஜீவன்.

எவனும் சிருஷ்டிப்பொருள் எதுவும் என்னைப் பற்றுக்கு உட்படுத்தாமலிருக்கும்படி, இப்போது பெற்றிருக்கிறதைவிட அதிகமான வரப்பிரசாதம் முக்கியமாக வேண்டுகிறேன்.

உலகத்திலுள்ள யாதேனும் என்னைவசப்படுத்தினால், அதனின்றுமீ [illegible]தந்தரமுள்ளவனாய், உம்மிடம் வர இயலாது. "புறாவின் இறக்கைகள் யாரேனும் கொடுத்து உதவமாட்டார்களா ?(இவ்வுலகத்தை) விட்டுப் பறந்திடுவேன். சாந்த நிலையை அடைவேனே" இப்படிஉரைத்தவன் பறந்து வந்து உம்மை விரைவில் அடையத் தீவிர விருப்புள்ளவனும்.

இறைவனைத்தவிர வேறொன்றையும் நோக்காத களங்கமற்ற சுத்தமான கண் அன்றோ சாந்தியை பெற்றுள்ளது? உலகத்தில் ஒன்றையும் வேண்டான் அன்றோ சுதந்தரம் உள்ளவனாவான்? அதனால், உலகத்திலுள்ள எப்பொருளையும் இச்சியாது, துறந்து தன்னையும் முற்றும் தியாகம்செய்து, பரவசமாகி, இறைவ! நீ ஒப்புடையன் அல்லன், உயர்விலன் என்று உணர்வு அடையக்கடவேன். நீ எல்லாவற்றையும் அதிக்கிரமிக்கின்றாய்!.

மண்ணிறந்து விண்ணிறந்து மிக்கான்

—மாணிக்கவாசகர்.

முற்றும் உலகஆசை விட்டு, மேல்நோக்கி, இறைவனுடன் ஒருமை உணர்வு பெற்றாலன்றி, தான் அறிந்த அறிவெல்லாம்வீண். தன்னுடைமை யெல்லாம் வீண் அற்பமே. இறைவன் அன்றி ஒன்றில்லை, என்று அறியவேண்டும். உயர்வற உயர்நலமுள்ளவன் எவனோ—அவனின்றி, வேறு வஸ்துக்களைப் பொருளாக எண்ணுகின்றவன், அற்பனே, கீழானவனே; ஒன்றுமில்லாதான் என மதிக்கப்படுவான்.

ஞான ஒளிபெற்றுள்ள அன்புடையான் ஞானத்திற்கும் படித்த வித்வானின் மேதைக்கும் வெகு வித்தியாசம் உண்டு. முன்னது, இறைவன் அருள் பிரசாதத்தால் உண்டானது, அஃது உயர் நலம் வாய்ந்தது; பின்னது, வருத்தத்துடன் மனுஷ முயற்சியால் கிடைத்தது.

2. அனேகர் சாந்தமாய்க் காலங்கழிக்க விரும்புகிறார்கள். ஆனால், அதற்கு ஏற்றபடி, அப்பியாசம் செய்ய முயலுகின்றார்இலர். அற்புதங்கள், காண விரும்புவோம் சித்துவிளையாட்டைப் பார்க்க எண்ணுவோம் இதுவே ஞானவழிமுறையில் பெரிய தடையாம். நம்முடைய ஆசாபாசங்களைத் தவிர்க்கவும் அடக்கவும் முயலுகின்



றோம்இல்லை.

நம்முடைய ஒழுக்கமுறையைக் கவனித்தால், [illegible]தன்மை[illegible] என்று சொல்லமுடியாது! எந்த நோக்கம், நம்மை ஆளுகிறது. சிரேயஸ் மார்க்கத்தில் நடைபெறுகிறோமென நினைக்கின்றோம்; அஃது எம்மாத்திரம் சரியானது. அற்ப விஷயங்களிலும், அநித்திய பதார்த்தங்களிலும் உள்ள காமமும் அவைகளை அடைய செய்யும் முயற்சிகளையும் புலன்களை அடக்கவும் உள்ளே நோக்கவும் நாம் முயலாமல் உபேக்ஷையாக இருக்கிறதையும் சிந்தித்தால், மிக ஆச்சரியமாகவும் பரிதாபமாகவும் இருக்கிறது. கணப்பொழுது இந்திரியங்களை அடக்கி, உள்ளே நோக்க எத்தனிப்போம், உடனே மனம் நிற்காமல் வெளியேறிவிடும். அதன்வழியே நாமும் செல்லுவோம், நாம் கருமங்களைக் கவனிக்கிறோமில்லை. சீர்தூக்கிப் பார்க்கிறோமில்லை. நம்மனப்பற்று எங்கே இருக்கிறதென்று ஆழ்ந்து ஆராய்கின்றோமில்லை. நாம்செய்யும் கருமங்கள் எல்லாம் அசுத்த எண்ணங்கள் பற்றியே இருக்கின்றவென்று அறிந்து மனநொந்து வியசனிக்கின்றோமில்லை. எல்லா மனுஷ கிருத்தியங்களும் அசுத்த நிறைந்தமையால், அந்நாளில் மகாப்பிரளயம் சம்பவித்தது. ( Genesis Chapter VI 12.) நம்முள்ளம் அசுத்தமாக இருந்தால், அது பற்றி நிகழும் கருமமும் அசுத்தமாகத்தான் முடியும். அதனால், வெளிக் கருமம், உள்ளழுக்கை காட்டிவிடும். மாசில்லா மனத்தினால் அதன்பயனாக நல்ல ஒழுக்கம் நிகழும்.

ஒருவன் எவ்வளவு செய்துள்ளான் என வினவுகிறோம். அதில், அவன் நல்ல எண்ணமும், நல்லபாவமும் எவ்வளவு உள்ளது என்று சரியாய் விசாரிக்கின்றோம் இல்லை.

அவன் பலவானா? செல்வவானா? அழகுள்ளவனா? நுண்ணறிவுள்ளவனா? நன்றாய் எழுதுகிறவனா? நல்ல பாடகனா? நல்ல வேலைக்காரனா? இவ்விதம்வினவுகிறோம் அவன் அடக்கமுடையவனா? பொறுமையுள்ளவனா? சாந்தனா? பேர்அன்புடையனா? உள் நோக்குள்ளவனா? என விசாரிப்போர் இல்லை. நாம் வெளிவிஷயத்தில் பார்வையுடையோம். உள்நோக்க வேண்டுமானால், இறைவன் அருள் வேண்டும். முன்னது அடிக்கடிதவறும், தடுமாறும்; பின்னதோ, மயக்கமுறுவன்னணம், இறைவனே கதியென்று நம்பி நடைபெறும்.

## 32-வது அதிகாரம்.

### தன்னை மறத்தலும், ஆசாபாசங்களை விடுதலும்.

கடவுள்.

என் குழந்தாய்!

உன்னை முற்றும் மறந்தால் அல்லாது, உனக்குச் சுதந்தரம் கிடையாது. சுயநயம் பாராட்டுவோனும், சுயஅபிமானியும், விலங்கு போட்டுக் கொள்ளுகிறான். பேராசை கொள்ளுவான்; பரபரப்பாய் இருப்பான்; உருளைக் கல்லைப்போல அங்கும் இங்கும் அலைவான்; நிலைநிற்கான்; எப்போதும் சுகத்தை நாடுவான்; ஏசுவை நினையான்; ஸ்திரமில்லாக் கருமத்தை நூதன நூதனமாகச் சிந்திப்பான்; செய்யமுயலுவான்; அவர் கருமமெல்லாம் அழியும்; அவை கடவுள் வழி பற்றியவை அன்றாம்.

உண்மை நிறைந்த ஒரு சிறு பழமொழியை ஞாபகத்தில் வைத்துக்கொள். அஃது இதுவாம்—"விடுமின்! பெறுமின்! காமங்களை விடுமின்! சாந்தம் பெறுமின்" இதைச் சிந்தனைசெய்; இவ்வழி நட; பின்பு இதன் பயனை உணர்வாய்.

ஜீவன்

2. நாதரே! இந்த உபதேசம் ஒருநாட் காரியமன்று. இது சிறுபிள்ளை விளையாட்டன்று. சிரேயஸ் மார்க்கத்தில் நடைபெறுகின்றவர் யாவரும், ஒழுகற்பால எல்லாத்தர்மமும் இந்தஒரு பழமொழியின்கண்ணே அமைந்துள்ளது.

கடவுள்.

3. என் அன்பனே, முற்றும் துறந்த ஞானியின் நெறிமுறையைப்பற்றிக் கேட்கையில், அதைரியப்பட்டு, மனம் சோர்வடையவேண்டாம். மேலான நிலையைப்பற்ற உற்சாகம் பெறவேண்டும், அல்லது அதைஎப்போது அடையப் போகின்றோமென ஏக்கமுற்று மனம் உருகவாவது வேண்டும்.

நீ இந்நிலையில் இருக்க விரும்புகிறேன்; எல்லா தருமத்தையும் விட்டு என்னையே சரணமாகஅடை. நாம் நியமித்திருக்கின்றவரை, பிதாஸ்தானத்தில் வைத்து விசுவாசி. அதனால் என்னைத் திருப்தி செய்வாய். உன் காலமெல்லாம், சாந்தமாகவும் சுகமாகவும் கழியும்.



நீ துறக்க வேண்டியவை அனேகங்கள் உள்ளன. அவைகளை முற்றும் விட்டால் அல்லது, உன் எண்ணம் நிறைவேறாது. நீ செல்வவான் ஆக நெருப்பில் பழுக்கப் புடம்போட்டு பரீக்ஷைசெய்த தங்கத்தை விலைகொள்க அதாவது கீழான விஷயங்களை, காலால் உதைத்து தள்ளி, ஞான சம்பத்தைபெறு. விஷயஞானத்தைத் தவிர். உலகத்தாரை திருப்தி செய்தலையும் உனக்கு திருப்தி தேடுதலையும் ஒழி.

4. உலகத்தார் உயர்வென்று மெச்சும் விஷயங்களை விட்டு, அவரால் அற்பமென நிந்திக்க பெறுமவற்றை நாடு. இவ்வண்ணம் உனக்கு முன்னரே உபதேசித்திருக்கிறேன். §சிரேயஸ் மார்க்கத்தை ஜனங்கள் மதிக்கின்றார் இல்லை. அது அற்பமென்றும், இழிவென்றும் அவர் கருத்து. அது அவர் நினைப்பிற்கே வருகிறதில்லை தன்னை உயர்வாக எண்ணுகிறவனும் தன் சக்தியை பிறர் பெரிதாகக் கருதவேண்டுமென நினைப்பவனும் ஞானியல்லன். இந்த வசனம் எல்லாரும் சொல்லுவார்கள். அவர்கள் அனுஷ்டானம் முற்றும் மாறாக விருக்கும். இஃது அநேகருக்குத் தெரியாத விலையுயர்ந்த முத்துப் போன்றதாம் இது விலையுயர்ந்த மாணிக்கவாசகம்.

## 33-வது அதிகாரம்.

### மனச்சஞ்சலமும் அதன் விருத்தியைக் கடவுளை நோக்கச்செய்தலும்.

கடவுள்.

என் குழந்தாய், இப்போது உள்ள உன் எண்ணத்தை முற்றும் நம்பாதே. அது சீக்கிரம் மாறும். உன் நாள்வரை, உன் மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டே இருக்கும். அஃது உனக்கு பிரியமன்று தான். ஒருசமயம் சந்தோஷிப்பாய், ஒரு சமயம் துக்கிப்பாய்; ஒருவேளை சாந்தம் கொள்வாய், ஒருவேளை சஞ்சலிப்பாய், ஒருகால் பேர்அன்பு பாராட்டுவாய், ஒருகால் அதை மறப்பாய், ஒருகால் கருமத்தில் அழுந்துவாய், ஒருகால், சோம்பலில் மடிவாய், ஒருகால், வாடின முகத்துடன் இருப்பாய், ஒருகால், மகிழ்ந்து இருப்பாய் நிவிர்த்தி மார்க்கத்தின் முறையை நன்கு உபதேசம் பெற்ற ஞானி

§நிவர்த்தி மார்க்கம்—இறைவன் வழிபடுதல்

இத்தகைய விகாரங்களையும், மாறுதல்களையும் அதிக்கிரமிக்கிறான்; தனக்கு ருசியானதை விரும்பான். இவ்வித மாறுதல் எந்தக்காற்று அடித்து உண்டாகிறதென விசாரியான். தன் மனம் முழுமையும் மேல்நோக்க வேண்டுமென ஊக்கமுடன் இருப்பான். எத்தனை மாறுதல்களும் சம்பவங்களும் நேரிடினும், அவைகளைச் சிந்தியாமல், மனக்கண்ணை என்னிடம் வைக்கின்றமையால், சஞ்சலமின்றி ¶ஸ்திதப்பிரக்ஞனாக நடைபெறுகிறான். மனக்கண்ணின் மாசில்லா நிலைமைக்கு தக்கவாறு, சம்பவிக்கும் பலவிதமான புசல்களை மேற்கொள்ள சக்தியுண்டு. அதனால் அந்தோ அனேகர் மனக்கண் இருள் பற்றியிருக்கின்றது! பகட்டான விஷயத்தைக் கண்டு ஜனங்கள் மயங்குகிறார்கள்!

அபிமான என்ற மாசற்ற ஒருவனைக் காண்பது அரிது. இதனாற்றான், முன் ஒருகாலத்தில் பெத்தல்ஹேம் (Bethelhem) என்ற ஊருக்கு வந்த யூதர்கள், ஏசு என்பாரை மாத்திரமல்ல, லாஸரஸ் என்பவனையும் பார்க்க வந்தார்கள். அதனால் மனக்கண் சுத்தமாகி, நேர்மைப்பட்டு ஒரேநினைப்பாய் இருத்தல் வேண்டும். அஃது என்னையே நோக்கவேண்டும் இடைநடுவில் உள்ளவைகளை முற்றும் மறக்கவேண்டும்.

## 34-வது அதிகாரம்.

### ஈசனை நேசிக்கின்றவன்; எல்லாவற்றுக்கு மேலாக அவரையே சிந்தனை கொள்ளுவான்—எல்லாவற்றிலும் அவரையே காண்பான்—என்றது.

இறைவனே! என் உடைமையே! எனக்கு வேண்டுவது என்ன? உன்னை விடவேறு சந்தோஷகரமான வஸ்து யாதேனும் உளதோ? உலகத்தையும் அதனுள்ள விஷயங்களையும் துறந்து அச்சொல்லின்மேல் அன்புவைத்தவனுக்கு, இனிமையும் ருசியும் அன்றோ அது? கடவுளே! என் எல்லாமானவனே! அறிகிறவனுக்கு உபதேசித்தது போதும் அதைத் திரும்பத் திரும்ப, மனனம் செய்கிற பக்தனுக்கு அது பிரியமாம், இனிதாம். உன்னுடைய சந்நிதியில் எல்லாம் சந்தோஷகரமே. நீ இன்றேல்—எல்லாம் துக்கமே. நீ

¶நிலையுள்ள மனதுள்ளவன்



மனத்தைச் சாந்தப்படுத்துகிறாய். சாந்தம் உன்னுடையது. பேரானந்தம் உன்னுடையது. எல்லாவற்றிலும் நலனை நினைக்க செய்விக்கின்றாய். எல்லாவற்றினும், உன்னையே கண்டு போற்றிசெய்ய அறிவிக்கின்றாய். நீ இன்றி ஒன்றிலும் ரசமில்லை. நீடித்த சுகமில்லை, இன்பமில்லை. அதன் இன்பத்திற்கும், அதன் ருசிக்கும் உன்னருள் அதன்கண் இருத்தல் வேண்டுமே. அது ஞானரசமூட்டப் பெறவேண்டும். உன்னை ருசியாகக் கொள்ளுகிறவனுக்கு எல்லாம் ருசியாகவிருக்கும். உன்னை ருசியாக கிரகிக்காதானுக்கு, உண்மையாக ஒன்றும் ருசிக்காது.

2. உலக விஷயத்தில் பிரக்ஞை உள்ளவர்களுக்கும், அதைப் போற்றுகிறவர்களுக்கும் உன் ஞானமுறைக்கும் வெகு தூரங்காண். ருசியான வழி மரணத்திற்கு சேர்ப்பிவிக்கும் உன்னை நாடிச்செல்லு மார்க்கத்திலோ என்றால், உலகத்தின் ருசியை வெறுத்தலும், உன்னை ஓம்பாமல் இருத்தலுமாம். இதினால் உலக மருள் நீங்கி மெய்யுணர்வும், ஊனடங்கி, ஆன்ம உணர்வும் சித்திக்கின்றது. இறைவன் என்றால் இந்நெறியில் நின்றானுக்கு இனிதாம். எவ்விடத்திலும் எந்நலம் இருப்பினும், அது இறைவன் அருட்பிரசாதம் என எண்ணுவான். பொருமேற்பற்றுக்கும் அதனை ஆக்கியோனான ஈசன்மேல் பற்றுக்கும் வெகுதூரம், வெகுதூரம். கண்ட காலத்துக்கும் அகண்ட காலத்துக்கும் இருக்கின்றது போலும், இருளுக்கும் ஒளிக்கும் இருக்கின்றது போலும். என்றுமுள்ளசுடரே! உயர்வற உயர் பெருஞ்சுடர் ஒளியே! என் மனத்தின் கண்ணுழைந்து இடங்கொள்வாய். அதனை அடைவாய். என்னைத் தூயன் ஆக்குவாய்; என்னைக் காப்பாற்றுவாய்; என் மருள்நீக்குவாய்; எனக்குத் தைரியம் தருவாய். இதனால் ஆநந்த பரவசனாகி, உன்னுடன் இரண்டறக் கலக்கச் செய்திடுவாய்.

ஓ. ஓ! இந்நற்காலம் வருமோ? என்று வருமோ? உன் தரிசனம் பெற்று அதனால் என்னுள்ளம் நிறைந்து, எல்லாம் நீயாய் எனக்கு எப்போது ஆவாயோ? நான் அறியேன். இவ்வருள் கிடைக்கும்வரை, பூர்ண ஆநந்தம் பெற்றேன் அல்லன். அந்தோ! பழைய காம வாசனைகள் இன்னும் என்னிடம் குடிகொண்டிருக்கின்றனவே! அவை முற்றும் அறுபடவில்லையே! அவை முற்றும் அழியவில்லையே. இன்னும் என்னுடன் போராடுகின்றனவே! ஆசைக

ளை மூட்டுகின்றனவே! அதனால் என் மனம் சாந்தம் பெற முடியவில்லையே. பெருங்கடலையும் அதன் பொங்குதிரைகளையும் அடக்கி ஆளும் இறைவ! எழும்; என்னைக்காறும். போரில் ருசியுள்ள ஜாதிகளைச் சிதறும் உம்முடைய சக்தியால், அவர்களை ஆழ்த்தும். சின்னபின்னப்படுத்தும். உம்முடைய பராக்கிரமத்தைக் காட்டும். நான வேண்டுகிறேன். இவ்விதம் செய்யும். உம்முடைய வலக்கை மஹிமை பெறட்டும். என் கடவுளே! என் நாதரே! உம்மால் இன்றி எனக்கு வேறு ஒருவராலும் நம்பிக்கையும், ஆதரவும் விமோசனமும் இல்லை.

## 35-வது அதிகாரம்.

### உள நாள் வரை ஆசாபாசம் ஒழியாது.

**கடவுள்.**

என் குழந்தாய்! எப்போதும் இவ்வுலக வாழ்க்கையில், ஆசையை விட்டோமென்ற சாவதானம் கிடையாது. உன்னைக் காக்க, உன் ஆயுள்நாள்வரை ஞானநெறியின் ஆயுதங்கள் வேண்டுவனவாம். நீ பகைவர்களால் சூழப்பட்டிருக்கிறாய். நாலுபக்கத்திலும் உன்னைத் தாக்குவார்கள். பொறுமை என்ற கேடயத்தை உபயோகித்துக் காப்பாற்றிக்கொள். இன்றேல் காயப்படுவாய். மனத்தைப் புண்ணாக்கிக்கொள்ளுவாய்.

மேலும் என்னையே நம்பி, எத்துன்பம் வரினும் அதை எனக்காகவே பொறுத்து, உன் மனத்தை என்னிடம் வை. இன்றேல், அந்த வைராக்கியம் அதிககாலம் நிலையாது. ஞானிகள் பெற்ற ஜயம் உனக்குக் கிடைக்கமாட்டாது. அதனால், எது வந்தாலும் பொறுத்து, எந்த இடையூறு வரினும் அதனுடன் போராட மனத்தைரியமும் வேண்டும். ஜயிக்கின்ற தீரனே அமிர்தத்துவத்தை அடைவான். சோம்பாளனுக்குத் தீராத் துன்பமே.

2. இவ்வுலக வாழ்க்கையில், ஓய்வும் விசராந்தியும், விரும்பினால், நித்தியமான சாந்தம் எப்படி அடையக்கூடும்? அதனால், உலகத்தில் ஓய்வை வேண்டாதே. பொறுமையை வேண்டு. தேவலோகத்தில் சாந்தநிலையை நாடு; இகத்தில் அதை நினையற்க. மனிதனிடமும், உலகப்பொருள்களிலும் அதை எதிர்பாராதே. அதை இறைவனிடம் தேடு. இறைவனிடம் உள்ள அன்பை மோக்ஷ



எல்லாத் துன்பமும் துயரமும் நீ சகிக்கற்பாலது. வேலை, இடுக்கண், சோதனை, துன்பம், மனவருத்தம், வறுமை, வியாதி, காயம், பிறர்நிந்தை, பொல்லாப்பு, அவதூறு, மனக்குழப்பம், தண்டனை இவைபோன்றவையை நீ பொறுத்தல் நலம். இவைகளின் சம்பவத்தால் உனக்கு நன்மை உண்டாம். இவை நற்குணபாவத்தை உண்டாக்கும். $சிரேயஸ் மார்க்கத்தில் புதிதாய் முயலுகின்றவனை இவை சோதிக்கும். கடைமுறையில், உயர்நலம் வாய்ந்த மோக்ஷத்தையும் அடைவிக்கும். சொற்பகாலம் முயற்சித்தால், நித்தியமான பலன் உண்டு. ஒரு நாழிகை நீ கஷ்டப்பட்டால், என்றும் அழியாத மஹிமை உனதாகும்.

3. நீ நினைத்தபடி, ஈசன் அருள் நிறைந்த தேற்றரவு உனக்குச் சித்திக்குமென்று எண்ணாதே. என்னுடைய பரமபக்தர்கள் இதைப் பெற்றாரில்லை. அவர்கள் பட்ட துன்பங்கள் பல; சோதனைகள் பல; நிர்க்கதியாக நின்ற நாள் பல. ஆயினும், இடுக்கண் உற்ற காலமெல்லாம் பொறுமை பாராட்டுவாராயினர். தங்களை நம்பாமல், இறைவனையே நம்பி நடைபெறுவாராயினர். தற்காலத்தில் நேரிடும் துன்பமும் துயரமும், இனி கிடைக்கும் ஒப்பு உயர்வு அற்ற நலத்தை உத்தேசிக்க அற்பமென அவர்கள் கருதினர்: பலகால் வருந்தி, துக்கக்கண்ணீர் பெருக உழைத்தவர்கள் அனேகர். இதை இன்னும் அடையாமல் நிற்க இப்போழ்தே இதை அடைய விரும்புகின்றாயா? இறைவனையே எப்போதும் எதிர்பார்; தீரனாகவிரு; மனத்தைக் குளிரப்பண்ணு; நம்பிக்கை கெட்டுத் துயரப்படாதே; மனம் தளராதே. இறைவனைப் போற்றிசெய்து, உன் உடல், ஆவி இரண்டையும் அவருக்கு அர்ப்பணம் செய்; உனக்கு ஏராளமான பாக்கியம் அளிப்பேன். ஒவ்வொரு துன்பமும் வருங்காலத்தில், உனக்கு ஆதரவாக உன்னுடன் இருப்பேன்.

## 36-வது அதிகாரம்.

### மனிதர்கள் அபிப்பிராயங்கள் வீண் என மதித்தல் வேண்டும்.

**கடவுள்.**

என் குழந்தாய்! உன் மனத்தை இறைவனிடம் உறுதியாக

$Novice of Chirst.

வை; மனத்துக்கண் மாசிலனாகியும் நன்மை அமைந்தவனாகவுமிருப்பாயாகில், பிறர் அபிப்பிராயத்தைக் கவனியாதே; பிறரால் தூஷிக்கப்படுதல் நலமாம். தன்னை நம்பாமல் இறைவனிடம் அன்புடைய அடங்கிய மனத்துக்கு அது ஒரு சிரமமான விஷயமன்றாம். அநேகர் பலவிதமாகப் பேசுவார். அவ்வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளற்பாலதன்றாம். எல்லாருக்கும் நல்லவனாக நடைபெறுதல் முடியாவாம். பால் என்ற ஞானியார், இறைவனை உள்ளத்தில் வைத்துக்கொண்டு ஆனால் யாவரையும் திருப்தி செய்தும், அவர் அவருக்கு நன்மையாகவும் நடைபெற்று வந்தார். ஆயினும் உலகத்தார் அபிப்பிராயத்தை மதித்தாரில்லை. பிறர் ஆத்மக்ஷேமத்தின்பொருட்டும், பிறர் உய்யும்வண்ணம் பல்வாறாகப் பாடுபட்டார்; உழைத்தார். பிறர் அவரைத் தூஷியாமலும், நிந்தியாமல் இருந்திலர். அதைத் தடுக்க முடியவில்லை. அதை எல்லாம் ஈசன் அறிவார் எனக் கருதிச் சாந்தமாயும், அடங்கிய மனத்துடையராயும், தாம் கைக்கொண் மார்க்க முறையை ஆதரிப்பாராயினர். தீய சொற் பாராட்டுவாரையும், மனத்தில் தோன்றியபடி அவரை பொய்யாக நிந்தித்தவரை அவர் லக்ஷியம் செய்தாரில்லை. மதித்தாரில்லை. ஆனால் அத்தன்மையர்கள் கேட்கும் வினாக்களுக்கு சிலசில சமயங்களில் விடை அளிப்பார். கேள்விகளுக்குச் சமாதானம் சொல்லாமல் மௌனம் சாதிப்பாராகில், சாதாரண மனிதர்கள் புத்தி மயங்கிக் கெடுவார்கள் எனக்கருதி அப்படிச் செய்வாராயினர்.

2. மரணதர்மத்துக்காளான மனிதனுக்கு நீ ஏன் பயப்படுகிறாய்? அவன் இன்று உள்ளான், நாளை இரான். இறைவனுக்குப் பயந்து நட; மனிதன் பயம் வேண்டாம். வார்த்தைகளாலும், தீய செய்கையாலும், எவன் உனக்கு என்ன செய்ய இயலும்? பிறருக்குத் தீமை செய்பவன் தனக்கே தீமையை விளைவித்துக்கொள்ளுகிறான். அவன் எவனாகவிருந்தாலும் சரி, ஈசன் தண்டனைக்குள்ளாவான். அதைத் தப்பிப்போக முடியாது. கடவுளை உன் மனக்கண்முன் வைத்துக்கொள். மனிதர்கள் வார்த்தைகளைக் கேட்டு வீண் போராட்டம் வேண்டாம். ஒரு சமயம் உன்மேல் அநியாயமாக அவதூறு ஏற்பட்டு அதனால் உனக்குத் தாழ்வு நேரிட்டால், அதற்காகக் கோபம் கொள்ளாதே: பொறுமை பாராட்டுக; அதன் பொறுமை அழகு மங்காமல் நடைபெறுவாயாக; அச்சமயம் என்னை



நினைப்பாய்; எத்துன்பத்தினின்றும், எக்குழப்பத்தினின்றும், எம்மயக்கத்தினின்றும் உன்னை விடுவிப்பேன்; அவன் அவன் கருமகதிக்குத் தக்கபடி கொடுப்பேன்; படி அளப்பேன்.

## 37-வது அதிகாரம்.

### மனச்சமாதானம் பெறுவதற்கு உள்ளபடி உண்மையாக முற்றும் நம்மைத் துறத்தல் வேண்டும்.

கடவுள்.

என் குழந்தாய்! உன்னை விடு, என்னைக் காண்பாய். வேண்டுதல், வேண்டாமை அற்று இரு. நித்தியானந்தம் பெறுவாய். இதில் சந்தேகம் வேண்டாம். உன்னைத் தியாகம் செய்த நிமிஷமுதல் மேன்மேலும் சம்பத்துப் பெருகும். அந்நிலையிலேயே நீ நிற்கவேண்டும்.

ஜீவன்.

எத்தனை தடவை அப்படித் தியாகம் செய்யவேண்டுவது? எந்த விஷயங்களை நான் துறக்கவேண்டும்?

கடவுள்.

எப்போதும்; ஒவ்வொரு நிமிஷமும்; சிறுவிஷயத்திலும்; பெரிதிலும்; எல்லாவற்றிலும்; ஒன்றேனும் விலக்கற்பாலதன்று: எப்பொழுதும் நீ முற்றும் துறந்தவனாக இருக்கக்கடவது. அன்றேல், உன்னை எவ்வண்ணம் நான் கொள்ளுவேன்? நீ எவ்வண்ணம் என்னை அடைவாய்? உள்ளும் புறமும், அகந்தை மமதை முற்றும் விட்டாலல்லது, நீ நானாகவும், நான் நீயாகவும் ஆகுதல் முடியாது. இவ்விதமாக எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரம் செய்வித்துக் கொள்ளுகிறாயோ, அவ்வளவுக்கு அவ்வளவு உனக்கு நலம் உண்டாம். இவ்வொழுக்கத்தில் உன் உண்மையான சிரத்தைக்குத்தக்கபடி, எனக்குப் பிரியனாவாய். உயர் நலம் பெறுவாய்.

3. சிலர் சிலவற்றை விலக்கி, மற்றவைகளைத் தியாகம் செய்வார். கடவுளைப் பூர்ணமாய் நம்பினாரில்லை. அதனால், தங்கள் சம்ரக்ஷணைக்காக அதிக வேலையும் கவலையும்கொள்ள நேரிடுகிறது.

மற்றும் சிலர், முதலில், எல்லாவற்றையும் துறப்பர். ஆனால்

துன்பமும் துயரமும் வந்தவுடனே, துறந்ததைப் பற்றுவர். அதனால், சன்மார்க்கத்தில் அதிக அபிவிருத்திக்கு இடமில்லாமற் போகும்; இவர்கள், உயர்ந்த சுத்தமான ஆத்மசுதந்தரம் பெறார். என்னுடைய பிரியமான நெருங்கிய நேசமும் அவர்களுக்கு இன்றாம். இப்பெருமை கிடைத்ததற்கு, முதன்மையாகத் தங்களையே துறக்க வேண்டும். நாள்தோறும் தியாகமுறையில் நடைபெற வேண்டும். எனக்குத் தங்களை முற்றும் தியாகம் செய்தல்வேண்டும். இப்படி நிகழாவிடில், உயர்வற உயர்நலம் அமைந்த சாயுஜ்ஜியம் சித்தியாது. அடையற்பாலதன்று.

4. பலமுறை உனக்கு உபதேசித்துள்ளேன். திரும்பவும் சொல்லுகிறேன். உன்னைத் துற, உன்னை மற, உன்னை விட்டுவிடு, உள்ளத்தில் உபசாந்தம் அனுபவிப்பாய். எல்லாம் வேண்டின் எல்லாவற்றையும் கொடு; ஒன்றும் வேண்டற்க. கொடுத்ததைத் திரும்பி கேளற்க. என்னை உன்னிடம் கொள்ளுவாய்; மனச்சுதந்தரம் பெறுவாய். இருள் உன்னைத் தொடராது; அகன்றுவிடும். இந்நிலைக்காகப் பாடுபடு; இந்நிலையை வேண்டுக; இதை விரும்புக; ஆசையற்றுச் சோகமற்று, நிர்வாண நிலையில் இருக்கின்ற எசுவை, [illegible]மாகத் தொடர்க, அவர் வழியில் ஒழுகுக. உனது என்றதைவிட்டு, என்னையே நாடுக; என் நிமித்தம் உயிர்வாழ்க. இதனால், வீண் மயக்கங்கள் போய்விடும், வீண் கவலைகளும், மனச்சங்கடங்களும் அற்றுப்போம். தீராப்பயமும் அடங்கா ஆசையும் இறக்கும்.

## 38-வது அதிகாரம்.

### லௌகிக விஷயங்கள் நம்மை மேற்கொள்ளாது அடக்கி ஆளுதலும், ஆபத்துக்காலங்களில் இறைவனை நாடுதலும்.

#### கடவுள்.

என் குழந்தாய்! இம்முறையை அனுஷ்டிக்கத்தக்கது. எவ்விடத்திலும், எத்தொழிலிலும், உலக சம்பந்தமான, எவ்வேலையிலும், உன் மனத்தைச் சமாதானமான நிலையில், வைத்துக்கொள்ளுக. நீயே உனக்கு யஜமானாக இருக்கக்கடவாய். எல்லாம் உன்கீழ் அடக்கவேண்டும். நீ ஒன்றின்கீழ் அடிமையாகக்கூடாது; உன் காரியங்களை நீயே அடக்கி ஆளவேண்டும்; நீ அடிமை அல்லன்; உட-



மைப் பொருளும் அல்லன்: சுதந்தரமுள்ளவன் நீ; உண்மையான ஹீப்புரு (ஹீப்ரு) நீ; கடவுளின் புத்திரர்களின் ஒருவன் என்ற உயர்ந்த சுதந்தரத்தையும், பதவியையும் பெற்றவன் நீ; இவ்வுலகத்தைவிட்டு நித்தியத்தை நாடுகிறவன் நீ; செல்லுகின்ற பிரபஞ்சத்தை இடக் கண்ணால்பார்த்து, இறைவன்மேல் வலக்கண்ணை வைக்கின்றவன் நீ; கால அளவுக்குட்பட்ட வஸ்துக்கள் உன்னை இழுக்காவாம்; உன்னைப் பற்றுவாம்; ஆனால் கடவுள் ஆஞ்ஞை நிறைவேறும் வண்ணம், அவைகளின் உரித்தானவேலையிற் பிரவிருத்திக்குப்படி செய்திவோய் நீ. கடவுளோ ராஜவித்தைக்காரர்; அவர் சிருஷ்டியில், அறை குறை ஒன்றும் வைத்தார் இல்லை. எல்லாம் ஒழுங்காயும், நேர்மையாயும் நடைபெறும் வண்ணம் செய்துள்ளார், என அறிந்தாய் நீ.

2. இம்மாதிரியே எச்சம்பவங்கள் நேரிட்டாலும், எக்காரியங்கள் நிகழ்ந்தாலும், வெளித்தோற்றத்தினால் மதிமயங்காதே; ஊனக் கண்ணால் பார்த்ததையும் காதால் கேட்டதையும் அப்படி அப்படி நினைக்காதே. ஆனால், முன் மோசே என்பார் செய்துவந்தபடி நீயும், ஏகாந்தம் பெற்று, உள்ளம் நோக்கிச் சென்று, இறைவனைப் போற்றிசெய்து, அவருடன் யோசனை செய்க; ஒருகால் தேவானுக்கிரகம் கிடைக்கும்; பிரகிருத விஷயத்திலும் இனி வரும் விஷயத்திலும், ஒழுகும் முறையில் உபதேசம் பெறுவாய்.

மோசே என்பார் சந்தேகம் தனக்கு இருக்குங்காலத்தில் எல்லாம் புத்திமதி பெற, இறைவனை நாடுவார். துன்பமும் இடுக்கணும் தணியவும், தீயவர் கொடுமையைச் சகிக்கவும், ஈசனைத் துதி செய்து உபாசிப்பார். அவர்போல நீயும் அந்தர்முகப்பட்டு உன் உள்ளத்தில் உண்மையாய், அன்புடையனாய் உபதேசம் அருள வேண்டுமென பிரார்த்தனை செய்யக்கடவாய்.

ஜோஷ்வா என்பாரும், இஸ்ரேல் ஜனங்களும், ஒருகாலத்தில் ரிமீயன் நாட்டார்களின் மோசங்களுக்கு உள்ளாகி வருந்தினார்கள். அதன் காரணம் என்னவென்றால், துன்பம் நேரிட்டகாலத்தில், ஏகாந்தத்தை நாடி, அந்தர்முகப்பட்டு இறைவனிடம் புத்திமதி பெறப் பிரார்த்தனை செய்தாரில்லை. வெளிப்படையான இனிய மொழிகளையும் வெளி வேஷமான பக்தியையும் நம்பி மோசம்போனார்கள்.

## 39-வது அதிகாரம்.

### ஒருவன் தன் விஷயங்களில் அதிகக் கவலை கொள்ளாமை நலம்.

**கடவுள்.**

குழந்தாய்! உன் காரியத்தை என் பொறுப்பாக விடு. என்னை நம்பு. அதை, உரியகாலத்தில் விவஸ்தை செய்வேன். அதைப்பற்றி நான் செய்யப்புகும் ஏற்பாட்டை எதிர்பார். அது உனக்கு நன்மையாக இருக்கும்.

**ஜீவன்.**

இறைவ! எல்லாம் உம்மடைக்கலம், [illegible]ப்பூர்ணமாய் விடுகிறேன். நான் கவலைப்பட்டு ஆவதொன்றில்லை. வரப்போகின்றவைகளில் வீணாக என் மனம் பற்றாமல் இருக்கப்படாதா என விரும்புகிறேன். எல்லாம் ஈசன் செயல் எனச் சும்மா இருக்கலாகாது என எண்ணுவேன்.

**கடவுள்.**

என் பிரியனே! ஒரு விஷயத்தை நாடி பரபரப்பு அடைவான். அது கிடைத்ததின்மேல், அவன் மனம் வேறுபடும். முந்திய விஷயத்தில் நிற்காது; அவன் மனம் வேறு ஒன்றை நாடிச் செல்லும். இவ்விதம், மனம் சஞ்சலப்படும். ஆகையால், அற்ப விஷயத்தின் சிந்தனையைக்கூட விட்டு ஒழிதல், ஒரு சிறிய காரியமன்று.

2. ஒருவன் ஞானமார்க்கத்தில் அபிவிருத்தியாக வேண்டுவானாகில், தன்னை முற்றும் மறக்கவேண்டும்; துறக்கவேண்டும். தன்னைத் துறந்தவன், சுதந்தரமுள்ளவனாவான்; ஸாவதானமாயிருப்பான். நம்முடைய நலத்தைக் கெடுக்கும் நித்திய சத்துருக்களானவர் (காமக்குரோத லோப, மோக, மத, மாச்சரியங்கள்) இரவும்பகலும், நம்மைத் தம் வசமாக்கி, தம் மாயவலைக்குள் சிக்குண்டுத் தபிக்க, எங்கே சமயம் நேரிடுமெனக் காத்திருக்கின்றன. "அச்சோதனையான வலைக்குட் படாமலிருக்கும்படி, கவனமாய் இரு. இறைவன் அருள் வேண்டுமெனப் போற்றிவாழ்." இதுவே நாதரின் உபதேசம்.



## 40-வது அதிகாரம்.

### ஒருவன் தன்னிடம் ஒருநலமும் இல்லை எனவும், தான் கருவங்கொள்ளத் தன்னிடம் யாதோன்றும் இல்லை எனவும் உணர்ந்து இருக்கற்பாலது.

கடவுளே! மனிதன் எவ்வளவுள்ளவன்? அப்படியிருந்தும், அவனைப்பற்றி, நீர் சிந்திப்பானேன்? அவனுடைய மகனை (சந்ததியைப்) நீர் பார்ப்பானேன்.

உம்மருள் பிரசாதம் பெறும்படியாக அவனிடம் என்ன யோக்கியதை இருக்கின்றது?

அதனால், நீர் என்னைக் கைவிட்டால், உம்மேல் நான் குறைசொல்ல யாதொரு காரணமுமில்லை. என் பிரார்த்தனையைக் கொடேன் என்றால், அதை மறுக்க என்ன நியாயம் பேசுவேன்? ஈசனே! நான் ஒன்றுமில்லான்; என்னால் செயற்பாலது யாதொன்றுமில்லை; என்னிடம் யாதொரு நலமும் இல்லை; குற்றமும் குறைவும் உள்ளான் யான்; யாதொரு போக்கிடமும் காணேன்; செல்லுமிடமெல்லாம், பாழே. உம்முடைய ஆதரவு இன்றேல், என்னுள்ளம் உம்மால் அருள் உபதேசம் பெறாவிடில், நான் தளர்ந்திடுவேன்; நடைப்பிணமாவேன்.

நீரோ என்றால், என்றும் ஒரே தன்மையர்; என்றும் உள்ளவர்; என்றும் நலமுள்ளவர்; என்றும் சத்திய சந்தர்; சத்திய சங்கற்பர்; பரிசுத்தர்; எல்லாவற்றையும் நேர்மையாகவும் உண்மையாகவும் சுத்தமாகவும் உம்முடைய முற்றறிவின் முறையாக விவஸ்தை செய்கின்றீர். நானோ வென்றால், மேற் போகின்றேன் இலன், கீழ் நோக்குதல் எனக்கு எளிதுகாண். எப்போழ்தும் ஒரே நிலையில் நிற்கவோ என்றால் முடியாது; எழுவித விகற்பங்களுக்குள்ளாவேன்.

ஆயினும், நீர் என்மீது மனம்வைத்து இறங்கி என்னைக் கைதூக்கி விடுவீராகில், ஒரு கணப்பொழுதில் எல்லாம் நலமாகும். மனித சகாயமின்றி, நீர்தான் எனக்கு ஆதரவு செய்தல் கூடும். என் கண் பலவற்றை நோக்காமலும், என் மனம் பலவற்றை நாடிச் சஞ்சலிக்காமலும், உம்மிடத்திலேயே தங்கிச் சமாதானம் பெறவும், என

க்குத் தேற்றரவு நீர்தான் அருளவேண்டும். எனக்கு ஆறுதல் கொடுக்கக் கூடியவர் யாருமிலர்; அதனால், உம்மை நாடி உம்மேல் பக்திபாராட்டவேண்டி எம் மனிதனுடைய உதவியையும் கோராமல் இருக்கக் கடவேன். இவ்வண்ணம் நடைபெற அறிவேனாகில், உம்முடைய அருளாற் பயக்கும் சாந்தத்தை அடையச் சுதந்தரமுண்டு; அவ்வுயர் நலம்பெற்று ஆநந்திக்க எனக்கு இடமுண்டு.

2. எனக்கு எவ்வளவுக்கு எவ்வளவு, நன்மைகிடைக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு உம்மிடம் நன்றி பாராட்டுகின்றேன், உம்மைப் போற்றுகின்றேன்.

நான் வீண் பெருமை பாராட்டுவேன். ஆனால் உம்முடைய முனபாக, நான் அற்பன்; குணியன்: ஸ்திரபுத்தி யில்லாத பேதை; மன வலியற்றவன். கவர்வம் பேச என்னிடம் என்ன தகுதி இருக்கின்றது? வீணாகப் பெருமை பாராட்டுவானேன்? பொய்யினின்று மெய் உண்டாமோ? வீண்பெருமை பொய் அன்றோ உள்ளபடி உணர்ந்தால், வீண் பெருமை பெருவாரி நோய் போன்றதாம். மருள் பற்றிய எல்லா பாவனைகளிலும், இதுவே முதன்மையானது. சத்தியமான, மஹிமையை நினைக்க ஒட்டாமல், தேவப்பிரசாதத்தின் வரவைத் தடுக்கின்றது. தன்னைத்தான் புகழ்ந்து, தானே மகிழ்வானாகில், உமக்கு அதிர்ப்தியை உண்டு பண்ணுவான். உலகத்தார் புகழை விரும்பி நாடி, சத்தியமான என்றுமுள்ள நன்மையை இழக்கிறான்.

தன்னிற் தானே புகழ்ந்து கொள்ளாமல், உம்மில் உம்மைப் புகழ்ந்தாற்றான், உண்மையான பெருமையும், உண்மையான ஆநந்தமும் உண்டாகும். உம்முடைய நாம உச்சாரணையில், சந்தோஷம் இருத்தல் வேண்டும். தன்னுடைய கீர்த்தியை நினையாமல் இருத்தல் வேண்டும். உம்மைத் தவிர்த்து உலகப் பொருள் எதுவானாலும் சரி அதில் சந்தோஷம் வேண்டாம். உம்முடைய பெயர் விளங்கட்டும் பிரகாசிக்கட்டும், அதைப் போற்றுகிறேன். என் பெயர் மங்கட்டும். உம்முடைய கருமம் கவுரவம் பெறட்டும். என் கருமம் இகழப்படட்டும்.

உம்முடைய பரிசுத்த நாமம் வாழ்க; விளங்குக; மனிதனால் ஏற்படும் என் பெருமை குன்றுக. பெருமை நீர்! என் மனத்தின்



கண் உண்டாகும் இன்பம் நீர்! நான் முழுதும் உம்மையே போற்றுவேன்; உம்முடைய பெருமையில், நான் உற்சாகப் படுவேன். என்னை அற்பனெனக் கடிந்து கொள்ளுவேன். என் தீக்குணங்களைத் தூற்றுவேன்.

3. யூதர்கள், மனிதரிடம் கீர்த்தியையும் புகழையும் வேண்டிக் கொள்ளுக. உம்மிடமிருந்து கிடைக்கும் மஹிமை ஒன்றையே நாடுவேன். என்றுமுள்ள நித்தியமான, உம்முடைய மாட்சிமையை நினைக்கில், மனிதரால் கிடைக்கும் கீர்த்திவீணே; உலகவைபவம் வீணே; உலகப் பெருமையும் சிறப்பும் வீணே; எல்லாம் பொய்யே. மடமையே. என் சத்தியமே; என் கருணையே; என் இறைவனே! உயர்நலம்வாய்ந்த முப்பொருளே! எல்லா மஹிமையும், எல்லாம் வலிமையும், எல்லாப் பெருமையும், எந்நாளும் உம்முடையதே- உம்முடையதே.

## 41–வது அதிகாரம்.

### உலக மஹிமையை வெறுத்தல்.

#### கடவுள்.

குழந்தாய், நீ இகழ்வைப் பெறவும், தாழ்மையை அடையவும், பிறர் உயர்வு பெறுதலை நீ சகிப்பாயாக. அவர் மேன்மையைப் பெறுதலைப் பார்த்துத் துன்பம் கொள்ளற்க. அப்போது உன் மனத்தை என்னிடம் வைப்பாயாகில், மனிதன் நிந்தைகள் உன்னை வியசனப்படுத்தாவாம்.

#### ஜீவன்.

2. நாதரே, நாங்கள் கண்குருடர்கள். வீண் பெருமையால் கொடியில் முறை தவறிப் போகின்றோம். என்னை உள்நோக்கி நடுநிலைமையாக பரிசோதிப்பேனாகில், எனக்குக் கெடுதல் யாரும் எதுவும் செய்யவில்லை யென்று அறிவேன். உம்மிடத்தில் குறை சொல்ல எவ்வித காரணமும் இல்லை. ஆனால் நான் அடிக்கடி, ஏராளமாக, கொடியபாபங்கள் செய்துள்ளேன்; அதனால், உலகமுழுதும் என்னைப் பகைக்கின்றன. அது நியாயமே; நான் அனுபவிக்க வேண்டியதே. எனக்குச் சரியான பலன்-நிந்தையும், பழிப்புமாம். உமக்

கோவெனில், கீர்த்தியும், மஹிமையும், பெருமையுமாம். இத்தகைய சிந்தனை கொள்ளாமற் போனால், அதாவது, பிறர் நிந்தையும, பழிப்பும் எனக்கு கிடைத்தல் நியாயமென சகியாமலும், நலம் ஒன்றும் இல்லான் எனவும், உணராமற் போனால், சாந்தமும் சமாதானமும் பெறுதல் கூடுமோ? அஃது இன்றேல், ஞானவொளி பிரகாசிப்பது எப்படி? உம்முடன் சாயுஜ்ஜியம் அடைதல் முடியுமோ.

## 42-வது அதிகாரம்.

### நம்முடைய சாந்தநிலை, மனிதன் கைக்குட்பட்டதன்று-எனல்.

கடவுள்.

என் பிரியனே! ஒருவன் உடன் வசிக்கிற காரணம்பற்றி, அவன் நடைபெறும்விதம், நீயும் நடைபெறவும். அவன் சிந்திக்குமாறு, நீயும் சிந்திக்கவும். இப்படிச் செய்தால்தான் மனச்சமாதானம் உண்டு என நினைப்பாயாகில், அதனால், நீ சஞ்சலப்படுவாய், துன்பத்திற் குள்ளாவாய். நித்தியமான, சத்தியமான வஸ்துவை நாடு அதின்மேல் பற்றுவை. அப்படிச செய்வாயாகில், பிரியமுள்ளவர், உன்னைவிட்டுப் பிரிந்தாலும், மரணமடைந்தாலும், உன்னைத் துக்கம் பீடிக்காது.

உன் சிநேகிதர்மேல் சிநேகம் நிலைத்திருக்க வேண்டுமானால், அதை என்மேல் வைப்பாய்; என் பொருட்டு அவரை நேசிப்பாய். இவ்வுலகத்தில் உனக்கு நலமுடையாராக எவர் இருப்பினும், என் பொருட்டு அவரிடம் பிரியம் பாராட்டுக. என்னினைப்பு இன்றி, சிநேகம் நீடித்து நிலையாது. உறுதியாகவிராது. உண்மையாக நிகழாது. பரிசுத்தமாக நேராது. அச்சிநேக முறைமைக்கு நானே காரணன்.

2. உன் அன்பர்கள்மேல், நீ பிரியம் பாராட்டுதலை ஒழிக; கூடுமானவரை, மனித சிநேகத்தையும் சுகத்தையும் வேண்டற்க. நீ இறைவனை அணுகுதல், உன் உலகப்பற்றை அறுத்தலின் அளவேயாம். நீ உன்னை அற்பனாக அறிதல், உன் உள்ளுணர்ச்சியின் அளவேயாம்; நீ கடவுளை நாடுதலும் உன் உள்ளுணர்ச்சியின் அளவே



யாம். தன்னிடம் யாதேனும் ஒரு நன்மை யிருக்கிறதாக எண்ணுபவன், இறைவனின் அருள் வரவைத் தடுப்பான். இறைவன் அருள் தாழ்மையானவன் ஹிருதயத்தில்தான வந்து அமையும். நலம் ஒன்றுமில்லான் என நினைந்து, உலக ஆசையை விடுவாயாகில், உயர் நலம் பற்றிய என் அருள் பனிபோல் உன்மீது இறங்கும்படி செய்வேன். உலகப்பற்று நீங்கின், ஈசன் பார்வை அகன்றுபோம். சிருஷ்டி கர்த்தரின் ஞாபகத்தை வைத்துக்கொண்டு, உலகவஸ்துக்களில் உன் ஆசையை விடமுயலுக. அதனால், இறைவனை அடையும் மெய்யுணர்வு பெறுவாய். அற்பவஸ்துத்தானே என்று நினைத்து, அதன்மேல் ஆவாக்கொள்ளுவாயாகில், அஃது உயர்நலம் பெறுதற்குத் தடையாகும். அஃது உன்னைக் கெடுக்கும்.

## 43-வது அதிகாரம்.

### உலக விஷயங்களைப்பற்றிய ஞானம் வீண் எனல்.

கடவுள்.

குழந்தாய்! மனிதனின் புஷ்பம் போன்ற பகட்டான வார்த்தைகளைக் கேட்டு மயங்காதே. பாவித்தை, வார்த்தையன்று; நலம் சார்ஒழுக்கமது. என் வசனத்தை கவனித்துக்கேள். அது உள்ளத்தில் ஹிருதய அக்கினியை மூட்டும்; ஞான ஒளியை உண்டாக்கும்; விஷாதத்தை விளைவிக்கும்; எவ்விதமும், சாந்தத்தைக் கொடுக்கும்.

அதிகப் படித்தவனாகவும், மெய்ஞானியாகவும், பிறர் மதிக்க வேண்டுமென்று கருதி, யாதொன்றையும் படியாதே. உன்னுடைய தீயபாவனைகள் நீங்க வேண்டுமெனப் படிப்பாய்; கடுமையான பல கேள்விகளுக்கு விடைகொடு. படிக்கிறதை காட்டிலும், இது நலமாம்.

2. அதிகமாகப்படி. அனேகம் அறிந்துகொள். ஆனால், எப்பொழுதும் ஒரு விஷயத்தில் கண்ணாயிரு. அதைச் சிந்தையில் கொள்ளு. மனிசனுக்கு அறிவு பயக்குகிறவன் நானே மனிதன் தெள்ளிய மனிதனுக்குக் கொடுக்கிறதை விட அற்பனுக்குக்கூட விஞ்ஞானத்லைதத் தந்திடுவேன். எவனுடன் நான், பேசுவேனோ, சீக்கிரத்தில், ஞானியாவன். சிரேயஸ் மார்க்கத்தில் தீவிரமான மேன்பாட்டை பெறுவான் என் வழிப்படாமல், மனி

தனை நாடி, விசாரணை செய்பவன் கெதி, அந்தோ! வீணே. குரவர்களுக்கும் குருவான கிறிஸ்து என்பவர், வரும் காலமும் ஏற்படும். அவர் மனிதர் எவ்விதம் வாசிக்கிறார் என அறிந்து கொள்ளுவார் அதாவது அவர் அவரின், மனோதர்மம் என் நிலையில் இருக்கின்றதைப் பரீக்ஷிக்க வருவார். *எருசலேம நகரைத், தீபம் போட்டுப் பரிசீலனை செய்வார். எல்லா இரகசியங்களும்வீண் பேச்சுகளும் வாதங்களும் அடங்கும் மௌனம் கொள்ளும்.

3. ஒன்றும் அறியாத பேதையை ஒருவிநாடியில், சிரேயஸ் மார்க்கத்தின் உண்மைகளின் பலதுறைகளை உணர்ந்து, ஞானியாகச் செய்விப்பேன். வித்தியா சாலையில் ஒருவன் 10வருஷம் படித்தாலும் அந்தப் பதவியை அடைய முடியாது. வார்த்தைகளின் ஆரவாரம் இன்றியும், அபிப்பிராய பேதங்களின் குழப்பமின்றியும், உலகப் பிரதிஷ்டையின்றியும், தர்க்கவாதங்களின் முழக்கங்களன்றியும் என் உபதேசம் நடைபெறும். பூலோக வாழ்க்கையை விடுமின் உலகவிஷயங்களின் ஆசையை வெறுமின் புலன் காண் சுகங்களை நாடன்மின்; நித்திய வஸ்துவை நாடுவேன்; அதை அனுபவித்து, அறிமின்; உலகத்தார் செய்யும் மரியாதைகளினின்று பெயர்மின் அக்கவுர்வங்களை வேண்டன்மின். துன்பமும் துயரமும் சகிமின்; என்னையே சரணமாக அடைமின்; என்னைவிட வேறு வேண்டன்மின்; கடைசியாக, முக்கியமாக, என் மேல அன்பு மிகுதியான வைமின். இத்தன்மையானது என் உபதேசம்.

4. ஒருவன் என்னையே அன்பு பாராட்டி, மெய்யுணர்வு பெற்று, ஆச்சிரியமான வசனங்களைப் பேசினான். தர்க்கங்களையும் வாதங்களையும் விட்டான்; தியாகத்தைக் கைக்கொண்டான்; சிலருக்குப் பொதுப் படையாய் உபதேசிப்பேன்; சிலருக்குச் சிறப்பாறு உற்றவைகளை உபதேசிப்பேன். பின்னும் சிலருக்காக எனின் அன்புடனே, சிலகுறிப்புக்களாலும், சில, காட்சிகளாலும், அவர் முன் தோன்றுவேன்! மற்றும் சிலருக்கோவெனின். பரமதேவ ரகசியங்களை வெளியிட்டு, மெஞ்ஞான ஒளி வெள்ளம் அவர் மனதிடை பாயும்படி செய்வேன்.

சாஸ்திரங்களின் கருத்து ஒன்றே, ஆனால், எல்லாரும் ஒரேவி

*இருதய கமலம்.



நமகத் தெரிந்து கொள்ளுகிறார்களில்லை. ஏனெனில், அவைகளின்கண் இருக்கின்றவன் நான்தான், உண்மையும் நான், உபதேசகரும் நான், சிஷனும் நான், அவர் அவர் மனத்தை நன்றாய் அறிகிறவனும் நான், அவர் அவர் தகுதிக்குத் தக்கபடி அவர் அவரை தொழில் ஏவுகிறவனும் நான்.

வானாகி, மண்ணாகி, வளியாகி ஒளியாகி
ஊனாகி, உயிராகி, உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே
—மாணிக்கவாசகர்.

## 44-வது அதிகாரம்.

### வெறிவஸ்துகளைப் பற்றிப்போகும் சிந்தனையைத் தடுத்தல்.

கடவுள்.

என்குழந்தாய்! அநேக விஷயங்களின் அறிவு வேண்டுமென்பதை ஒழி. இறந்தவன் போல இரு. உலகத்தை முற்றும் அற்றவன் போல் திரி. அநேக விஷயங்களை உன் காதில் வாங்காதவன் போல ஒழுகு. சாந்தமாம் நிலைமைக்குதற்ற விஷயங்களைப்பற்றிச் சிந்தனை கொள். வெறுப்பானவைகளின்று உன் மனத்தைப் பெயர்த்திடு. மற்றவர் என்ன அபிப்பிராயம் கொள்ளுவார் என நீ நினைக்கவேண்டாம். அந்த வார்த்தை போராட்டத்தின்கண் தலையிடாதே. எவன் எவ்விதம் நினைத்தால் உனக்கு ஆவது என்ன? இறைவனிடம் நீ நேர்மைபற்றி நடைபெறுவாயாகில் அவர் சங்கல்பம் இன்னதென உணர்ந்து அதன்வழி ஒழுகுதலால், என்ன துன்பம் வந்தாலும், அதை நீ தாங்குவாய். அது இலகுவாய் முடியும்.

ஜீவன்.

நாதரே! எங்கள் கதி என்ன என்பேன்? உலகத்தில் அற்ப நஷ்டம் நேரிடின் அதற்காக அழுது கண்ணாயிருக்கிறோம். அற்ப லாபத்தை நாடி, ஓடித்திரிகின்றோம். ஆன்ம நஷ்டத்தை கொஞ்சமேனும் சிந்திக்கின்றோமில்லை. அது நினைப்புக்கு வருகிறதேயில்லை.

அதை முற்றும் மறக்கின்றோம். அற்பமான பயனற்றவை எம் மன முழுமையையும் வியாபித்து, வசப்படுத்துகிறது. எல்லாவற்றிலும் உயர்வானதும் இன்றி அமையாததுமான விஷயத்தைப்பற்றி நினைப்பை ஒழிகிறோம். உலகச் சிந்தனைகளிலேயே நாங்கள் அழுந்தி மூழ்குகிறோம். சற்றேனும் எங்கள் கதியை உற்று, சிந்தனை கொள்ளுகிறோமில்லை.

இவ்விதமே உலக ஆசைகளில் மூழ்கிக் கிடத்தல் எங்களுக்குச் சம்மதமாக விருக்கிறது.

## 45-வது அதிகாரம்.

### எல்லா மனிதரையும் நம்ப ஒண்ணாது.

### மனிதர், வார்த்தைகளில் பிறழுவார்.

நான் இடுக்கண் உற்ற காலத்தில், என்னை ஆதரவுபண்ணும் மனிதன் சகாயம் வீணே. எத்தனையோ தட்வை நம்பி மோசம் போயிருக்கின்றேன். அதனால், மனிதரிடம் நம்பிக்கை வைக்கலாகாது. நேர்வழியிலுள்ளார், நாதரே உம்மையே நம்புவர். ஆதலால், எங்களுக்கு நேரிடும் சம்பவங்களில் எல்லாம், உம்மையே போற்றுகிறோம். உம்மையே சரணம் அடைகிறோம். நாங்களோ, சோர்வுடையர்; சஞ்சலபுத்தியுடையர்; ஒருநொடியில், [illegible] மதி மயங்கிடுவோம். மாறுவோம்.

2. எவ்வளவு ஜாக்கிரதையும், புத்திநுட்பமும் உடையவனாக இருந்தாலும், ஒவ்வொரு சமயத்தில் மோசம் போய்விடுவான்: மதி மயங்கிடுவான். ஆனால் கடவுளே, உம்மை நம்பி உம்மையே அடைக்கலமென, மாசற்ற மனத்தினால், உம்மேல் அன்புபாராட்டுவானாகில், இலகுவாய் மோசம் போகான். ஒருகால் ஏதேனும் இடுக்கண் நேரிட்டு, அதில், எத்தன்மையாயும் சிக்குண்டு தத்தளிப்பானாகில், அவனுக்கு விமோசனம் சீக்கிரம் நேரும். உம்முடைய ஆதரவும் தேறுதலும் இருக்கும். உம்மை நம்பினவரை முற்றும் கைவிடமாட்டீர். துன்பம் உறுங்காலங்களில் எல்லாம், ஆதரவுள்ள உண்மையான நம்பிக்கையுள்ள சிநேகனைக் காண்பது அரிது.



கடவுளே, எக்காலத்தும் உதவிபுரியும் உண்மையுள்ள நண்பர் நீரே. உம்மை ஒப்பவர் இல்லையாம்.

3. "என் மனம் கிறீஸ்துவின்பால் உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கிறது. அவரையே பற்றுக்கோடாக பெற்றிருக்கிறது" என்று உணர்த்த புண்ணிய ஆத்மாவின் ஞான உயர்வு. எத்தன்மையது என்பேன்? அவ்வண்ணம் நான் இருப்பேனாகில், மனிதர் பயம் என் மனத்தைப் பேதிக்க இயலாது. அவர் வார்த்தைகளின் கொடுமை எனக்குத் துயரம் செய்ய முடியாது.

வரப்போகின்ற எல்லாவற்றையும் யார் முன்அறிவார்? வரும் இடுக்கண்களுக்கு எச்சரிப்பாய் யாரால் இருக்க முடியும்? எதிர்பார்த்திருக்கின்ற துயரமே நம்மைத் துன்புறுத்துகின்றதே! எதிர்பாராத துயரம் எவ்வளவு கொடுமையைச் செய்யாது? வரும்துன்பத்தை நோக்கி ஜாக்கிரதை கொள்ளாமல், பாவி! அந்தோ! ஏன் இருந்தேனோ? அந்தோ, பிறரை யோசனையின்றி ஏன் நம்பினேனோ? நாமெல்லாரும் மனிதர்கள். நொய்மை நம்முடைய இயற்கை குணம். அனேகர், தம்மைத் தேவர் என பிறர் சொல்லத் தாமும் நம்புவார். இஃது என்ன அறிவீனம்.

4. கடவுளே! உம்மைத் தவிர வேறு யாரை யான் நம்புகிறது? நீரே சத்தியம். உம்மை நம்பினால் மோசம் போகேன். ஆனால், எவனைப் பார்த்தாலும்: பொய்யும், வஞ்சனையும், சஞ்சலமும், மனத்தளர்ச்சியும் குடிகொண்டிருக்கிறது. வார்த்தையிற் பிறழ்கிறான். வெளிப்பார்வையில் உண்மைபோல் தோன்றுகிறதை உடனே நம்ப ஒண்ணாது.

5. அதனால் அன்றோ, "மனிதனை நம்புகிறதில் எச்சரிப்பாய் இரு" என அறிவு அமைந்த உபதேசம் செய்திருக்கின்றீர். மனிதன் பகைவர்கள் அவன் குடும்பத்திலேயே உள்ளார். "இதோ, அவர் இங்கு இருக்கிறார், இதோ அவர் அங்கு இருக்கிறார்" என சொல்லுகிறவரை நம்பவேண்டாம். நான் அப்படி நம்பி மோசம் போனதுண்டு. இனிமேல் அந்த அவிவேகத்துள்ளாகாமல், எச்சரிப்பாய் இருப்பேனாக. "கவனமாய் இரு, விழிப்புள்ளவனாகவிரு, நான் சொல்லுவதை மனத்தில் ரகசியமாகப் பதியவை" என்றார் ஒருவர். நான் அவ்விதம் சொன்ன விஷயத்தை ரகசியம் பா

காட்டி நடைபெறச் சொன்னவரோ வெகுளியாக, என்னையும், என்னிடம் இரகசியமென்று சொன்ன வார்த்தையையும் வெளியிற் காட்டி விடுகின்றார். என்னை அடக்கம் கொள்ளென்று சொல்லித் தான் அடக்கம் கொள்ள முடியவில்லை.

கடவுளே, இக்கதைகளினின்றும், இத்தகைய வரினின்றும், என்னை காப்பாற்றும். அவர் கைக்குள் அகப்பட்டு அவர்போல் ஒழுகாமல் இருக்கட்டும். நான் ஒரு சொற்காரனாகவும், உறுதி வார்த்தையுள்ளவனாகவும் நடைபெற அருளுவாய். என் நா ஒருநாளும் கபடமும் பேசற்க. எனக்கு எதை விரும்பேனோ, அதைப் பிறருக்குச் செய்தலை ஒழிப்பேனாக.

6. பிறரைப்பற்றிய விஷயங்களில் மௌனம் சாதித்தலும் கேட்டவை எல்லாவற்றையும் நம்பாதிருத்தலும் பயனில்சொல் பாராட்டாதலும், கண்டவரைப் பாராமல் ஒடுங்குதலும், எங்கள் மனத்தைச் சோதிக்கும் பரம புருஷனையே நாடுதலும், காற்று மலமான வீண் வார்த்தைகளுக்குச் செவிகொடாமலிருத்தலும், உள்ளும் புறமும் எல்லா விஷயங்களும் உம்முடைய மனோரதப்படி நிகழவேண்டுமென விரும்புதலும், எவ்வளவு நன்மையுள்ளவைகளாக இருக்கின்றன. எவ்வளவு மனச் சமாதானமுள்ளவைகளாக இருக்கின்றன. ஈசன் அருள் நம்மிடம் தங்கவேண்டுமானால், வெளித்தோற்றமாம் உலகப் பற்றை விடுதல் நலனே. தம்மை பிறர் புகழ நாடாமை நலனே நாம் சீர்திருத்தம் பெற்று நாம் சிரேயஸை அடைய ஏதுவாம் முறையை அனுஷ்டித்தல் நலனே. தம்மைப் பிறர் அவசரமாய்ப் புகழ்தலைக்கேட்க மனங்கோருகிறவர் எத்தனைபெயர்கள் உள்ளார்? தம்முடைய உயர் நலம் தமக்குள்ளே குப்தமாக இருத்தலைச் சகிப்பவர் எத்தனை பெயர் உள்ளார்? நொய்மைபற்றிய இவ்வுயிர் வாழ்விலா இஃது உளது? இந்த உலகவாழ்க்கை ஓயா முடியா வேலையும் தீராப் போராட்டமுமாம்.

## 46–வது அதிகாரம்.

### நாவின் கொடிய வார்த்தைகள் நம்மேல் தாக்குங்காலத்தில், ஈசனிடம் நம்பிக்கை வைத்தல்.

கடவுள்.

குழந்தாய்! உறுதியாக இரு-என்னை நம்பு. வார்த்தைகள்



ஒலித்திரள்கள் தாமே, காற்றில் ஓடிப்போகின்றன ஒரு கல்லைத் தகர்க்குமா? உன்மேல் குற்றமிருந்தால், இனிச் சீர்திருத்த முயலுவேன். எனச் சிந்தனை கொள், உன்மேல் குற்றமில்லையாயின், "கடவுளின் பொருட்டு மனம்நோகாமல், இக்கொடிய வார்த்தையைச் சகிப்பேன்" எனச் சிந்திப்பாயாக.

பெரிய இடுக்கண்களைச் சகிக்க உனக்குத் தைரியம் வாராமல், போனாலும், சில சில சமயங்களில், குற்றமுள்ள வார்த்தைகளைப் பொறுப்பது உனக்கு உற்றதே, ஒரு பெரிய விஷயமன்று. அற்ப விஷயங்கள் உன் மனத்தை ஏன் பிணக்க வேண்டும்? என்றால் இன்னும் உனக்குச் சரீர அபிமானம் இருக்கின்றது என்பதையும் மனிதர்களை, மட்டுக்கு மிஞ்சி மதிக்கிறாய் என்பதையும், அது விளக்குகின்றது. உன்னைப் பிறர் நிந்திக்கச் சகிப்புக் கொள்ளாய்; உன் குற்றங் குறைகளைப் பிறர் காட்டவும் கடியவும் இணங்காய்; வீணான சாக்குப் போக்குகளைத் தேடுகின்றாய். உன் மனத்தைச் சோதித்துப் பார், உன் நோக்கு, உன் உள்ளத்தில் உலகப்பற்று இன்னும் இருக்கின்றது காண்; பிறரைச் சந்தோஷிக்கவும், அவரை திருப்தி செய்யவும் உனக்கு இன்னும் அவா உண்டு. பிறர் உன்னைத் தாழ்மையாக நினைக்க நீ பொறாய்; உன் குறைகளைப் பிறர் காட்ட நீ விரும்பாய்; அதனால், உண்மையாய் உள்ளபடி, பணிவு அடைந்தாயில்லை; உலக அபிமானம் விட்டாய் இல்லை: உலக வாழ்வு உன்னை விட்டு விலகவில்லை; இது திண்ணம்.

2. என் வார்த்தையைக்கேள், உலகத்தார் சொல்லும் பதினாயிரம் வார்த்தைகளை மதியாதே. யோஜித்துப் பார்:—பகையின் கொடுமையால் உன்மேல் எவ்வளவு அபவாதம் சாட்டக் கூடுமோ அவைகள் எல்லாம் சாட்டப்பட்டன என்று வைத்துக்கொள்: அவைகளைக் கொஞ்சமேனும் ஒரு துரும்பாகக் கூடச் சிந்தியாது, இருப்பாயாகில், அவைகள் உனக்கு என்ன செய்தல் கூடும்; உன் உரோமத்தை ஒன்றேனும் அசையக் கூடுமோ?

ஆனால், மனம் அடங்காதவனும், கடவுள் மேல் அன்பு இல்லாதவனும், பிறர் தூஷணையைப் பொறான். தன்னை நம்பாமல் என்னை நம்பி என்மேல் பக்தி பாராட்டுகிறவன், மனிதருக்குப் பயப்படான்.

எல்லாருடைய யோக்கிதையும் சீர்தூக்கிப் பார்க்கின்றவன்

நான். எல்லா ரகசியங்களையும் அவர் அவர் பலர் சிந்தனைகளையும் செய்கைகளையும் நான் அறிவேன். அக்கிரமம் செய்கிறவனையும், அதனால் வருந்துகிறவனையும் நான் தெரிவேன். இந்த வார்த்தை என்னிடம் இருந்து வந்தது; என் அனுமதியின்மேல் அது நேர்ந்தது;"பலர் மனதின் கண்ணுள்ள எண்ணங்கள் வெளிவரும்.

குற்ற முள்ளாரையும், குற்றமில்லாரையும் நான் கண்டுபிடிப்பேன். இரகசியமான பரீக்ஷையால் அவரை முன்னரே கண்டு சோதிப்பேன்.

3. மனிதர் சாக்ஷியம் அநேகப் பொய்யாகுவிடும். என்தீர் மானமோ உண்மையே. அது என்றும் நிற்பதாகும்; அதா வறுது; ஆனால், அது அநேகருக்கு மறைந்திருக்கும்! சிலருக்கு மாத்திரம் தோனும். ஆயினும் அஃது என்றும் பிசகாது; பொய்யாகக்கூடியதன்று. மூடர்கண்ணுக்குப் பொய் போல் காணும். அதனால் ஒவ்வொரு விஷயத்திலும், என்நோக்கம் என்ன வென்று அறிந்து கொள்: உன் எண்ணத்தில் நம்பிக்கை கொள்ளாதே. ஈசன்செயல் எதுநேரிடினும், சத்தியவான் மனச்சஞலப்படான். அதைப் பொறுப்பான். அநியாயமாக ஒருஅபவாதம் தன்மேல் ஏற்பட்டாலும் அதனால் மனம்நோகான் சரியான பரிசீலனையின், மேல்பின்பு அந்த அபவாதம் நீங்கினால், அதற்காக களிப்புடையான். மனத்தைப்பரிசோதிக்கிறவனும், அதன் ஆசாபாசத்தைக் கவனிக்கிறவனும் நான் என்று அவன் நனிஅறிவகன். மனிதர் எண்ணத்தில்: நலம் என்றது, என் அபிப்பிராயத்தில் அநேகதடவை தீமைஎன்றுமுடியும்.

ஜீவன்

4. என்நாதரே, இறைவ, சாந்தமூர்த்தி பொறுமைக்கு இருப்பிடமே! மனிதனின் நோய்மையும், குற்றகுறைகளை அறிவீர், எனக்கு ஆதரவாக இருப்பீராக. என் மனச்சாட்சி என்னைக்கைவிடும் தவறும் இன்னதை நான் அறியேன் என நீர் அறிவீர், அதனால். என்மேல் குற்றம்காட்டப்படும் காலத்தில், நான்பணிந்து வணங்கி. அதைப்போறுப்பேனாக. பலமுறை இப்படி ஒழுகாமல் போயிருப்பேன் அதைக்ஷமித்து அருள்வீராக, இனி அவ்விதம் நான் சகிக்கும்படி என்னைச் செய்வீராக. நான் குற்ற மில்லான். என நான் எண்ணினும், கருணை என்னை மன்னிக்கச்சாதமாகாவிருக்



கும். நான்குற்றம்செய்தேன். என்றெனக்குதெரியாது. ஆயினும் அதுவேசரியான சமாதானமாகாது. உம்முடைய தயையும்கருணையுமின்றி, ஒருவனும் உம்முன்பாக சத்தியவான் எனச் சொல்லுக் கொள்ள அருகன் அன்றும்.

## 47-வது அதிகாரம்.

### இனிக்கிடைக்கும் நித்தியமான பதவியைக் குறித்து எல்லா இடுக்கண்களும் பொறுக்கற்பாலது.

ஏசு.

என் குழந்தாய், எனக்காக நீ அனுபவிக்கும் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள். அவைகளால் மனம் தளர வேண்டாம். என் வாக்குறுதியை நம்பி தைரியமாகவிரு; என்ன துயரம் நேரிட்டாலும் ஆறுதல் தேடு.

அளவுக்குமிஞ்சி உனக்கு பிரதிசகாயம் செய்வேன்.

இங்கே அதிக காலம் கஷ்டப்பட வேண்டாம்; அதிக கவலை எப்போதும் உனக்குள்ளது என நினைக்கவேண்டாம்; சொற்பகாலம் பொறுமை பாராட்டு; துன்பத்தின் முடிவு-சீக்கிரம் நேரும்; அதற்குத்தகாலம் கிட்டும்; அப்போது எல்லாக் கஷ்டமும், கவலையும் நீங்கும். கால அளவைக் குட்பட்டவை எல்லாம் அற்பமே; சுருக்கமே.

2. உன் கடமையை நீ செய்;‡ என் திராக்ஷத் தோட்டத்தில் உனக்கு ஏற்பட்ட தொழிலை உண்மையாகச்செய். நானே உனக்குக்கைம்மாறு. எழுது; வாசி; பாடு; (மனம்)உருகு; மௌனமாயிரு; போற்று துயரத்தை தீரனாகப்பொறு; நித்தியமான பதவி, அடைய

"நந்தவனத்தில் ஒரு ஆண்டி,
அவன் நாளாறுமாதமாய் குயவனை வேண்டி,
கொண்டு வந்தான் ஒரு தோண்டி,
அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி."

அதிகமான போராட்டத்தை வென்றால், இவைகளையும், இன்னும் சகித்தலும் போதாது; ஒருநாள் சாந்தநிலை வந்தேதீரும். அஃது எப்போது வருமென இறைவன் அறிவான். அதில் இரா

‡இவ்வுலகம். Compare

வில்லை, பகல் இல்லை; என்றும் ஒரே ஒளியாகவிருக்கும்; சனில்லாச் சுகமும் அழகும் உண்டு; பூர்ணமான சாந்தநிலை அது. எல்லா ஓய்வும் உள்ளஸ்தானம் அது. அந்நிலையில், "இந்த மரணதர்ம சரீரத்தினின்று என்னை யார்விடுப்பார்" என்று, நீ சொல்ல மாட்டாய். "நான் இவ்விடத்தில் வந்து வெகுகாலம் ஆகிவிட்டதே" என்று நீ கதறமாட்டாய். அந்நிலையில், இயமன் இன்றும்; அழியாச் சுகமும், குறைவில்லா இன்பமும், உண்டாம். துக்கமும் துயரமும் அன்றும். பேரானந்தமும், இனிமையான அன்பர்கள் சபையும் உண்டு.

3. பரமபதத்தில், ஞானிகள் சிரத்தில் ஜ்வலிக்கின்ற மகுடத்தைப் பார்த்திருப்பாயாகில், எவ்வளவு ஆநந்தமாக அவர்கள் ஆரவாரம் செய்கின்றார்கள் எனக் கேட்டிருப்பாயாகில், இவர்கள் உலகத்திலிருக்கும் நாளில், எவ்வளவு அற்பர்களாகத் தோன்றினார்கள் எனக் கவனிப்பாயாகில், நீயும், உலகத்தைத் துச்சமென நினைந்து, உலகத்தில் கடையரிலும் கடையனாக இருக்கச் சம்மதிப்பாய். உலகத்தில் ஒரு மனிதனாக-இருக்க வேணுமென்று நினைப்பாய். உலக சுகங்களை நாடாய்; இறைவனுக்காகத் துன்பமும் துயரமும் வரட்டும் எனப் பொறுப்பாய்; உலகத்தார் உன்னை அற்பன் என மதித்தலே உனக்கு நலமெனக் கொள்ளுவாய். இவை எல்லாம் உன் மனத்தில் பதிந்து உன் உள்ளத்தில் பற்றுமாகில், இனி என் புகார் சொல்லப் போகின்றாய்? நித்தியமான பதவியை உத்தேசித்து, இச்சங்கடகளைப் பொறுத்தல் நலமன்றோ? இறைவன் அடிசேருதல் அல்லது அதனை இழத்தலும் சாமான்னியமான காரியமன்று. அதனால் உன் மனத்தை மேல்நோக்கும்படி செய்; இதோ பார். நானும் என் தோழரான ஞானிகளும் உலகத்தில் இருந்த நாளில், துயரமும் இடுக்கணும் அனுபவித்தோம். இப்போது சுகமாய் இருக்கின்றோம். ஆநந்தத்தை அடைகிறோம். சாந்தநிலைபெற்றோம். என் பிதாவின் லோகத்தில், என்னுடன் என்றும் அவர்கள் இருக்கின்றார்கள்.

## 48-வது அதிகாரம்.

### நித்தியாநந்த நிலையின் சுகமும் இவ்வுலக வாழ்க்கையின் (கொடுமையும் ஜீவனின் ஆநந்தகளிப்பு)

ஓ! ஓ! தேவஅருள் அமைந்த விண்ணுலக வாசஸ்தலங்கள்,



எவ்வளவு அழகாய் இருக்கின்றன! அங்கே இரவு இல்லை. இருள் இல்லை. என்றும் பகலுள்ளது. பிரகாசம் என்றும் உள்ளது. சத்தியமே, பரவிஜ்வலிக்கின்றது. பகல் எப்போதும் ஆநந்தகரமாயிருக்கின்றது. பயமில்லை. சாந்தமும் சமாதானமுமுள்ளது. ஒரே தன்மையாக எப்போதும் இருக்கின்றது. பகல் இரவாக மாறுதல் இல்லையாம்.

இத்தன்மையான பகல் நமக்கு என்று வருமோ? அநித்தியமான இவ்வுலக மயக்கங்கள் என்று முடிவு பெறுமோ?

ஞானிகளுக்கு இப்பகல் உண்மையாய் உண்டு. என்றும் பிரகாசிக்கின்ற ஜோதிர்மயமான பகல் இது! உலகத்தில் யாத்திரைக்காரர்களாகிய நம்போலியருக்கு அது வெகுதூரம்; வெகுதூரம்; கண்ணாடியின் நிழல்போன்றது.

2. தேவலோகவாசிகள் அப்பகல் எவ்வளவு சந்தோஷகரமுள்ளதென அறிவார்கள். ஏவ் (Eve) அம்மையின் குழந்தைகளாகிய நாம், உலகத்தின் கசப்பான துக்ககரமான காலத்தை அனுபவிக்கின்றோம். இதுதான் நம்கதி. இவ்வுலக வாழ்க்கை, அற்பநாள் உள்ளது; துக்கமானது; இடுக்கண் நிறைந்தது; கஷ்டம் உள்ளது; பாபகரமானது; குரோதங்களுக்கு இருப்பிடம்; பயமும், கவலையும், ஆசாபாசங்களும், மதிமயக்கும் தோற்றங்களும், தவறுகளும், அநேக சங்கடங்களும், சோதனைளும், விஷய சுகங்களால் தளர்ச்சியும், வறுமையால் துன்பமும் நிரம்பபெற்றது.

3. அந்தோ! இத்துயரங்கள் முடிவுபெறுவது எந்நாளோ? இவைகளின் ஆளுகை நீங்குதல் எந்நாளோ? தீயவை செய்தலை ஒழித்தல் எந்நாளோ? இறைவ! உம்மையே நினைந்து உம்மேல் அன்பு வைத்து இருப்பது எந்நாளோ? உம் நினைப்பே நினைப்பாய் சுகம் பெறுவது எந்நாளோ? உலகப்பற்றுவிட்டுச் சுதந்தரம் பெறுவது எந்நாளோ? உடலும் உள்ளமும் கவலையற்று இருப்பது எந்நாளோ? கலக்கமற்ற நிறைந்த சாந்தம் பெறுவது எந்நாளோ? உள்ளும் புறமும் எங்கும், என்றுமுள்ள தீர்க்கமான சாந்தம் நான் அடைவது எந்நாளோ?

கலைமுள்ள ஏசுவே! உம்மை எதிட்டுப் பார்த்தால் கூடுமோ அது எந்நாளோ? உம்முடைய ராஜ்ஜிய மகிமையை நான் சிந்திப்

பது எந்நாளோ? நீரே, எல்லாமாய் எனக்கு இருப்பது எந்நாளோ? உம்முடைய பக்தர்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்ற உம்முடைய ராஜ்ஜியத்தில் நான் வந்து சேருவது எந்நாளோ? ஏழை நான்; பகைவர் ஸ்தலத்தில் வஸிக்கின்றேன்: அதில் என்றும் போராட்டமும் ஆபத்தும் நிறைந்துள்ளன.

4. என் சொந்ததேசம்விட்டு பிறதேசத்தில் இருக்கின்றேன். என்னைக் காப்பாற்றும், எனக்கு ஆறுதல் செய்யும்: என் துன்பத்தைத் தணியும். உம்மையே நோக்கி என்மனம் பரியமாகச் செல்லுகின்றது. இவ்வுலகில் சுகமாகத்தோன்றுபவை எல்லாம் எனக்குப் பெரிய பளுவாய் இருக்கின்றது.

உம்மையே உற்றதுணையாகப்பற்ற விரும்புகிறேன். அதனுல் அடையமுடியவில்லையே பரலோக சாதனங்களையே நாடவிரும்புவேன் ஆனுல், உலகப்பற்று இன்னும் என்னை விட்டதாகக் காணுமே? குரோதங்களும் ஆசாபாசங்களும் என்னைக் கீழே இழுக்கின்றனவே! இவைகளெல்லாம் விட்டு இருக்க என் மனம் எண்ணம் கொள்ளுகிறது, ஆனுல் என் (கர்மவாசனைகளான) சரீர தர்மம் என்னை, என் மனத்துக்கு விரோதமாகத் தன் வசப்படுத்துகின்றது. ஐயோ, பாவி நான், சந்தோஷமில்லான் யான். என்னோடு நான் போராடுகிறேன். நானே ஒரு பெரிய பாரமாக உணருகிறேன். நான் மேலே நோக்கவிரும்புகிறேன். என் ஊனே கீழே இழுக்கின்றதே!

5. அந்தோ! என் உள்ளத்தின்கண் நிகழும் போராட்டம் என்ன என்பேன். சிரேயஸ்கரமான எண்ணங்கள் என் உள்ளத்தில் உதிக்கின்றன. அக்கணமே, ஆசாபாசங்கள் உண்டாகி அவைகளைத் தடுக்கின்றன. நான் ஈசுவர ஆராதனை உபாசனை செய்ய முயலுவேன். உடனே உலகவாசனைகள் ஒன்று பலவாருக் என்னை மேற்கொள்ளுகின்றனவே. ஈசனே என்னைவிட்டு அகலாது இரும். கோபத்தால் உம்மடியைவிட்டு நீங்காமல் இருக்க அருள்வீர்.

உம்முடைய ஆயுதமான மின்னலை ஏவிவிடும். அதனுல் பல ஆயுதங்களைப் பிரயோகியும் பல அம்புகளை விடும் அவைகளால் மாயையின் வீண் தோற்றங்கள் அகற்றிவிடும்.

சிதறுண்ட என் இந்திரியங்களை ஒழுங்குபடுத்தி, உம்முகமாகச்



செல்லச் செய்யும். உலகப் பற்றை நான் விடும்படி அருளும்; தீய எண்ணங்களையும் தீய பாவங்களையும் என் மனத்தை விட்டு அகற்றும். சத்தியமே! உலகமயக்கம் என் மனத்தில் தங்காமல் என்னைக் காப்பாற்று, மோக்ஷாசக்தமே, என் மனத்தில் தங்கி, அசத்தமெல்லாம் மனத்தினின்று விலக்கு. உபாசனை செய்யும்காலத்தில் உம்மை வணங்காமல், அந்நியத்தை நாடிப்போனகாலம் எத்தனையோ? அக்குற்றத்தை க்ஷமித்து என்னை மன்னித்து அருள்வாய். உண்மையாக, உம்மேல் மனம் நிற்காமல், பலதுறையில் சிதறுதல் என் வழக்கமே, என் தேகம் நிற்கும் இடத்திலும் இருக்கும் இடத்திலும், நான் இராமல், என் எண்ணம் போகிற இடமெல்லாம் போவேன். இது என் வழக்கம் என் எண்ணம் எங்கே போகுமோ, அவ்விடத்தில் நான் இருப்பேன். என் மனம் எதைப்பற்றி நாடுமோ, அங்கே என் எண்ணம் போகும். எனக்குப் பிரியமான விஷயமும், எனக்கு வழக்கமாய் ருசியான விஷயமும் என் ஸ்மரணைக்குச் சீக்கிரம் வரும்.

6. அதனுல், சத்தியமே ஸ்வரூபமாக இருக்கின்ற நீர், தெளிவாய் அடியில் கருமாறு உபதேசித்துள்ளீர், "உன் பிரியதனம் எங்கு உண்டோ அங்கே, உன் மனம் இருக்கும்" நான் மோக்ஷத்தை விரும்புவேனுகில் அது சம்பந்தமானவைகளைப்பற்றி நினைப்பேன். நான் உலகத்தை விரும்புவேனுகில், உலக சுகங்களில் சந்தோஷிப்பேன்; துன்பம் வருங்கால் நோவேன். நான் ஊனை விரும்புவேனுகில், ஊன் சம்பந்தமான விஷயங்களைபற்றிச் சிந்திப்பேன். நான் உயிரை (ஆத்மாவை) விரும்புவேனுகில், ஆத்மவிஷயங்களைப் பற்றி எண்ணுவேன். எவ்வெவ் விஷயங்களை விரும்புகிறேனே, அவ்வவ்விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பேன், பேசுவேன், கேட்பேன், அவைகளின் பாவங்களை என் மனத்தில் வைப்பேன்.

இறைவ, உம்மேல் அன்பினுல் சிருஷ்டிப் பொருள்களை விடுகிறவன் பாக்கியமே பாக்கியம், அவனே அருள் பெற்றவன். ஊன் தர்மத்தை அறுத்து, அதன் பற்றுக்களைத் தொலைத்து, ஆத்மாவின் அருளைப் பெறுகிறவன், பாக்கியவான். இவ்வண்ணம், மனத்தூய்மை அடைந்து, உம்மை வழிபட்டு, உம்மை உள்ளத்தில் நமஸ்கரித்து, உண்மையாக உம்மையே போற்றி செய்கிறவன், தேவர்கள் தொழும்பில் ஒருவனுக அமையப் பாத்திரவானுவன் உள்ளும் புறமும், உலகவாசனைகளை முற்றும் அகற்றியவன் அவனே.

## 49-வது அதிகாரம்.

### நித்தியானந்தத்தை நாடு—அதுவே, உலக விஷயங்களுடனே போராடுவோர் அடையும் பேறே.

கடவுள்.

என் குழந்தாய். நித்தியானந்தமே உன்னுள்ளத்தை உறைவிடமாகப் பெறவேண்டுமென உனக்கு ஆவல் உண்டாகி, இச்சரீரத்தை விட்டு நீங்கி, என் திவ்விய தேஜுஸை ஒரே தன்மையாக, எவ்வித மாற்றமுமின்றித் தியானம் பண்ணவேண்டுமென்று அவா உதயமாகில், உன் மனத்தை விசாலப்படுத்திக்கொள். பரமபக்தியுடன் இந்த அனுகூலமான ஆத்ம ஆவேசத்தைப்பற்றிக்கொள். கைவிடாதே. இவ்வளவு ஆதரவுடன் உனக்கு இரங்கியும் இத்தகைய மான நேர்மை உண்டுபண்ணியும் அன்புடன் உன்னைப்பார்த்தும் ஆவலுடன் உன்னை எழுப்பியும்; பலமாய் உன்னை உயர்த்தியும் திரும்பவும், உலகச்சுழியில் வீழாமல் உன்னைத் தாங்கி வந்தருளிய பெருங்கருணை வள்ளலைப்போற்றிசெய், வந்தனம் செய், இறைவனை வழிபடு.

உன் அறிவின் சக்தியாலும், உன் முயற்சியின் பலத்தாலும், இவ்வுயர்வான நிலைமை உனக்கு உண்டாயிருக்கிறதென்று நினையாதே; இறைவனின் கருணையின் அருள் பிரசாதம் என நினைத்துக்கொள்; நற்சீலமும், நற்குணமும், உன்னிடம் அமையவேண்டுமென்பது அவர் இச்சை எனத்தேறு; இனி உனக்கு நேரிடப்போகும் போராட்டத்திற்கு நீ ஆயத்தமாக இருக்கவேண்டுமென அவர் இத்தகுதியை அருள் புரிந்தனர். அதனால் பூர்ண அன்புடன் என்னை நேசி; என்னைப்பற்றி தீவிர உற்சாகத்துடன் என் கைங்கரியத்தைச் செய்திடு.

2. என் குழந்தாய். அக்கினி பிரகாசமாகத்தான் உள்ளது. ஆனால் ஜுவாலை எழும்பவேண்டுமானால் புகையும் வெளிவிடுகிறது. அதுபோலவே, சிரேயஸ்கரமான விஷயங்களைப்பற்றி, மனசும் அவாக்கொள்ளுகிறதுண்டு. ஆனால், உலக ஆசாபாசங்களை முற்றும் துறக்கமுடியவில்லையே. ஈசனை உற்சாகத்துடன் நோக்கிய பிரார்த்தனைகளில் சத்ய நோக்கங்கள் பூர்ணமாய் அமைந்திருக்கின்றமை அன்றும். சுய அபிமானமான, ரஜோகுணமும் கலந்தேயிருக்கின்



றது. பெரும்பான்மையாய். ஜனங்கள் ஈசுவரனைப்பற்றிப் பக்தி
பாராட்டலும், ஆராதனைகளும், சுயநயம் விரும்பாது, சுத்தசத்வ
பாவமுள்ளவையாக இருக்கவில்லை. அவ்விதமே, உன்னுடைய
விருப்பமும் உன் அன்பும் பலமுறை இருக்கின்றதே.
சுயநயம் விரும்பம் அமைந்த பிரார்த்தனையும் பக்தியும், சுத்த
மானவை அல்லவாம்.

3. உனக்குத் திருப்தி கரமானவையையும்: உனக்குச் சாதக
மானவையையும் நாடிப் பிரார்த்தனை செய்யாதே; எனக்குப் பிரீ
தியானவையையும், என் மஹிமைக்குத் தகுதியானவையையும்
நாடிப்பிரார்த்தனைசெய். உனக்கு நேர்மையும் நியாயமும் வேண்டு
மாயின், என் இச்சையையே கோருக உன் பிரீதியையும் உன
லாபத்தையும் வேண்டற்க. உன் மனத்தின்கண் உள்ள பிரியத்
தை யான் அறிவேன்; அதற்காக நீ படும் துயரமும் விடும் பெருமூச்
சும் அறிவேன்.

இப்பொழுதே, தேவர்கள்போன்ற பூர்ண சுதந்தரமுள்ளவனாக
இருக்க உனக்குப்பிரியந்தான். இப்பொழுதே உயர்நலம் அமைந்த
மோக்ஷசாம்ப்ராஜ்யத்தையே அனுபவிக்க உனக்கு ஆவல்தான்.
ஆனால் அதற்கு உற்றகாலம் இன்னும் வரவில்லை இப்போது
உனக்கு, போகும், கருமமும், சோதனையும் பொருந்தியகாலம்.
உயர்நலம் உன்னிடம் பூர்ணமாக நிறைவேண்டுமென உனக்கு
இச்சையே: அதை இப்பொழுது அடைய ஒண்ணாது. அவ்வுயர்வா
உயர்நலம் நானே அவ்வரவை நீ அடையக்கொஞ்சம் பொறுத்துக்
கொள்.

4. உலக அனுபவமும், உலக விஷயங்களில் சோதனையும்
இன்னும் உனக்கு வேண்டும். சில சமயங்களில் உனக்கு ஆறுதல்
கிடைக்கும். ஆனால் பூர்ணசுகம் கிடைக்கச்சிலகாலம் போகவேண்
டும்.

அதனால், தைரியமாகவிரு உன் கருமத்திலும் கஷ்டத்திலும்
நிரனைகட புதுமனுஷனாக இரு முன் சுபாவத்தைமற, விடு ஒவ்
வொரு சமயத்தில், உன் பிரியத்துக்கு விரோதமான தொழிலைச்செ
ய்யவேண்டுவதாகும் உன் பிரியமானதை தவிர்க்க கடவதாகும்: பிற
ருக்குச் சகமானவையை செய்தால், பலிக்கும்; உனக்குப் பிரியமான

லை செய்தால் பலிக்காது; பிறர் சொல் (என் காதில் வரும்) உன் சொல் வருது. பிறர் பிரார்த்தனை நிறைவேறும், உன் பிரார்த்தனை நிறைவேருது.

5. பிறரைப்பற்றி ஜனங்கள் நன்குகொண்டாடுவார்கள்: உன்னைக்கவனியார்: அலக்ஷியம் செய்வார். பிறரை இந்த வேலை செய்யும் அந்த வேலை செய்யும், என விரும்புவார்: உன்னை ஒன்றுக்கும் உதவாதவன் என அமைதிப்பார்.

இத்தகையசம்பவங்களில், சிலகாலம், சுபாவமாய் உன் மனம் வருத்தங்கொள்ளும் இவை எல்லாம் பொறுத்தல் ஒரு அற்பகாரியமன்று. இவ்விதமாயும், இவைபோன்ற மற்ற விதமாயும், பக்தன் சோதனைகளுக்குள்ளாவான், தன்னைத்துறக்கவும், அபிமானத்தை விடவும், சுத்தி உள்ளவனு அல்லவனு எனச்சோதிக்கப்படுவான். உன் மனத்துக்குமாருன விஷயங்களைப்பார்த்தலும் கேட்டலும் முக்கியமாய் உபயோகமற்றவையும் உனக்கு சேர்மையில்லாதவையும் நீ செய்யக்கடமைப்படுத்தலும் இச்சமயங்களில் உன் மனம் நோகாது, பொறுமை பாராட்டவே பெரிய காரியமாம் அதவே பெரிய அறக்கமாம். ஈசன் விதிக்கு உட்பட்ட நீ, அதற்குப் புறப்பாக நடக்க ஒண்ணுது. ஆனால் பிறர்சொல்ல, நீ செய் என்ருல், உனக்கு வருத்தமாகத்தோன்றும். உன் கருத்தை முற்றும் துறத்தல் மிக கஷ்டமானது.

6. இப்படி எல்லாம் கஷ்டப்படுவானேன்? இதினுல் எல்லாம் என்ன சுகிர்தம் கிடைக்கும் என்ருல் இக்கஷ்ட நிஷ்டூரம் சீக்கிரம் முடிவுபெறும் மதிக்க ஒண்ணுப் பெரிய பலன் கிடைப்பதாகும் இவைகளின் துன்பம் உன்னைப்பாதிக்காது உன் பொறுமைக்குப் பெரிய ஆறுதலும் சுகமுட உண்டு. முகத்தில் சொர்பமாக உன் மனத்தின் பிரியத்தை நீ வெறுக்கவேண்டியதாக நேர்ந்து அதற்கு கைம்மாருக பரத்தில் (மோக்ஷத்தில்) உன் மன அபீஷ்டம் என்றும் நடக்கும். அதற்குத்தங்குதடையில்லை; நீ நினைப்பவை எலலாம் நிசமும் நீ விரும்பினவை எல்லாம் அறுகும்; எல்லா நன்மையும் ஏராளமாய் உனக்கு உண்டாகும்; இழப்போம் என்ற பயம் கிடையாது; உன் மனமும் என மனமும், வேற்றுமை அற்ற ஒன்றப்படும். நான் அன்றி வேறு தனிமையாக ஒன்றையும் வேண்டாய்; கருதாய் அந்நிலையில் உன்னை எதிர்ப்பாரில்லை: உன் மேல் புகார் சொல்வாரில்லை:



உன்னைத்தடுப்பாரில்லை. உன் எதிரில் யாதொன்றும் நிற்காது. நீ வேண்டுவன எல்லாம், சித்தமாக இருக்கும். உன் மன அபீஷ்டங்களும் உன் பிரீதிகளும் முற்றும் நிறைவு பெறும். உலகத்தில் நீ அனுபவித்த அபவாதத்திற்கெல்லாம் உனக்கு மஹிமையை நான் அளிப்பேன். உன் துன்பத்திற்கெல்லாம் உனக்குப் புகழ் என்ற உடுப்பு தந்திடுவேன். கடையனிற்கடையனுக உலகத்தில் இருந்ததற்கு என்றும் அனுபவிக்க தக்கசிம்மாசனத்தையே கொடுப்பேன். அதனுல் பண்பும் பணியும் அடையும் பலன் இதுவாம். தபசும் பொறுமையும் ஆநந்தத்தைப்பெறும் தாழ்மைக்கும் சகிப்புக்கும் சுவர்வமும் மஹிமையும் பயனும்.

7. ஆகையால் எல்லார்கைக்கும் கீழ்பணிவாய்: இவர் எவினுர் அவர் எவினுர் என நினையாதே. உனக்கு மேலாயினேர் என்ன, சமானமாயினேர் என்ன, கீழாயினேர் என்ன யாதேனும் உன்னிடம் எதிர்பார்த்தாலும், எச்செய்கை செய்யக்கேட்டாலும், எல்லாவற்றையும் நலன் எனக்கருதி, உன்னுல் இயன்றவரை பூர்ண மனதாய்ச் செய்துமுடித்தலே உன் கடமை என அறிவாய். ஒருவன் இதை வேண்டட்டும், மற்றவன் அதை வேண்டட்டும். ஒருவன் இதில் கர்வம் பெறட்டும், மற்றவன், அதில் கர்வம் பெறட்டும். பிறரால் பலகாலம் ஒருவன் புகழ் பெறட்டும், மஹிமை அடையட்டும். நீ சம்பந்தபட்டமட்டில், இதிலும் அதிலும், சந்தோஷங்கொள்ளாதே, நிறமாப்பு அடையாதே. நீ அற்பன் என நினைந்து, உன்னை நொந்து கொள்வாய். என்னுடைய நலன்சார் செயலிலும் என் உண்மையான அன்பிலும் மனமுள்ளவனுக இரு.

இதுதான் வாழ்விலும், மாணத்திலும் நீ பெறவேண்டிய பேறு. அதாவது உன்னிடம் இறைவன் மஹிமை என்றும் பிரகாசிக்கவேண்டும்—என்பதே.

## 50-வது அதிகாரம்.

### ஆதிக்கு அத்தனே, துணை என்றிருத்தல், திக்கற்றவனுக்கு தெய்வமே துணை என நம்பி இருத்தல்.

காந்தனே! இறைவனே! பரிசுத்த பிதாவே, என்றும் வாழி! உம்முடைய சித்தப்படி, எல்லாம் நடைபெறுகின்றது. நீர் செய்தே

ல்லாம் நன்மையே உன் அடிமை உம்மையே போற்றிசெய்து உம்
மேல் அன்புபாராட்டி அதில் சந்தோஷிக்கட்டும் உமமையன்றி தன்
னை ஓம்பாமலும், தன்னிலும் பிறரிலும் சந்தோஷமடையாமலும்,
இருக்கட்டும். என் உண்மையான ஆநந்தம் நீரே என் லக்ஷியம் நீ
ரே; என் சிரோரத்தினம் நீரே; என் இன்பம் நீரே என் மஹிமை
நீரே; என் ரசனே: உமமிடம் நின்று வந்ததன்றி உன் அடிமையான
என் பால் வேறு யாது உள்ளது. நலம் ஒன்றுமில்லான் யான்; ஆ
யினும் நீர் என்னுடைமையை அருளினீர். கொடுத்த கொடை
எல்லாம் உம்முடையதே; சிருஷ்டித்த பொருளெல்லாம் உம்மாலே
யே பிறந்தது முதல் ஏழையான். கஷ்டங்களில் உழன்றேன்
என் உள்ளம் துக்கத்தால் துடிக்கின்றது. சில சமயம் கண்ணீர்த்
ததும்ப அழுகின்றேன். துன்பம் துயரங்களினால் என்னுள்ளம் நொ
ந்து புண்ணாய் வருந்துகின்றேன்.

2. சாந்த நிலைமையை நாடுகிறேன். உமது ஆறுதல் என்ற
அன்னம் உண்டு ஜீவிக்கின்ற உம்முடைய குழந்தைகளின் சார்தம்
பெற விரும்புகிறேன்.

சாந்தம் எனக்கு அருளி, என்னுள்ளத்தில் ஆநந்தம் நிரம்பித்
ததும்படி செய்வீராகில், உம்முடைய அன்பனின் உள்ளம் குளிர்
ந்து, நேர்மைபெற்று உம்மையே போற்றி செய்வேன். ஆனால் உம்
முடைய சாந்தம் என்ற அருள்வரவு குன்றிடில், (இப்படியும் அடிக்
கடி நேருகிறதுண்டு,) உம்முடைய ஆஞ்ஞைக்கு விரோதமாக ஒருவ
னும் நடக்கமுடியாது. உம்முடைய கருணை இருந்தகாலத்தில்
சோதனைகள் பலவந்து மோதினும் அவைகளை லக்ஷியம் செய்யாது
சுகமாய் இருந்தவன், அதநீங்கவே, அன்றுபோல இன்று இல்லையே,
நேற்று இருந்தசுகம் இன்று இல்லையே, முந்தியநாளிருந்த சுகம்
இன்று இல்லையே. என ஏங்கித்தவித்து அலறிமார்பில் அடித்துக்
கொண்டு மண்டிபோட்டு மயங்கியிருப்பான்.

3. ஓ! நியாயாதிபதியே, பிதாவே, சுத்தமே—உபாசனை மூர்
த்தியே, உம்முடைய அடிமையைச் சோதிக்கும்நாள் வந்துவிட்டது.
பிதாவே-அன்புக்குரியரே.உம்மின் பொருட்டு உன்னடிமை யாதே
னும் ஒருதுன்பம் துயரம் சேர்ந்து வருந்த வேண்டுவேன், இந்தச்
சமயம் முன்னாலேயே, உம் திருவுள்ளத்தில் நடக்க வேண்டுமெனத்
தீர்மானித்துள்ளது. வெளிப்படையாக சொற்பகாலம், உம்ம

237 119



டிமை கஷ்டத்தால் வருந்தவேண்டும். ஆனால். உள்ளத்தில் உம்மி
டம் பற்றுள்ளவனாக என்றும் இருக்கக்கடவன். பிறரால் அலக்ஷியம்
செய்யப்பெற்று தாழ்மையை அடையவேண்டும் ஜனங்கள் முன்நிலை
யில் கடையனாகத் தோன்றவேண்டும். இந்நிக்கண்களாலும் கஷ்டங்
களாலும் வியாதிகளாலும் வருத்தப் படவேண்டும். இவைகளின்
பயனாக கடைமுறையில் புதிய தேஜஸ்உதயமாக, உம்முடன் எழுந்
து, தேவலோகத்தில் மஹிமை அடைவான். பரிசுத்த பிதாவே!
இத்தன்மையாக உம்முடைய ஆஞ்ஞை இருக்கிறது. இதுவே உம்
முடைய இச்சை. நீர் விதித்த பிரகாரம், நடைபெற வேண்டுவதே.

4. இதுதான் உம்முடைய நண்பனுக்கு நீர் செய்யும் உபகாரம்
இதுவாம். :—இகத்தில், உம்மின்பொருட்டு அவன் வருந்தி, சங்க
டம் அனுபவிக்கவும். எத்தனை தடவையானாலும் எவர் மூலமாக
நேரினும், எல்லாம் அவனுக்கு நேரும்படி செய்தலே.

உம்முடைய விதிமுறை விலகியும், உமக்குத் தெரியாமலும்,
காரணமின்றியும், பூமியில் ஒருகாரமும் நிகழ்கிறதன்று. என்நாதரே
பூமியில் நான் தாழ்மைப்படுதல் நலமோ; அதனால், உம்முடைய தர்
மமுறையின் நெறியை அறிய இடமுண்டு; என் கருவம், மமதை,
அகங்காரம் இவை அற்றுப்போம்.

வெட்கத்தினால் நான் வருத்தமுற்று முகம் மூடிக்கொள்ள
நேருதல் எனக்கு நன்மை பயக்கும்; அதனால் உலகத்தாரை ஓம்பா
மல் உம்மையே நம்பி, அன்புபாராட்டிச் சுகம்பெற நாடுவேன்.

நல்லவரும் தீயவரும் ஒரேமாதிரி ஒருங்கே வருந்தும்படி செய்
கின்றீர்; இஃது உம்முடைய ஆஞ்ஞை; அதற்குத் தர்மமும் நியாய
மும் உண்டுதான்; ஆனால் நாங்கள் அறிய ஒண்ணாது; இத்தகைய
தர்மநதியின் மஹிமையை நினைக்க நினைக்க, நடுங்குகிறேன் பயமுறு
கிறேன் இவ்வறிவும் நான் பெற்றேன்.

5. உமக்கு நன்றி பாராட்டுகிறேன். பலவழியிலும், எனனை
துன்பத்திற்குள்ளாக்கியும், பந்தாசபாடெல்லாம் என்னைப்படுத்தி,
யும் உள்ளும் புறமும் நோகும்படி செய்தும் மனம் வெதும்பியும், சரீ
ரம் இலேசமடைந்தும் இவ்விதமாக எனக்குச் சங்கடத்தை கொடுத்த
உம் கருணைக்கு நான் வந்தனம் அளிக்கின்றேன்.

மண்ணிலும் விண்ணிலும் உம்மைத்தவிர வேறுயார் எனக்கு.

ஆகாவு. இறைவ; காதரே! ஞானபண்டிதரே! சோகச்செய்வீர் புண்ணாக்குவீர், பின்பு சுகப்படுத்தலீர், ஆற்றுவீர், நரகத்தள் அழுத்துவீர், பின்பு மோக்ஷத்திற்கு நடத்தவீர்.

உம்முடைய விரதமுறை நான் பெறுகிறேன். உம்முடைய சோதனை என்ற தண்டம் எனக்கு அறிவை உண்பிக்கும்.

6. பிரியமுள்ள பிதாவே! இதோ பாரும், உம்வசம் ஆளாகிறேன். உம்முடைய தண்டனை முறையால் தயவுகவேண்டிச் சரணமடைகிறேன். என் முதுகில் அடியும்; என்பிடரில் மிதியும்; உதையும்; என் திர்ப்புத்தியை உம்முடைய மனத்துக்கு இசைய நேர்மைப்படுத்தும்.

என்னைப்பட்டன்பும் பணிவுமுள்ள உண்மையான பக்தனாகச் செய்யும். இது உம்முடைய வழக்கமே, என்றும் உம்முடைய கைங்கரியத்தைச் செய்திடவேணுக.

நான் உம்மிடைக்கலம்: என்னிடமுள்ள சுபாவத்தைத்திருத்தி நேர்மையாக்கும். மறுமையில்விட, இம்மையிலேயே, தூய்மைப் படுத்தப்பெறல் நலமே.

நீர் யாதும் அறிவீர். உமக்கு ஒளித்த மனிதன் மனத்தின் கண் ஒன்றும் இல்லை.

நிகழுமுன்னரே ஒவ்வொரு காரியத்தையும் நீர் அறிவீர். உலகத்தில் நடக்கும் எக்காரமும் பிறர்சொல்லி, நீர் அறியவேண்டுவதில்லை.

என் அபிவிருத்திக்கு உற்றவை இவை என நீர் அறிவீர். பாபத்தின் களிம்பும் துருவும் போக, துன்ப அநுபவம் நலமே.

உம்மிஷ்டப்படி என்னை நடத்தும். அதுதான் என் இச்சை நிலையுள்ள என்வாழ்வை நிந்தியாதேயும் உமக்கு என் பாபத்தன்மையும் சுபாவமும் நன்றாய்த் தெரியுமே.

7. கடவுளே, அறியவேண்டியதை நான் அறிய அருளும். எதில்பக்தி பாராட்டவேண்டுமோ அதைத் தெரிவியும்; உமக்குத் திருப்தியாக இருக்கும் விதம்; நான் போற்றிசெய்ய உபதேசியும். உமக்கு எது மதிப்புள்ளதோ அதை நான் மதிக்கும்படி அறிவு மூட்டும். உமக்கு எது வெறுப்புள்ளதோ, அதை வெறுக்க நான் அறிந்து கொள்ளட்டும்.



வெளிப்பார்வையைக்கொண்டு, ஒன்றையும் நான் மதியாமல் இருக்கட்டும். உண்மை தெரியாத ஜனங்களின் காதில்படும் வார்த்தைகளைக்கொண்டு விஸ்தாரம் செய்யாதிருக்கட்டும். உள்ளும் புறமும் நன்கு ஆராய்ந்து, உண்மையான தீர்மானம் நான் செய்யும்படி அருள்புரியவேண்டும். எல்லாவற்றுக்கு மேலாய், உம்முடைய இச்சைப்படியும், அபீஷ்டப்படியும் நடை பெற நான் காடுவேணுக.

8. ஜனங்கள் அபிப்பிராயத்தில் தவறுகின்றார்கள். உலகப் பற்றுள்ளார், வெளித்தோற்றத்தால் மதிமயங்குகிறார்கள்.

பிறர் ஒருவனை உயர்வாக மதிக்கின்றார், என்பதில் என்ன இருக்கிறது, ஒரு வஞ்சகன் மற்றொரு வஞ்சகஸ்தனையும் வீணன் ஒருவன் மற்றொருவீணனையும் குருடன் ஒருவன் மற்றொரு குருடனையும் நொய்மையான் ஒருவன் மற்ற ஒரு நொய்மையானையும் ஸ்துதிக்கின்றார்கள், உண்மையில் ஒருவனை ஒருவன் மயக்கி பாழும் குழியில் வீழ்கிறார்கள், தாழ்மையே தன் குணமாகக்கொண்ட பிரான்ஸிஸ் ஞானியார் உபதேசிக்கின்றபடி :—உம்முடைய சந்நிதானத்தில், அவன் அவன்தகுதி எவ்வளவோ அவ்வளவே அன்றி வேறு அதிகம் இல்லையே.

## 51-வது அதிகாரம்.

### பெரியகைங்கரியம் முடியாவிடில், சிறிய கைங்கரியத்தை நாடிமுடித்தல், நலம்என்பது.

கடவுள்.

என் குழந்தாய்! எப்போதும் அறநெறிபற்றியே உன் மனம் செல்லுதலும்—பிரியமாக இருத்தலும் முடியாது. எப்போதும் மேலான எண்ணத்திலேயே தியானம் செய்தலும், பரமநிஷ்டையிலேயே இருத்தலும் இயலாது.

சிற்சில சமயங்களில், கீழானவிஷயங்களை உன் மனம் இறங்கிச் சிந்தனை கொள்ளும்படியாக நேரும். நீ பாபத்தில் பிறந்தனை அழியக்கூடிய இச்சரீரச்சுமையை, உன் பிரியத்துக்கு விரோதமாக தளர்ச்சியுடன் தாங்கிக்கொண்டு செலுத்த வேண்டியவன் தான்

மரணதர்மமுள்ள தேகம் இருக்குமட்டும், சோர்வும், மனத்தாங்கலும்
நீ அநுபவித்தே தீரவேண்டும்.

ஊனுடன் உலாவும்வரை, அதன் பாரத்தை வருத்தச் சுமக்க
வேவேண்டும். ஆத்மஞானப் படிப்பையும், இறைவனைப்பற்றிய எண்
ணத்தையும், எப்போதும் சிந்தனைகொள்ளுதல் ஒண்ணாது.

2. அதனால், தாழ்மையான வெளிப்படையான கைங்கரியங்
களை நடத்தல் உனக்கு சுலபமாம். [சரியை கிரியை மார்க்கங்கள் பிர
யோஜனமாம்]. நன்மை செய்து, மனத்தைத் தேற்றிக்கொள்; என்
வரவை எதிர் பார்த்து என்னை அன்புபாராட்டு; நான் உனக்கு தர்ச
னம் தருமளவும், அதனால், நீ சதர்நம் பெறுமளவும், என்னைவிட்டு
நீ பிரிந்திருக்கின்ற நிலைமையும், மனவருத்தத்தையும் பொறுத்துக்
கொள். இத்துன்பமெல்லாம் நீ மறக்கும்படியும் உள்ளத்தில், பர
சுகமான சாந்தத்தை நீ அநுபவிக்கும்படியும் செய்வேன்.

சாஸ்திரங்களின் நலம்வாய்ந்த உபதேசங்களை உனக்கு விரி
வாய்க் காட்டுவேன்; அதனால் உன் ஹிருதயம் மலரும்; விசாலமா
கும்; என் ஞான விதிமுறைகளை அநுஷ்டிக்க ஆரம்பிப்பாய். அப்
போது சொல்லுவாய்—“இப்போது படும் துன்பமும் துயரமும்
இனிநமக்கு அருள்பிரகாசமாக வரும் சுகத்துக்கும் மஹிமைக்கும்
நிகரில்லை.”

## 52-வது அதிகாரம்.

### மனிதன், துன்பத்துக்குப் பாத்திரவானே அன்றி, பரம சுகத்துக்கு பாத்திரவான் அன்று—என்று இருத்தல்.

ஜீவன்.

கடவுளே! உம் ஆறுதலைப்பெற அருகன் அல்லன்; உன் தர்ச
னம் அடைய அபாத்திரன்யான். இப்படி நிர்க்கதியாகவும், திக்கற்
றவனாகவும் என்னை இருக்கும்படி நீர் விட்டிருத்தல் நியாயமே; கண்
ணீரைக் கடல் அளவாக வடித்தாலும்கூட ஆறுதலைப்பெற அருகன்
அல்லன். ஆகவே இடுக்கணும் கஷ்டமும் என்னைத் துன்பப்படுத்
தலும் என்னைத் தண்டனைக்குட் படுத்தலும்தான் நான் அடையக்
கூடிய பாக்கியம், வேறன்று. பலமுறை, அநியாயமாக உம்மனம்
புண்ணாக நான் நடந்திருக்கிறேன். என் தர்மங்களை விட்டு விலகி

241 - 121



ஒழுகினேன் சரியானபடி, என் கொடுமைகளைத் தராசில் சீர் தூக்கி
னால், என்மீது கொஞ்சமேனும் நீர் இரங்கி அருள்புரிதலுக்கு
யாதொரு இடமுமில்லை. காரணமும் இல்லை. நீரோவென்றால்
கருணையும் இரக்கமும் நிரம்பியவர்! உம்முடைய சிருஷ்டியான ஜீவ
ராசிகள் மரணமடையச் சகிப்பீர். உம்முடைய கருணைக்கு லக்ஷிய
மாக இருக்கவேண்டுமென நினைந்து நன்மைகள் பலகாட்டி, நலன்
தான் ஒன்றுமில்லாத மனிதனுக்கு யாதொரு கைம்மாறின்றி, இர
ங்கி, அவன்பால் தயவுகூர்ந்து, அவன் அறியாமலே அவனுக்கு அள
வுகடந்த ஆறுதல் அருளினீர், அவ்வாறுதல் மனிதர்களதுபோன்
றது; அஃது உயர்நலம் அமைந்தது.

2. என் நாதரே இம்மேலானதேற்றரவு நான் பெறுதற்கு நா
ன் என்ன பாக்கியம் செய்திருக்கிறேன்? தேடித்தேடிப்பார்த்தாலும்
ஒரு நலனும் நான் செய்திலனே. எப்போதும் பாபம் செய்தல்
எனக்கு எளிதான விஷயமாம்: நல்வழியில் திருத்தல் எனக்குச சோ
ம்பலும் கஷ்டமுமாம். இஃது உண்மையே. அதை மறக்க முடி
யாது. அதை மறுத்தால் நீரே! என் எதிரில் எனக்கு விரோதமா
ன சாக்ஷியாகவிருப்பீர். அதற்குப்பதில் சமாதானம் சொல்ல யாரா
ல் இயலும்.

தீரா நரகத்தையும், தணியா தழலையையும் தவிர, பாபங்கள்
நிரம்ப செய்திருக்கின்ற எனக்கு வேறு என்ன தகுதியிருக்கின்றது.
உண்மையாக என் பாபத்தை உணர்ந்து நான் ஒத்துக்கொள்ளுகி
றேன். எல்லா நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் நான் உரித்தானவன்,
உம்முடைய பக்தர்ளின் தொழும்பில் ஒருவன் என சொல்ல என
க்குத்தகுமா? இவ்விதம் நான் வசனித்தல், எனக்கு விரோதமாக
இருப்பினும், உண்மையை ஒளிக்கமுடியுமா? சொல்லத்தான் வே
ண்டும். இப்படி சொல்லி உம்முடைய தயைக்கும் கருணைக்கும்
பாத்திரவான் ஆகுதல் இலகுவாம்.

3. குற்றவாளியான், பாபிநான், மதிமயக்கமுள்ளவன் நான்.
நான் சொல்லவேண்டுவது என்ன இருக்கின்றது. இஃது ஒன்றும்
நான் சொல்லக்கூடும் சொல்ல இயலும்; அதாவது—ஓ ஈசா நான்
பாபம் செய்துள்ளேன்; பாவம் செய்துள்ளேன். என் மேல் இரங்
கும், என்னை மன்னித்து ரக்ஷியும். போனால் திரும்ப ஒண்ணாது

இருள்மூடப்பெற்ற மரணலோகத்திற்கு போகுமுன் சொற்பகாலமாவது ஏகாந்தம் நாடி என் துக்கத்தை வாய்விட்டு புலம்பி நான் ஆறுதல்பெறவேணுக.* குற்றவாளியான, நியனிடம் நீர் எதிர்பார்க்கக்கூடியது என்ன? தன் பாபத்திற்கு அனுதாபப்பட்டு, தன்னைத்தாழ்மைப்படுத்தலேயாம். உண்மையாக அனுதாபப்பட்டு தாழ்மைப்படுத்துவனாகில், ஈசுவரன் இரங்கி பாபத்துக்காக மன்னிப்பான். என்ற நம்பிக்கைக்கு இடமுண்டு. மனம் நொந்து, அனுதாபப்பட்டால் சமாதானம் உண்டு; இழந்த சுகத்தை திரும்பப்பெறலாம்; இனி வரப்போகின்ற கொடுமையை தண்டனையினின்று விடுத்துக்கொள்ளலாம் சோகமுற்று, மனமுருகி அனுதாபப்படுமவனுக்கு ஈசனும் இரங்கி சாந்தநிலையும் சமாதானமும் தந்து அருளுவார்.

4. இறைவ, செய்த பாபத்திற்கு மனநொந்து, தாழ்மையாய் அனுதாபப்படல் உமக்குப்பிரியமான தியாகமாம்; சூடம், சாம்பிராணிகளாற் செய்யும் ஆராதனையைவிட உயர்வாம். இப்படி செய்தலே உம்முடைய திவ்விய பாதங்களில், வாசனையுள்ள எண்ணெய்க்காப்புச்சாத்தலாகும். தாழ்மையும் அனுதாபமுள்ளவுமான இருதயம் உமக்கு அப்பிரியமானதன்று மனகவலை கோபாக்கினி தாக்காத இடம் இதுவே. அந்தஸ்தானத்தில் மனம் எல்லாப்பாபங்களும் அற்றுச்சுத்தமாகி, நேர்மை பெறுகின்றது.

## 53-வது அதிகாரம்.

### உலகப்பற்றுள்ள மனத்துக்கும் ஈசன் கருணைக்கும் வெகு தூரம்.

கடவுள்.

என் வரப்பிரசாதம் மிகவும் அருமையானது. அஃது உலக வியாபாரத்துடன் சேரக்கூடியதன்று; உலகத்துக்குரிய ஆறுதலான சுகத்துடனும் கலந்து நிற்கப்பாலதன்று. அதனால் அதை நீ அடைய வேண்டில், நிகழ்வதற்குத் தடையாம், விக்கனங்களை விலக்கக்கடவாய். ஏகாந்தமாயிருக்கத் தனிமையான இடத்தை நாடு. நீ உன்னுடன் இருக்க விரும்பு. பிறர் உடன் உரையாட விரும்பாதே.

* ஜோபு-10அதி. 20-21, செய்யுள்கள்.]



உன் பிரார்த்தனைகளை ஈசனிடம் அன்புடன் செய். அதனால் உன் உள்ளம் அனுதாபம் பெறும்; உன் மனம் சுத்தமாகும்.

உலகத்தை அற்பமாக நினை. உலக ஆசாபாசங்களைவிட்டு, இறைவனை வழிபடுதல் நலன் என அறி. என்னிடம் அன்பும், உலக வியாபாரங்களில் பற்றும் ஒரே காலத்தில் இருக்க இயலாது.

உற்றார், உறவினர், நண்பர் இவர்களைவிட்டு நீ தனிமைப்பட்டு, உலக விஷய சுகங்களினின்று விலகி, இருக்க கடவாம்.

கிறிஸ்து வழிப்பட்டவர்கள் உலகத்தில் தங்களை அந்நியர்களாகவும் பிரயாணிகளாகவும் நினைத்து ஒழுகக்கடவது என்று உயர்ந்த ஞானியான பீதர்என்பார் வினயமாக உபதேசித்துள்ளார். மரணாந்த காலத்தில், உலக விஷயத்தில் ஒன்றிலும், எவ்விதமான பற்றும் இல்லாமல் இருக்கின்றவன் மன உறுதிப்பாடு உயர்வு அன்றோ?

சாதாரணமாய் நொய்மையான மனதுள்ளான் உலக ஆசை முற்றுப்பற்று இருத்தல் முடியாது. உள் நோக்கும் சுபாவமுடையவன் அனுபவிக்கும் அந்தர சுகத்தையும் சுதந்தரத்தையும், ஊண் ஓம்பித் திரிகிறவன் உணரான்.

சிரேயஸ் மார்க்கம் வேண்டினால், தனக்குச் சுகிர்தமானவர்களை இழத்தலும், கிட்டியவர் கிட்டாதவர்களைத் துறத்தலும், தான் ஒருவனே என்று, தனிமை பாராட்டுதலும் முக்கியமாகவேண்டுமாம்.

முதற்படியில், உன்னை அடக்கு: உன்னை வசப்படுத்து; உன்னை ஜயித்துக்கொள்: மற்றவைகள் தானே ஓடும்.

எவன் தன்னை அடக்குகிறானோ, அதாவது, இந்திரியங்களை அறிவின் வசப்படுத்தியும், அறிவை என்னைப்பற்றி நிகழும்படியும் எவன் செய்கிறானோ அவன் தன்னை ஜயித்தவனாக ஆவான். உலகத்தையே ஜயித்தவனாக ஆவான்.

3. இவ்வுயர்வான நிலையை விரும்பினால், தைரியமாக முயற்சிசெய்; மறைந்துள்ள உலகப் பற்றுக்களையும் ஆசாபாச வேர்களையும் அடியோடு அறுத்திடு.

வேரோடு அறுத்தல்—என்றால் இந்தத்தூர் அபிமானமே—; அகந்தை, மமதை இரண்டும் ஒழியவேண்டும்; இவை இரண்டும் ஒழிந்தால், சாந்தமும் சமாதானமும் உண்டாகும். தங்களை முற்றும்

வெறுத்து மேல்நோக்குகின்றவர்கள் சொற்பம் பெயராகையால், எல்லோரும் உலக விஷயங்களில் சிக்குண்டு வருந்துகின்றார்கள்; மேலான ஆத்மஞானம் பெறாமல் போகின்றார்கள். என்னுடன் என்னைப்போல நடைபெற விரும்புகிறவன், இந்திரிய நிக்கிரகம், மனோநிக்கிரகம், செய்யவேண்டும்; உலகத்தில் உள்ள எந்தவிஷயத்திலும் அவாக்கொள்ளற் பாலதன்று.

## 54-வது அதிகாரம்.

### இறைவன் அருட்பிரசாதம் பெற்றன்—சாமான்னிய மானவன்—இவ்விருவர்களின் ஒழுக்க முறைகளின் வேற்றுமை.

கடவுள்.

என் குழந்தாய்! சாமான்னியனின் ஒழுக்கத்தையும், ஈசுவர அருள்பெற்றவன் ஒழுக்கத்தையும், செவ்வையாகக் கவனித்துப்பார்: ஒன்றுக்கொன்று நேர்விரோதமானவை. ஆனால் வேற்றுமை வெளிப்படையாகத் தோன்றாது; குப்தமாக நிகழும்; தெள்ளிய அறிவுள்ளானுக்கும் ஞானிக்கும் தெரியவரும்.

எல்லாரும் நன்மையையே நாடுகின்றார், தாங்கள் சொல்லிலும் செய்கையிலும், யாதேனும் நன்மை இருப்பதாகத் தோன்றச் செய்வார்கள். பாவனை காட்டுவார்கள். அந்த வெளிவேஷத்தை நம்பி ஜனங்கள் மோசம் போவார்கள்.

2. மனிதன் சுபாவத்தில், கபடமுள்ளவன்; அதனால், அனேகரை மயக்குவான்; மோசம் செய்வான்; தன் லாபத்தையே கருதி வஞ்சிப்பான்.

ஈசன் அருட்பிரசாதம் பெற்றவனோ கபடமின்றி நடப்பான். தீமை கொஞ்சமேனும் தோன்றினால் அதைவிட்டு அகல்வான்; மோசம் செய்யான். எல்லாம், ஈசுவரார்ப்பணமாக, நன்மையாகச் செய்வான்; கடைசியாக அவரையே நம்பி அடைக்கலமாகப் பெறுவான்.

3. மனிதன் சுபாவமாய் மரணத்தை வெறுப்பான். கஷ்டத்தை விரும்பான். தான் பிறரால் தோல்வியடைதலைச் சகியான். ஒருவன் தனக்கு மேலாக இருக்க இணங்கான்; பிறர் தன்னை ஆள



விரும்பான். ஈசன் அருளால் சிரேயஸ் மார்க்கத்தில் நிகழ்கின்றவனோ மரணம் வந்தாலும் வரட்டும் எனத்தன்னை வருத்தத்துக்கு உள்ளாக்கிக் கொள்ளுவான்; விஷயானுபவங்களுடன் போராடுவோன் பிறர் தன்னை ஆளச் சகிப்பான்; பிறர் தன்மேல் வெற்றி கொள்ளுதலை விரும்புவான்; சுயேச்சையாகத்திரிய இசையான்; விரதத்துக்கும் நிஷ்டைக்கும் உட்பட விரும்புவான்; பிறரைத்தான் ஆளவிரும்பான். எப்போதும் ஈசனை நோக்கி, அவரே பற்றுக்கோடு என நினைந்து, இருத்தலும் நற்றலும், இனி இருப்பதும் அவராலேயே என்று சிந்தனை கொள்ளுவான். ஈசுவரனை உத்தேசித்து கடையருக்குக் கடையனாக இருக்கவும் சித்தமாக இருப்பான்.

4. சாதாரண மனிதன், தனக்கு யாதேனும் ஒரு லாபத்தைக் கருதி முயலுவான். இந்தக் கர்மத்தில் என்ன எனக்கு பயனுண்டாகும் என நினைப்பான். ஈசன் வழிப்படுகிறவன், தன் லாபத்தை நினையான். பொது ஜனங்களுக்கு பயனுண்டாகுமா என யோஜிப்பான். "தன்னுயிர் ஓம்பான் பிறவுயிர் ஓம்புவான்."

5. சாமான்னிய மனிதன், பிறர் தன்னைப் புகழவும், கவர்வம் பாராட்டவும் விரும்புவான். இறைவன் வழி நின்றவன், எல்லாப் புகழும், எல்லா மஹிமையும், இறைவனுக்கே என்று உண்மையாகச் சிந்தைகொள்ளுவான்.

6. சாதாரண மனிதன், பிறர் தூஷணையையும் அவமானத்தையும் சகியான். இறைவன் வழிப்பட்டவனோ ஈசுவின் பொருட்டு, பிறர் நிந்தனையைக் கேட்டு மகிழ்வான்.

7. சாதாரண மனிதன், சோம்பலையும், தேக சுகத்தையும் நாடுவான். இறைவன் வழிப்பட்டவனோ, சோம்பலாக இருக்க இணங்கான். பிரியத்துடன் கைங்கரியம் செய்ய விரும்புவான்.

8. சாதாரண மனிதன், நூதனமானவையையும் நேர்த்தியானவையையும் நாடுவான். மலிவானவையையும், இழிவானவையை வெறுப்பான். ஈசனிடம் அன்புடையானோ, இலகுவானவை, சாமான்னியமானவை, இவைகளிடத்தில் திருப்திகொள்ளுவான். இழிவானவையை வெறுக்கான். பழைய கந்தைகளை ஆடையாகத் தரித்துக்கொள்ளவும் இணங்குவான்.

9. சாதாரண மனிதன், அநித்திய உலகவிஷயங்களைப் பற்று வான், உலக லாபத்தில் சந்தோஷிப்பான். நஷ்டம் நேர்ந்தால் வியசனிப்பான், தனக்கு விரோதமான யாதேனும் ஒரு அற்பவார் த்தைக்குக் கோபிப்பான்.

சிரேயஸ் மார்க்கத்தில் நடைபெறுகின்றவனோ, நித்திய வஸ்து வையும், அதற்குரிய முறைகளையும் விரும்புவான். அநித்திய வஸ் துக்களில் அவாக்கொள்ளான். நஷ்டத்தால் வருந்தான். கடின வார்த்தைகளால், மனம் நோகான். தனக்குவேண்டிய நிதியும் இன் பமும் பரலோகத்தில் இருக்கின்றவென்று சிந்தனைகொள்ளுவான்.

10. சாதாரணமனிதன்—பேர் ஆசைகொண்டவன். எல்லா ம்பற்ற விரும்புவன், கொடுக்க விரும்பான். எல்லாம் தனக்கு என் று இருப்பான். ஈசுவரன் வழிப்பட்டவனோ, பிறருக்கு ஈவான்: இரங்குவான்: சுயநயம் விரும்பான்: அற்பத்தில் திர்ப்தி அடைவான் கொள்ளுதலைவிடக்கொடுத்தலில் சந்தோஷிப்பான்.

11. சாதாரணமனிதன் சிருஷ்டிப்பொருளைப்பற்றுவான். ஊனை ஓம்புவான். வீண் மயக்கங்களை நாடுவான். அங்கும் இங் கும் பரபர என்று அலைவான். ஞானமார்க்கத்தில் நிற்பவனோ, இ றைவனையே நோக்குவான். ஞான முறைகளைப்பற்றுவான். உல கத்தாசை, விடுவான்; உலகத்தை வெறுப்பான்; விட்டுப்பெயர்வான்; விஷயசுகங்களை க்கடிவான்; அலையும் மனத்தை அடக்குவான்; வெ ளியிற்றிரிய வெட்கப்படுவான்.

12. சாதாரணமனிதன், வெளி விஷயங்களைக்கோருவான்: அவைகளால் சுகம் பெற இச்சிப்பான். சிரேயஸ்மார்க்கத்தில் ந டைபெறுகிறவனோ, இறைவன், ஒருவனிடமே சுகம் பெற எண்ணு வான். எல்லா நல த்குறைவில்லா நிறைவில் சந்தோஷம் பெற நாடுவான், புற வெளித்தோற்றங்களைத்துறப்பான்.

13. சாதாரண மனிதன், தன் சொந்தப் பிரயோஜனத்தை யும், தன் சொந்த லாபத்தையும் நாடி எந்தக் காரியமும் செய்வான். பிரிதி பலன் கருதாமல் ஒன்றும் செய்ய இசையான். தன் கருமத் துக்குத் தகுதியான, அல்லது மேலான ஒரு பயனை நோக்கியும் அல்லது, புகழை விரும்பியும், அல்லது யாதேனும் ஒரு நலத்தை உத்



தேசித்தும் செய்வானே அல்லது, வெறுமையாகச் செய்யான்; தன் தர்மத்தையும், தன் கொடையையும், பிறர் அதிகமாகமதிக்க விரும்பு வான்.

ஞான நெறியில் உள்ளான்—அநித்திய வஸ்து எதையும் அபே க்ஷியான்—ஒரு பிரதி பலனும் தன் கருமத்திற்கு வேண்டான். கடவுள் ஒன்றையே நாடுவான்: லக்ஷியமான மோக்ஷபதவியை அடையவேண்டி, தன் சரீர யாத்திரைக்கு அவசியமானவை எது வோ அவைகளை மாத்திரம் வேண்டுவான்.

14. சாதாரணமனிதன்—உற்றார், பலர் நண்பர் பலர்—இரு க்க விரும்புவான்; தன் குலம் உயர்வு என்றும் தன் பாரம்பரை நலம் என்றும் இறுமாப்புகொள்ளுவான்: அதிகாரிகளின் சிநேகத்தைக் கோருவான். செல்வர்கள் நட்பை வருந்திக்கொள்ளுவான். அவ ர்களை ஸ்துதிப்பான், தன்னைப்போன்றவர்களை மெய்ச்சுவான்.

ஞான நெறி நின்றானோ, பகைவரிடமும் அன்புபாராட்டுவான் அவரை நேசிப்பான். சிநேகர் பலர் உளரென செருக்கடை யான்; நற்குணமும் நற்சீலமுமின்றி, வெறுமையான பிறப்பையும்குல த்தையும்பற்றி கருவம் கொள்ளுவான். செல்வரைவிட, ஏழையர் மேல் அன்பும் ஆதரவுமுள்ளவனாக இருப்பான். அதிகாரமுள்ளார் என மதியான். குற்றமில்லான் குணவான் என, மதிப்பான்: அவன் பால்இரக்கம் பாராட்டுவான்: மெய்யரைக்கண்டு சந்தோஷிப்பான்; பொய்யருடன் உறவாடான். நற்கர்மம் செய்வான், மேன்மேலும்நன் மை பெறவும். கடவுள் புத்திரன் (ஏசு என்பர்) போன்று. நற்கு ணங்கள் அமையப்பெறவும் வேண்டி உற்சாகப்படுத்துவான்.

15. சாதாரணமனிதன்—சொற்ப கஷ்டத்தையும், வறுமை யையும் வருத்தத்தையும் கண்டு விரைவில் அதிர்ப்தி அடைவான்.

ஞானியோவென்றால், வறுமையையும், கஷ்டத்தையும் சகிப் பான்.

16 சாதாரணமனிதன், எல்லாம் தன்னுடையதாக முயலு வான். தனக்கென்றே, எல்லா உழைப்பும் கருமமும் போராட்ட மும் புரிவான்.

ஞான நெறி நிற்பானோ, எல்லாவற்றையும், ஈசுவரார்ப்பணம் செய்வான்: அவரிடமிருந்தன்றோ. எல்லாமுண்டாயின: தன்னால்

யாதொன்று ஆனதாக நினையான்: தனக்கு ஒரு தகுதியும் இருக்கிறதாக பதியான். ஒரு யோக்கியதையைப்பற்றியும் தன்னை மெய்ச்சான்: அகம்பாவனை கொள்ளான்: தன் அபிப்பிராயமே, மேலானது என்றும் பிறருடையது கீழானதென்றும் நினையான்; ஆதிலால் தன்னுடையதைப்பிறர் மதிக்கவேண்டுமெனக்கருதான்; ஒவ்வொரு விஷயத்திலும் ஒவ்வொரு கருத்திலும், கடவுளின் முற்றறிவுக்குப்பணிந்தும், அவர் பரிக்ஷைக்குட்பட்டும் நடைபெறுவான்.

17. சாதாரணமனிதன், எல்லா ரகசியங்களையும், எல்லாச்சமாசாரங்களையும், தான் அறிய விரும்புவான். வெளியேறி, இந்திரியங்கள் வாயிலாக பல சமாசாரங்களைத் தெரிந்துகொள்ள அலைவான்; பிறர் தன்னை மதிக்கவேண்டுமென நினைப்பான். பிறர் தன்னை ஸ்துதிசெய்யவேண்டி, கருமங்களில் தலையிடுவான்.

இறைவன் வழிநிற்பவனோ, உலக வர்த்தமானங்களைக் கேள்வியுறவேண்டான். புதிய சமாசாரங்களை அறிய விரும்பான். புதியவை என்பதெல்லாம் பழைமையான பாழ் * இருளினின்று உண்டாயின என்றும் புதியவை, பூமியின்கண் இல்லை என்றும் அறிவான். ஒன்றும் நிலையாது, எல்லாம் அழியும் எனத்தெரிவான்: அதனால், இந்திரிய நிக்கிரகம் செய்க, வீண் இறுமாப்பும், வீண் பெருமையும், கொள்ளற்க பேண்மையும் புகழும்பற்றிய விஷயங்களால் செருக்குக் கொள்ளாமல், பணிவாய் நடைபெறுக: ஒவ்வொரு சம்பவத்திலும், ஒவ்வொரு கருமத்திலும், ஞானமுறைக்குரிய பலனை நாடுக; இறைவனைப்போற்றுக, அவரை வழிபடுக: என அவன் உபதேசம் செய்வான்.

தன்னையும் தன்னுடைமையையும் பிறர் ஸ்துதிக்க விரும்பான். ஈசன் பரம கருணையால் எல்லாப்பேறும் பெற்றேமென, நினைந்து அவரைப்போற்றி செய்ய பிரியப்படுவான்.

18. ஞானியின் ஒழுக்கமுறை இறைவனின் அருட்பிரசாதம் அவர் அருளால் கிடைத்த பெரும்பேறு. திவ்விய மஹிமைவாய்ந்தது அவர் அருள்பெற்றவரின் அறிகுறி இது; அவர்கள் இனி நித்தியானந்த சுகத்தை அடைவார்கள் என்பதற்கு அத்தாக்ஷி இது; உலக விஷயங்களைவிட்டு, மோக்ஷசாதனங்களை நாடத்தூண்டும் இது.

* மதி மயக்கம் மருள்.



பிரேயஸ் மார்க்கத்தைத்துறந்து, சிரேயஸ் மார்க்கத்தில் கொண்டுவிடும் இது, ஆதலால் எவ்வளவுக்கு எவ்வளவு, தன் அகந்தை மமதைகளைத் தணிக்கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு, ஈசுவரன் ஞான அருள்வெள்ளம் கிடைக்கும். அதன் காரியமாக, ஈசுவரதரிசனம் தினம்தினம் நேரவும், உள்ளம் சுத்தமாகி, ஜீவன், திரும்பவும், முன்போன்று, ஈசுவர ஸ்வரூபத்தைப்பெறுவான். [ஈசுவரன் ஆவான் என்றபடி.]

## 55-வது அதிகாரம்.

## இயற்கையான பாபகதியும்—ஈசுவரன் அருள் சக்தியும்.

### ஜீவன்.

நாதரே! என் இறைவா! உம்முடைய ஸ்வரூபத்தில் அதாவது உம்மைப்போல் என்னை சிருஷ்டித்திருக்கிறீர். பாபகதியில் என்னை இழுத்து, நாசத்திற்குள்ளாக்கும் என் தீயசுபாவத்தைமாற்றி நேர்மையாகும்படி செய்வியும்; உம்முடைய உயர்வானவும், மோக்ஷசாதகமானவுமான அருட்பிரசாதத்தை எனக்குத்தந்து என்னைக் காப்பாற்றும்.

என்னில், என் மனோ பாவத்துக்கு முற்றும் மாறாய் உலக விஷயசுகங்களில் நாடும்படி என்னைத்தூண்டி என்னை அதன் வசப்படுத்தும், அதர்ம சுபாவம் ஒன்றுஇருக்கிறதை நான் அனுபவசித்தமாக அறிகிறேன். அதன் கதியையும் வேகத்தையும் உம்முடைய உயர்வலம் அமைந்த பூர்ண அனுக்கிரமின்றி, என்னுள் மாத்திரம், எதிர்த்துத்தடுக்க இயலாது.

2. இளமைப் பருவமுதல், தீய சுபாவமுள்ள, இந்த இயற்கையான விகுணத்தையே மேற்கொள்ள உம்முடைய உயர்ந்த திவ்விய கடாக்ஷம்பெற விரும்புகிறேன்.

முதல் மனிதனை, ஆதம் என்பான் பாபம் செய்ததின் நிமித்தம் அதன் தண்டனை எல்லா ஜனங்கள்மேலும் ஏற்பட்டுள்ளது. இயற்கையாக, எல்லாம் நன்மையாகவே நடைபெற்றது: இப்போது, இயற்கையான சுபாவமானது தீமைபற்றியே யிருக்கிறது. அதன் கதி, வேறு சம்பந்தமின்றி தனிமையாக நடைபெறின், தீய குணங்களை மேன்மேலும் விருத்தி செய்துகொண்டே செல்லுவதாகும்; உலகப் பிரவிருத்தி மார்க்கத்தில் சேரும்.

மிஞ்சி இருக்கும் சொற்ப பலம், சாம்பலிற்புதைந்த நெருப்புப் பொறி போன்றது. இதுவே நம்முடைய இயற்கை ஞானம் அஃது, ஒரு பெரிய இருண்ட மேகத்தால் மூடப் பெற்றுள்ளது, அதன் மூலமாய், நன்மை இது என்றும் தீமை இதுவென்றும், மெய்மைக்கும் பொய்மைக்குமுள்ள தூரம் இதுவென்றும் அறிந்துகொள்ளுகின்றோம். ஆனால், அதன் அங்காரப்படி எல்லாவற்றையும் நாம் செய்ய முடியாததாக விருக்கிறது. ஆதியில் இருந்த பிரகாரம், பூர்ண ஞானஒளி நமக்கு இப்போது இன்றும். அதன் செயல்களும் அதன் நோக்கங்களும் முன் போன்ற சத் சுபாவம் பூர்ணமாக அமைந்து இருக்க இல்லை.

3. ஆகையால், என் கடவுளே! என் அந்தரங்க அபிப்பிராயப்படி உம்முடைய தர்மமுறை எனக்கு சந்தோஷகரமாகவே இருக்கின்றது. உம்முடைய விதிகளும் விலக்குக்களும் நன்மை பயக்கத் தக்கவைகளாகவும், நேர்மைபற்றியவைகளாகவும், பரிசுத்தமானவைகளாகவும், பாபத்தையும், தீமையையும் தவிர்த்தும் நன்மையைக் கோருகின்றவைகளாகவும் இருக்கின்றன. ஆனால், என் சரீரத்தின் அனுஷ்டான முறையில், ஞானமார்க்கம்விட்டு விலக்கி, ஆசாபாசங்களுக்கு உள்ளாகி, பாப கர்மம் செய்கின்றேன். அதனாற்றான், நல் நினைப்பு என்னைச் சேர்ந்தது. அவ்வண்ணம் நற்செய்கை புரிதல் என்றால் அன்று.

நான் நினைக்கும் நன்மையான எண்ணங்கள் பலவாம். என் நொய்மையை மேற்கொள்ள அருள் வேண்டும். அன்றேல், அற்ப இடையூறும், என் செய்கையைக் கெடுத்துவிடும். ஒரு சிறு தடையும் என்னைத் தளர்த்தும். பூர்ண நிலையை அடையும் நெறியை நான் அறிவேன். அதை நோக்கி நான் செயற்பாலது இஃது என எனக்குத் தெரியும். ஆனால் பாப சுபாவத்தின் பாரத்தால் அமுங்கி, மேலான பதவியைக் கைப்பற்றுதலுக்குரிய முறையை அனுஷ்டிக்க இயல வில்லை.

4. நாதரே, நன்மையான காரியம் எத்தனிக்கிறதாக இருந்தாலும், அதை மேல்நடத்துகிறதாக இருந்தாலும், உம்முடைய அனுக்கிரகம் வேண்டுவது முக்கியமானது. மிக அவசியமானது. அதுவின்றி நான் ஒன்றும் செய்யக்கூடியதன்று. உம்முடைய கருணை இருக்குமாகில் உம்மை முன்னிட்டு எல்லாம் செய்துவிடுவேன்.



கருணையே, உண்மையாக நீ அல்லாமல், எங்களுக்கு யாதொரு யோக்கியதையும் இல்லை. உலகத்திலுள்ள எப்பொருளும் கலைகள், செல்வம், அழகு, பலம், விஞ்ஞானம், சொல்வண்மை ஆகு இவை எல்லாம், உம்முடைய பார்வையில், தெய்வ கருணை யின்றேல், ரஸமற்றவையாம். பயனற்றவையாம்.

இயற்கையாய், உலக லாபங்களும் சம்பத்துக்களும், நல்லாருக்கும், தீயாருக்கும் சமம்; பொதுவாம். இறைவன் அருள், ஈசுவர கருணை, அன்பர்களுக்கு மாத்திரம் கிடைக்கத்தக்கது. அப்பாக்கியம் பெற்றவர்கள் நித்தியமான பதவியை அடைய அருகர்கள் என மதிக்கப்படுவோர்கள்.

இனிச் சம்பவிக்கப்போகின்ற விஷயத்தைச் சொல்லுகிற தகுதியான, தீர்க்க தரிசனம், அற்புதமான சித்துக்கள் செய்தல், தர்க்க சாமர்த்தியம், இவை எவ்வளவு உயர்வானவையாக இருப்பினும், உம்முடைய அருளின்றி உபயோகமற்றவையாம்.

5. உயர் நலம் வாய்ந்த அருளே போற்றி. உலக சம்பத்துக்களில் ஏழையாக இருப்பவர்களை, ஞானத்துக்கு அனுகூலமான நற்குணங்களில், செல்வர்களாகவும்; உலக சம்பத்துக்கள் நிறைந்தவர்களை, பண்பும் பணிவும் உள்ளவர்களாகவும், செய்கின்ற மஹாவலிமை உன்னுடையதே. இங்கு வருக: என்னிடம் இறங்கித் தங்குக: உன் ஆறுதலான தகைமையால் இளமைப் பருவத்திலேயே என்னைப் பூர்ணம் பண்ணுக. அப்படி நீ செய்யாது விடில், சோர்வினாலும், மன வறட்சியினாலும் நான் தளர்வேன், தபிப்பனே.

கடவுளே! உம்முடைய சந்நிதானத்தில், நான் அருள் பெற மன்றாடுகிறேன். உலகத்தார் விரும்பும் சம்பத்துக்கள் நான் அடையாமல் இருந்தாலும், உம்முடைய தயையும் கருணையும் எனக்குப் போதும்.

நான் சோதனைக்குட்பட்டு பல துன்பங்களால் வருந்தினாலும், உம்முடைய அனுக்கிரமாத்திரம் இருக்குமாகில், எந்த இடுக்கண் வரினும் அஞ்சேன்.

உம் கருணை எனக்கு ஆதரவு. அது எனக்குப் புத்தி சொல்லும்; மதி கொடுக்கும்; என் பகைவர்கள் எல்லாரையும்விடச் சால வலிமை யுடையது. அறிஞர் எல்லாரையும்விட அதிக அறிவுள்ளது.

6. அக் கருணை, சத்தியத்திற்கு இருப்பிடம்; விரதத்துக்கு ஆதாரம்; ஹிருதயத்தின் ஒளி; தூக்கத்திற்கு ஆறுதல்: வியசனத்துக்குச் சத்ரு; அதனைப் போக்கும்; பயத்தைத் துறத்தும்; பக்தியைப் பரிபாலிக்கும். அன்பால் அகம் குழைந்து கண்ணீர்விடச் செய்யும்.

அதுவின்றி, நான் ஒரு உலர்ந்த கட்டை, பயனற்ற விருதாவான பிணம், எறிந்துபோடக்கூடிய ஒரு சாமான்.

அதனால் கடவுளே, உம்மருள் என் முன்னே போகுக; என் பின்னேயும் தொடர்க; எப்போது நன்மையான கர்மத்தையே சிந்திப்பேனாக: உம்முடைய புத்திரனாகிய ஏசு கிறிஸ்துநாதரின் திருவடிகளே சரணம்.

## 56-வது அதிகாரம்.

## நம்மை முற்றும் வெறுத்தலும்—தியாகத்தின் அறிகுறியான, சிலுவையை நினைந்து—ஏசு கிறீஸ்து என்பாரைப் போன்று ஒழுகலும்.

### ஏசு கிறீஸ்து.

குழந்தாய். எவ்வளவுக்கு எவ்வளவு உன்னை வெறுக்கிறாயோ, உன் அபிமானத்தை விடுகிறாயோ அவ்வளவுக்கு அவ்வளவு என்னை சமீபிப்பாய்; என்னிடம் வருவாய், வெளி விஷய சுகங்களின் பற்றை விடுதல், உள்ளத்தில் சாந்தம் உண்டாக்கும், மனோ நிக்கிரகஞ்செய்தல் இறைவனிடம் சேர்ப்பிக்கும்.

எவ்வித ஆக்ஷேபனையும், வியசனமும் இல்லாமல், என்னையே நினைந்து என்னையே அன்பு செய்து உன் அபிமானத்தை முற்றும் துறந்து நீ இருக்கப் பழகவேண்டுமென்பது என் கருத்து. என் வழிப்படு: நானே மார்க்கம், நானே சத்தியம், நானே பிராணன். மார்க்கமின்றிப் போக்கிடம் இல்லை: சத்தியமின்றி, ஞான மில்லை. பிராணன் இன்றி, உயிர் வாழ்வில்லை.

நீ நடைபெற வேண்டும் மார்க்கம் நானே. நீ நம்பி அன்பு பாராட்டவேண்டும் சத்தியம் நானே; நீ விரும்பி, வரவு எதிர்பார்த்திருக்க வேண்டும் பிராணன் நானே.

இடுக்கண்ணில்லா மார்க்கம் நானே: மயக்கம் அற்ற சத்தியம்



நானே: ஈறு இல்லாப் பிராணன் நானே: நேரான மார்க்கம் நானே. மேயர்வற உயர் சத்தியம் நானே: உண்மையான வாழ்வு நானே; நலம் சார்ந்த வாழ்வு நானே; சுயம்புவாயிருக்கிற பிராணன் நானே.

என் மார்க்கத்தில் வழிபட்டால் நீ சத்தியத்தை அறிவாய்; அது துன்பத்தினின்று விடுவிக்கும்; நித்தியானந்தத்தை அடைவாய்.

2. என் ஒழுக்க முறையை விரும்பினால், என்னால் உபதேசிக்கப்பட்ட விதிவிலக்குக்களை அனுசரித்து நட.

சத்தியத்தை அறியவேண்டினால், என்னை நம்பு, எனக்கு அன்பு செய்.

பூர்ணம் பெறவேண்டின் எல்லாபற்றையும் விற்கக்கடவாய்.

என் சீஷனாக இருக்க விரும்பின், உன்னையே வெறுப்பாய்.

ஆனந்தப்பதவி வேண்டுமானால், இப்பிரபஞ்ச வாழ்வை அலக்ஷியம் செய். பரலோகத்தில் நீ மதிப்பை எதிர்பார்த்தால், இகத்தில் பணிவுள்ளவனாக இரு: என்னுடன்கூட இருந்து அரசாட்சி செய்யப் பிரியமிருந்தால் என்னைப்போல், தியாகத்தின் அறிகுறியான சிலுவையைத் தாங்கு.

சிலுவையின் (தியாகத்தின்) வழிபடாத மனிதர்கள், ஆனந்தமும் அறிவான ஒளியும், உள்ள மார்க்கத்தைக் காண்டல் அரிது.

### ஜீவன்.

3. ஏசுநாதரே! உம்முடைய மார்க்கம் ஒடுக்கமானது, சங்கடமானது. உலகத்தாரால் நிந்திக்கப்பெற்றது. அதனால், அம்மார்க்கத்தில் நான் நடைபெறும்வண்ணம் தயைசெய்யும். உலக நிந்தனையைப் பொறுத்துக்கொள்ளும்படி எனக்கு சாந்தமிருக்கட்டும். யஜமானனைவிட வேலைக்காரன் உயர்வில்லை, சீஷன், நாதரைவிட மேல் இல்லை. உம் அடிமை உம்முடைய ஒழுக்க முறையைச் சிந்தனைகொள்ளட்டும்; அதில் என் சுகிர்தமும், உண்மையான சிரேயஸும் இருக்கின்றது. மற்ற எதைப் படித்தாலும் எதைக் கேட்டாலும், எனக்கு ஆறுதல் உண்டாகவில்லை. சந்தோஷம் ஜனிக்கவில்லை.

### ஏசு கிறிஸ்து.

4. குழந்தாய், இப்போது இவை எல்லாம் அறிவாய்: இவை

எல்லாம் படித்திருக்கிறாய். அவை எல்லாம் அனுஷ்டிப்பாய்; உயர் நலம் பெறுவாய்.

என்றால் உபதேசித்துள்ள, கட்டளைகளைத் தெரிந்துகொண்டு அவ்வண்ணம் ஒழுகுகிறானோ, அவனே என் அன்பன்; என் பக்தன். அவன் எனக்குப் பிரியன்: என் தரிசனம் அவனுக்குக் காண்பிப்பேன். என் பிதாவிருக்கின்ற லோகத்தில் அவனை என்னுடன் சரிசமானமான ஆசனத்தில் இருக்கும்படி செய்வேன்.

ஜீவன்.

5. ஏசுநாதரே! தாம் சொன்னபடியும் வாக்குறுதி செய்தபடியும், அது நடக்கட்டும். அப்படியே ஆகுக. அப்பதவியை நான் அடையும்படியான பிராப்தம் நிகழட்டும்.

நான் சிலுவையைப் பெற்றேன். உம்முடைய கையிலிருந்தே பெற்றேன். அதை நீர் என்மேல் சுமத்தியிருக்கின்றீர். ஆகையால், மரணமளவும், அதைச் சுமப்பேன். நலமுள்ளவனாகவும் சமய முறைபற்றியும் ஒழுகுகிறவன் வாழ்வு, சிலுவையின் வழியே (தியாக ரூபமானதுவே) இருக்கும். அதுவே மோக்ஷத்திற்குற்ற வழி.

அதை நான் ஆரம்பித்திருக்கிறேன். அதற்கு பின் வாங்குதல் இனி இன்றாம். அதை விட்டுவிடுதலும் இன்றாம்.

6. ஜீவன், (தன்னுடைய தோழர்களை நோக்கி பேசுதல்) ஓ! ஓ! என் சகோதரர்காள்! தைரியமாக இருங்கள். நாமெல்லாரும் சேர்ந்து போவோம். ஏசுவும் நம்முடன் ஒருவராக இருப்பார். அவருக்காக இச் * சிலுவையைப் பெற்றோம். அவருக்காகவே, நாம் அதைக் கைவிடாமற் பற்றுவோம். அவரே நமக்கு ஆதரவு. அவரே நமக்கு வழிகாட்டியாவார். அவரே, நமக்கு முன்போவார். இதோ, பார், நம்மிறைவன் (அரசன்) நம் முன்பாகச் செல்லுகின்றார். நமக்காக அவர் நம் பகைவருடன் போர் புரிவார். தீரர்கள் போன்று, அவர் வழி போவோம்; பயத்தினால் யாரும் நொய்மையும் தளர்ச்சியும் அடையவேண்டாம்; போரில் உயிர் நீத்தலுக்கும் சித்தமாக இருப்போமாக: சிலுவைக் கொடியைவிட்டு புறங்காட்டினோமென்ற அபவாதம் நமக்கு வாராமல் இருக்கட்டும்.

---

* சிலுவை, தியாக மார்க்கத்தின் அறிகுறி-லிங்கம்.



## 57-வது அதிகாரம்.

### ஒருவன் தவறிக் குற்றம் குறை செய்தால் அதனால் மனந் தளர்ந்து அதைரியப்பட்டு வியசனிக்கக் கூடாது.

கடவுள்.

என் குழந்தாய், பாக்கியம் வந்திருக்கும் காலத்தில், இறைவனிடம் பக்திபாராட்டுதலையும் ஆறுதல் அடைந்த மனக்குளிரையும் பார்க்கிலும், கஷ்டம் உறுங்காலத்தில், பொறுமையும், தாழ்மையும், பணிவும் அமையப் பெறுதல் மிக நலமாம். யாதேனும் ஒரு அற்ப வார்த்தையை உனக்கு விரோதமாகச் சொன்னால் அதனால் நீ துக்கப்படுவானேன். அதிகமாகவிருப்பினும் கூட, நீ வியசனிக்கவும் மனக் கலைப்படுதலும் நியாயமில்லை. ஆனால் அதைப்பற்றி இப்போது அதிகமாகப் பேசவேண்டாம்: அந்தச் சுபாவம் ஒரு புதிதானதன்று. அஃது இன்றுதான் உனக்கு முதல்முதல் ஏற்பட்டதன்று; நீ நெடுநாள் ஜீவிப்பாயானால், அது கடைசியானதுமன்று.

கஷ்டம் நேரும் வரையில் அதாவது, உனக்கு விரோதமான சம்பவம் நிகழும் வரையில், நீ தைரியசாலிதான்: பிறருக்குப் புத்தி சொல்லுவாய்: ஆறுதல், தேறுதல் பொருந்திய வார்த்தைகள் சொல்லுவாய், எதிர்ச்சையாகத் திடீரென்று, யாதேனும் ஒரு இக்கண் நேரிடுமாகில், அப்போது நீ பிறருக்குச் சொன்ன புத்தி, தைரியம் இரண்டும் உன்னைவிட்டு ஓடிப்போம். அற்ப இடையூறுகள் சம்பவித்தால் மிக நொய்மையானவனாகவும் மெலிவானவனாகவும் இருக்கிறாய் என்பதை நன்றாய்ச் சிந்தித்துப்பார். சிறு துக்கங்கள் பலவாம். அவைகளும், அவைகளைப்போன்றவைகளும் அடிக்கடி நேருதல் உனக்கு க்ஷேமத்தை கொடுக்கக் கூடியது நலமாம்.

2. அவைகளை உன் மனத்தில் வையாதே. அவைகள் நேர்ந்த உடனே மனத்தினின்று அவைகளைக் கூடியமட்டில் அப்புறப்படுத்து. அவைகள் உன் மனத்தைச் சங்கடப்படுத்தினால், அவைகள் வசமாகாமல், இரு. தளர்வுகொள்ளாதே. அவைகள் நேரிடும் காலத்தில் சந்தோஷமாக மனத்தை வைத்துக்கொளல் நலமாம். அப்படிச் செய்தல் இயலாவிடினும், சகிப்பையாவது கொள்ளு. * அவை [illegible] கேட்க உனக்குப் பிரியமில்லாமல் [illegible] நீ [illegible]

கொண்டால், வரம்பு மீறின வார்த்தை சொல்லாமல், நாவை அடக்கு. வரம்புகடந்த வார்த்தையை மொழிவாயாகில் சாதாரண ஜனங்களுக்கு, வீண் வியசனத்தை உண்டுபண்ணுவாய். அப்படி மொழியாமல் இருப்பாயாகில், எழும்பின கோபம் அடங்கும். ஈசுவர அனுக்கிரகம் திரும்பும்: மனக் கொதிப்பு ஆறி, சுகம் பெறுவாய். நாதர் சொல்லுகிறதாவது, நான் என்றும் இருக்கிறேன்: உனக்கு ஆதரவு செய்யக் காத்திருக்கிறேன். முன்னிலும் அதிகமாக உபகாரம் செய்யச் சித்தமாக இருக்கிறேன். நீ மாத்திரம், என்னைப் பூரணமாய் நம்பு. என்மேல் பக்தி செய். பிரீதியுடன் என்னை உபாசி.

3. உன் மனத்தைச் சாந்தமாகவும் நேர்மையாகவும் வைத்துக்கொள். அதிக கொடுமைகள் வந்தாலும் சகிக்கும்படியான தகுதியைத் தேடிக்கொள். அடிக்கடி உனக்குச் சங்கடம் நேர்ந்தாலும், கொடிய சோதனைகள் நிகழ்ந்தாலும், எல்லாம் முழுகிப்போனதாக நீ ஏன் எண்ணுகிறாய். நீயோ மனிதன், கடவுள் அல்லன். நீயோ ஊன்பற்றிய உடலுள்ளவன்; நீ தேவன் அல்லன். அதனால், எப்போதும் ஒரே நிலையான நற்குணம் பற்றியவனாக இருக்கமுடியுமா? தேவலோகத்தில் தேவர்களுக்கூட இப்படியிருத்தல் முடியாது. (Para dise) ஆனந்த ஸ்தலத்திற்கூட முதலில் உண்டான மனிதன் இந்நலம் அடையவில்லை.

து[illegible] படுகிறவர்களைக் கைதூக்கி விடுகின்றவனும், காப்பாற்றும் இறைவனும் நான். தங்கள் குற்றங்குறைகளை உணர்பவரை என்னுடை திவ்வியமான பதவிக்கு உயர்த்துவேன்.

ஜீவன்.

4. ஓ! நாதமே, இந்த உம்முடைய உயர்நலம் சார்வார்த்தை வாழ்க. தேனையும் தேன் கூட்டையும்விட எனக்கு மிக இனிமையானது இம்மொழி.

உம்முடைய சிரேஷ்டமான திவ்விய மொழிகளுடைய ஆறுதலும் தைரியமும் இல்லாவிட்டால், நான் அதிக துன்பம் அனுபவிக்குங் காலத்தில், என் கதி என்னவாகும். கடைமுறையில், மோக்ஷம் என்ற உயர்நலம் அமைந்த துறையை அடைவதாக இருக்கின்றபடியால், கொஞ்ச கஷ்டம்வந்தால் என்ன? அதிக கஷ்டம் வந்தால் என்ன?



எனக்கு நல்லகதி கிடைக்க அருளும். இவ்வுலகம் விட்டு [illegible] நல்லமார்க்கத்தில் போவேனாக; இறைவ என்னை ஞாபகத்தில் வைப்பீராக; நேரான மார்க்கமாய் உம்முடைய திவ்விய தேசத்துக்கு என்னை நடத்துவீராக.

அப்படியே ஆகுக.

## 58-வது அதிகாரம்.

### மேலான விஷயங்களையும் தேவரகசியமான தீர்மானங்களையும் தெய்வகதியையும் பரிசோதனை செய்தல்—கூடாது—என்பது.

கடவுள்.

என் குழந்தாய்! மேல் விஷயங்களையும் குப்தமான தேவரகசியங்களையும், தர்க்கிக்காதே; வாதாடாதே. அவன் அவ்விதம் கதியற்றவனாக இருப்பானேன்? அவன் அத்தகைய உயர்வான அனுக்கிரகம் பெறுவானேன்? அவன் அவ்விதமாக சோர்வை அடைவானேன்? அவன் அவ்விதம் உயர்வான ஸ்தானத்தில் இருப்பானேன்? இத்தன்மையான வினாக்கள், மனிதன் புத்திக்கு எட்டாதவைகள். மதியாலும், தர்க்கத்தாலும், ஈசுவரனின் கருத்[illegible]ளின் நெறிகளை கண்டுபிடிக்க முடியாது. உன் பகைவன் (துர்புத்திக்குக் காரணமாகும்மாயை) இவ்வெண்ணங்களை உன் மனத்தில் தோன்றும்படி செய்தாலும்சரி, அல்லது யாரேனும், விதண்டாவாதக்காரன் இவ்வெண்ணங்களை உன் மனத்தில் உண்டு பண்ணினாலும்சரி உன்னுடைய விடையானது அடியில் தீர்க்கதரிசியார் ஒருவர் சொல்லியபடி, இருக்க:—“நாதரே” நீர் தருமமுறையில் இருக்கின்றீர். நீதிவழுவாது நடத்துகின்றீர். உம்முடைய தீர்ப்பு—நேர்மையானதே.

மறுபடியும் அவர் சொல்லுகிறது “நாதரின் தீர்ப்புக்கள்-உண்மையானவைகள். நேர்மையும் சத்தியமும் பற்றியே இருக்கின்றன.”

என் தீர்மானங்களைப் பயபக்தியுடன் விசுவாசிக்கத்தக்கவை; அவைகள் ஆராயத்தக்கவை அல்ல. பரீக்ஷைக்குள்ளானவை அல்ல. மனிதர் அறிவுக்கு அவை எட்டாதவை.

2. இவ்விதமாகவே, ஞானிகளின் தகைமையைப்பற்றி வீண் விசாரணைவேண்டாம். அவர்களில் எவர் உயர்வானவர். எவர் தாழ்வானவர். அவர்களுக் குள்ளிருக்கும் தாரதம்மியத்தைப் பற்றிய தர்க்கம் வீணே.

இத்தன்மையான வாதங்கள் சண்டைக்கு இடமாகின்றன. வீணான போராட்டத்தை உண்டுபண்ணுகின்றன. அவைகளால், வித்வத்செருக்கும் இறுமாப்பும் உண்டாகின்றன. மேலும் பொறாமை-கலகம்-ஏற்படும். ஒருவன் இந்த ஞானியே உயர்வானவன் என வீண் பெருமையுடன் சாதிப்பான். மற்றொருவன், வேறு ஒருஞானியே நல்லவர் எனத்தெரிந் தெடுப்பான்.

இவ்விதம் தெரிந்து கொள்ளமுயலும் முயற்சியும், அதன்வழி ஏற்படும் கர்மமும் வீணே. ஞானிகளுக்கே அதிருப்தியை உண்டுபண்ணுகிறது. நான் கலகத்தை உண்டுபண்ணும் கடவுள் அல்லன் சாந்தமூர்த்தி சாந்தமும் சமாதானமுமே என் அடையாளம் தன்னை உயர்த்தாமல், தன்னை தாழ்த்தி தாங்பண்பும் பணிவும் [illegible]வுதலே—சாந்தத்துக்கு இலக்கணமாம்.

3. சிலர், இந்த ஞானியையும் சிலர் அந்த ஞானியையும்பற்றி மனம் வைத்து. தம்மை மறந்து, பரவசமாகிறார்கள். ஆனால் இந்தப் பக்தி ம[illegible]த்தன்மையானது ஈசுவரத்தன்மையன்று. ஞானிகளை உண்டாக்கியவன் நானே: என் நலம்சார் அனுக்கிரகத்தை அவர்களுக்குக்கொடுத்தவன் நானே: அவர்களுக்குப் பெருமையையும் மகிமையையும் தந்தருளியவன் நானே. ஒவ்வொருவர் தகுதியையும் நான் அறிவேன்: ஆகவே, என் அன்பால், அவர்கள் முன்னர் போனேன்: என் பக்தர்கள் யாவர், என, யுகங்களுக்கு முன்னமேயே நான் அறிந்திருந்தேன்: உலகத்தில் அவர்களைத் தெரிந்தெடுத்தவன் நானே: அவர்கள் என்னை அறிந்து முதலில் என்னை நோக்கி வரவில்லை: என் கருணையால், அவரை அழைத்தேன்: நான் இறங்கி அவர்கள்பால் அன்பு வைத்து அவர்களை இழுத்தேன்: அவர்களைப் பல சோதனைகளுக்குள்ளாக்கினேன்; ஆச்சரியமான விதமாய் பலமுறை ஆறுதலையும், தேறுதலையும் அவர்களுக்கு அளித்தேன்.

4. முடிவுவரை அவர்களுக்குப் பலத்தையும், தைரியத்தையும் தந்தேன்; அவர்களுடைய துன்பங்களுக்குக் கடைமுறை சகம் என்



ற மகுடம் தந்தருளினேன். அவர்களை முன்னும் அறிவேன் பின்னும் அறிவேன். சொல்வரம்புகடந்த அன்பினால் அவர்கள் என் கை[illegible]ந்து ஆதரிப்பேன். என் பக்தர்களான ஞானிகளை ஸ்துதிசெய்தால், என்னைப்போற்றியதாக ஆகிறது. அவர்கள் மூலம் என்னைப்போற்றி செய்யவேண்டும்; எல்லாரிடமும் என்னை வாழ்த்தவேண்டும்; புகழவேண்டும். ஒவ்வொருவரிலும், என்னை கௌரவப்படுத்தவேண்டும். அவர்களுக்கு முதலில் ஒரு யோக்கியதையும் இல்லாமலிருக்க, நானே தெரிந்தெடுத்தேன். நானே உயர்நலம் தந்தருளினேன். அவர்கள் மகிமைபெற நான் செய்துவைத்தேன். அவர்களில் யாரேனும் ஒரு அற்பமானவரை அலக்ஷியம் செய்தாலும், அவமதித்தாலும், பெரியாரை மதியாமல் போகிறதாகும். பெரியவரும் சிறியவரும், என்னால் உண்டாகப்பெற்றவர். அவர்களில் யாரேனும் ஒருவருடைய கவர்வத்தை குறைக்கில், என்னையே குறைசெய்ததாக ஆகும். பரலோகத்தில் உள்ள மற்ற ஞானிகளுக்கும் அதனால், குறைவாம். அன்பின்பற்றால், அவர்கள் எல்லாரும் ஒருவரே; ஒரே நினைப்புள்ளார்; ஒரே நோக்கமுள்ளார்; ஒரே செயலில் உள்ளார்; அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிப்பார்.

5. தவிரவும், முக்கியமாக கவனிக்கத்தக்கது. தங்களைவிட, அவர்கள் என்னை அதிகமாக நேசிப்பார்கள். என்மேல் அன்புபாராட்டுவார்கள். தங்களுடைய யோக்கியதையை அதிகமாக மதியார்கள். தங்களை, முற்றும் விட்டவர்களாயும் முற்றும் துறந்தவர்களாயும், தங்கள் அபிமானத்தை மறந்தவர்களாயும், என்னையே நம்பி, என்மேல் பரபக்தியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். என்னிடம் பரமாநந்த சாந்தம் பெறுகின்றார்கள்.

என்னைவிட்டு அவர்களை விலக்குதல் யாதொன்றாலும் முடியாது. அவர்களுக்கு மனக்களைப்பையும் சோர்வையும் உண்டுபண்ண யாதொன்றாலும் இசையாது. நித்தியமான, யதார்த்தத்தைப் பூர்ணமாகப்பெற்றவர்: அளக்கமுடியாத, கருணையான ஜோதியை அவர்கள் பூர்ணமாக அடைந்தவர்.

ஆகையால், உலகத்தின் ஆசாபாசங்களில் அழுந்திருக்கின்ற சாதாரண மனிதர்கள் சொந்த பிரயோஜனமன்றி வேறுவிதமாக "அன்பு" பாராட்ட அறியாதவர்கள்; ஞானிகளின் யோக்கியதைப் பற்றியும் அவர்களின் நிலைமையைப்பற்றியும், வாதம் செய்யாமல்

இருக்கக்கடவர். அவர்கள் மனம்போனபடிக்கெல்லாம் கூட்டுவோ குறைப்பர் அவர்கள் வார்த்தை சத்தியம்பற்றி இராது.

6. மேலும் அநேகர் அறிவில்லார் விஷயங்கள் தெரியாமல்லாதவர், உயர் நலம் அமைந்த உத்தமபக்தி இத்தன்மையது என அறிந்திலா சாதாரணமாய் மனிதர்களையும், அவர்கள் சம்பந்தமான விஷயங்களிலும், பற்றுள்ளவர்களாய் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். இவ்வுலகவிஷயங்களைப்போன்று, பரலோக விஷயங்களும் இருக்கிறதென்று அவர்கள் மதிக்கின்றார்கள். பரலோகத்தைப்பற்றி சாதாரண ஜனங்களின் அபிப்பிராயத்துக்கும், அருள் பிரசாதவாக்கினால் முற்றுணர்ந்த ஞானிகளின் அபிப்பிராயத்துக்கும் வெகுதூரம் வெகுதூரம்.

7. அதனால், உன் அறிவுக்கு அப்பால் இருக்கின்ற குப்தமான தேவரகசியங்களைப் பற்றிய ஆராய்ச்சி செய்வதில் அதிக கவனமாக இரு; அதைவிட, அற்பமானவனாகவாவது தேவலோகத்தில் இருக்கின்றவர்களில் நீயும் ஒருவனாக இருக்க வேண்டுமென்று அதிக ஆவல் உள்ளவனாக இருக்க முயலு; "இந்த ஞானியார் உயர்வானவர், மற்றவர் தாழ்வானவர்" எனத்தெரிந்து கொண்டதினால், ஒருவனுக்கு ஆவது என்ன? என்ன லாபம் பயக்கும்? ஒருகால் என் முன்பாக, தன்னைத் தாழ்மைப்படுத்தி, அதனால், என் மகிமையை அதிக அன்புடன் போற்றிசெய்ய அருகன் ஆவானாகில்— பயனுண்டு.

ஞானிகளின் உயர்வு தாழ்வுகளைக் கவனிக்கிறதைப் பார்க்கிலும், தன் பாபத்தின் கொடுமையை உணர்ந்தும், தான் சத்திய நெறியில் அதிகமாக நடைபெறவில்லை எனநினைத்தும், ஞானிகளின் உயர்ந்த நிலைமைக்கும் தான் இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கும் வெகுதூரம் என அறிந்தும், ஒருவன் இருப்பானாகில், அதுதான் ஈசுவர சம்மதமாகும். பக்தி பாராட்டி, மனமுருகிக், கண்ணீர் ததும்ப ஞானிகளைப் போற்றிசெய்தலும், பணிந்த மனத்தினராய் அவர்களுடைய அருளை வருந்திப் பிரார்த்தித்தலும் நலமாம்.

8. ஜனங்களும் வீண் வாதங்களும் வீண் விசாரணையுமின்றித் திருப்தியுள்ளவர்களாக இருப்பார்களாகில், ஞானிகள் அதனால் திருப்தி அடைவார்கள்.



அவர்கள் தங்கள் சீலத்திலும் யோக்கியதையிலும்-இறுமாப்புக் கொள்ளுகிறார்களில்லை. தங்கள் தகுதி தங்களால் உண்டானதென அவர்கள் நினைக்கமாட்டார்கள். அஃது-என்னால் கிடைத்த பாக்கியமென அவர்கள் அறிவார்கள். என்னுடைய அளவில்லாத கருணையால் நான் எல்லாநலமும் அவர்களுக்கு அருளினேன்.

இறைவன்மேல் அன்பின்மிக்கார்; அன்பில் ஆழ்வார்; ஆனந்தத்தில் மூழ்கியுள்ளார்; அவர்கள் மகிமைக்குக் குறைவில்லை; ஆநந்தத்திற்கும் குறைவில்லை.

அவர்கள் எவ்வளவு உயர்வுள்ளாரோ அவ்வளவு, மனத்தில் பண்பும் பணிவும் உள்ளார்; அவ்வளவுக்கு என் சமீபத்தில் உள்ளார்; அவ்வளவு எனக்கு பிரியமுள்ளார். நாதரின்முன், தங்கள் மகுடங்களைக் கீழேவைத்தும், சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தும், நித்தியமான மூர்த்தியை வழிபட்டுப்போற்றி செய்தும் இருப்பார் ஆயினர்.

9. தேவலோகத்தில் உள்ளவர்களின் கடையர்களுக்கும்கூட ஒப்பிட முடியாத கீழானவர்களான மனிதர்கள் தேவலோகத்தில், உயர்வு யாவர்என வீணான பரீக்ஷையும், ஆராய்ச்சியும் செய்வர்.

தேவலோகத்தில் எல்லாரும் மேன்மை பெற்றவர். அவர்களில் கடையராகவாவது ஒருவன் இருத்தல் பெரியகாரியமே; எல்லாரும் கடவுள் புத்திரர்களெனச் சொல்லப் பெறுவார்கள். அற்பம் என்பது அவர்கள் சம்பந்தபட்டமட்டில், ஆயிரக்கணக்காய் அபிவிருத்தியாகும், ஆனால் பாவிஒருவன் நூறுவருஷங்கள் இருந்தாலும், பாவிபாவியே-வேறுகதிகிடையாது. "தேவலோகத்தில் உயர்வுள்ளார் யாவர்" என சீஷர்கள் வினவியபோது, இவ்விடை கிடைக்கப்பெற்றார்:—"உங்களுடைய சுபாவம் முற்றுமமாறி, இருயபவும் பாலர்களாக இருப்பீரேல், தேவலோகத்தை அடைய முடியும் பாலர்போல் தம்மைத் தாழ்மைப் படுத்துவரே தேவலோகத்தில், உயர்வு உள்ளார் ஆவர்."

10. குழந்தைகள் போன்றுதம்மைத் தாழ்மைப்படுத்த பிரியப்படாதவர்களுக்குக் கஷ்டமேதான் பிராப்தி. தேவலோகத்தின் தாழ்ந்தவாசல் அவர்களை நுழைய இடம்கொடாது.

உலகசுகங்களை நாடும் செல்வர்களுக்கும் தேவலோகப் பிராப்தி துர்லபம்; கஷ்டமே. ஏழைகள் தேவலோகத்திற்குள் பிரவேசிப்

பார்கள்; செல்வர்கள் வெளியில் இருப்பார்கள். பணிவுள்ளவர்களே, சந்தோஷம் அடைமின், சந்தோஷமாய் இருமின். ஏழைகாள், உங்களுக்குத்தான் தேவலோகம் உரிமையாம். நீவிர்-சத்தி வழிபற்றி நாடுவீராகில்-அஃது-உங்களுக்கே உள்ளது.

## 59-வது அதிகாரம்.

## எல்லா நம்பிக்கையும் எல்லா அன்பும் இறைவனிடம் வைக்கற்பாலாது.

இவ்வுலகவாழ்க்கையில் எனக்கு என்ன உற்ற ஆதரவு உள்ளது? இவ்வுலகத்திலுள்ள வஸ்துக்களில் உயர்வான சுகம் எதினின்று நான் பெறக்கூடியது? நாதரே நீர் அன்றோ? உம்முடைய கருணைக்கு எல்லையுண்டோ? நீர் இன்றி எனக்குச்சுகம் ஏது? நீர் என்னுடன் இருக்கத்துன்பமுண்டோ? உம்முடன் வாழ்வு ஏழையாக இருப்பினும், எனக்குச்சுகமாம். நீர் இன்றி மோக்ஷமும் விரும்பேன். நீர் இருக்கும் இடம் மோக்ஷமே, நீர் இல்லாத இடம் நரகமும், மரணமுமாம். என் அன்பு நீர் அதனால், உம்மை வேண்டியும் விரும்பியும் வருந்துவேன் அழுவேன் பிரியமுடன் பிரார்த்திப்பேன். ஆபத்துக்காலங்களில் உற்றதுணையும் ஆதரவும் செய்பவர் உம்மைத்தவிர வேறு ஒருவருமிலர். ஒருவரையும் நம்பேன் நீரே, எனக்கு நன்னம்பிக்கை; நீரே, என் அடைக்கலம்; நீரே, என் ஆதரவு: எல்லாவிஷயத்திலும் எனக்கு தவறாத்துணை நீரே.

2. எல்லாரும் தங்கருமந்தேடுவோர்; நீரோ, என் க்ஷேமத்தையும், சுகத்தையும், நாடுவீர்; எல்லாவற்றையும் எனக்கு நன்மை பயக்கும்படி செய்வீர். பல துன்பங்களுக்கும், பலசோதனைகளுக்கும் நீர் என்னை ஆளாக்கிவைத்தாலும், கடைமுறையில் அவை எல்லாம் எனக்கு நல்லவையாகும்படி ஆஞ்ஞாபிப்பீர். ஆயிரக்கணக்கான விதங்களாக, உம்முடைய பக்தர்களின் உயர்வைக் காட்டுவீர் இவ்விதம் அருள்செய்தலுக்கு உம்மைப் பக்திபாராட்டவும், போற்றவும் நான் கடமைப் பட்டிருக்கின்றேன். இவ்விதமின்றி, எனக்கு எல்லாச்சுகங்களையும் ஏராளமாய் நீர்தருவதாக இருந்தாலும் அஃது அவ்வளவு மகிமையில்லை.

3. நாதரே, இறைவா, நீரே எனக்குத்தஞ்சம், எனக்கு அ[illegible] உம்மிடத்தில் பூர்ண[illegible] வைக்கின்றேன்.



என் கஷ்டநிஷ்டூரங்களை உம்மேல் வைக்கிறேன். உம்மைத்தவிர மற்றையோர் எவரும் சோர்வுடையார்-சஞ்சலமுடையார் நிலையாணபுத்தியில்லார். சிநேகிதர்கள் பலரைச்சேர்ந்தேன்; [illegible]ரர்கள் பலரை நாடினேன்; புத்திசொல்வோர் பலரை அணுகினேன்; அறிவும் கல்வியும் நிறைந்த சாஸ்திரங்களைப் படித்தேன்; [illegible]யமானவும் சுகமானவுமான ஏகாந்தஸ்தலத்தை அடைந்தேன். இப்படி எல்லாம் நான்செய்தாலும், நீர் இல்லாமல், உதவியும், தைரியமும் சுகமும், சமாதானமும், உபதேசமும் சாவதானமும் இல்லை இல்லை இல்லையே.

4. சாந்தமும், ஆநந்தமும் கிடைப்பிக்கும் போல எல்லா வஸ்துக்களும் தோன்றுமே அல்லாது, நீர் இன்றி, உண்மையில் சாந்தம் உண்டோ? சுகம் உண்டோ? எல்லா நன்மையின் முடிவும் நீரே, வாழ்வின் உயர்நலம் நீரே, அதன் நிறைவும் நீரே, சொற்சாதுர்யத்தின் முக்கிய அம்சம் நீரே. உம்முடைய பக்தர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக உம்மையே நம்பி இருத்தல் பரமசாதகமாம். என் கண்கள் உம்முடைய நோக்காகவே இருக்கின்றன. கடவுளே, கருணைக்கு இருப்பிடமே, என் பிதாவே, உம்மிடத்திலேயே என் பிடிமானம், என் தஞ்சமே.

5. என் உள்ளம் உம்முடைய உறைவிடமாக ஆகும்படி என்னைத் தூய்மைப்படுத்தும். ஆசீர்வதியும். உம்முடைய நித்தியமான மகிமை என்னிடம் தங்கும்படி செய்யும். உம்முடைய உயர்நலம் வாய்ந்த மகிமைக்கு எவ்விதக்குறையும் இல்லாதபடி, நீர் உறையுமிடமாகிய இந்த நடைமாடும் கோவிலை சுத்தமாக இருக்கும்படி அருளும். உம்முடைய நன்மையோ பெரிது! உம்முடைய கருணைக்கோ வரம்பில்லை; உம்மிடம் விட்டு அகன்று, மரணதர்மமுள்ள இவ்வுலகத்தில் நான் தங்கியிருக்கிறேன். கருணையாக என்னைப் பாரும், உம்மடிமையின் பிரார்த்தனையைக்கொள்ளும், பாபகரமான இவ்வுலகவாழ்க்கையில் பலசங்கடங்களுக்குள்ளாகித் தபிக்கின்ற அடிமையைக் காரும், ரக்ஷியும்; உம்மருட்பிரசாதத்தால், சிரேயஸ்கரமான சாந்தநெறி பற்றி நான் ஒழுகும்படி செய்யும். அந்நெறியின்

முடிவான, நித்தியானந்த ஜோதிர்மயமான பதவியை நான் பெறக் கடவேனாக.

அப்படியாகக்கடவது.

ஓம்தத்ஸத்.

முற்றுப்பெற்றது.

—ஓ—

"ஜேவல் என்றப் பட்டணத்திற்கு அருகாமையில் உள்ள "அக்னிஸ்" என்ற குன்றின் வாசியாகிய அன்பரில் ஒருவராகிய தோமஸ் கேம்பிஸ் என்பார் 1441—ம் ஆண்டில் எழுதிமுடித்தது.